சூரியகாந்தி பக்கம் 2

சூரியகாந்தி பக்கம் 21

சூரியகாந்தி பக்கம் 24

பக்கம் 23


ரூபா 20.00

www.onlineuthayan.com

பக்கங்கள் : 54

# உதயன்

சுடர் 27
கதிர் 190

வள்ளுவர் ஆண்டு 2043 வைகாசி 21 ஞாயிற்றுக்கிழமை (03/06/2012) UTHAYAN - A Lively National Tamil Daily

**வற்றாப்பளை அம்மன் ஆலயத்தின் வர்ணப்படம்**

வற்றாப்பளை கண்ணகி அம்மன் ஆலயத்தின் கண்கவர் வர்ணப் படம் நாளைய "உதயன்" பத்திரிகையில் இணைக்கப் படவுள்ளது. இந்த அன் பளிப்பை பெற்றுக் கொள்வதற்கு "உதயன்" பிரதிக்கு முந்துங்கள்.

# ஐ.நா. குழுவினர் உட்பட எவரும் எம்மை விசாரிக்க அனுமதியோம்



## அடித்துக் கூறுகிறார் ஜனாதிபதியின் சட்ட ஆலோசகர் மொஹான் பீரிஸ்

கொழும்பு,ஜூன் 3

உள்நாட்டு விவகாரம் குறித்து இலங்கையில் விசாரணைகளை மேற்கொள்வதற்கு ஐக்கிய நாடுகள் சபை உட்பட எந்தவொரு நாட்டுக்கும் இடமளிக்க முடியாது. யாரும் இங்கு வந்து விசாரணைகளை நடத்த ஒருபோதும் அனுமதிக்கமாட்டோம் என்று இலங்கையின் முன்னாள் சட்டமா அதிபரும், ஜனாதிபதியின் சட்டஆலோசகருமான மொஹான் பீரிஸ் அடித்துக் கூறியுள்ளார்.

ஐ.நா மனித உரிமைகள் ஆணையாளர் நவநீதம் 04

## ஹோஸ்னி முபாரக்குக்கு ஆயுள் தண்டனை

கெய்ரோ, ஜூன் 3

எகிப்தில் கடந்த ஆண்டு நடந்த மக்கள் எழுச்சிப் போராட்டங்களின்போது ஆர்ப்பாட்டக்காரர்கள் கொல்லப்பட்டமை தொடர்பில் முன்னாள் ஜனாதிபதி ஹோஸ்னி முபாரக்குக்கு அந்த நாட்டு நீதிமன்றமொன்று ஆயுள்தண்டனை வழங்கி தீர்ப்பளித்துள்ளது.

கடந்த 2011ஆம் ஆண்டின் முற்பகுதியில் ஆரம்பித்த அரபுலகக் கிளர்ச்சியைத் தொடர்ந்து அங்கு நடந்த குற்றச் செயல்களுக்காக 04

## காணி, பொலிஸ் அதிகாரங்களை வழங்குவதில் தவறில்லை

கொழும்பு, ஜூன் 3

இனப்பிரச்சினைக்குத் தீர்வாக மாகாண சபைகளுக்கு காணி, பொலிஸ் அதிகாரங்களை வழங்குவதில் தவறில்லை. இதனால் நாடு பிளவுபடப்போவதில்லை. நாடாளுமன்றத் தெரிவுக் குழுவில் பொலிஸ், காணி அதிகாரங்களை மாகாண சபைகளுக்கு வழங்கும்படி நான் வலியுறுத்துவேன். எனவே கூட்டமைப்பு நாடாளுமன்ற தெரி 04

## விடுதலை செய்வதற்கு இன்னும் 625 போராளிகளே உள்ளனர்

### நேற்றும் 75 பேர் விடுவிப்பு

யாழ்ப்பாணம், ஜூன் 3

புனர்வாழ்வுப் பயிற்சி பெற்ற முன்னாள் போராளிகளில் இன்னும் 625 பேர் மட்டுமே விடுவிக்கப்பட வேண்டியுள்ளனர். மிக விரைவில் அவர்களையும் விடுவித்துவிடுவோம் என சிறைச்சாலைகள் மற்றும் புனர்வாழ்வு அமைச்சின் உயர் அதிகாரி ஒருவர் உதயனுக்கு நேற்றுத் தெரிவித்தார்.

புனர்வாழ்வு பெற்று தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பின் முன்னாள் போராளிகள் 75 பேர் நேற்று சனிக்கிழமை 04

## நாடு கடத்தல் விவகாரத்தால் பிரிட்டனுக்கு கடும் நெருக்கடி

### தமிழரைத் திருப்பியனுப்புவதை நிறுத்துமாறு அழுத்தம் அதிகரிப்பு

லண்டன், ஜூன் 3

இலங்கைக்குத் திருப்பி அனுப்பப்படுவோர் சித்திரவதை செய்யப்படக் கூடும் என்பதற்கு நம்பகமான சான்று உள்ளதாக பிரிட்டன் மேல் நீதிமன்றம் ஒன்றின் மூத்த நீதிபதி ஏற்றுக் கொண்டுள்ளதால், பிரிட்டன் உள்துறைப் பணியகம் நெருக்கடிக்கு உள்ளாகியுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. 04

## யாழ்.மத்தி நீச்சல் தடாகத்தில் மூழ்கி வவுனியா மாணவன் சாவு

யாழ்ப்பாணம், ஜூன் 3

யாழ்.மத்திய கல்லூரியில் உள்ள நீச்சல் தடாகத்தில் இரவு நேரம் நீந்திய வவுனியா தமிழ் மகா வித்தியாலய மாணவர்களில் ஒருவர் நீரில் மூழ்கி மரணமானார்.

இந்தச் சம்பவம் நேற்று அதிகாலை 12.30 மணியளவில் இடம்பெற்றுள்ளது.

சம்பவத்தில் வவுனியா விவசா 04

## சிறுமியைத் துஷ்பிரயோகம் செய்த சோமரத்ன தேரருக்கு 7 ஆண்டு சிறை

லண்டன்,ஜூன் 3

பிரிட்டனில் வயது குறைந்த சிறுமியைப் பாலியல் துன்புறுத்தலுக்கு உள்ளாக்கிய இலங்கையைச் சேர்ந்த பௌத்த பிக்கு ஒருவருக்கு லண்டன் நீதிமன்றம் ஏழு ஆண்டுகள் சிறைத் தண்டனை விதித்துள்ளது.

லண்டன், குறோய்டனில் உள்ள தமெஸ் பௌத்த விகாரை 04

## மருதனார்மடத்தில் விபத்து யாழ்.மத்தி ஆசிரியர் சாவு

யாழ்ப்பாணம், ஜூன் 3

மருதனார்மடத்தில் நேற்று இடம்பெற்ற மோட்டார் சைக்கிள் - மினிபஸ் விபத்தில் மோட்டார் சைக்கிளில் பயணித்த யாழ்.மத்திய கல்லூரியின் கணிதபாட ஆசிரியர் ஒருவர் மரணமானார்.

இந்த விபத்து கே.கே.எஸ் வீதியில் மருதனார்மடம் சந் 04

## 15 லட்சம் பெறுமதியான நகை திருடியவர் மாட்டினார்

யாழ்ப்பாணம், ஜூன் 3

இருபாலையில் நேற்று முன்தினம் பிற்பகலில் வீடு புகுந்து 15 லட்சத்து 20 ஆயிரம் ரூபா பெறுமதியான நகைகளைத் திருடியவரை வீட்டுக் 04

## அமெ.விடம் இரகசியமாக கொடுத்த அறிக்கையை பகிரங்கப்படுத்துங்கள்

### சபாநாயகரிடம் கோருகிறது ஐ.தே.க.

கொழும்பு, ஜூன் 3

அமெரிக்காவிடம் இரகசியமாகக் கையளிக்கப்பட்ட நல்லிணக்க ஆணைக் குழுவின் பரிந்துரைகளை நடைமுறைப்படுத்துவது தொடர்பான செயற்திட்ட அறிக்கையை நாடாளுமன்றத்தில் பகிரங்கப்படுத்துமாறு அரசிடம் கோர வேண்டும் என்று சபாநாயகர் சமல் ராஜபக்ஷவிடம் ஐ.தே.க கோரியுள்ளது.

இது தொடர்பாக ஐ.தே.க நாடாளுமன்ற உறுப்பினர் லக்ஸ்மன் 04

## வற்றாப்பளை கண்ணகை அம்மனுக்கு நாளை கோலாகல பொங்கல் உற்சவம்

முல்லைத்தீவு, ஜூன் 3

வரலாற்று புகழ்மிக்க வற்றாப்பளை கண்ணகை அம்மன் ஆலய பெரும் பொங்கல் விழா நாளை திங்கட்கிழமை வெகு சிறப்பாக நடைபெற ஏற்பாடுகள் பூர்த்தியாகியுள்ளன.

வைகாசித் திங்களில் கண்ணகி தெய்வத்துக்கு பொங்கலிட்டு வழிபாடாற்றும் தினத்தில் நாடு முழுவதும் இருந்து ஆயிரக் கணக்கான பக்தர்கள் கலந்து கொள்வர். இம்முறையும் சுமார் 5லட்சம் பேர் வரை இந்த நிகழ்வில் கலந்து கொள்வர் என்று எதிர்பார்க்கப்படுகின்றது.

இந்த அற்புதத் தலத்துக்கு வருடா வருடம் வைகாசித் திங்கள் நாளில் வன்னி வாழ் மக்கள் திரண்டு வந்து கண்ணகை அம்மனுக்கு பொங்கலிட்டு தங்களின் நேர்த்திகளை நிறைவேற்றுவர். 04

CMB-BANGKOK-CMB -27, 900/=
CMB-CHENNAI-CMB -15, 400/=
CMB-LONDON-CMB -83, 800/=
CMB-SHARJAH - 15, 900/=
Call 0773629518
AIR MARK Travels & Tours IATA



NIRO GRANITE RAK KLUDI RAK GERAMICS BISAZZA MOSAICO GRANITO PORCELANOSA SPAIN

அனைத்து விதமான குளியலறை உபகரணங்கள், நில ஓடுகள், Adhesive வகைகள் மற்றும் கிரணைட் வகைகள் ஆகியவற்றினை உங்கள் உள்ளத் தெரிவின் அடிப்படையில் பெற்றுக்கொள்ள இன்றே நாடுங்கள்...

# 212, Palaly Road, Jaffna. 021 222 0033 / 021 222 0044
#05, Stanley Road, Jaffna. 021 222 4777/021 222 4888 #05A, Kodikamam Road, Nelliyadi. 021 226 2000 /021 226 3111

Ranjanas CERAMIC metro engineering (pvt)ltd.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

## மாணவனை தாக்கிய ஆசிரியைக்கு விளக்கமறியல்

கொழும்பு, ஜூன் 3

மாணவர் ஒருவரை தாக்கிய குற்றச்சாட்டின் பேரில் கைதுசெய்யப்பட்ட ஆசிரியையை எதிர்வரும் 6ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்குமாறு மாத்தறை நீதவான் உத்தரவிட்டுள்ளார்.

கந்தரற பகுதியில் 11 வயது மாணவன் ஒருவனைத் தாக்கிய குற்றச்சாட்டின் பேரில் குறித்த ஆசிரியை நேற்றுமுன்தினம் வெள்ளிக்கிழமை கைது செய்யப்பட்டுள்ளதாகப் பொலிஸார் கூறினார்.

மாத்தறை நீதவான் நீதிமன்றத்தில் குறித்த ஆசிரியையை முன்னிலைப்படுத்தியபோதே மாத்தறை நீதவான் இதற்கான உத்தரவைப் பிறப்பித்தார். (த)

## புதிய பஸ்கள் சேவைக்கு வந்தன

இலங்கை போக்குவத்துச் சபையின் தலைமைக் காரியாலயத்தால் இந்த பஸ்கள் நேற்று கிடைக்கப் பெற்றுள்ளன.

வடபிராந்தியத்தில் சேவையில் ஈடுபடுத்துவதற்காக இரண்டு புதிய பஸ்கள் கிடைத்துள்ளதாக இலங்கை போக்குவரத்துச் சபையின் வடபிராந்திய சாலைப் பிரதான முகாமையாளர் எஸ்.அஸ்கர் தெரி வித்தார்.

இலங்கை போக்குவத்துச் சபையின் தலைமைக் காரியாலயத்தால் இந்த பஸ்கள் நேற்று சனிக்கிழமை கிடைக்கப்பெற்றுள்ளன. 42 ஆசனங்களைக் கொண்டவை இந்த பஸ்கள். இவை இரண்டும் அரை சொகுசு பஸ்களாகும்.

இந்த இரண்டு புதிய பஸ்களும் யாழ் சாலையில் ஆரம்பத்தில் சேவையில் ஈடுபடுத்தப்படும். பின்னர் அவை யாழ்ப்பாணத்துக்கும் வவுனியாவுக்கும் இடையிலான சேவையில் ஈடுபடுத்தப்படும் - என்று வட பிராந்தியசாலைப் பிரதான முகாமையாளர் மேலும் தெரிவித்தார். (த-3)

# மஹிந்தவின் வருகையை எதிர்த்து லண்டனில் தமிழர்கள் ஆர்ப்பாட்டம்

லண்டன், ஜூன் 3

மானிதநேயத்திற்கெதிரான மாபெரும் இனப்படுகொலையை மேற்கொண்ட இலங்கை ஜனாதிபதி மகிந்த ராஜ்பக்ஷ ஆற்றவிருக்கும் உரையை நிறுத்தக்கோரியும் பொதுநலவாய அமைப்பின் மனிதாபிமானத்திற்கு களங்கத்தினை ஏற்படுத்தும் இந்தச் செயலைக் கண்டித்தும் லண்டன் மார்ல்பொறோ கவுஸ் என்று அழக்கப்படும் பொதுநலவாய அமைப்பின் முக்கிய பணியகத்தின் முன்னால் மாபெரும் கவனயீர்ப்பு போராட்டம் நேற்று முன்தினம் நடத்தப்பட்டுள்ளது.

இந்தக் கவனயீர்ப்புப் போராட்டத்தில் மக்கள் பெருந்திரளாகக் கலந்து கொண்டு தமது எதிர்ப்பை வெளியிட்டனர்.

தமிழின அழிப்பை மேற்கொண்டு, போர்க்குற்றம் புரிந்த இலங்கை ஜனாதிபதி மகிந்த ராஜபக்சவைப் பிரிட்டன் மகாராணியின் வைர விழாவுக்கு அழைத்திருப்பது, தமிழ் மக்களின் மனங்களைப் புண்படுத்தும் செயற்பாடு எனவும், போர்க்குற்ற நபர் பிரிட்டன் மண்ணில் காலடி வைக்க தமிழ் மக்கள் ஒருபோதும் அனுமதிக்க மாட்டார்கள் என்றும் இந்த ஆர்ப்பாட்டத்தில் கலந்துகொண்ட மக்கள் கூறினர்.

ஆர்ப்பாட்டத்தில் நிறைவில் சிலர் இலங்கைத் தேசியக்கொடியை கொழுத்தித் தமது எதிர்ப்பைத் தெரிவித்தனர். ஆர்ப்பாட்டத்தில் நடுவே தமிழ் மக்களின் நிலைப்பாட்டை விளக்கிய மனுவொன்றும் கையளிக்கப்பட்டது. இதற்கு முன்னதாக கடந்த 26ஆம் திகதி பிரிட்டன் பிரதமர் அலுவலகத்துக்கு முன்பாக தமிழர் ஒருங்கிணைப்புக் குழுவின் ஏற்பாட்டில் பெரிய எதிர்ப்புப் ஆர்ப்பாட்டம் மேற்கொள்ளப்பட்டது. (த)




## கொர்ழும்பில் முக்கிய வீதிகளில் சாவடிகளை அகற்ற நடவடிக்கை

**இராணுவ ஊடக பேச்சாளர்**

கொழும்பு, ஜூன் 3

கொழும்பு நகர எல்லைக்குள் இருக்கின்ற முப்படைகளின் பல வீதி சோதனைச் சாவடிகளும் நேற்று முதல் அகற்றப்படுவதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இராணுவப் பேச்சாளர் பிரிகேடியர் ருவன் வணிகசூரிய இந்தத் தகவலை வெளியிட்டுள்ளார்.

முப்படைகளின் குறித்த சோதனைச் சாவடிகளின் பாதுகாப்பு பொறுப்புகள் பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளதாக அவர் குறிப்பிட்டார்.

இருந்தபோதும், ஏற்கனவே கொழும்பு நகருக்கு வெளியே செயற்பாட்டில் உள்ள பொலிஸ் வீதிச் சோதனைச் சாவடிகள் எதுவும் அகற்றப்படாது என்று இராணுவ ஊடகப் பேச்சாளர் தெரிவித்துள்ளார். (த)

# சந்தேக நபர்களை 48 மணிநேரம் தடுத்து வைத்து விசாரிக்க சட்டம்

கொழும்பு,ஜூன் 3

கைது செய்யப்படும் சந்தேக நபர்களை நீதவான் முன்னிலையில் முன்னிலைப்படுத்துவதற்கு முன் 48 மணித்தியாலங்களுக்குத் தடுத்துவைப்பதற்குப் பொலிஸாருக்கு அதிகாரமளிக்கும் வகையில் குற்றவியல் நடைமுறைக் கோவையில் திருத்தம் செய்வதற்கு நீதியமைச்சு நடவடிக்கை மேற்கொண்டுள்ளது. தற்போது 24 மணித்தியாலங்கள் வரையே இவ்வாறு தடுத்து வைப்பதற்கு அனுமதிக்கப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது.

கொலை, கொள்ளை, ற குற்றங்களுக்கான விசேட பட்டியலொன்றையும் இந்தத் திருத்தம் கொண்டிருக்கும். நாட்டில் அதிகரித்து வரும் குற்றச்செயல்களை கட்டுப்படுத்துவதே இத்திட்டத்தின் பிரதான நோக்கமாகும் என அமைச்சின்



உயர்மட்ட வட்டாரங்கள் தெரிவித்தன.

இந்தச் சட்டத் திருத்தத்தை இலங்கை சட்டத்தரணிகள் சங்கம் வரவேற்பதாக அதன் தலைவரான நாடாளுமன்ற உறுப்பினர் விஜேதாஸ ராஜபக்ஷ தெரிவித்துள்ளார். குற்றச் செயல்கள் அதிகரித்து வருவதால் சட்டத்தரணிகள் இதற்கு ஆதரவு வழங்குவதாக அவர் கூறியுள்ளார்..

பொலிஸ் நிலையங்களில் சந்தேக நபர்கள் சித்திரவதை செய்யப்படுவதற்கு இந்தத் திருத்தம் வழி வகுக்கலாம் எனச் சுட்டிக் காட்டியபோது. ''இந்தத் திருத்தம் கொண்டுவரப்படாமல் தற்போதுள்ளதைப் போன்று சட்டம் இருந்தாலும் சித்திரவதையை நிறுத்த முடியாது. சந்தேக நபர்களினதும் சட்டத்தரணிகளினதும் உரிமையை பாதுகாப்பதற்கு சட்டத்தரணிகள் சங்கம் சாத்தியமான அனைத்து நடவடிக்கைகளையும் மேற்கொண்டுள்ளது.

பொலிஸ் நிலையங்களில் சட்டத்தரணிகளின் உரிமைகள் பாதுகாக்கப்படும், தடுத்துவைக்கப்பட்டுள்ள சந்தேக நபர்களை சட்டத்தரணிகள் நேரடியாக சந்திப்பதற்கு அனுமதி வழங்கப்படும் என சட்டத்தரணிகள் சங்கத்திற்கு பொலிஸ் மா அதிபர் உறுதி யளித்துள்ளார்'' என விஜே தாஸ ராஜபக்ஷ கூறினார். (த)

## இலங்கைப் பணிப்பெண்கள் குறித்து சவூதி அரேபியாவுக்கு எச்சரிக்கை

கொழும்பு,ஜூன் 3

இலங்கையிலிருந்து சவூதி அரேபியாவுக்குப் பணிப்பெண்களை நியமிப்பவர்கள் அவதானமாகச் செயற்பட வேண்டும் என எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

சவூதி அரேபிய ஊடகம் ஒன்றுக்குப் பெயர் குறிப்பிட விரும்பாத இலங்கை அதிகாரி ஒருவர் வழங்கிய தகவலில் இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

இலங்கையிலிருந்து சவூதி அரேபியாவுக்கு வேலை பெற்றுச் செல்லும் வீட்டுப் பணிப்பெண்கள் அங்கு மூன்று மாத காலத்துக்கு மேலதிகமாகப் பணிபுரிவதில்லை என அவர் சுட்டிக் காட்டியுள்ளார்.

முகவர்கள் ஊடாகச் செல்லும் பணிப்பெண்கள், அவர்களினால் பணியிலிருந்து விலகி நாடு திரும்புவதற்கு நிர்ப்பந்திக்கப்படுவதாகத் தெரிவிக்கப்படுகிறது. இந்த முகவர்கள் இலங்கையில் பணிப்பெண்களைத் தெரிவு செய்யும் போது வெளிநாட்டுக்குச் செல்ல விருப்பம் அற்றவர்களைத் தெரிவு செய்கின்றனர்.

இந்தப் பணிப் பெண்கள் அங்கு மனமின்றி வேலை செய்வதன் காரணமாக இடை நடுவில் நாடுதிரும்புகின்றனர்.

இவ்வாறு குறுகிய காலத்தில் நாடு திரும்புபவர்களுக்கு முகவர்கள் ஒரு தொகைப் பணத்தையும் வழங்குவதாக தெரிவிக்கப்படுகிறது.

இவ்வாறு பணிப்பெண்கள் அவர்களது ஒப்பந்த காலம் முடிவடைவதற்கு முன்னதாக நாடு திரும்புவதன் காரணமாக முகவர்களுக்கு மீண்டும் மீண்டும் வியாபார வாய்ப்புக்கள் ஏற்படுவதாக அந்த அதிகாரி தெரிவித்துள்ளார். (த)

# சர்வதேச பாதுகாப்பு தேவையற்றவர்களே இலங்கைக்குத் திருப்பி அனுப்பப்பட்டனர்

## பிரிட்டன் கூறுகிறது

லண்டன், ஜூன் 3

பிரிட்டனில் அரசியல் தஞ்சம் நிராகரிக்கப்பட்ட நிலையில் இலங்கைக்குத் திருப்பி அனுப்பப்படவிருந்த கணிசமானவர்கள் இறுதி நேரத்தில் மேற்கொள்ளப்பட்ட சட்ட ரீதியிலான முயற்சிகள் காரணமாக நிறுத்தி வைக்கப்பட்டிருக்கிறார்கள்.

உண்மையிலேயே தஞ்சம் தேவைப்படுபவர்களுக்குப் பிரிட்டன் தஞ்சம் வழங்கும் என்றும், தஞ்சத்துக்கான நியாயமான தேவை இல்லாதவர்கள் அவர்களது நாடுகளுக்குத் திரும்பிச் செல்ல வேண்டும் என்றும் பிரிட்டன் உள்துறை அலுவலகம் குறிப்பிட்டுள்ளது.

ஒரு நபருக்குச் சர்வதேச பாதுகாப்புத் தேவையில்லை என்று தாம் உணரும் பட்சத்திலேயே அவரைத் தாம் இலங்கைக்குத் திருப்பி அனுப்புவதாகவும், எல்லாத் தமிழர்களுக்கும் பாதுகாப்புத் தேவையில்லை என்று ஐரோப்பிய மனித உரிமைகள் நீதிமன்றம் கூறியுள்ளதாகவும் அது கூறியுள்ளது.

மே 31 ஆம் திகதி இலங்கைக்குச் சென்ற விமானத்தில் 36 பேர் திருப்பி அனுப்பப்பட்டதாகவும், அவர்களில் 7 பேர் பிரிட்டனில் குற்றச் செயல்களில் ஈடுபட்டவர்கள் என்றும், 24 பேர் தஞ்சம் நிராகரிக்கப்பட்டவர்கள் என்றும், ஒருவர் தஞ்சம் கோராத ஆனால் குற்றச் செயலில் ஈடுபட்டவர் என்றும் அது குறிப்பிட்டுள்ளது.

சுமார் 70 பேர் வரை இலங்கைக்கு நாடுகடத்தப்படவிருந்ததாகவும், அவர்களில் 36 பேர் மாத்திரமே இலங்கைக்கு அனுப்பப்பட மீதி அனைவரும் தடுத்து நிறுத்தப்பட்டதாக, இத்தகைய தஞ்சம் நிராகரிக்கப்பட்டவர்களுக்காக வாதாடிய சட்ட நிறுவனங்களில் ஒன்றான வில்சன் சொலிசிட்டர்ஸ் நிறுவனத்தின் சட்ட நிறைவேற்று அதிகாரியான முஹமட் பஃமி கூறினார்.

பொதுவாக ஒவ்வொரு நபரின் வழக்கும் தனித்தனியாக விசாரிக்கப்பட்டு அவரை இலங்கைக்குத் திருப்பி [illegible] கப்பட்டதாக கூறிய அவர், தமது நிறுவனத்தின் சார்பிலான வழக்கு ஒன்றில் நீதிமன்றம் முதல் தடவையாக மனித உரிமைகள் கண்காணிப்பகத்தின் அறிக்கையில் இலங்கை பாதுகாப்பான இடமாக இல்லை என்ற வகையில் கூறப்பட்ட கருத்தை ஏற்று அதனடிப்படையில் திருப்ப அனுப்பவிருந்தவரை நிறுத்தியதாகத் தெரிவித்தார்.

இவ்வாறு மனித உரிமைகள் கண்காணிப்பகத்தின் அறிக்கையை நீதிமன்றம் ஏற்றிருப்பது தஞ்சம் நிராகரிக்கப்பட்ட இலங்கையர்களை [illegible] மிக [illegible] அம்சம் என்றும் அவர் கூறினார். (த)

## அனோமா பொன்சேகா மன்றத்தில் இணைய அதிகமானோர் ஆர்வம்

கொழும்பு, ஜூன் 3

முன்னாள் இராணுவத் தளபதி சரத் பொன்சேகா சிறையிலிருந்து இருவாரங்களுக்குமுன் விடுதலையானதையடுத்து, தனது அனோமா பொன்சேகா மன்றத்தில் இணைந்துகொள்ள பெரும் எண்ணிக்கையானோர் ஆர்வம் காட்டுவதாக திருமதி அனோமா பொன்சேகா தெரிவித்துள்ளார்.

02.02.2011 ஆம் திகதி அனோமா பொன்சேகா மன்றத்தை அனோமா பொன்சேகா ஸ்தாபித்தார். இந்த மன்றத்தில் அங்கத்தவர்களாக இணைவோரின் எண்ணிக்கை வெகுவாக அதிகரித்து வருவதாக அவர் கூறினார்.

''இந்த மன்றத்தில் இணைய விரும்புவதாகக் கூறும் பலரின் தொலைபேசி அழைப்புகள் வருகின்றன. அடுத்த மாதம் புதிய அங்கத்தவர்களைச் சேர்க்கவுள்ளோம். இதில் பெரும் எண்ணிக்கையானோர் இணைவர் என எதிர்பார்க்கிறோம்' என அவர் கூறினார்.

அனோமா பொன்சேகா மன்றமானது அரசியல் நடவடிக்கைகளில் ஈடுபடுவதில்லை. அது பின்தங்கிய மக்களுக்குஉதவுவதற்கான அமைப்பாகும். சரத் பொன்சேகா அதில் அங்கம் வகிக்க வில்லை எனவும் அனோமா பொன் சேகா தெரிவித்தார். (த)

அனோமா பொன்சேகா மன்றமானது அரசியல் நடவடிக் கைகளில் ஈடுபடுவ தில்லை. அது பின்தங்கிய மக்களுக்கு உதவுவதற்கான அமைப்பாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன் வழங்கும்

# மாபெரும் பரிசு மழை





இன்னும் பரிசில்கள் காத்திருக்கின்றன....

## 1 ஆம் பரிசு

ரூபா 10,000

(ஒருவருக்கு மட்டும்)

- சரியான விடையனுப்பும் 40 பேருக்கு தலா ரூ.1000/=
- சரியான விடையனுப்பும் 50 பேருக்கு உதயன் நாளிதழ் பிரதிகளை ஒரு மாதத்துக்கு இலவசமாகப் பெறும் வாய்ப்பு

### போட்டி விதிகளும் பரிசு மழையும்....

- பாடசாலை மாணவர்கள் மாத்திரமே இந்தப் போட்டியில் பங்குபற்ற முடியும்.
- விடைத்தாள்கள் பாடசாலை அதிபரின் உறுதிப் படுத்தலுடன் சமர்ப்பிக்கப்பட வேண் டும்.
- ஒன்றுக்கு மேற்பட்டோர் சரியான விடைகளை எழுதி அனுப்பினால் வெற்றியாளர்கள் குலுக்கல் முறையில் தெரிவு செய்யப்படுவார்.
- விடைகள் யாவும் பிரத்தியேகமாகப் பாடசாலை களில் விநியோகிக்கப்படும் வினாத் தாள்களி லேயே எழுதப்பட வேண்டும்.
- பூரணப்படுத்தப்பட்ட விடைகளுடன் கூடிய விண்ணப்பப் படிவங்கள் உதயன் முகவர் நிலை யங்கள் மற்றும் பாடசாலைகளில் உள்ள பரிசுக் குவியல் பெட்டியில் இடப்பட்டால் மாத்திரமே ஏற்றுக்கொள்ளப்படும்.
- 01.06.2012 தொடக்கம் உதயனில் தொடர்ச்சி யாகப் பிரசுரிக்கப்படும் 1 – 10 வரையான இலக்க மிடப்பட்ட பத்து இலச்சினைகளையும் கத்தரித்து, விண்ணப்பத்துடன் இணைத்து அனுப்ப வேண் டும். அவ்வாறில்லாத விண்ணப்பங்கள் நிராகரிக் கப்படும்.
- உதயன் நிறுவனப் பணியாளர்களின் குடும்ப உறுப்பினர்கள் போட்டியில் பங்குபற்ற முடியாது.
- ஒருவர் எத்தனை விண்ணப்பங்களையும் அனுப் பலாம். ஆனால் எல்லாவற்றிலும் 10 இலச்சினை களும் ஒட்டப்பட்டிருக்க வேண்டும்.
- இலச்சினையை போட்டோ பிரதி செய்து ஒட்டிவரும் விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது.



3

முடிவுத் திகதி : 10.06.2012


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 15 லட்சம் பெறுமதியான நகை ...

01↘ காரர் கையுமெய்யுமாக பிடித்தனர். நகைகள் மீட்கப்பட்டதோடு பொலிஸாரிடம் ஒப்படைக்கப் பட்ட அவரை எதிர்வரும் 17 ஆம் திகதிவரை விளக்கமறிய லில் வைக்குமாறு யாழ். நீதிவான் உத்தரவிட்டுள்ளார்.

இருபாலை சின்னக் கோயில் வீதியில் உள்ள வீடு ஒன் றில் நேற்று முன்தினம் பிற்பகல் 4 மணியளவில் திருட்டு இடம் பெற்றது. பூட்டியிருந்த வீட்டுக் கதவை உடைத்து உள்ளே சென்று 15 லட்சத்து 20 ஆயிரம் ரூபா பெறுமதியான தங்க நகை கள் திருடப்பட்டிருந்தன. இது தொடர்பில் சந்தேகத்துகிட மான ஒருவரைக் கண்ட அயலவர்கள் அது தொடர்பில் வீட் டுக்காரருக்கு தகவல் கொடுத்தனர்.

வீட்டுக்காரர் அவரிடம் சோதனை மேற்கொண்ட போது திருடப்பட்ட தங்க நகைகள் மீட்கப்பட்டன. பின்னர் சந்தேக நபரை கோப்பாய் பொலிஸாரிடம் அவர்கள் ஒப்படைத்தனர்.

அவர் கட்டைப்பிராய் குளத்தடியைச் சேர்ந்தவர் என்று தெரிவிக்கப்பட்டது. அவரிடம் மேற்கொள்ளப்பட்ட ஆரம்ப விசாரணையின் போது திருடியதை அவர் ஒப்புக் கொண்டார் எனத் தெரிவிக்கப்படுகின்றது. தவிர பிரஸ்தாப சந்தேக நபருடன் சேர்ந்த சிலர் முன்னர் நகைகளைத் திருடி கொழும் புக்கு கொண்டு சென்று விற்ற போது பொலிஸாரிடம் மாட்டிக் கொண்டனர் எனவும் கூறப்படுகின்றது. சந்தேக நபரை யாழ். நீதிவானிடம் பொலிஸார் முற்படுத்தினர். அதன் போதே அவரை விளக்கமறியலில் வைக்க உத்தரவிடப்பட் டது. (த-4)

## மருதனார் மடத்தில் விபத்து யாழ்.மத்தி ஆசிரியர் சாவு

01↘ தியை அண்மித்து நேற்றுப் பிற்பகல் 1.30 மணியளவில் இடம்பெற்றது. விபத்தில் மாதக லைச் சேர்ந்தவரும் தெல்லிப்பழை கொல்லங்கலட்டியில் வசித்து தற்போது உடுவில் கிழக்கில் வசித்து வருபவரு மான வீரசிங்கம் ஜெகதீஸ்வரன் (வயது 35) என்பவரே மரணமானவராவார். இவர் மூன்று வயதுக் குழந்தையென் றின் தந்தையாவார். மரணமான ஆசிரியரின் பிறந்ததினமும் நேற்றாகும்.

யாழ்ப்பாணத்தில் நடைபெறவிருந்த நண்பர் ஒருவரின் திருமணத்துக்காக உடுவிலில் இருந்து அவர் சென்று கொண்டிருந்த போதே யாழ்ப்பாணத்தில் இருந்து தெல்லிப் பழை நோக்கிச் சென்று கொண்டிருந்த பயணிகள் மினிபஸ் ஸுடன் அவரது மோட்டார் சைக்கிள் நேருக்கு நேர் மோதிய தாக ஆரம்ப விசாரணைகளில் இருந்து தெரியவருகிறது. உட னடியாக யாழ்.போதனா வைத்தியசாலைக்கு எடுத்துச் செல்லப்பட்டபோதும் அவர் அங்கு மரணமானதாகத் தெரிவிக்கப்பட்டது.

சுன்னாகம் பொலிஸார் சம்பவ இடத்துக்குச் சென்று விசாரணைகளை மேற்கொண்டிருந்தனர். சடலம் தற்போது யாழ். போதனா வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளது. (த-4)

## விடுதலை செய்வதற்கு இன்னும் 625 போராளிகளே உள்ளனர்

01↘ விடுவிக்கப்பட்டுச் சமூகத்துடன் இணைக்கப்பட்ட னர். தமிழ் மத்திய மகா வித்தியாலயத்தில் இடம்பெற்ற இந்த நிகழ்வில் இந்த முன்னாள் போராளிகள் விடுவிக்கப்பட்டுள்ளனர்.

இந்த விடயம் தொடர்பாக சிறைச்சாலைகள் மற்றும் புனர்வாழ்வு அமைச்சின் உயர் அதிகாரி ஒருவரைத் தொடர்பு கொண்டு கேட்டபோதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

இந்த விடயம் தொடர்பாக அவர் மேலும் தெரிவித்ததாவது:

வன்னியில் இடம்பெற்ற இறுதி யுத்தத்தின் போது சரணடைந்த மற்றும் படையினரிடம் அகப்பட்டுக் கொண்ட முன்னாள் போராளிகளை புனர்வாழ்வுப் பயிற்சிக்கு உட்படுத்தி அவர்களை சமூகத்துடன் இணைக்கும் திட்டத் தின் கீழ் பல ஆயிரம்போர் இதுவரை விடுவிக்கப்பட்டுள் ளனர்.

சுமார் 12 பேரைப் புனர்வாழ்வுப் பயிற்சிக்கு உட்படுத்தி னோம். அவர்களில் இன்னமும் 625 பேர் மட்டுமே விடுவிக் கப்பட வேண்டி உள்ளனர். ஏனையோர் அனைவரும் விடுவிக்கப்பட்டுள்ளனர். எஞ்சிய தொகையினரையும் விடுவிக்க நடவடிக்கை எடுத்துள்ளோம் - என்றார். (த-3)

## அமெ.விடம் இரகசியமாக....

01↘ கிரியெல்ல, சபாநாயகர் சமல் ராஜபக்ஷவுக்கு எழுத்து மூலம் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

கடந்த மே 18ஆம் நாள் வொசிங்டனில் அமெரிக்க இராஜாங்கச் செயலர் ஹிலாரியை சந்தித்தபோது, வெளிவிவகார அமைச்சர் பீரிஸ் சமர்ப்பித்த செயற்திட்ட அறிக்கை நாடாளுமன்றத்துக்கோ பொதுமக்களுக்கோ பகிரங்கப்படுத்தப்படவில்லை. ஐ.நா மனித உரிமைகள் சபைத் தீர்மானத்தை அடுத்து அமெரிக்காவிடம் சமர்ப்பிக்கப்பட்டுள்ள இந்த இரகசிய செயற்திட்டத்தை முதலில் நாடாளுமன்றத்தில் வெளியிட வேண்டும்.தேசிய விவகாரங்களில் இரகசியமான பேரங்கள் இருக்க முடியாது.

அமெரிக்கா, ஐ.நா அல்லது வேறு வெளிநாட்டு அமைப்புகளுக்கு இரகசிய உறுதிமொழிகளை வழங்குவ தற்கு முன்னர், செயற்திட்ட நடவடிக்கை குறித்து நாடாளு மன்றத்தில் விவாதிப்பதே பொருத்தமானது. என்று அவர் தனது கடிதத்தில் சுட்டிக்காட்டியுள்ளார். (த)

## சிறுமியைத் துஷ்பிரயோகம் செய்த சோமரத்ன தேரருக்கு 7 ஆண்டு சிறை

01↘ யின் விகாராதிபதியான பகலகம சோமரத்ன தேரருக்கே லண்டன் நீதிமன்றம் இந்தத் தண்டனையை நேற்று முன் தினம் விதித்தது.

1978-79ஆம் ஆண்டு காலப்பகுதியில் இந்தப் பௌத்த பிக்கு முதல்முறையாக லண்டன் வந்தபோது, கிழக்கு லண்டனில் உள்ள பௌத்த ஆலயம் ஒன்றில் சிறுமியைப் பாலியல் துன்புறுத்தலுக்குள்ளாகியதாகச் குற்றம்சாட்டப்பட் டார்.

இவர் மீதான குற்றச்சாட்டுகள் நிரூபிக்கப்பட்டதை அடுத்து கடந்தமாதம் நீதிமன்றம் இவரைக் குற்றவாளியாக அறிவித்தது. கடந்த ஆண்டு நவம்பர் மாதம் ஹீத்ரோ விமான நிலையத்தில் வைத்துக் கைது செய்யப்பட்ட இந்தப் பிக்குவுக்கு நேற்றுமுன்தினம் நீதிபதி தண்டனையை அறிவித்தார்.

அத்துடன் இந்த பௌத்த பிக்குவைப் பாலியல் குற்றவாளிகளின் பட்டியலில் காலவரையறையின்றி வைத்திருக்குமாறும் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

அத்துடன் 65 வயதான இந்த பௌத்த பிக்குவை சிறார் கள் தொடர்பான எந்தச் செயற்பாடுகளில் இருந்தும் விலகி யிருக்க வேண்டும் என்றும் நீதிமன்றம் உத்தரவு பிறப்பித் துள்ளது. (த)

## நாடு கடத்தல் விவகாரத்தால் பிரிட்டனுக்கு கடும் நெருக்கடி

01↘ மூத்த நீதிபதியின் இந்த உத்தரவு, அடைக்கலம் கோரிய தமிழர்களை எதிர்காலத்தில் திருப்பி அனுப்புவதை நிறுத் துவதற்கு, உள்துறைப் பணி யகத்துக்கு அழுத்தங்களை அதிகரிக்கச் செய்துள்ளதாக வும் கூறப்பட்டுள்ளது.

அடைக்கலக் கோரிக்கை நிராகரிக்கப்பட்ட 80இக்கும் அதிகமானவர்களை இலங் கைக்கு நாடு கடத்துவதற் காக பிரிட்டன் வாடகை விமானம் ஒன்றை ஏற்பாடு செய்திருந்தது. ஆனால் நீதி மன்றத்தில் இவர்களின் சார்பில் தாக்கல் செய்யப் பட்ட முறைப்பாட்டை அடுத்து, சுமார் 40 வரையிலானோரை இலங்கைக்குத் திருப்பி அனுப்ப மூத்த நீதிபதி தடை விதித்தார்.

இந்த உத்தரவினால், விமானத்தில் ஏற்றப்பட்ட வர்களும், ஏற்றுவதற்காகக் கொண்டு செல்லப்படக் கொண்டிருந்தவர்களுமென் சுமார் 40 பேர் இறுதி நேரத் தில், அந்த விமானத்தில் இறக்கப்பட்டதுடன் நாடு கடத்தப்படுவோரின் பட்டியலில் இருந்தும் அதி காரிகளால் நீக்கப்பட்டனர்.

இதையடுத்து 150 பேரை ஏற்றிச் செல்லக் கூடிய அந்த விமானம் வெறும் 36 பேரை மட்டுமே ஏற் றிக்கொண்டு கொழும்பு வந்தது குறிப்பிடத்தக்கது.

இந்த நிலையில் மூத்த நீதிபதியின் இந்த உத்தர வையடுத்து, கட்டாயமாகத் தமிழர்களை இலங்கைக்கு நாடு கடத்துவதை நிறுத்து வதற்கு பிரிட்டன் உள்துறைப் பணியகத்துக்கு அழுத்தங் கள் அதிகரித்துள்ளதாகத் தெரியவருகிறது. (த)

## வற்றாப்பளை கண்ணகை....

01↘ குடாநாட்டு மக்கள் மட்டுமன்றி நாடு முழுவதி லும் இருந்து ஏராளமான பக்தகோடிகள் அங்கு வரத் தவறுவதில்லை. மங்களகரமான அந்த வழமை யான (பொங்கல்) கருமத்துக்கு முன்னோடியாகக் கடந்த 28 ஆம் திகதி திங்கட்கிழமை காட்டா விநாயகர் ஆலயத் தில் உள்ள அம்மனுக்கு இரவு 10 மணியளவில் நந்திக்கடல் நீரில் விளக் கேற்றும் நிகழ்வு இடம்பெற்றது. இந்த அற்புத - பாரம்பரிய நிகழ்வு வைகாசித் திங்கள் பொங்கல் நாளுக்கு முதல் ஞாயிறு வரை தொடர்ந்து ஏழு தினங்கள் பக்தி பூர்வமாக நடைபெறும்.

### மடைப் பண்டம் செல்லுதல்

இன்று இரவு காட்டா விநாயகர் ஆலயத்தில் பொங்கல் வழிபாடுகள் முடிவுற்றதும் நாளை திங்கள் இரவு வற்றாப் பளை கண்ணகி ஆலயத்தில் நடைபெறும் பொங்கலுக் குரிய மடைக்கு உரிய பொருள் களை இவ்வாலயத்தில் இருந்தே கொண்டு செல்வது வழமையா கும்.

இதனையே 'மடைப்பண்டம் செல்லுதல்' எனக் கூறப் படும். இந்த ஆலயத்தில் இருந்து மூன்றரைக்கால் தொலை வில் உள்ள கண்ணகி ஆலயத்துக்கு மடைக்குரிய பொருள் கள் பயபக்தியுடன் எடுத்துச் செல்லப்படும். திங்கள் அதிகாலை முதல் திங்கள் இரவு முழுவதும் கண்ணகி அம்மன் ஆலயம் சூழ்ந்த பகுதியில் பக்தர் கூட்டம் அலைமோதும். (ஒ)

## யாழ்.மத்தி நீச்சல் தடாகத்தில்...

01↘ யத் திணைக்கள வீதியைச் சேர்ந்த யோகேஸ்வரன் கிரிதரன் (வயது-15) என்ற மாண வனே மரணமானவராவார்.

தரம் 10 இல் பயிலும் மாணவர்கள் யாழ்.இந்து மகளிர் கல்லூரியில் நடை பெறவிருந்த வடமாகாண கணிதப் போட்டி ஒன்றில் பங்குபற்றுவதற்காக வவுனியாவில் இருந்து யாழ்ப்பாணத்துக்கு வந்து யாழ். மத்திய கல்லூரியில் தங்கியிருந்தனர்.

இரவு அனைவரும் உறக் கத்துக்குச் சென்ற பின் நான்கு மாணவர்கள் நீச்சல் தடாகத்தில் நீந்துவதற்குச் சென்றனர். அதன்போதே பிரஸ்தாப மாணவன் நீரில் மூழ்கி மரணமாகியுள்ளார்.

இதுகுறித்து உடன டியாக மாணவர்களைப் போட்டிக்கு அழைத்துவந்த ஆசிரியர்களுக்குத் தகவல் வழங்கப்பட்டது. இத னையடுத்து அவர்கள் மாண வனை யாழ்.போதனா வைத்தியசாலையில் அனு மதித்தபோதும் மாணவன் மரணமாகி விட்டதாகத் தெரிவிக்கப்பட்டது.

யாழ்.பொலிஸார் விசா ரணை மேற்கொண்டனர். வைத்தியசாலைக்குச் சென்ற யாழ்.நீதிவான் மா.கணேச ராஜா மரண விசாரணை மேற் கொண்டு உடற்கூற்றுப் பரிசோதனை யின் பின்னர் சடலத்தை உறவினர்களிடம் ஒப்படைக்க உத்தரவிட்டார். பரி சோதனையின் பின்னர் சடலம் உறவினர்களிடம் ஒப் படைக்கப்பட்டது. (த-4-17-86-400)

## காணி, பொலிஸ் அதிகாரங்களை வழங்குவதில் தவறில்லை

01↘ வுக்குழுவுக்கு பிரதிநிதிகளை நியமிக்க வேண்டும் என மீன்பிடி நீரியல் வள அமைச்சர் டாக்டர் ராஜித சேனாரத்ன விஷேட செவ்வி ஒன்றில் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

காணி பொலிஸ் அதிகாரங்கள் வழங்கியதால் உலகில் எந்தவொரு நாடும் பிளவுபட்டதாகச் சரித்திரத்தில் இல்லை. தனிநாடுதான் தமிழர் பிரச்சினைக்குத் தீர்வு என்ற நிலைப் பாட்டிலிருந்த தமிழ்த் தேசிய கூட்டமைப்பு இன்று சற்று இறங்கி வந்து ஐக்கிய நாட்டுக்குள் அதிகாரப் பரவலாக்கலை ஏற்றுக்கொண்டுள்ளது. இதை நாம் முறையாகப் பயன்படுத் திக்கொள்ள வேண்டும்.

நாடாளுமன்றத் தெரிவுக்குழு முன் நாடாளுமன்றத்தில் அங்கம் வகிக்காத கட்சிகளின் பிரதிநிதிகளும் வந்து இனப் பிரச்சினை தீர்வு தொடர்பாக தங்கள் கருத்துக்களை முன் வைக்கச் சந்தர்ப்பமுள்ளது. எனவே நாட்டின் அதி உயர்ந்த இடமான நாடாளுமன்றத்தில் காணப்படும் தீர்வுக்கு யாரும் சவால் விடுக்கவும் முடியாது. எனவே இந்த பொன்னான வாய்ப்பைப் பயன்படுத்தி தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்றத் தெரிவுக் குழுவில் பங்குபற்ற வேண்டும். - என்றார். (த)

# ஐ.நா. குழுவினர் உட்பட எவரும் எம்மை விசாரிக்க அனுமதியோம்

01↘ பிள்ளையின் இலங்கைப் பயணத்துக்கு முன்னதாக, ஐ.நா குழு ஒன்று கொழும்பு வருவதற்கான சாத்தியம் உள்ளதா என்பது குறித்துக் கருத்து வெளியிட்ட போதே மொஹான் பீரிஸ் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார். இது தொடர்பாக மொஹான் பீரிஸ் மேலும் தெரிவித்ததாவது:-

போருக்குப் பிந்திய நிலைமைகள் மற்றும் நல்லி ணக்க முயற்சிகள் குறித்து நேரில் கண்டறிய வருமாறு ஐ.நா ஆணையாளர் நவ நீதம்பிள்ளைக்கு இலங்கை அரசு அழைப்பு விடுத்திருந் தது.ஆனால் எந்தவொரு ஐ.நா உண்மை கண்டறியும் குழுவுக்கும் அரசினால் அழைப்புவிடுக்கப்படவில்லை.

நவநீதம்பிள்ளைக்கும் கூட கடந்த ஆண்டு தான் அரசினால் அழைப்பு விடுக் கப்பட்டது. ஜெனிவா தீர் மானத்தை அடுத்து இந்த அழைப்பு விடுக்கப்பட வில்லை. இலங்கை அரசு அப்படி ஒரு அழைப்பை விடுக்கவில்லை.

உண்மைகளைக் கண்ட றியும் நோக்கில் தமது அதி காரிகள் குழுவை இலங் கைக்குள் அனுமதிக்குமாறு ஐ.நா மனித உரிமைகள் ஆணையாளர் நவநீதம் பிள்ளை இலங்கை அரசிடம் கேட்டுள்ளார்.

நவநீதம்பிள்ளை தனது பயணத்துக்கான ஏற்பாடு களைக் கவனிக்கவோ, பாது காப்பு ஒழுங்குகளை மேற் கொள்ளவோ இந்த அதி காரிகளை அனுப்புவதா னால் அதுபற்றி இலங்கை அரசு கவனத்தில் எடுத்துக் கொள்ளும்.

அவர்கள் தொழில்நுட்ப உதவிகளை வழங்க விரும் பினால், இலங்கை அரசின் இணக்கத்துடன் தான் அதைச் செய்ய முடியும். யாரும் வந்து இங்கு விசார ணைகளை நடத்த அனும திக்க முடியாது.இலங்கை அரசு அதற்கு ஒருபோதும் இடமளிக்காது. அதில் நாங் கள் தெளிவாக உள்ளோம்- என்றார். (த)

## ஹோஸ்னி முபாரக்குக்கு ஆயுள் தண்டனை

01↘ வழக்கு விசா ரணைக்கு உட் படுத்தப்பட்ட முதலாவது முன்னாள் அரச தலைவர் ஹோஸ்னி முபாரக் தான் என்பது குறிப்பிடத்தக்கது.

ஆர்ப்பாட்டக்காரர்கள் கொல்லப்பட்டமை தொடர் பில் முன்னாள் உள்துறை அமைச்சர் ஹபிப் அல்-அத் லிக்கும் ஆயுள்தண்டனை அளிக்கப்பட்டுள்ளது.

இதுதவிர ஹோஸ்னி முபாரக் மற்றும் அவரது இரண்டு மகன்மாருக்கு எதி ராக தனியாகக் கொண்டு வரப்பட்டிருந்த ஊழல் குற் றச்சாட்டுக்கள் தொடர்பி லான வழக்கில் அவர்க ளுக்கு விடுதலை அளிக்கப் பட்டுள்ளது.

ஹோஸ்னி முபாரக் குக்கு ஆயுள்தண்டனை அளிக்கப்பட்ட செய்தி கேட்டு நீதிமன்றக் கட்டடத் துக்கு வெளியே மக்கள் கொண்டாட்டங்களில் ஈடுபட்டிருந்ததைக் காண முடிந்ததாக அங்கிருக்கும் பி.பி.சி செய்தியாளர் கூறி னார்.

இதேவேளை, ஆர்ப்பாட் டக்காரர்களை கொன்றமை தொடர்பில் பரவலாக குற் றஞ்சாட்டப்பட்ட இன்னும் நான்கு பேருக்கு (உள் துறை அமைச்சரின் சகாக் கள்) விடுதலை அளிக்கப் பட்டமை தொடர்பில் மக் கள் கொதிப்படைந்துள்ள தாகச் செய்தியாளர்கள் கூறு கின்றனர்.

தீர்ப்பின்போது, 'தேசத் தின் புதல்வர்கள் நீதிக் காகவும் சுதந்திரத்திற்காக வும் அமைதியாக கிளர்ந் தெழுந்தனர்' என்று சுட் டிக்காட்டிய நீதிபதி, '30 ஆண்டுகால இருண்ட யுகம்' என்று முபாரக் ஆட் சியை வர்ணித்தார்.

அரசுக்கெதிரான மக்கள் கிளர்ச்சியின்போது, அரச படைகள் நிராயு தபாணிகளாக இருந்த பொதுமக்கள் மீது ஆயுத தாக்குதல்களை நடத்திய போது, முன்னாள் ஜனாதி பதி முபாரக்கும் உள்துறை அமைச்சரும் அந்தத் தாக்கு தல்களைத் தடுக்கவில்லை என்று குற்றஞ்சாட்டப்பட் டது.

1981முதல் 2011 வரை எகிப்தை ஆண்ட ஹோஸ்னி முபாரக், ஆர்ப்பாட்டக்காரர் கள் 850 பேர் கொல்லப்பட் டமை தொடர்பில் மரண தண்டனையை எதிர்நோக் குவார் என்று எதிர்பார்க் கப்பட்டமை குறிப்பிடத்தக் கது. (த)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

# வெற்றுக் கோஷம் போடும் சிங்கள அரசியல் தலைமைகள்

இலங்கையின் வட பகுதி, தமிழர்களுக்கு மட்டும் சொந்தமானது அல்ல. இந்த நாட்டு மக்களுக்கு நாட்டின் எப்பகுதியிலும் சென்று குடியேற உரிமை உண்டு என்று பாதுகாப்புச் செயலர் கோத்தபாய ராஜபக்ஷ சமீபத்தில் தெரிவித்த கருத்து அரசியல் வட்டாரங்களில் சர்ச்சையை ஏற்படுத்தியது.

அதேவேளை, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா. சம்பந்தன், அரசின் ஆதரவுடன் வடக்கில் மேற்கொள்ளப்படும் திட்டமிட்ட சிங்களக் குடியேற்றத்தையே எதிர்க்கிறோம் என்று விளக்கம் அளித்துள்ளார். அரசு தெற்கில் தமிழர்களைக் கொண்டு வந்து குடியேற்ற முடியுமா என்று கேள்வி எழுப்பிதமிழர் தரப்பு நியாயத்தை முன்வைத்துள்ளார் அவர்.

தமிழ் மக்களின் பாரம்பரிய பிரதேசங்களில் திட்டமிட்ட சிங்களக் குடியேற்றம் என்பது தமிழ் மக்களின் பெரும்பான்மைப் பலத்தைக் குறைக்கும். அவர்களது கலாசாரத்தையும் பண்பாடுகளையும் படிப்படியாக அழிக்கும். காலப்போக்கில் கலப்பு இனம் ஒன்றை உருவாக்கும் என்பது சொல்லித் தெரியவேண்டிய ஒன்றல்ல.

அதேசமயம் முன்னாள் இராணுவத் தளபதி சரத்பொன்சேகாவின் கருத்தும் இதே பேரினவாதச் சிந்தனையில் அமைந்திருப்பது ஏமாற்றம் அளிக்கிறது.

தமிழ்மக்களின் பேரழிவில் முடிவடைந்த போரில், அவர் நேரடியாகச் சம்பந்தப்பட்டவர் என்பது தெரிந்தும் கூட வடக்கு, கிழக்கு மாகாணங்களில் தமிழ் மக்கள், அவருக்கு ஆதரவாக வாக்களித்தனர்.

ஆனால் சிறைவாசம் அனுபவித்த பின்னர் வெளியே வந்துள்ள பொன்சேகா, எக்ஸ்பிரஸ் செய்திச் சேவைக்கு அளித்த செவ்வி, அவரது உண்மையான வேடத்தை வெளிக்காட்டுகிறது. அவரது இரு முகங்களை அம்பலப்படுத்துகிறது.

இந்த நாட்டில் வாழும் சிங்கள மக்கள், தமிழ் மக்கள் மீது நம்பிக்கை வைக்க மறுப்பதாலேயே அதிகாரப் பகிர்வுக்கு சிங்கள மக்கள் எதிர்ப்புத் தெரிவிக்கின்றனர். இரு சமூகங்களுக்கும் இடையிலான நம்பிக்கையீனமும் சந்தேகமும் அகற்றப்பட வேண்டும் என்று பிளந்து தள்ளியுள்ளார் அவர்.

அடே அப்பா! இரண்டு இனங்களுக்கும் இடையிலான அவநம்பிக்கை நீங்க இரு வழிகளையும் பொன்சேகா கண்டுபிடித்துள்ளார்.

இரு இனங்களும் ஒன்றிணைந்து வாழவேண்டும்; இரு இனங்களும் தங்களிடையே நெருங்கிய வர்த்தக உறவுகளை ஏற்படுத்திக் கொள்ளவேண்டும் என்கிறார் அவர். தமிழருக்கு மட்டுமே வடபகுதி சொந்தமானது அல்ல என்ற பாதுகாப்புச் செயலரின் சிந்தனையே, பொன்சேகாவின் அடிமனதிலும் உள்ளது என்பது மிகத் துல்லியமாகப் பிரதிபலிக்கிறது.

ஐ.நா. மனித உரிமைகள் பேரவைத் தீர்மானம், இனப் பிரச்சினைத் தீர்வுக்கு அமெரிக்கா, இந்தியா கொடுத்துவரும் அழுத்தம், நாடாளுமன்றத் தெரிவுக்குழுவுக்கு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பைக் கொண்டுவர எடுக்கப்பட்டு வரும் முயற்சிகள் எல்லா வற்றையும் அவர் மறந்து போனார்.

எக்ஸ்பிரஸ் செய்திச் சேவைக்கு அவர் வழங்கிய செவ்வியில் தெரிவித்திருக்கும் மற்றும் சில முக்கிய அம்சங்களை நோக்குவதும் பொருத்தம்.

* இனப்பிரச்சினைக்குத் தீர்வு காணப்பட வேண்டுமானால் தமிழ் மக்கள் மீது சிங்கள மக்களுக்கு உள்ள அவநம்பிக்கை முதலில் நீக்கப்பட வேண்டும்.

* வடக்கில் உள்ள படையினரை வெளியேற்றக்கூடாது. படையினர் வெளியேற வேண்டும் என்று அரசியல்வாதிகள் கேட்கவும்கூடாது.

* மிகவும் மோசமான பயங்கரவாத நடவடிக்கைகளில் ஈடுபட்டவர்கள் இன்னும் நாட்டில் உள்ளனர்.

*விடுதலைப் புலிகள் அமைப்பின் முன்னாள் உறுப்பினர்களுக்கு மூளைச் சலவை மூலம் அவர்களது ஆயுதக் கலாசார சிந்தனை மாற்றப்படவேண்டும்.

* போர்க் குற்றச்சாட்டுக்களை நான் நிராகரிக்கிறேன். ஆயிரக்கணக்கானோர் கொல்லப்பட்டனர் என்பதும், வைத்தியசாலை மீது குண்டு வீசப்பட்டது என்பதும் சுத்தப் பொய்.

*இறுதிப் போரின் போது பாதுகாப்பான இடங்களுக்குப் பொது மக்கள் சென்ற பின்னரே படையினர் தாக்குதல் நடத்தி உள்ளனர். பொதுமக்களைப் பாதுகாக்கப் பாதுகாப்பு வலயங்கள் அமைக்கப்பட்டன. கனரக ஆயுதங்களைப் படையினர் பயன்படுத்தவில்லை.

சரத் பொன்சேகாவின் மேற்கூறிய கருத்துக்கள், ஒரு விடயத்தைத் துலாம்பரமாக ஒட்டு மொத்தமாக வெளிக்காட்டுகின்றன. அதாவது, இனப்பிரச்சினைக்கு அவரிடம் தீர்வு கிடையாது. தமிழ் மக்கள் மீது சிங்கள மக்கள் நம்பிக்கை வைக்கவேண்டும் என்று கூறியவர். இதற்காக இருபது வருடங்களும் செல்லலாம் என்கிறார்.

சிங்கள மக்களுக்கு தமிழ் மக்கள் எந்த ஒரு கட்டத்திலும் நம்பிக்கைத் துரோகம் இழைக்கவில்லை. தந்தை செல்வாவின் சாத்விகப் போராட்டமும், பிரபாகரனின் ஆயுதப் போராட்டமும் சிங்கள மக்களால் ஏமாற்றப்பட்டு, சிங்கள மக்கள் மீது தமிழ் மக்கள் நம்பிக்கை இழந்த நிலையில்தான் ஆரம்பிக்கப்பட்டன. அரசியல் அடிச்சுவட்டில் புதிதாகக் காலடி எடுத்து வைக்கும் அவரால் இந்த அடிப்படை உண்மையைப் புரிந்துகொள்ள முடியவில்லை!

தமிழ் மக்களின் நம்பிக்கையை சிங்கள மக்கள் பெறுவதன் மூலமே இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வு சாத்தியம். இந்த யதார்த்தத்தைப் புரிந்து கொள்ளாத தென்னிலங்கைத் தலைமைகளின் பேரினவாதச் சிந்தனை மாற்றம் பெறாதவரை, இந்த நாட்டில் சமாதான சக வாழ்வு என்பது வெற்றுக் கோஷமன்றி வேறு எதுவுமில்லை!



# கொல்லைப்புற வளர்ப்புக்கு 59 ஆயிரம் கோழிகள்

## வடக்கில் கடந்த ஆண்டில் வழங்கப்பட்டன

யாழ்ப்பாணம், ஜூன் 31

உணவு விவசாய ஸ்தாபனத்தின் திட்டத்தின் கீழ் கடந்த வருடம் கொல்லைப்புற கோழி வளர்ப்புக்கென 59 ஆயிரத்து 380 கோழிகள் வழங்கப்பட்டன. இத்திட்டத்துக்கு 8.95 மில்லியன் ரூபா நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது என்று விவசாய கால்நடை அபிவிருத்தி காணி நீர்ப்பாசனம் மற்றும் மீன்பிடி அமைச்சின் வட மாகாணத்துக்கான செயலாளர் யூ.எல்.எம்.ஹால்தீன் தெரிவித்துள்ளார்.

இந்த விடயம் தொடர்பாக அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

கடந்த வருடம் உணவு விவசாயத் திட்டத்தின் கீழ் முல்லைத்தீவு, கிளிநொச்சி, வவுனியா, மன்னார் ஆகிய மாவட்டங்களில் உள்ள 2ஆயிரத்து 696 பயனாளிகளுக்கு உதவிகள் வழங்கப்பட்டுள்ளன.

59 ஆயிரத்து 380 கோழிகளைக் கொல்லைப் புறக் கோழி வளர்ப்புத் திட்டத்தின் கீழ் வழங்கல் மற்றும் அதற்கான பயிற்சிகளை வழங்குவதற்கு 1.57 மில்லியன் ரூபாவும்-

முல்லைத்தீவு, கிளிநொச்சி ஆகிய மாவட்டங்களில் கட்டாக்காலி மாடுகளைப் பிடித்து 2 ஆயிரத்து 260 பயனாளிகளுக்கு வழங்குவதற்கு 0.80 மில்லியன் ரூபாவும்-

முல்லைத்தீவு, வவுனியா ஆகிய மாவட்டங்களில் 2 ஆயிரத்து 600 பயனாளிகளுக்கு 22 ஆயிரத்து 500 கொல்லைப்புற கோழிகள் வழங்குவதற்கும் அதற்கான பயிற்சியளிப்பதற்கும் 1.10 மில்லியன் ரூபாவும்-

முல்லைத்தீவு, கிளிநொச்சி ஆகிய மாவட்டங்களில் உள்ள 10 ஆயிரம் மந்தைகளைப் பிடித்து பயனாளிகளுக்கு வழங்குவதற்கு 2.02 மில்லியனும்-

யாழ்ப்பாணம், வவுனியா ஆகிய மாவட்டங்களில் ஆயிரத்து 125 பயனாளிகளுக்கு 22 ஆயிரத்து 500 கோழிகளை கொல்லைப்புற வளர்ப்புக்கு வழங்குவதற்கும் பயிற்சியளிப்பதற்கும் 0.12 மில்லியனும்,

முல்லைத்தீவு கிளிநொச்சி மாவட்டங்களில் 3 ஆயிரத்து 529 பயனாளிகளுக்கு 67 ஆயிரத்து 460 கோழிகளும் உபகரணங்களும் வழங்குவதற்கு 0.40 மில்லியனும்-

மன்னார் மாவட்டத்தில் ஆயிரத்து 287 பயனாளிகளுக்கு 29 ஆயிரத்து 610 கோழிகளும் உபகரணங்களும் வழங்குவதற்கு 0.14 மில்லியனும்-

யாழ். மாவட்டத்தில் 512 பயனாளிகளுக்கு 15 ஆயிரத்து 360 கோழிகளும் உபகரணங்களும் வழங்குவதற்கு 0.06 மில்லியனும்-

கிளிநொச்சி, யாழ்ப்பாணம் ஆகிய மாவட்டங்களில் ஆயிரத்து 450 பயனாளிகளில் 3 ஆயிரத்து 200 ஆடு வளர்ப்போர் 670 பாலுற்பத்தியாளர்களுக்கு பசு, காளை மாடுகள், ஆடுகள் வழங்குவதற்கு 2.75 மில்லியன் ரூபாவும் ஒதுக்கப்பட்டிருந்தன என்று தெரிவித்தார். (ம-13)

## அனுமதி பெறாது ஒலிபெருக்கி பாவித்தால் சட்ட நடவடிக்கை

யாழ்ப்பாணம், ஜூன் 3

உரிய அனுமதி பெறாமல் ஆலயங்களில் ஒலிபெருக்கி பாவனைக்கு உட்படுத்தப்பட்டால் பொலிஸாரால் சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் எனத் தீர்மானிக்கப்பட்டுள்ளது. கோப்பாய் பிரதேசத்தில் ஆலயங்களில் ஒலிபெருக்கி பாவனையால் மாணவர்களின் கற்றல் நடவடிக்கைகள் பாதிப்படைவதுடன், வயோதிபர்களும், நோயாளர்களும் பல அசௌகரியங்களைஎதிர்கொள்கின்றனர்.

இந்த விடயம் தொடர்பாக கடந்த 25 ஆம் திகதி வலி. கிழக்கு பிரதேசத்தில் இடம்பெற்ற சிவில் பாதுகாப்புக் குழுக்கூட்டத்தில் பொது மக்களால் தெரிவிக்கப்பட்டது.

இதற்கமைவாக ஒலிபெருக்கிகள் நிரந்தரமாக ஆலயங்களில் பொருத்தப்பட்டு பாவிப்பதாயினும் உரிய அனுமதியைப் பெற்று உரிய நேரக்கட்டுப்பாட்டுக்கு அமைவாகவும் உரிய ஒலிச் செறிவுக்கு அமைவாகவும் பயன்படுத்த வேண்டும் எனத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இந்த நடைமுறையை மீறிச் செயற்படுவோர் தொடர்பாகப் பிரிவிலுள்ள பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்தால் உரிய சட்ட நடவடிக்கைகளை பொலிஸார் மேற்கொள்வர் என வலிகாமம் கிழக்கு பிரதேச செயலர் தெரிவித்துள்ளார். (ம-14)

## சட்டவிரோதமாக மாடு வெட்டியோருக்கு அபராதம்

அல்லைப்பிட்டியில் சட்ட விரோதமாக மாடு வெட்டி இறைச்சியை யாழ்ப்பாணத்துக்குக் கடத்த முயன்ற மூவருக்கு ஒரு வார விளக்கமறியலுக்குப் பின்னர் 15 ஆயிரம் ரூபா அபராதம் விதித்தது ஊர்காவற்றுறை நீதிமன்றம்.

அல்லைப்பிட்டியில் சட்ட விரோதமாக கட்டாக்காலிகளைப் பிடித்து கொன்று இறைச்சி கடத்தப்பட்டு விற்பனை செய்யப்படுவது தொடர்பாக அதே இடத்தைச் சேர்ந்த சந்தேக நபர்கள் மூவர் கைது செய்யப்பட்டனர். பரமேஸ்வரன் தேவகுமார், பரமலிங்கம் ஐங்கரன், மேரிஜோப் லியோ நிஷாந் ஆகியோரே பொலிஸாரால் கைது செய்யப்பட்டு நீதிமன்று உத்தரவுக்கமைய விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்தனர்.

இந்த வியாழக்கிழமை வழக்கு நீதிவான் ஆர்.எஸ்.மகேந்திரராஜா முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்ட போது மூவரும் தம்மீதான குற்றத்தை [illegible] [illegible] விதிக்கப்பட்டது. (ம-4)

## மாகாண தமிழ்மொழி தினப் போட்டியில் வவுனியா தெற்கு வலயம் முதன்னிலை

வவுனியா, ஜூன் 3

வடமாகாணப் பாடசாலைகளுக்கிடையிலான தமிழ்மொழித் தினப் போட்டிகளில் வவுனியா தெற்கு வலயம் 98 புள்ளிகளைப் பெற்று வடமாகாணத்தில் முதன்மை வலயமாகத் தெரிவு செய்யப்பட்டுள்ளது. மாகாணக் கல்வித்திணைக்களத்தால் நடத்தப்பட்ட மாகாண மட்டத் தமிழ்த்தினப்போட்டி முடிவுகள் அண்மையில் மாகாணக் கல்வித்திணைக்களத்தால் வெளியிடப்பட்டது.

அதன் பிரகாரம் ஒவ்வொரு வலயங்களும் பெற்றுக் கொண்ட மொத்தப்புள்ளிகள் வருமாறு:-

வவுனியா தெற்கு வலயம் 98 புள்ளிகளைப் பெற்று முதலிடத்தையும், யாழ்.வலயம் 82 புள்ளிகளைப் பெற்று இரண்டாமிடத்தையும் வலிகாமம் கல்விவலயம் 67 புள்ளிகளைப் பெற்று மூன்றாமிடத்தையும், மன்னார் வலயம் 50 புள்ளிகளைப் பெற்று நான்காமிடத்தினையும் பெற்றுக் கொண்டன.

வடமராட்சி வலயம் 41 புள்ளிகளையும், கிளிநொச்சி வலயம் 40 புள்ளிகளையும், முல்லைத்தீவு வலயம் 32 புள்ளிகளையும், மடுவலயம் 19 புள்ளிகளையும், துணுக்காய் வலயம் 18 புள்ளிகளையும், வவுனியா வடக்கு வலயம் 15 புள்ளிகளையும், தென்மராட்சி கல்வி வலயம் 9 புள்ளிகளையும் தீவக வலயம் 3 புள்ளிகளையும் பெற்றுக் கொண்டன.

இதேவேளை மாவட்ட மட்டத்தில் 202 புள்ளிகளைப் பெற்று யாழ்.மாவட்டம் முதலாம் இடத்தையும் 113 புள்ளிகளைப் பெற்று வவுனியா இரண்டாம் இடத்தையும் 69 புள்ளிகளைப் பெற்று மன்னார் மாவட்டம் மூன்றாம் இடத்தையும் பெற்றுக் கொண்டது குறிப்பிடத்தக்கது. (ம-400)

## புனர்வாழ்வளிக்கப்பட்ட போராளிகள் விவரம் திரட்டல்

வலி வடக்கு, ஜூன் 03

புனர்வாழ்வளிக்கப்பட்டு விடுதலையான முன்னாள் போராளிகள் பற்றி விவரங்களை புனர் வாழ்வுப் பிரிவினர் மீண்டும் பிரதேச செயலர் பிரிவுகள் மற்றும் உதவி அரச அதிபர் பிரிவுகள் ரீதியாக பதிவு செய்யும் நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளனர்.

யாழ்ப்பாணத்தில் உள்ள பிரதேச செயலகங்கள் உதவி அரச அதிபர் பிரிவுகளுக்குச் செல்லும் புனர்வாழ்வு பிரிவினர் கிராம அலுவலர்கள் மூலம் இவ்வாறு விவரங்களைத் திரட்டி வருகின்றனர் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

புனர்வாழ்வளிக்கப்பட்டவர்களின் தொழில், செயற்பாடுகள், சமூகத்தில் எதிர்நோக்கும் பிரச்சினைகள், உதவிகள் போன்ற விவரங்கள் இவ்வாறு திரட்டப்பட்டு வருகின்றன என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம-86)

## இலங்கைப் போக்குவரத்துச் சபையின் ஓய்வுபெற்ற பணியாளர்களுக்கு விரைவில் பணிக்கொடை நிலுவை

யாழ்ப்பாணம்,ஜூன் 3

இலங்கை போக்குவரத்து சபையின் வடபிராந்தியக் காரியாலயங்களில் பணியாற்றி ஓய்வுபெற்ற பணியாளர்களுக்கான பணிக்கொடை நிலுவைக் கொடுப்பனவு விரைவில் வழங்கப்படவுள்ளது.

இந்தக் கொடுப்பனவுகளை வழங்குவதற்கு வசதியாக சம்பளத்திட்ட பணியாளர்கள் தமது தேசிய அடையாள அட்டை, வங்கிக் கணக்கின் உறுதிப்படுத்தப்பட்ட ஆவணத்தின் போட்டோ பிரதி ஆகியவற்றுடன் நாளை மறுதினம் செவ்வாய்க்கிழமை கோண்டாவிலில் உள்ள வடபிராந்திய போக்குவரத்துச் சபையின் தலைமைக் காரியாலயத்துக்கு சமுகமளிக்குமாறு வடமாகாணப் பிரதித் தொழில் ஆணையாளர் கே.கனகேஸ்வரன் அறிவித்துள்ளார்.

இந்தப் பணிக்கொடை விவகாரம் தொடர்பான வழக்கு ஒன்று யாழ். நீதிமன்றத்தில் விசாரணையில் உள்ளமை குறிப்பிடத்தக்கது. (த-17)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நீர்த்தாங்கியை அமைக்குமாறு அக்கராயன் மக்கள் கோரிக்கை

அக்கராயன், ஜூன் 3
அக்கராயனில் மக்களின் குடிதண்ணீர்த் தேவையினை தடையின்றி மேற்கொள்ளும் வகையில் நீர்த்தாங்கியொன்றை அமைக்குமாறு மக்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

அக்கராயன் மத்திய பகுதி மேடான பகுதியாக இருப்பதால் தண்ணீர்த் தட்டுப்பாடு நிலவுகின்றது. குறிப்பாக கோடைகாலங்களில் இங்குள்ள மக்கள் குடிதண்ணீருக்கான தட்டுப்பாட்டை எதிர்கொண்டு வருகின்றனர்.

இந்த நிலையில் இந்தப் பகுதியில் நீர் வழங்கல் வடிகாலமைப்புச் சபையினர் நீர்த்தாங்கியொன்றை அமைக்கும் பணிகளுக்குத் திட்டம் தீட்டி வருவதாகத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

ஆனால் இது தொடர்பான மேலதீக விவரங்களை அறிய முடியவில்லை.

இதேவேளை அக்கராயன் மத்திய பகுதியில் குளத்து நீர் செல்லும் வடிகால் வசதிகளை ஏற்படுத்தினால் நிலத்தடி நீர் மேம்படுவதற்கான சாத்தியங்கள் அதிகரிக்கும் வாய்ப்பு உண்டு.

மேலும் கெங்காதரன் குடியிருப்பு அக்கராயன் மகாவித்தியாலயம், ஆரம்ப வித்தியாலயம் ஆகிய இடங்களில் நிலவும் குடிதண்ணீர்த் தட்டுப்பாடு ஓரளவு நிவர்த்தியாகுமெனவும் கூறப்படுகின்றது. (க-18)

# அவலநிலை தொடருமேயானால் வீதியில் இறங்கிப் போராடுவோம்

### முல்லைத்தீவு கடற்றொழிலாளர் அறிவிப்பு

கிளிநொச்சி, ஜூன் 3
தமது அவலநிலை தொடருமேயானால் தாம் வீதியில் இறங்கிப் போராட்டம் நடத்துவதுடன் உண்ணாவிரதத்திலும் ஈடுபடப் போவதாக முல்லைத்தீவு கடற்றொழிலாளர்கள் தெரிவித்துள்ளனர்.

முல்லைத்தீவுக் கடற்றொழிலாளர்கள் தொடர்ந்தும் தொழில் நெருக்கடிகளுக்கு ஆளாகின்றார்கள் என முல்லைத்தீவு மாவட்ட கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசத் தலைவர் சி.அருள்ஜெனிஸ்பேட் தெரிவித்துள்ளார்.

முல்லைத்தீவு கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்க சமாசத்தின் கீழ் 18 கடற்றொழிலாளர் சங்கங்கள் உள்ளன. இந்தச் சங்கங்களின் கீழ் சுமார் 4 ஆயிரத்து, 300இற்கும் மேற்பட்ட தொழிலாளர்கள் கடற்றொழிலை வாழ்வாதார தொழிலாகக் கொண்டு வாழ்ந்து வருகின்றனர்.

முல்லைத்தீவு கொக்கிளாய் முதல் சுண்டிக்குளம் பேய்ப் பாறைப் பிட்டி வரையான 84 கிலோமீற்றர் நீளத்தைக் கொண்ட கடற்கரையோரப் பகுதிகள் இங்கு உள்ளன. இதில் குறிப்பிட்ட சில பகுதிகளில் கடற்றொழில் மேற்கொள்வதற்கு அனுமதிக்கப்படவில்லை. இதைவிடச் சிறுகடல்பகுதிகளாகச் சாலைக் கடல், சுண்டிக்குளம்கடல், நந்திக்கடல், நாயாறு, குமுழமுனை, கொக்குத்தொடுவாய், கொக்கிளாய் போன்றன காணப்படுகின்றன.

இந்த நிலையில் சிறுகடற் பகுதிகளில் சட்டவிரோத இயந்திரப்பாவனை, கூட்டு வலைப் பயன்பாடு வெளிச்சம் பாய்ச்சி மீன்பிடித்தல் போன்ற செயற்பாடுகளும் ஆழ்கடலில் அத்துமீறிய மீன்பிடிகளும் வேறுஇடங்களைச் சேர்ந்த மீனவர்களால் மேற்கொள்ளப் படுகின்றன. இதனால் இங்குள்ள தொழிலாளர்கள் தொழிலை இழந்துள்ளனர்.

இந்த நிலை தொடர்பாக மாவட்ட அரச அதிபர் கடற்றொழில் நீரிய திணைக்கள அதிகாரிகள், இராணுவ அதிகாரி, பொலிஸார் எனப் பலருக்கு தெரியப்படுத்தியும் இதுவரை எந்தத் தீர்வும் கிடைக்கவில்லை.

இந்த நிலை நீடிக்குமானால் அனைத்து மக்களும் வீதியில் இறங்கிப் போராட்டம் நடத்த வேண்டிய நிலை ஏற்படுவதுடன் உண்ணாவிரதம் இருக்க வேண்டிய நிலையும் தவிர்க்க முடியாதென முல்லைத்தீவு கடற்றொழிலாளர்கள் தெரிவித்துள்ளனர். (க-6)

## கழிவு நீரை தேக்கினால் உரிய சட்ட நடவடிக்கை

வவுனியா,ஜூன் 3
வவுனியா நகரசபைக் குட்பட்ட வீதிகள் மற்றும் வீடுகளுக்கு முன்னால் கழிவுநீர் தேங்கி நிற்குமாயின் இதனுடன் தொடர்புடையவர்கள் மீது சட்ட நடவடிக்கை எடுக்கப்படும்.

இவ்வாறு தெரிவித்துள்ளார் வவுனியா நகரசபையின் பதில் தலைவர் எம்.எம்.ரதன்.

வவுனியா நகரசபை எல்லைக்குட்பட்ட வீதியோரங்கள் மற்றும் வீடுகள், வணிக நிலையங்களுக்கு முன்பாக கழிவுநீர் தேங்கி நிற்பதால் அதனால் துர்நாற்றம் வீசுவதோடு, நோய்க்காரணிகள் தோன்றக்கூடிய சூழ்நிலை காணப்படுவதாகப் பொதுமக்கள் பலரால் நகரசபையிடம் முறைப்பாடு தெரிவிக்கப்பட்டுள்ளது.

எனவே அத்தகைய சூழ்நிலைக்குக் காரணமானவர்கள் அவற்றைச் சீர்செய்து ஏற்படக்கூடிய அசௌகரியங்களைத் தவிர்த்துக் கொள்ளுமாறும், தவறும் பட்சத்தில் அவர்களுக்கெதிராக நீதிமன்றத்தின் மூலம் சட்ட நடவடிக்கைகள் மேற்கொள்ளப் படும் என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

நகரசபை எல்லையினுள் புதிதாக கட்டடங்கள் அமைக்க விரும்புவோர் நகரசபையின் அனுமதிபெற்றே அமைக்க வேண்டும். பலர் இவ்வாறு அனுமதி பெறாது கட்டடங்களை அமைத்து வருகின்றனர். அவர்களுக்கு எதிராகவும் சட்ட நடவடிக்கை எடுக்கப்படவுள்ளது என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

(க-400)



வவுனியா விபுலானந்தாக் கல்லூரியின் ஆரம்பப் பிரிவு மாணவர்களிடையே நடத்தப்பட்ட விசேட விநோத அலங்காரப் போட்டியின் போது பல்வேறு வேடங்களைத் தாங்கிய மாணவர்களைக் காணமுடிகிறது. (435)

## முக்கொம்பனில் மருத்துவமனை அமைத்துத் தர கோரிக்கை

அக்கராயன், ஜூன் 3
பூநகரி முக்கொம்பனில் மருத்துவமனை ஒன்றை அமைக்குமாறு கிராம மக்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

கிராம அலுவலர் தலைமையில் இடம்பெற்ற மக்கள் சந்திப்பொன்றின் போது இந்தக் கோரிக்கை விடப்பட்டுள்ளது. முக்கொம்பன் கிராமம் உருவாக்கப்பட்ட நாளிலிருந்து இன்றுவரை மருத்துவமனை இல்லாத நிலையில் இந்தக் கிராம மக்கள் வாழ்ந்து வருகின்றனர்.

தற்போது இந்தக் கிராம மக்கள் மருத்துவமனை தேவைகளுக்கு கூட பூநகரி அல்லது அக்கராயனுக்குச் செல்ல வேண்டிய அவல நிலையில் உள்ளனர். இந்த நிலையில் முக்கொம்பன் கிராம மக்கள் தமக்கு மருத்துவமனையை அமைத்து வழங்குமாறு கோரிக்கை விடுத்துள்ளனர்.

(க-18)

## வவுனியா சேக்கிழார் விழாவில் பல்வேறு சிறப்பு நிகழ்வுகள்

வவுனியா,ஜூன் 3
வவுனியாவில் இன்று இடம்பெறும் சேக்கிழார் விழாவில் பல்வேறு சிறப்பு நிகழ்வுகள் இடம்பெறவுள்ளன.

வவுனியா சேக்கிழார் மன்றமும் வெளிவட்ட வீதி, ஸ்ரீ சிந்தாமணி விநாயகர் ஆலயமும் இணைந்து நடத்தும் சேக்கிழார் விழா இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணியளவில் சிந்தாமணி விநாயகர் ஆலய கலாசார மண்டபத்தில் இடம்பெறும்.

வவுனியா சேக்கிழார் மன்றத் தலைவர் க.ஐயம்பிள்ளை தலைமையில் இடம்பெறும் இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக வவுனியாப் பிரதேச செயலர் அ.சிவபாதசுந்தரனும், சிறப்பு விருந்தினர்களாக வவுனியா தெற்கு வலயக் கல்விப்பணிப்பாளர் திருமதி.அன்ரன் சோமராஜா வவுனியா வடக்கு வலயக் கல்விப் பணிப்பாளர் திருமதி ப.கணேசலிங்கம், இளைப்பாறிய அதிபர் சி.வீ பேரம்பலம், வைத்திய கலாநிதி ப.சத்தியலிங்கம் ஆகியோரும் கலந்து கொள்ளவுள்ளனர்.

இதில்ஆசியுரையைகுருமன்காடு கருமாரியம்மன் தேவஸ்தானப் பிரதம குரு சிவஸ்ரீ நா.பிரபாகரக்குருக்களும் வரவேற்புரையைச் சிந்தாமணிப் பிள்ளையார் ஆலய பரிபாலன சபைத்தலைவர் பொ.நல்லையாவும் வழங்குவர்.

அதனைத் தொடர்ந்து வவுனியா பண்டாரிக்குளம் விபுலானந்தாக்கல்லூரியின் மேற்பிரிவு மாணவன் க.கனகேந்திரனின் பெரிய புராணம் காட்டும் பக்தி நெறி என்ற தலைப்பிலான சிறப்பு உரை இடம்பெறும் மேலும் வவுனியா தேசிய கல்வியியற் கல்லூரி உபபீடாதிபதி கு.சிதம்பரநாதனின் சிறப்புச் சொற்பொழிவும் இடம்பெறும்.

விசேட நிகழ்வாகக் கலாநிதி அகளங்கன் தலைமையில் சேக்கிழார் சுவாமிகள் காட்டிய சைவப்பெருநெறியில் என்ற தலைப்பில் கருத்தாடல் இடம்பெறவுள்ளது.

இதில் சமூக தத்துவம் என்ற தலைப்பில் ச.லோகேஸ்வரனும், அரசியல் தத்துவம் எனும் தலைப்பில் ஈ.எஸ் வரதனும், பக்திப் பெருமிதம் எனும் தலைப்பில் செல்வி கலா குமாரப்பாவும், பெண் மகத்துவம் எனும் தலைப்பில் இலக்கியச் சுடர் ஐ. கதிர்காம சேகரனும் கருத்தாடல்களை முன் வைக்கவுள்ளனர்.

(க-400)

### பல ஆண்டுகளாக நிர்வாகிகள் தெரிவு இடம்பெறாத சனசமூக நிலையம்

கடந்த பல வருடங்களாகக் கற்சிலைமடு சனசமூக நிலையங்களுக்கான நிர்வாகிகள் தெரிவு இடம்பெறாதமையால் அதன் செயற்பாடுகளில் இங்குள்ள மக்கள் ஐயம் தெரிவித்துள்ளனர்.

தற்போது சனசமூக நிலையத்துக்கென கட்டடம் எதுவும் இல்லை. இதனால் இங்குள்ள மக்கள் சனசமூக நிலையம் இயங்குகின்றதா என்ற கேள்வியையும் எழுப்புகின்றனர்.

மேலும் சனசமூக நிலையம் இயங்குவதாகத் தெரிவித்து, அங்கு பத்திரிகைகளும் ஏனையதேவைகளும் உதவித்தொகைகள் கிடைத்து வருவதாகத் தெரிவிக்கின்றபோதும் அப்படி ஒன்றும் நடப்பதில்லை. அந்த உதவித்தொகைகளுக்கு என்ன நடக்கின்றது என்பதை அறியமுடியாத நிலையில் மக்கள் உள்ளனர் என்றும் தெரிவிக்கப்படுகின்றது.

எனவே உரிய அதிகாரிகள் சனசமூக நிலையத்துக்கான புதிய நிர்வாகத்தை தெரிவு செய்வதுடன் அதனை உரிய முறையில் இயங்க வைப்பதற்கு ஆவன செய்யவேண்டும் எனவும் இங்கு வாழும் மக்கள் வேண்டுகோள் விடுக்கின்றனர்.

மேலும் சனசமூக நிலையத்துக்கென நிரந்தரமான கட்டடம் ஒன்றை அமைத்து அதனைச் செயற்படுத்துவதன் மூலம் மக்கள் தமது பொழுதைப் பயனுள்ள வகையில் கழிக்க முடியுமெனவும் தெரிவிக்கப்படுகின்றது. (க-500)

## கசிப்பு விற்றோர் செலுத்தினர் ரூ.40ஆயிரம்

கிளிநொச்சி, ஜூன் 3
கிளிநொச்சியின் பல்வேறு பகுதிகளிலும் கசிப்பை வைத்திருந்த பலருக்கு சுமார் 40 ஆயிரம் ரூபா தண்டம் விதிக்கப்பட்டுள்ளது.

கிளிநொச்சி இராமநாதபுரம் பகுதியில் 180 மில்லிலீற்றர் கசிப்பை தனது உடைமையில் வைத்திருந்த வயோதிபர் ஒருவருக்கு நீதிமன்றத்தினால் 10 ஆயிரம் ரூபா தண்டம் விதிக்கப்பட்டது. கிளிநொச்சி தருமபுரம் பகுதியில் இதேயளவு கசிப்பை வைத்திருந்தவருக்கும் 10ஆயிரம் ரூபா தண்டம் விதிக்கப்பட்டது. இதே போன்று 155 ஆம் கட்டை பாரதிபுரத்தில் 175 மில்லிலீற்றர் கசிப்பை வைத்திருந்தவருக்கும் 10 ஆயிரம் ரூபா தண்டமாக விதிக்கப்பட்டுள்ளது.

கிளிநொச்சி இராமநாதபுரம் பகுதியில் 750 மில்லிலீற்றர் கசிப்புடன் பிடிபட்டவருக்கும் 10 ஆயிரம் ரூபா தண்டம் விதிக்கப்பட்டுள்ளது.

(க-6)

## செயலிழந்தன குழாய்க் கிணறுகள் செய்வதறியாத நிலையில் பொதுமக்கள்

துணுக்காய்ப் பிரதேசத்தில் குழாய்க் கிணறுகள் பழுதடைந்துள்ளதால் குடிதண்ணீரைப் பெறுவதில் மக்கள் கடும் சிரமங்களை எதிர்கொண்டு வருகின்றனர்.

துணுக்காயில் கடும் வரட்சி காணப்படுகின்றது. மக்கள் குடிதண்ணீர் பெறுவதற்கு அயல்கிராமங்களைநாடிச்செல்கின்றனர். குறிப்பாக உயிலங்குளம் பகுதியில் இந்தியன் வீட்டுத்திட்டத்தின் கீழ் வீடுகள் வழங்கப்பட்டுள்ளன. அங்கு பொதுக்கிணறுகள் எவையும் இல்லாமையால் அங்குள்ள மக்கள் குடிதண்ணீர் தேடி 3கிலோ மீற்றருக்கு அப்பாலுள்ள தெண்ணியங்குளம் கிராமத்திற்குச் செல்கின்றனர். தமது இதர தேவைகளுக்குரிய நீரைத் தேடியும் இவர்கள் அலைந்து திரிகின்றனர். அந்த மக்களின் அவல நிலையை உணர்ந்த பிரதேச சபையினர் இங்கு கிணறு அமைப்பதற்கான தீர்மானத்தை மேற்கொண்டுள்ளனர்.

இந்த நிலையில் துணுக்காய், மல்லாவி மற்றும் அயல் கிராமங்களில் அமைக்கப்பட்டிருந்த சுமார் 30 இற்கும் மேற்பட்ட குழாய்க்கிணறுகள் செயலிழந்துள்ளன. இதனால் மக்கள் பெரும் பாதிப்புக்களுக்கு உள்ளாகியுள்ளனர். (க-415)

## கஞ்சாப் பாவனையாளர்களால் முத்துஐயன் கட்டில் அச்சநிலை

ஒட்டுசுட்டான் பிரதேசத்திலுள்ள முத்துஐயன்கட்டுக் கிராமத்தில் கஞ்சாப் பாவனையாளர்களின் பல்வேறு இடையூறுகளால் அந்தக் கிராம மக்கள் அச்சத்தை எதிர்கொண்டு வருகின்றனர்.

கஞ்சாப் பாவனையாளர்கள் வர்த்தகர்களிடம் கப்பம் கோருதல், கண்ணில் தென்படுகின்றவர்களிடம் வலிந்து சண்டையிடல், கடன் வழங்குமாறு வற்புறுத்தல் ஆகிய செயற்பாடுகளில் ஈடுபடுகின்றனர். இதனால் அந்தக் கிராம மக்கள் அச்சத்துடன் வாழ்ந்து வருகின்றனர்.

பொலிஸார் தீவிர கண்காணிப்பில் உள்ளபோதிலும் அவர்களின் கண்களில் மண்ணைத் தூவிவிட்டு இந்தச் செயல்கள் இடம்பெற்று வருகின்றன. கசிப்பு உற்பத்தி மற்றும் பாவனையால் சீரழிந்து வரும் இந்தக் கிராமம் தற்போது கஞ்சாவினால் ஏற்படும் சீரழிவிலும் சிக்கித் தவிப்பதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பொலிஸார் தமது இரகசியக் கண்காணிப்பு நடவடிக்கைகளின் மூலமே இத்தகைய செயல்களைக் கட்டுப்படுத்த முடியுமெனக் கிராம மக்கள் தெரிவிக்கின்றனர்.

(க-500)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



யாழ்ப்பாணத்துக்கு நேற்று முன்தினம் வருகை தந்த சிங்கப்பூர் வெளிவிவகார அமைச்சர் கே.சண்முகம் தலைமையிலான குழுவினர் வலி.வடக்கில் மக்கள் மீளக்குடியமர்த்தப்பட்ட சுதந்திரபுரம் பகுதிக்குச் சென்று மக்களுடன் கலந்துரையாடினர். இதன்போது யாழ் .மாவட்ட அரச அதிபர் சுந்தரம் அருமைநாயகம், தெல்லிப்பழை பிரதேச செயலர் கே. சிறிமோகன், வலி. வடக்குப் பிரதேச சபையின் தலைவர் சோ.சுகிர்தன் ஆகியோரும் கலந்துகொண்டனர். (ம-5)

# மாவட்ட விலை நிர்ணய குழுவே கட்டணம் குறித்து முடிவு எடுக்கும்

## நயினாதீவுக் கூட்டத்தில் அரச அதிபர் தெரிவிப்பு

**கட்டண அதிகரிப்பு படகுகளில் நாளாந்தம் செல்லும் பயணிகளைப் பெரிதும் பாதிக்கும்**

யாழ்ப்பாணம், ஜூன் 3

நயினாதீவு - குறிகாட்டுவான் படகு சேவைக்கான கட்டணம் அதிகரிப்பு தொடர்பாக ஆலய நிர்வாகக் கூட்டத்தில் தீர்மானிக்க முடியாது. இதனை யாழ். மாவட்ட விலை நிர்ணய குழுவே தீர்மானிக்கும்.

யாழ். மாவட்ட அரச அதிபர் சுந்தரம் அருமைநாயகம் இவ்வாறு தெரிவித்தார். நயினாதீவு பெருந்திருவிழா தொடர்பான அவசர கூட்டம் யாழ். செயலகத்தில் இடம்பெற்றது.

இதில் கலந்துகொண்ட படகு உரிமையாளர்கள் கருத்து வெளியிடுகையில் கூறியதாவது:-

படகின் இயந்திர உபகரணங்கள், டீசல் போன்றவற்றின் விலை அதிகரிப்புக்கு ஏற்ப படகுக் கட்டணம் ரூபா 30 இல் இருந்து 40 ரூபாவாக உயர்த்தப்பட வேண்டும் என்று கோரிக்கை விடுத்தனர்.

இதற்கு யாழ். மாவட்ட பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் செ.பிரணவநாதன் பதிலளித்ததாவது:-

குறிகாட்டுவானில் இருந்து நெடுந்தீவுக்குச் செல்வதற்கான படகுக் கட்டணம் 60 ரூபா மட்டுமே. இது 13 கடல் மைல் தூரத்தைக் கொண்ட நெடும் பயணம்.

ஆனால் குறிகாட்டுவானில் இருந்து நயினாதீவுக்கு 2 கடல் மைல் தூரத்துக்குத் தற்போது 30 ரூபா அறவிடப்படுவதே அதிகமானது. இது நாளாந்தம் செல்லும் பயணிகளுக்கு பெரும் பாதிப்பை ஏற்படுத்தும். எனவே படகு கட்டணம் அதிகரிப்பு பொருத்தமற்ற ஒன்று என்று தெரிவித்தார்.

இதற்கு அரச அதிபர் பதில் தெரிவிக்கையில்,

படகு கட்டணம் தொடர்பாக மாவட்ட விலை நிர்ணய குழுவால் விலை நிர்ணயம் செய்யப்பட்டு வேலணைப் பிரதேச சபைக்கு அறிவிக்கப்படும்.

குறிகாட்டுவான் - நயினாதீவு துறைமுக விஸ்தரிப்பு தொடர்பாக முக்கியமாக ஆராயப்பட வேண்டியுள்ளது.

காலத்தின் தேவைகருதி விஸ்தரிக்கப்படவிருப்பதால் அந்த விடயம் தொடர்பாக விரிவாக ஆராயப்படவேண்டும்.

இதேவேளை மிகவும் வசதி வாய்ந்த பொருத்தமான படகுகள் இரவு சேவைக்கு அனுமதிக்கப்படும்.

நயினாதீவு - குறிகாட்டுவான் படகுகளை இறங்குதுறையில் அணைப்பதற்கு கடற்படையினர் பூரண ஒத்துழைப்பு வழங்குவர். மேலும் பிரதேச சபை, போக்குவரத்துச் சபை, மின்சார சபை, நீர்வழங்கல் வடிகால் அமைப்பு சபை, அம்புலன்ஸ் சேவை என்பன வழமையான சேவைகளை மேற்கொள்ளும்என்று அரசஅதிபர்மேலும் தெரிவித்தார். (ம-41)

# மானிப்பாய் கலாசார மண்டபம் நவீன வசதிகளுடன் புனரமைப்பு

வலி.தென்மேற்கு, ஜூன் 3

மானிப்பாய் கலாசார மண்டபம் மக்களைக் கவரக்கூடிய வகையில் நவீன வசதிகளுடன் புனரமைக்கப்படவுள்ளது.

இதற்கான தீர்மானம் வலி. தென் மேற்குப் பிரதேச சபையின் மாதாந்தக் கூட்டத்தில் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டுள்ளது.

பிரதேச சபையின் மாதாந்தக் கூட்டம் தலைவர் அ.ஜெபநேசன் தலைமையில் சபை மண்டபத்தில் நடைபெற்றது.

இந்தக் கூட்டத்தில் பொது நிகழ்வுகளுக்குப் பயன்படுத்தப்பட்டுவரும் கலாசார மண்டபத்தின் தற்போதைய நிலை குறித்தும் புனரமைக்கப்பட வேண்டிய அவசியம் குறித்தும் உறுப்பினர்கள் தமது கருத்துக்களைத் தெரிவித்தனர்.

வலி. தென் மேற்குப் பிரதேச சபையின் தலைமை அலுவலகத்துடன் இணைந்திருக்கும் கலாசார மண்டபம் பல வருடங்களுக்கு முன் அமைக்கப்பட்டது.

இந்த மண்டபம் தற்பொழுது சேவை இழந்து காணப்படுகிறது.

இங்கு பொருத்தப்பட்டுள்ள பல மின்விசிறிகள் இயங்காத நிலையில் இருப்பதால் இங்கு இடம்பெறும் நிகழ்வுகளுக்கு வரும் மக்கள் சிரமத்துக்கு உள்ளாகிறார்கள். அதுமட்டுமல்ல மக்களைக் கவரக்கூடிய வகையில் மண்டப உட்பகுதியும் அமையவில்லை.

இந்த மண்டபத்தில் திருமண வைபவங்கள் மற்றும் கலை நிகழ்ச்சிகள் உட்படப் பொது நிகழ்வுகளும் இடம்பெற்று வருகின்றன.

இதனால் சபையின் வருமானமும் அதிகரிக்கின்றது. இந்த நிலையில் சோபை இழந்து காணப்படும் இந்த மண்டபத்தை மக்களைக் கவரக் கூடிய வகையில் பல வசதிகளும் நவீன முறையில் புனரமைக்கப்பட வேண்டிய தேவை ஏற்பட்டுள்ள என்று தெரிவிக்கப்பட்டது.

இதனை அடுத்து இதற்கான தீர்மானம் பிரதேச சபையில் நிறைவேற்றப்பட்டுள்ளது. (ம-115)

# தங்கூசி வலைகள் மீனவர்களிடம் பறிமுதல்

யாழ்ப்பாணம்,ஜூன் 3

யாழ்.குடாக்கடலில் மீனவர்களிடமிருந்து கைப்பற்றப்பட்ட தடைசெய்யப்பட்ட ஒரு தொகுதி தங்கூசி வலைகள் அழிக்கப்படவுள்ளன என்று யாழ். மாவட்ட கடற்தொழில் நீரியல் வளத் திணைக்களத்தின் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

தடைசெய்யப்பட்ட இந்தத் தங்கூசி வலைகளைச் சில மீனவர்கள் பயன்படுத்தி வந்துள்ளனர். அண்மையில் கடற்தொழில் திணைக்களத்தின் பரிசோதகர்கள் மேற்கொண்ட திடீர் சோதனையின் போது இந்த மீனவர்கள் மாட்டிக்கொண்டனர். அவர்களிடமிருந்து உடனடியாக இந்த வலைகள் பறிமுதல் செய்யப்பட்டன என்றும் இவை விரைவில் தீயிட்டு அழிக்கப்படும் என்றும் அந்த அதிகாரி மேலும் கூறினார். (த-17)

## உரிமம் பெறாத விடுதிகளை மூட நடவடிக்கை

யாழ்ப்பாணம், ஜூன் 3

யாழ்.மாநகர சபை எல்லைக்கு உட்பட்ட பகுதிகளில் இயங்கிவரும் இதுவரை காலமும் உரிமம் பெறாத மற்றும் உரிமத்துக்கு விண்ணப்பிக்காத சகல விடுதிகளும் எதிர்வரும் 18 ஆம் திகதி முதல் உள்ளூராட்சி அதிகார சட்டத்துக்கு அமைவாக மூடப்படும் என்பதை யாழ்.மாநகர சபை முதல்வர் தெரிவித்துள்ளார். (ம-14)

முதலாம் இடம் அல்ல
இரண்டாம் இடமாம்

வேலையின்தன்மை: விமான நிலைய தொழிலாளர்
(GROUND SERVICES)



இடம்: சவுதி அரேபியா விமான நிலையம்



கம்பனி: சவுதி அரேபியன் எயாலைன்ஸ்

சம்பளம்: SR 690/- (1 SR = Rs. 34/-)

Terms & Conditions:
- உணவு, தங்குமிடம், மருத்துவ வசதி,போக்குவரத்து, விமான பயண டிக்கட் இலவசம்.
- நாளொன்றுக்கு 8 மணித்தியால வேலையுடன், வாரத்தில் 1 நாள் விடுமுறை.
- 2 வருட ஒப்பந்த காலம்
- ஏனையவை சவுதி அரேபியாவின் தொழிலாளர் சட்டதிட்டங்களுக்கு உட்பட்டது

கட்டணம்: அரசாங்கத்தால் அங்கீகரிக்கப்பட்ட ரூபா 80,000.00 மட்டுமே

உடன்தொடர்புகளுக்கு: 0777529529 / 0773103100

வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகமும் இலங்கை தரப்படுத்தல் நிறுவனமும் இணைந்து நடாத்திய அகிலஇலங்கை ரீதியிலான தரப்படுத்தலில் இரண்டாம் இடம் பெற்ற

கிவ் பீ எம்ப்ளொயிமென்ட் பிரைவட் லிமிட்ட்

இல: 06, கெம்பல் டெரஸ், கொழும்பு - 10.
(பாஸ்போட் காரியாலயம் அருகில்)

AL1316/Advt:/05/12

தருனரும் - வெளிநாட்டில் பாதுகாப்பான தொழிலும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தில்லையம்பதியாள் துணை
# சீர்மேவு யாழ்ப்பாணம் கோண்டாவில் தில்லையம்பதி அருள்மிகு ஸ்ரீ சிவகாமி அம்பாள் திருக்கோயில்




# 37 ஆவது ஆண்டு இரதோற்சவ விழா - சிறப்புமலர் - 03.06.2012

## திருக்கோயில் வரலாறு

அன்று சிவபூமி என்று திருமூலர் அழைத்த மணி நாடாம் இலங்கை மண்ணின் வரலாற்றுச் சிறப்புமிக்க ஆல யங்களுள் இத்திருக்கோயிலும் ஒன்றாகும். ஆரம்பத்தில் பேச்சியம்மன் எனும் திருநாமத்துடன் விளங்கும் அன்னை சிவகாமி 1850 ஆம் ஆண்டுக்கு முன் சூளைகள் சூழ மாமர நிழலில் முன்னைய பெரியார்களால் பராமரிக்கப்பட்டு வந்தாலும் வேலன் எனும் பெரியவராலேயே அம்பிகையின் ஆலயம் தோற்றம் பெற்றது எனலாம்.

1855 ஆம் ஆண்டு தொடக்கம் ஆசார சீலரான வேலன் என்பவர் அன்னையின் ஆலயத்திற்கு விளக்குவைத்து வழிபடத் தொடங்கினார். இது இவ் ஆலய வழிபாட்டின் மறுமலர்ச்சிக் காலம் எனலாம். அத்துடன் கருங்கல்லினாலான அம்பிகையின் திருவுருவ விக்கிரகம் கோயிலில் வைக்கப்பட்டது.

1910 ஆம் ஆண்டு காலப்பகுதியில் இவ்வாலயம் நான்கு பக்கமும் சுண்ணாம்புக் கற்களால் கட்டப்பட்டு கூரை ஒட்டினால் வேயப்பட்டு 15 அடி விஸ்திரணம் கொண்ட ஆலயமாக உருப் பெற்றது. பஞ்ச மணியும், குதிரை வாகனமும், சேமக் கலமும், சந்தனக் கிண்ணம் மற்றும் பூசை மணியும் இன்று வரை பேணிப் பாதுகாத்து வருதல் குறிப்பிடத்தக்கது.

சைவ ஆசாரத்தைப் பேணும் சைவப் பெரியார் சபாபதி மார்க்கண்டேயர் அவர்கள் பூசைக்காக நியமிக்கப் பட்டார். இக் காலத்திலேயே தான் வைகாசி விசாகப் பட்சத்தில் ஆடு, கோழி போன்ற உயிர் பலியிடுதலும் மடை போடுதலும் வெகு சிறப்பாகக் கொண்டாடப்பட்டது. தொடர்ந்து 1958 வரை சென்றது. 1959 ஆம் ஆண்டு ஆரம்பப் பகுதியில் திருப்பணிச்செல்வர் முத்தன் இராசன், பொன்னன் சுந்தரலிங்கம், இவ்வூரைச் சேர்ந்த திருத்தொண்டர் விரகத்தி தம்பிஐயா மற்றும் பொதுமக்களின் முயற்சியினால் தர்ம பரிபாலன சபை உருவாக்கப்பட்டு இச் சபையினால் இவ்வாலயம் பொறுப்பேற்கப்பட்டு இரண்டு காலப் பூசைக்கு ஏற்பாடு செய்யப்பட்டது.

அன்று முதல் நித்திய பூசகராக திருத்தொண்டர் வி.தம்பிஐயா நியமிக்கப்பட்டார். இவர்களது முயற் சியால் ஆல யத்தில் நடைபெற்று வந்த வைகாசி விசாகப் பொங்கலில் இடம்பெற்ற பலியிடுதல், மடை போடு தல் போன்ற முறைமைகள் மாற்றப்பட்டு ஆலயத்தின் புறச் சூழலில் அமைந்திருந்த சூளை மேடுகள் அகற்றப்பட்டு ஆலயத்திற்கென ஒரு விஸ்தீரணம் கொண்ட இடம் ஒதுக்கப்பட்டது.

1962 ஆம் ஆண்டு அன்னையின் அருட்கடாட்சத்தினால் ஒன்று கூடிய மக்கள் ஆலயத்தை சிறப்பான திருப்பெருங் கோயிலாக அமைப்பதற்கு பாலஸ்தாபனம் செய்தனர். 1965 ஆம் ஆண்டு யாழ் மாவட்ட முன்னாள் நீதிபதி சோ.தனபாலசிங்கம் அவர்களும் யாழ்.பொலிஸ்சுப்பிரிண்டன் வன்கண்ட அவர்களும் வட மாகாண அரசாங்க அதிபர் ஜவான் சமரசிங்க அவர்களும் அத்திபாரக்கல் நடும் விழாவினை முன்னின்று செய்தனர்.

1965 ஆம் ஆண்டு ஆனி மாதம் 17 ஆம் திகதி வியாழக்கிழமை உத்திரட்டாதி நட்சத்திர சுபமுகூர்த்த நன்நாளில் பிரம்ம ஸ்ரீ குமாரசுவாமி குருக்கள் அவர்களால் பிரதிஷ்டா மகா கும்பாபிஷேகம்நடை பெற்றது. அன்றிலிருந்து சிவகாமி அம்பாள் என்ற திருநாமம் சூட்டப்பட்டது. 1966 ஆம் ஆண்டு வைகாசி விசாகத்தை முன்னிட்டு பத்து தினங்கள் அலங் கார உற்சவம் நடைபெற திருவருள் பாலித்தது.

09.07.1971 ஆம் ஆண்டு தேர்த்திருப்பணி அங்குரார்ப்பண நிகழ்வு நடைபெற்றது. தொடர்ந்து ரிஷபம், பலிபீடம், கொடித்தம்பம், வசந்த மண்டபம், மணிக்கோபுரம், திருமஞ்சனக்கிணறு முதலான திருப்பணி வேலைகள் நிறைவேற்றப்பட்டு 1976 ஆம் ஆண்டு தேர்வெள்ளோட்டம் இடம்பெற்றது. 1976 ஆம் ஆண்டு 10 நாள் மஹோற்சவம் ஆரம்பிக்கப்பட்டதுடன் கொடியேற்றம், சப்பறம், தேர், தீர்த்தத் திருவிழா என்பன சிறப்பாகவும் கொண்டாடப்பட்டன.

1977 ஆம் ஆண்டு அம்பாள் திருவூஞ்சல் காப்பு சுட்டி புரத்தில் இசைமாமணி சீர்காழிகோவிந்தராஜன் அவர்களால் பாடப்பட்ட சிறப்புடையது. திருக்கோயில் வாயிலில் தல விருட்சமாகக் காணப்படும் ஆலும் அரசும் ஒன்றிணைந்த அருள்மிகு பொந்தினூடாக அம்பாளின் விமானத்தின் கலசத்தினைக் காணக்கூடியதாகவுள்ளது. இது அற்புதமான ஒன்றாகும். மீண்டும் 1982 இல் பாலஸ்தாபனம் செய்யப்பட்டு உலக இந்து மகா சபையின் இலங்கை இணைப் பிரதித் தலைவராக இருந்த அரச அதிபர் யோகேந்திரா துரைச்சாமி அவர்களால் தைப்பூச தினத்தில் அடிக்கல் நாட்டப்பட்டு திருப்பணி வேலைகள் தொடங்கப்பட்டன.

1989 ஆம் ஆண்டு சிவஸ்ரீ க.குகதாசக் குருக்கள் தலைமையில் பங்குனி உத்தர பௌர்ணமி நிறைநாளில் மகாகும்பாபிஷேகம் அம்பாளின் அருட்கடாட்சத்தில் சிறப்புற நடைபெற்றது.

1990 இல் திருக்கோயில் வருடாந்த சங்காபிஷேக தினத்தன்று காசியில் இருந்து காசி விஸ்வநாதா விசாலாட்சி இங்கு எடுத்து வரப்பட்டு பிரதிஷ்டை செய்யப்பட்டது. 1994 ஆம் ஆண்டு நடைபெற்ற பங்குனி உத்தர சங்காபிஷேகத்தின்போது அம்பாளின் திருக்கடாட்சத்தினாலும் அடியார்களின் பெரும் காணிக்கையினாலும் அம்பாளுக்கு பொன் முடியும் திருக்கோரணம் சூட்டு விழாவும் கொண்டாடப்பட்டது. கவிமாமணி வீரமணி ஐயர் அவர்களால் ஆக்கப்பெற்று தென்னிந்திய பக்திபாடகரான கலைமாமணி ரி.எம்.சௌந்தராஜன் அவர்களால் பாடப்பட்ட திருவூஞ்சல் ஒலிப்பதிவு நாடா வெளியீட்டு விழா 1994 இல் இடம்பெற்ற வைகாசி வசந்த உற்சவத்தன்று ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர பரமாச்சாரிய சுவாமிகள் ஆசியுடன் வெளியிடப்பட்டது. அத்தோடு 1997 ஆம் ஆண்டு இரண்டாவது பக்திப் பாமாலை ஒலிப்பதிவு நாடாவும் வெளியீடு செய்யப்பட்டது

இந்தியாவிலிருந்து கொண்டுவரப்பட்ட ஸ்ரீசக்கரம் 1998 இல் இடம்பெற்ற பங்குனி உத்தரதினத்தில் பிரதிஷ்டை செய்யப்பட்டது. 2000 ஆம் ஆண்டு 25 ஆவது மஹோற்சவத்தை முன்னிட்டு அடியார்களின் பெரும் காணிக்கையினால் அம்பாளுக்கு தங்கக்குடை சூட்டும் விழாவும் இராஜகோபுரம் அமைப்பதற்கான அங்குரார்ப்பண வைபவமும் நடைபெற்றன. இதைத்தொடர்ந்து 2002 ஆம் ஆண்டு (மஹோற்சவ காலப்பகுதியில்) பிரம்மஸ்ரீ ந.வீரமணிஐயர் அவர்களால் இயற்றப்பட்ட தில்லையம்பதியாள் கீர்த்தனைகள் தென்னிந்தியக் கலைமாமணி டாக்டர் சீர்காழி ஜி.சிவசிதம்பரம் மற்றும் ரி.எம்.எஸ்.செல்வக்குமார் ஆகியோரால் பாடப்பட்டது.

2003 ஆம் ஆண்டு மஹோற்சவ பெருநாள் நிறைவுற்ற கையோடு பாலஸ்தாபனம் ஆரம்பிக்கப்பட்டு நவக்கிரகமும் புதிதாக அமைக்கப்பட்டு அம்பாளுக்கு செங்கழுநீர்த் தடாகமும் அமைக்கப்பட்டது. அத்துடன் வசந்தமண்டப தெற்கு வாசல் திறக்கப்பட்டது. இந்தியாவின் கும்பகோணத்திலிருந்து தருவிக்கப்பட்ட நடராஜப் பெருமான், மாணிக்கவாசகர், நவக்கிரக மூர்த்திகள் என்பன பிரதிஷ்டை செய்யப்பட்டதுடன் தமிழகத்தின் கும்பகோண நவகன்னிகை எனப் போற்றப்படும் மகாமாசி மா தீர்த்தங்கள் கொண்டு 2004 ஆம் ஆண்டு சுபானு வருடம் பங்குனி உத்தர தினத்தன்று சிவஸ்ரீ சதா மகாலிங்க சிவக்குருக்கள் தலைமையில் மஹாகும்பாபிஷேகம் நடைபெற்றது.

அத்தோடு அருட்கவிசெம்மல் பிரம்மஸ்ரீந.வீரமணிஐயர் இரா.இராஜேஸ்வரன் ஆகியோரால் இயற்றப்பட்ட தென்னிந்தியப் பாடகர்களான கலைமாமணி டாக்டர் சீர்காழி ஜி.சிவசிதம்பரம், ரி.எம்.எஸ்.செல்வக்குமார் ஆகியோரால் பாடப்பெற்ற தில்லையம்பதியாள் கும்பாபிஷேக கீர்த்தனைகள் பாகம் - 4 வெளியீடு செய்யப்பட்டது. ஆலயத்திற்கு ஒரு இராஜகோபுரம் அமைக்க வேண்டுமென்ற அடியார்களின் அவாவினைப் பூர்த்தி செய்யும் வகையில் அன்னையின் அளப்பரிய அருளினால் நவகோண வடிவில் ஐந்து தளங்களை உள்ளடக்கிய இராஜகோபுர திருப்பணி வேலைகள் தென்னிந்திய சிற்பவல்லுநர்களால் ஆரம்பிக்கப்பட்டது. பின்னர் ஈழத்து சிற்பவல்லுநர்களால் திருப்பணி வேலைகள் தொடர்ந்தும் மேற்கொள்ளப்பட்டது. வெளிநாடுகளில் வாழும் அன்னையின் அடியவர்களினாலும் கிராமத்து அடியவர்களின் நிதியினாலும் அவர்களின் அயராத உழைப்பினாலும் நிர்மாணிக்கப்பட்ட இராஜகோபுரம் வானுயர்ந்து காட்சிதந்து எமக்கு அருளாட்சி வழங்குகின்றது. இந்த இராஜகோபுரத்திற்குரிய துவாரபாலகிகள் இரண்டும் தென்னிந்தியாவிலிருந்து கொண்டு வரப்பட்டுள்ளன. அத்தோடு இராஜகோபுரத்திற்குரிய காண்டாமணியும் தென்னிந்தியாவில் உருவாக்கப்பட்டு கொண்டுவரப்பட்டுள்ளது. அம்பாளின் அருளினால் இராஜகோபுர திருப்பணிகள் யாவும் பூர்த்தியடைந்த நிலையில் சிவஸ்ரீ இ. சுந்தரேஸ்வரக்குருக்கள் தலைமையில் மகாகும்பாபிஷேகம் 18.03.010 அன்று நடைபெற்றது.

* அத்தோடு மகாவித்துவான் பிரம்மஸ்ரீந.வீரமணி ஐயர் இரா.இராஜேஸ்வரன், சி.கணேசலிங்கம், கு.உதயரூபன் ஆகியோரால் இயற்றப்பட்டு தென்னிந்தியப் பாடகர்களான வீரமணிராஜ், தீபன் சக்கரவர்த்தி, கிருஸ்ணராஜ், முகேஸ் ஆகியோரால் பாடப்பெற்ற கோபுர தரிசனம் கீர்த்தனைகள் பாகம்-5 வெளியீடு செய்யப்பட்டது. அத்துடன் 2010 ஆம் ஆண்டு தொடக்கம் மஹோற்சவமானது 12 தினங்களாக நடைபெற அம்பிகையின் திருவருள் கிடைக்கப்பெற்றது.

* திருப்பணிச் செல்வர் முத்தன் இராசன் குடும்பத்தினரால் அவரது ஞாபகார்த்தமாக தில்லையம்பதியாள் திருக்கல்யாண மண்டபம் 2011 ஆனி மாதம் அவரது பேரன் சத்தியப்பிரியன் அவர்களால் அடிக்கல் நாட்டப்பட்டு தொடர்ந்து வேலைகள் நடைபெற்றுக்கொண்டிருக்கின்றன. இந்தியாவில் இருந்து கொண்டுவரப்பட்ட மஹா மேரு யந்ரஸ்ரீசக்கரம் பிரம்மஸ்ரீ நா.திவாகரக்குருக்கள் தலைமையில் 18.03.2012 இல் கும்பாபிஷேகம் நடாத்தப்பட்டது. இன்று 37வது மஹோற்சவப் பெருவிழா இனிதே நடைபெறுகின்றது.

தில்லையம்பதியாளே ! சிவகாம சுந்தரியே !! சரணம்!!!

## மஹோற்சவ குருவின் ஆசிச்செய்தி



கோண்டாவில் கிராமத்திலே தில்லையம்பதி புண்ணிய சேத்திரத்திலே அன்னை சிவகாமியாக வீற்றிருந்து, வேண்டுவோருக்கு வேண்டுவன எல்லாம் அள்ளிக் கொடுத்துக் கொண்டிருக்கின்ற தாயானவளுக்கு, இரதோற்சவம் இன்றைய தினம் நடைபெறுவதையிட்டு, அகம் மகிழ்வதோடு, அம்பாள் தேரில் ஆரோகணித்து மனித ஆன்மாக்களின் ஆணவத்தை அழித்து எல்லா ஜீவராசிகளும் சக்தியின் திருவருளால் மண்ணில் நல்லவண்ணம் வாழவேண்டும். உலகத்திலே இருக்கின்ற அனைத்து மக்களும் அம்பாளின் புரண சக்தியால் ஆரோக்கியமாக வாழ இன்றைய நாளில் அன்னையைப் பிரார்த்தித்து, எனது நல்லாசிகளைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

சர்வே ஜனஹா சுகினோ பவந்து

பிரம்ம ஸ்ரீ நா.திவாகரக்குருக்கள், பிரதமகுரு (தில்லையம்பதி)

## அன்னையை ஆராதிக்கின்றேன்



தனக்குமேல் தலைவியில்லாத தனிப்பெரும் நாயகியாய் விளங்கும் கோண்டாவில் தில்லையம்பதி அருள்மிகு சிவகாமி அம்பாளின் மஹோற்சவப் பெருவிழாவில் சிறப்பாக இன்றைய தேர்த் திருவிழாவில் அன்னை பார்வதி தேவியின் அருட்கடாட்சத்தினால் உலகமெல்லாம் இன்புற்று வாழ எம்பெருமாட்டியை தொழுது ஆராதிக்கின்றேன்.

த.இரத்தினகுணசிங்கம், தலைவர்
மத்திய கிராம முன்னேற்றச்சங்கம்

மலர் ஆக்கம்:
**தி.கெங்கேஸ்வரன்**
செயலாளர், திருக்கோயில்
பரிபாலனசபை, தில்லையம்பதி.

## அடியார்களே!



தில்லையிலே திருக்கூத்தாடும் எம்பிரான் திருக்கூத்தன் நடராஜப் பெருமான் பஞ்சகிருத்தியங்களை தன் நடனத்தின் மூலம் செய்கிறார். படைத்தல், காத்தல், அழித்தல், மறைத்தல், அருளல் என்பனவாம் பஞ்சபூதங்களான நிலம், நீர், காற்று, ஆகாயம், நெருப்பு என்பவற்றில் சிதம்பரம் சிறப்பிக்கப்படும் ஷேத்திரமானது தில்லை எனப் புகழப்படுகின்றது. அதை ஆகாச ஷேத்திரம் எனவும் கூறுவர். அந்த ஆகாச ஷேத்திரத்தின் நாயகி சிவகாம சுந்தரி. சிவனுடைய ஆசைக்கு தகுந்த மெருகு கூடிய அழகை உடையவள். அத்தகைய அழகு மிகு லோகமாதா எமது நாட்டில் கோண்டாவில் பதியில் தில்லையம்பதி எனச் சிறப்பிக்கப்படும் கிராமத்தில் எழில் மிகு ஆலயத்தில் அழகில் அருள்பாலிப்பவளாய் அமர்ந்து நந்தன வருட வைகாசி மாத மஹோற்சவ தேர்த்திருவிழா மூலமாக பக்தர்களின் பாவ வினை அழிக்க ரதமேறுகிறார். காணக் கண் கோடி வேண்டும்.

சிவகரம் பிடி தீர நங்காய்
நகை வளம் உனக்காய் - அமைந்து
எழில் வளம் பொங்க நீயும்
அம்மா ஏறினாய் ரதமதன் மேல்

மகாதேவ ஸ்ரீவத்சாங்க சக்தி உபாஷகர்
கண்ணகை அம்மன் கோயில்
தர்மசாஸ்த்தா குருகுலம், இணுவில்

(13961) (2-6-7)

## எங்களை காத்து நிற்கும் எங்கள் ஆதிமகா சக்தி



தில்லையம்பதியில் அருளாட்சி புரியும் ஆதி மகா சக்தி அன்னை ஸ்ரீ சிவகாமி அம்பாளின் நந்தன வருஷ மஹோற்சவ நாளில் இரதோற்சவம் இன்று பெருவிழாவாக நடைபெறுகின்றது. வரலாற்றுப் பெருமைகளை தன்னகத்தே கொண்ட எமது திருக்கோயில் இக் கிராமத்தின் பண்பாட்டுக் கருவுலத்தின் உறைவிடமாக உள்ளது. துன்ப துயரங்களிலிருந்து எங்களை காத்து நிற்கும் எங்கள் ஆதிமகா சக்தியின் இரதோற்சவ வைபவத்தில் அடியார்கள் அன்னையின் அருளை வேண்டி நிற்கின்றார்கள்.

"தில்லையம்பதியாளை தினமும் தொழுதால் நல்லருள் என்றும் கிடைக்கும்"

தம்பிஐயா ராதா, தலைவர்
திருக்கோயில் பரிபாலனசபை, தில்லையம்பதி.

## அருளாட்சி புரியும் தில்லையம்பதியாள்



அருள்மிகு தில்லையம்பதி ஸ்ரீ சிவகாமி அம்பாள் தரணி யெங்கும் வாழ்கின்ற அனைத்து பக்தகோடிகளையும் ஆட்கொண்டு வேண்டுவார் வேண்டும் வரங்களை வாரி வழங்கி அருளாட்சி புரியும் அன்னையவள் இன்று ரதமேறி பவனி வந்து தரணியெங்கும் சாந்தி, சமாதானம் நிலவ அருளாட்சி புரியட்டும்.

இரா. ஜெயக்குமார், பொருளாளர்,
பரிபாலனசபை தில்லையம்பதி

விம்பர அனுபவம்
அலங்கார மேடை, பலூன் மணவறை, பூ மணவறை, முத்து மணவறை,
சமையல் பாத்திரம், கதிரை, சாப்பாட்டு மேசை என்பவற்றுடன் வாகன
வசதிக்கும் 21 வருட கால அனுபவத்தைக் கொண்ட திருமணபந்தல் சேவைக்கு
செந்தூரன் பந்தல் சேவை
அரசடி வீதி, (ஆஸ்பத்திரி முன்பாக) கோண்டாவில்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தனிச்சிறப்பிற்கான ஒறிக்ஸ் விருதை வெல்லும் LOLC

மற்றுமொரு வெற்றிகரமான நிதி ஆண்டைக் கொண்டாடும் LOLC குழுமம். ஜப்பான் ஒறிக்ஸ் (ORIX) கூட்டுத்தாபனத்தினால் வழங்கப்படும் 2012 மார்ச் 31 இல் முடிவடைந்த நிதி ஆண்டிற்கான கடல்கடந்த தொழில்பாடுகள் பிரிவில் சிறப்பான செயல்பாட்டிற்கான கௌரவமிக்க விருதினை தனதாக்கியது. இவ்வருடாந்த விருதுத் திட்டமானது தனித்துவமான பிரிவுகளையும் உள்ளூர் மற்றும் வெளிநாட்டிலுள்ள ஒறிக்ஸ் உலகளாவிய வலையமைப்பின் கம்பனிக் குழுமங்களையும் அவர்களின் சிறந்த நிதிச் செயற்பாடுகள் மற்றும் சாதனைகளுக்காக அடையாளம் காண்கிறது. கடந்த நிதி ஆண்டில் LOLC குழுமமானது 'மிகச்சிறந்த நிதிச் செயல்திறனாளர் 2010/2011 விருதை வாஞ்சையுடன் தட்டிக் கொண்டது.

ஜப்பான் ஒறிக்ஸ் கூட்டுத்தாபனத்தின் தலைவரும் தலைமை செயற்பாட்டு அதிகாரியுமான திரு Makot o Lnoue அவர்கள், LOLC குழுமத்திற்கான தனது வாழ்த்துச் செய்தியில், LOLC இன்வலுவான தலைமைத்துவத்தை பாராட்டினார். 'உங்கள் நோக்கம், குறிக்கோளை அடைந்த வெற்றியினைப் பற்றியும் அத்தோடு உங்கள் நிதித் தயாரிப்புக்களின் விற்பனைப் பெறுபேறுகளைப் பற்றியும் இப்பரிசு பேசுகின்றது. நிதியாண்டு முழுவதும் திடமான செயல்திறனை கம்பனி பதிவு செய்துள்ளது. LOLC யில் உள்ள அனைவரும் கூட்டுமுயற்சிக்காக பாராட்டப்பட வேண்டியவர்கள். நாம் உங்கள் சாதனைகள் தொடர்பில் மிகுந்த பெருமிதம் அடையும் அதே வேளை, அதன் உத் வேகத்தை LOLC கட்டியெழுப்புவதனைக் காண எதிர்பார்த்துள்ளோம் என்று கூறினார்.

## புதிய சுவையுடன் கிட்கெட் சொக்லெட்

நெஸ்ட்லே நிறுவனத்திற்குச் சொந்தமான முதல்தர சாக்லெட் வகையைச் சேர்ந்த கிட் கெட் உற்பத்தியை மீண்டும் இலங்கையில் சந்தைப் படுத்த நடவடிக்கை எடுக்கப் பட்டுள்ளது.

இலங்கைச் சந்தையிலுள்ள வெளிநாட்டுச் சாக்லெட்களில் கிட் கெட்டிற்கு தனிச் சிறப்புள்ளது.

மீண்டும் சந்தைப்படுத்தப்பட்டுள்ள கிட்கெட் மிகவும் முறுமுறுப்புடனும், பால்ச் சுவையுடனும் காணப்படுவதாக அந்த சாக்லெட் சந்தைப் படுத்தல் பிரிவு அதிகாரியொருவர் தெரிவித்தார்.

கிட்கெட் சாக்லெட்டின் உத்தியோகபூர்வ சந்தைப் படுத்தல் உரிமத்தை மிலர்ஸ் நிறுவனம் பெற்றுக்கொண்டுள்ளது.



அரச காப்புறுதி நிறுவனமான இலங்கை காப்புறுதி கூட்டுத்தாபனம் தனது 50 ஆவது ஆண்டு நிறைவினையொட்டி சிறுவர்களுக்கான காப்புறுதி திட்டத்தில் இணைந்து கொள்ளும் சிறார்களுக்கு அவர்களது உருவப்படம் பொறிக்கப்பட்ட கோப்பை மற்றும் வேறு பரிசில்களையும் வழங்கி வருகிறது. அண்மையில் இக்காப்புறுதி திட்டத்தில் இணைந்து கொண்ட வாடிக்கையாளரான திருமதி சிவபாலன் தயாளினியின் குழந்தை செல்வன் சி.திருவரங்கனுக்கு பிராந்திய விற்பனை முகாமையாளர் பா.சத்தியன் பரிசில் வழங்குகிறார். அருகில் விற்பனை முகாமையாளர், நிர்வாக உத்தியோகத்தர் மற்றும் இக்காப்புறுதியின் ஆலோசகர் கே.கிருஸ்ணபவன் ஆகியோர் உள்ளனர். (த)

# UK மாணவர் விஸா பெற வழிகாட்டுகிறது 'எக்ஸ்போ நெற்'

UK STUDENT VISA வில் பெரியளவிலான எந்த மாற்றங்களும் ஏற்படவில்லை. நீங்கள் உண்மையான மாணவராகவும் பிரிட்டன் அரசின் விதிமுறைகளை ஏற்றுக் கொள்பவராகவும் இருந்தால்.

* STUDENT VISA விசாவில் (UNIVERSUTY எனில் நீங்கள் 20 மணிநேர வேலை செய்யமுடியும்.
* STUDENT VISA HEI COLLEGE எனில் 10 மணி நேர வேலை செய்யமுடியும்.
* STUDENT VISA வில் MS அல்லது PHD செய்ய போகின்றீர்களெனில் உங்கள் மனைவி பிள்ளைகளையும் அழைத் துச் செல்லமுடியும்.
* உங்கள் பல்கலைக் கழக படிப்பு முடிந்தவுடன் 2 வருட WORK PERMIT பெற் றுக் கொள்ள முடியும். (ஆனால் அதற்கு நீங்கள் தகுதி யுள்ளவராகவும் வருடத்திற்கு t2000 இற்கு மேல் ஊதியத்துடனான வேலை வாய்ப்பையும் பெற வேண்டும்.)

எமது EXPONET நிறுவனம் உங்களுக்கான தெளிவான ஆலோசனைகளை கடந்த 10 வருட காலமாக வழங்கி வருகிறது. போலி நிறுவனங்களை நாடி உங்கள் காலத்தையும் பணத்தையும் வீணடிக்காமல் நேரடியாக எம்மை வந்து சந்தியுங்கள் 2000க்கும் மேற்பட்ட மாணவர்களை UK.யில் வேலை வாய்ப்புடன்கல்வி பயிலவைத் ததற்கான ஆதாரங்களையும் பாருங்கள்.



தலைநகரில் தனக்கென ஒரு தனித்தன்மையுடன் விளங்கும் எமது EXPONET OVERSEAS CONSU LTA NTS நிறுவனம் இல379-1/2 காலி வீதி வெள்ளவத்தையிலும் யாழ்.மாவட்டத்தில் இல.197, அரசடி வீதி யாழ்ப்பாணம் எனும் முகவரியிலும் லண்டனில் NO.56, THE GARDENS, HARROW, MIDDLESEX, HAI HEY இலும் மக்களின் நம்பிக்கைக்குரிய தொரு ஸ்தாபனமாக வெற்றிகரமாக செயற்பட்டு வருகிறது. கடந்த தசாப்தத்தில் ஆயிரக் கணக்கான மாணவர்கள் லண்டனில் தமது உயர் கல்வியைத் தொடரும் கனவை எமது நிறுவனம் மூலமாக நிறைவேற்றியிருக்கின்றனர் என்பது யாவரும் அறிந்ததே.

எமது நிறுவனம் மாணவர்களுக்கு லண்டனில் கல்வி கற்பது தொடர்பான வழி முறைகளையும் ஆலோசனைகளையும் இலவசமாக வழங்கி வருவதோடு மட்டுமல்லாமல் அவர்கள் UK இலுள்ள பிரபல கல்லூரிகள் மற்றும் பல்கலைக்கழகங்களில் கல்வி கற்பதற்கான UK STUDENT VISA க்களையும் பெற்றுக் கொடுப்பதில் முன்னணியாக திகழ்கிறது.

### எமது சேவைகள்

மாணவர்களது SELT தேவையைப் பூர்த்தி செய்வதற்கான இலவச வகுப்புக்களை EXPONET தனது COLOMBO மற்றும் யாழ்ப்பாண கிளைகளின் மூலம் நடத்தி வருகின்றது. மேலும் புதிய விசா நடைமுறைகளுக்கு அமைவாக UK இல் உள்ள எமது சட்டத்தரணிகளின் உதவியுடன் உங்கள் விசா தேவைகள் பூர்த்தி செய்யப்படுகின்றன.

அத்துடன் STUDENT DEPENDMENT VISA, SETTLEMENT VISA மற்றும் VISIT VISA விற்கான ஆலோசனைகளையும் விண்ணப்பிப்பதற்கு தேவையான ஆவணங்களையும் உரிய முறையில் EMBASSY ல் சமர்ப்பிப்பதற்கு உதவுகின்றனர்.

மேலும் விசா நிராகரிக்கப்பட்டவர்களுக்கு APPEAL/ADMIN REVIEW மேற் கொண்டு மீண்டும் VISA பெற்றுக் கொள்வதற்கான வழிமுறைகளை UK இன் பிரபலமான சட்டத்தரணிகளினூடாக பூர்த்தி செய்து கொண்டிருக்கின்றனர். (த)

# ஸ்ரீலங்கன் விமான சேவைக்கு மேலும் 9 புதிய விமானங்கள்

அடுத்த 3 வருடத்திற்குள் ஸ்ரீலங்கன் மற்றும் மிஹின் லங்கா விமான சேவைகளை விஸ்தரிக்கும் பொருட்டு மேலும் 9 விமானங்களை கொள்வனவு செய்யவுள்ளது.

இதன் மூலம் விமானங்களின் தொகை 30 ஆக அதிகரிக்கப்படுமென ஸ்ரீலங்கா விமான சேவையின் தலைவரான நிஷாந்த விக்கிரமசிங்க தெரிவித்தார்.

இரு விமான சேவைகளும் 21 விமானங்களை தற்போது கொண்டுள்ள நிலையில் இது 2015 ஆம் ஆண்டளவில் 30 ஆக அதிகரிக்கப்படும் இவ் வருட இறுதியில் தென் கொரியா தலைநகரான சியோலுக்கு விமான சேவைகள் ஆரம்பிக்கப்படு மெனவும் இந்தியாவுக்கான சேவைகள் அதிகரிக்கப்படுமெனவும் தெரிவித்தார்.

9 வளைகுடா நாடுகளுக்கும் கிழமைக்கு 47 விமான சேவைகள் தற்போது இடம் பெறுகின்றன. கடந்த வருடத்திலிருந்து ஸ்ரீலங்கன் விமான சேவை பக்ரைன், டோகா, மஸ்கட், ஜெட்டாவுக்கான சேவைகளை அதிகரித்துள்ளது. மே முதலாம் திகதியிலிருந்து குவைத்துக்கான நேரடி விமான சேவை ஆரம்பிக்கப் பட்டுள்ளது.

இவ்வருட ஜனவரி ஏப்ரல் காலங்களில் எமது பயண தளவசதிகள் 90 சதவிகிதம் அதிகரித்துள்ளது. எமது விமான சேவைகளில் வளைகுடா பயணிகள் வைத்திருக்கும் நம்பிக்கையை எடுத்துக் காட்டுவதாக அமைந்துள்ளது.

இவ்வருடம் விமான சேவைகள் மேலும் விஸ்தரிக்கப் பட இருக்கின்றன. ஐக்கிய அரபு இராஜ்ஜியத்திலுள்ள இலங்கைத் தூதுவர் சரத் விஜயசிங்க கூறுகையில், கடந்த வருடம் இரு நாடுகளுக்கிடையில் 1 பில்லியன் டொலர் பெறுமதியான வர்த்தகம் இடம்பெற்றதாக தெரிவித்தார்.

ஐக்கிய அரபு இராஜ்ஜிய வெளிநாட்டமைச்சரின் அடுத்த மாத இலங்கை வருகையின் பின் வர்த்தகம் மேலும் விருத்தியடையும். ஹம்பாந்தோட்டையிலுள்ள துறைமுகத்திற்கு அதிக வர்த்தகத்தை ஏற்படுத்தும்பொருட்டு விரைவில் டுபாய் துறைமுக அதிகாரிகளுடன் பேச்சுகள் இடம் பெற உள்ளதாகவும் தெரிவித்தார்.

## 7100 சாரணர்களுக்கு ஜனசக்தி காப்புறுதி

தம்புள்ளையில் இடம் பெற்ற ஆசிய பசுபிக் பிராந்தியத்தின் 29ஆவது சாரணர் ஜம்போரே மற்றும் இலங்கையின் நூற்றாண்டு சாரணர் ஜம்போரேயின் போது பங்குபற்றிய சுமார் 7100 சாரணர்களுக்கு காப்புறுதியை வழங்க ஜனசக்தி முன்வந்திருந்தது.

இந்த ஜம்போரேயில் 22 நாடுகளை சேர்ந்த சாரணர்கள் பங்குபற்றியிருந்தமை குறிப்பிடத்தக்கது. இலங்கையில் சாரணர் இயக்கத்தின் செயற்பாடுகள் நூறு வருடத்தை பூர்த்தி செய்துள்ளமையை கொண்டாடும் வகையில், இந்த ஜம்போரே ஏற்பாடு செய்யப்பட்டிருந்ததுடன், சர்வதேச நாடுகளை சேர்ந்த சாரணர்கள் இலங்கையில் பங்குபற்றும் முதலாவது ஜம்போரேயாகவும் இது அமைந்திருந்தது. 12 ,17 வயதுக்குட்பட்ட இளைஞர்களுக்கு சந்தர்ப்பத்தை ஏற்படுத்திக் கொடுக்கும் வகையில், இந்த ஜம்போரே அமைந்திருந்தது.

# இன்பகரமான திருமண வாழ்வுக்கு சொவ்ட்லொஜிக் வழங்கும் பரிசு

திருமண காலம் தொடங்கிவிட்டது. மணமக்களும் அவர்களின் பெற்றோரும் அந்த விசேட நிகழ்வுக்கான ஏற்பாடுகளைச் செய்வதில் மும்முரமாக ஈடுபட்டுள்ளனார். அதே சமயத்தில் புதுமணத் தம்பதிகளின் சௌகரியமான மற்றும் இன்பகரமான வாழ்வுக்கு உதவக் கூடிய பல்வேறு தளபாடங்களையும் நவீன வீட்டு உபகரணங்களையும் விசேட திட்டங்களின் கீழ் வழங்க சொவ்ட்லொஜிக் நிறுவனம் ஏற்பாடு செய்துள்ளது. உலகப் புகழ்பெற்ற சாதனங்களினால் உங்கள் கனவு இல்லத்தை அலங்கரிக்க இதுவே தக்க தருணமாகும்.



எழிலான வீட்டுத் தளபாடங்கள் மற்றும் வீட்டுப் பாவனை உபகரணங்களை உள்ளடக்கிய மூன்று Blissful Union Bridal பக்கேஜ்களை சொவ்ட்லொஜிக்ன் லைஃப்சுடைல் ஹோம் ஸ்டோர் அறிமுகப்படுத்தியுள்ளது. பிளட்டினம் கோல்ட் சில்வர் என்று பெயரிடப் பட்டுள்ள இந்த பக்கேஜ்கள் ஒவ்வொரு தம்பதியினதும் [illegible] வமைக்கப்பட்டுள்ளன. எனவே உங்களுக்கு விருப்பமான பக்கேஜை தெரிவுசெய்து வாழ் நாளில் அரிதாகவே கிடைக்கும் இந்த வாய்ப்பைப் பயன் படுத்திக்கொள்ளுங்கள்.

பிளட்டினம் பக்கேஜில் கிங் சைஸ் படுக்கை 4 கதவுகள் கொண்ட ஆடை அலுமாரி [illegible] கொண்ட மியூனிக் படுக்கையறைத் தொகுதி அடங்கியுள்ளது. இந்தத் தளபாடங்களை Wenege அல்லது Walnut நிறங்களில் பெறலாம். இவற்றைத் தவிர மிரண்டா L வடிவ சோபா Exxa உணவு மேசை அதற்குரிய நான்கு Hedera நாற்காலிகள் என்பவற்றையும் கொண்டுள்ள இத் தளபாடத் தொகுதி கவர்ச்சியான 20 சதவீத விலைக் கழிவில் வழங்கப்படுகின்றது.

கோல்ட் பக்கேஜ் இரண்டு வாய்ப்புக்களை வழங்குகின்றது. நீங்கள் மியூனிக் படுக்கையறைத் தொகுதி ஒன்றையும் மிரண்டா L வடிவ சோபாவையும் வாங்கலாம் அல்லது மியூனிக் படுக்கையறைத் தொகுதியுடன் Exxa உணவு மேசை கதிரைகளை வாங்கலாம். சில்வார் பக்கேஜை தெரிவு செய்பவர்கள் குயீன் சைஸ் Florini படுக்கை Foresta ஆடை அலுமாரி என்பவற்றைப் பெறுவார்கள். புதுமணத் தம்பதியரின் வசதியை முன்னிட்டு மூன்று பக்கேஜ்களுக்கும் . 88886/- இல் தொடங்கும் நியாயமான விலைகள் நிர்ணயிக்கப்பட்டுள்ளன.லைஃப்ஸ்டைல் ஹோம் ஸ்டோரசு 2ஆம் மாடி இல. 135 துட்டுகெமுனு வீதி கொஹீவலை என் னும் முகவரியில் அமைந்துள்ளது.

புதுமணத் தம்பதிகளுக்கு நாம் வழங்கும் வாய்ப்பு அது மட்டுமல்ல. நாடெங்குமுள்ள சொவ்ட்லெரிக் விற்பனை நிலையங்களில் தொலைக்காட்சிகள் குளி ரூட்டிகள் சலவை இயந்திரங்கள் மைக்ரோவேவ் ஒவன்கள் மின் விசிறிகள் றைஸ் குக்கர்கள் இஸ்திரிக்கைகள் போன்ற சாதனங்களை நீங் கள் சலுகை விலைகளில் வாங்கலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கண்ணீர் அஞ்சலி

வட மாகாண உள்ளூராட்சி ஆணையாளர்
**மரியதாஸன் ஜெகூ** அவர்களின்
அன்புத் தாய்



திருமதி
**மரியதாசன் மேரி அஞ்சலா**

அவர்களின் பிரிவுச் செய்தி கேட்டு துயர் அடைவதோடு, அன்னாரின் ஆத்மா சாந்தி யடைய இறைவனை வேண்டுகின்றோம்.

**உத்தியோகத்தர்கள், ஊழியர்கள், பிரா/உள்ளூராட்சி உதவி ஆணையாளர் அலுவலகம், கிளிநொச்சி.**

(C300) (6,7,10)

## யாழ்-வண்.கிழக்கு கலட்டி எச்சாட்டி மகாமாரி அம்மன் தேவஸ்தானம் மகா சபைக் கூட்டம் 2012 - 2013

மேற்படி கூட்டம் 17.06.2012 ஞாயிற்றுக் கிழமை பி.ப 4.00 மணியளவில் தேவஸ்தான மணிமண்டபத்தில் தலைவர் கலாநிதி க.குணராசா அவர்களின் தலைமையில் நடைபெறும். சகல மகாசபை உறுப்பினர் களையும் மற்றும் திருவிழா உபயகாரர் களையும் தவறாது சமுகந்தருமாறு வேண்டு கின்றோம்.

ஆண்டுச் சந்தாப்பணம் செலுத்தாதவர்களும், புதிதாக அங்கத்தவர்களாகச் சேர விரும்புபவர்களும், பணத்தைச் செலுத்திப் பற்றுச் சீட்டைப் பெற்றுக்கொள்ளவும்.

மு.கு: இந்தக் கூட்டத்தில் புதிய நிர்வாக சபைத் தெரிவு இடம்பெறும்.

தலைவர்

(18848) (6,7,10)

## காணி விற்பனைக்கு

நாவற்குழி A-9 வீதியில் 15 அடி அகலப் பாதையுடன் 133 பரப்பு காணி விற்பனைக்கு உள்ளது. 3 பேஸ் (3 Phase) மின்னிணைப்பு வசதி உண்டு.

**தொடர்பு: 0777187145**

(18555)(6,9,10)

## பணியாளர் தேவை

1. கம்பியூட்டர் அனுபவமுள்ள ஒருவர்
2. காசிதாதிகள் விற்பனையாளர்கள் ஆண்,பெண் இருபாலாரும் விண்ணப்பிக்கலாம்,

**தொடர்புகள் நேரில்**

ஸ்ரீபேப்பர் மாட்
இல. 388, ஆஸ்பத்திரி வீதி, பஸ் நிலையம் முன் யாழ்ப்பாணம்

(18854)(6-7-8)

## விற்பனைக்கு

சிறு கைத்தொழில் முயற்சியில் ஆர்வம் உள்ளவர்களுக்கு

* கொங்கிறீற்கல் இயந்திரம் 03 மாதங்கள் பாவித்த நிலையில் (04 விதமான அளவு கொண்ட அச்சுகளுடன்)
* 500 பலகைகள்
* சீற், மரங்கள் ஏனைய உபகரணங்களுடனும்
* 7 அடி வேலித்தூண் அச்சுகள் (06 சோடிகள்)

**தொடர்புகளுக்கு : 077 0294160**

(18880)(6-7-8)

## இறைச்சிக்கோழி விற்பனை

உள்ளூரில் உற்பத்தி செய்யப்பட்ட புறொயிலர், கல்பேட் தினமும் சுத்தம் செய்யப்பட்டு விற்பனையா கின்றது.சுத்தம் செய்யப்பட்ட புறொயிலர் இறைச்சி ரூ.450 மட்டுமே தினமும் காலை 6 மணி தொடக்கம் மாலை 8 மணிவரை திறக்கப்படும்

நல்லூர் பாம் சென்ரர்
#19, முருகேசர் ஒழுங்கை, நல்லூர் யாழ்ப்பாணம் (18767)

## வேலையாள்கள் தேவை

யாழ். நகரில் இயங்கி வரும் THE PHONE ZONE PVT LTD இற்கு விற்பனைப் பிரதி நிதிகள் தேவைப்படுகின்றனர் (ஆண், பெண்) இருபாலாரும் தொடர்புகொள்ளவும்.

தகுந்த சம்பளம் வழங்கப்படும்

**தொடர்புகளுக்கு :0712929295**

(18757) (6,7,10)

## ஸ்ரீ சந்திரசேகரவிநாயகர் திருக்கோயில் மஹோற்சவம் - 2012

03.06.2012



ஞாயிற்றுக்கிழமை

**தீர்த்தத் திருவிழா காலை 9.30 மணிக்கு**

தினமும் நண்பகல் அன்னதானம் இடம் பெறும்

கோண்டாவில் மேற்கு

(18376)(6-9-8)

## வீடு வாடகைக்கும் கார் விற்பனைக்கும்

யாழ். நல்லூர் பகுதியில் பருத்தித்துறை வீதியில் மாநகர சபைக்கு முன்பாக மூன்று படுக்கையறைகள் (குளியலறை வசதிகளுடன்) விசாலமான வரவேற்பறை கொண்ட மாடிவீடு வாடகைக்குண்டு. வெளி நாட்டு நிறுவனங்கள், அலுவலக பாவனை. விரும்பத்தக்கது. அத்துடன் 300 XXXX இலக்கமுடைய TOYATA - Starlet Auto Gear Power Steering AC கார் விற்பனைக்குண்டு. (04.06.2012) திங்கட்கிழமை பார்வையிடலாம்

**தொடர்பு :077 7453807**

(18859)(6-7-8)

## உங்களுக்கு தொழில் இல்லையா? வாருங்கள் எங்களுடன் உங்கள் திறமைக்கேற்ப சம்பளம்

எங்கள் பிரதான கைத்தொழில் சாலைகளில் கிளைகளுக்கு ஜாம், பிஸ்கட், சொக்லேட், கேக், க்ளவுஸ், தேயிலை, பால்மா, டயர், சுவீட்ஸ், சிமெந்து ஆகிய உற்பத்தி பிரிவிற்கு லேபல் - பிரிவிற்கு (6ஆம் ஆண்டு முதல் A/L வரை) 17 - 55 வயது வரையான தொழிலாளர்கள் தேவை. சாப்பாடு, தங்குமிடம் இலவசம். பயிற்சியுடன் 20000/= முதல் 38000/= வரை சம்பளம். நண்பர்கள் குழுவும் சேர்த்துக்கொள்ளப்படுவர்.

**கிளை - 077 8999299**

துறைமுகம் (தனியார்) பிரிவிற்கு மேசன்,வெல்டர், சாதாரண சேவையாளர்கள், விமானத்தளம் (தனியார்) பிரிவிற்கு கேட்டின் கிளினிங், பாதுகாப்பு உத்தியோகத்தர், 6 Wheel, 10wheel டிப்பர் புசிவர், பாரஊர்திகள், ரைவர்தேவை. J C B ஒப்பரேட்டர், வில்லோடர், ரோலர் ஒபரேடர், மேசன் செடலின், பெயின்டர். எங்கள் இலங்கை முழுவதும் உள்ள கட்டட நிர்மாண வேலை வாய்ப்புகளும் உண்டு.

சாப்பாடு தங்குமிடம் இலவசம். சம்பளம் 50000/= முதல். நண்பர்கள் குழுவும் அவசியம்.

தொடர்புகளுக்கு: 077 8999299
இல. 136/A 6, மெயின் வீதி, அநுராதபுரம்.


# TELESONIC Air Power

**TL- 1611**



### Wall Fan

Soft Touch Tilting Angle Adjustable
3 speed Choices
Oscillation Controlled By Double-line Pull Switch

**TL- 2040**

### Industrial Fan

Large Air Volume at Low Noise
Strong Motor for Long Service Life
3 Speeds and Adjustable Oscillation Angle
Available Sizes 20", 26", 30"
12 Months Warranty on Motor







### Summer King

Double Ball Bearings Motor
Well Balanced Blades For Quiet Operation
16 - Pole Powerful Motor
Embossed SLS Logo On Motor Cover
Hum-Free Electronic Regulator
24 Months Warranty on Motor
Available Sizes 36" 56"

**TL- 1224**

### Box Fan

12" Blades
Complete Plastic Body For Easy Maintenance
Low Energy Consumption
12 Months Warranty On Motor





### Exhaust Fan

Available Sizes 8", 10", 12"
12 Months Warranty On Motor

**TL- 1632**

### Floor Fan

Available Sizes 12", 16", 18", 20"
Built-in Over Load Protecting Device For Safe Operation
Aluminium Blade For Powerful Wind
Ideal For Home, Office, Hotel, Store & So On
12 Months Warranty On Motor



**TL- 1216FF**

### Stand Fan

3 Speed Oscillating Option
Low Energy Consumption 60 w
16" Rust Free Blades
12 Months Warranty
Spares Freely Available

**TL- 1674**



### Cabin Fan

16" Rust Free Blades
3 Speed Oscillating option
Low Energy Consumption 50 w
12 Months Warranty
Spares Freely Available

**TL- 16130F**

### Table Fan

3 Speed Oscillating Option
Low Energy Consumption 50 w
16" Rust Free Blades
12 Months Warranty
Spares Freely Available



**TL- 1603**

விலை 3275/= இலிருந்து

A Lifetime Of Refreshing Air

Jaffna : - Selva Electricals - 0777 113 884 / Sundharson Manipai - 021-2 255 136 / Midea Electro Mart - 0777 238 542 / Minnila Electricals - 0778 392 107

Trincomalee / Batticaloa :- Burhans - 0776 703 175 / Eastern Electronics - 0772 291 356 / Mega Electricals - 0779 598 383 / Mubarak Traders - 0777 489 843

ஏக விநியோகஸ்தர்

**TELESONIC INTERNATIONAL**

இல 18, டேசி [illegible] (முகப்பாக),கொழும்பு-04.
Tel: 2 50 81[illegible] E-mail: info@telesonicintl.com
Mr. Croos :- 077 3 424 191 / 071 4 414 048

(சி/617)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# அளவெட்டி - கும்பழாவளைப் பிள்ளையார் கோயில்
# தேர்த் திருவிழா சிறப்புமலர் - 03.06.2012

## குருமார்களின் ஆசி செய்தி

உலகத் திசையாகவும் உன்னதப் புகழ்கொண்டு தனித்துவமான கிராமமாகத் திகழ்ந்து வரும் எங்கள் அளவெட்டியின் அனைத்துப் பெருமைகளுக்கும் ஆணிவேரான கும்பழாவளைப் பெருமானுக்கு இன்று இரதோற்சவ நன்னாள். அளவையூர் மக்களுக்கு மட்டுமின்றி கடல் கடந்து அந்நிய தேசத்தில் வதியும் மக்களுக்கும் என்றும் அருளாட்சி புரிந்துவரும் ஓங்காரப் பிரணவ சொரூபன் ஆகிய விநாயகன் இன்று இரதமேறி வந்து இன்னல்கள் போக்குவான். எங்கள் ஈழத் திருநாட்டில் நிரந்தர அமைதி பிறக்க என்றும் தன்னருள் தருவான். எனவே அடியார்கள் அனைவரும் இன்றைய தேர்த் திருநாளில் கலந்து எம் பெருமானின் அருளைப் பெற்று வாழ்வாங்கு வாழ எல்லாம் வல்ல கும்பழாவளையானை பிரார்த்தித்து ஆசி வழங்குகின்றோம்.

'ரதேப்பியோ ரதபதிப் பியச்சவோ நமோ நமோ'

ஆலயகுருமார்கள்

## வேழ முகத்தவனைத் தொழ வாழ்வு மிகுந்து வரும்



குவலயம் வாழ்வு பெற, வளம் சேர்க்க கும்பழாவளைப் பிள்ளையார் தேரேறி வரும் திருக்காட்சி ஆனந்தம் பெருக்கும் அருட் காட்சியாக அமைந்து விடுகின்றது. "வேழ முகத்தவனைத் தொழ வாழ்வு மிகுந்து வரும்" என்பதற்கமைவாக சைவப் பெருமக்கள் எந்தக் காரியத்தை ஆரம்பிக்கும் பொழுதும் விநாயக வழிபாட்டோடு ஆரம்பிக்கின்ற மரபு நீண்ட காலமாகப் பேணப்பட்டு வருகின்றது.

ஈழத்திலுள்ள விநாயகர் ஆலயங்களுக்குள்ளே வரலாற்றுச் சிறப்புக்களையும், அற்புதப் பெருமைகளையும் கொண்டு விளங்குவது கும்பழாவளைப் பிள்ளையார் ஆலயம். இன்றைய தினம் பெருமான் ஆன்மாக்களின் பந்தமலங்களைப் போக்கி நல்லருட் பேற்றை அருள சங்கார மூர்த்தியாக எழுந்தருள உள்ளார். "வேண்டுவார் வேண்டும் வரமீய தேரேறும் விநாயகனின் தேர் வடம் பிடிக்க ஆயிரமாயிரம் பக்தர்கள் அளவெட்டி கும்பழாவளையில் கூடும் காட்சி அளப்பெரியது.

எல்லோருக்கும் நல்ல வாழ்வருளும் விநாயகனை வைகாசித் திருத்தேரில் வணங்கி வழிபட்டு வாழ்வோமாக.

வர்ணனைக் கலாநிதி மதுரகவிகாரை எம்.பி.அருளானந்தன் J.P.
பணிப்பாளர், சைவத்தமிழ் பண்பாட்டுக் கழகம்.

## ஆலயத் தல மகிமையும் வரலாறும்

"வாழ்வதுஞ் சிற்பகலாய்வதுஞ் சிற்சில வாட்டும்பிணி.
ஆழ்வதுன் துன்பக்கடல் என்று நைந்தனனாகி நின்னைத்
தாழ்வது வேண்டிற் தடுத்தருள் வாயெனத்தாவி வந்தேன்
ஆழ்வது வேண்டு மருட் கும்பழாவளை யங்குசனே"

ஈழமண்டலத்தின் வடபாகமாய் உள்ள யாழ்ப்பாணப் பகுதியைச் சேர்ந்த அளவை மாமத்தியஸ் தலமாயுள்ள கும்பழாவளைப்பகுதியில் எழுந்தருளியிருக்கும் விக்னேஸ்வர ஆலய வரலாற்றை மெய்யடியார்களின் பக்தி வளர்ச்சியின் பொருட்டு காலங்கண்ட முதியோர்கள் வாய்கேட்டறிந்தபடி வரலாற்றினை எழுதுவதில் பெருமையடைகிறேன்.

பூர்வீகத்திலே மாருதப்புரவீக வல்லி என்னும் பெயருடைய சோழவரசியிளங்கன்னிகை குதிரை முகம் உடையவளாய் குஷ்டரோக நோய்வாய்ப்பட்டமையால் அக்குதிரை முகமும் குஷ்டரோகமும் நீங்குவதற்கு பற்பல சிகிச்சைகளும் தெய்வ வழிபாடும் செய்தும் தீராமைகண்டு மனம் நொந்து தவசிரேஷ்டர் ஒருவரின் வாக்குப்படி யாழ்ப்பாணத்தின் வடகரையில் உள்ள கீரிமலை என்னும் புண்ணிய தீர்த்தத்தில் கந்தசுவாமியாரை நினைத்து ஸ்நானம் செய்து ஒரே திசையில் மாவிட்டபுரம் முதலாக தென்திசை நோக்கி ஐந்து கோயிலிலே கந்தசுவாமி விக்கிரக ஸ்தாபனாராதனை செய்யும்படி கூறினார். அதற்கிணங்க ஐந்து கோயில்களை அமைத்தும் தனது நோயும் குதிரை முகமும் பிறர் பார்வைக்கு நீங்கப் பெற்றும் தனது சொந்த நினைவுக்கும் பார்வைக்கும் நீங்கப் பெறாததாக இருந்தது. இதன் காரணத்தை ஆராய்ந்தறிந்த இடத்து கந்தசுவாமி வழிபாட்டுக்கு முன் விக்னேஸ்வர ஆராதனை எனத் தவப்பெரியோர் கூறக் கேட்ட குமாரத்தி தன் பிழைக்கும் மனம் நொந்து விக்னேஸ்வரரைத் தியானித்து "மெய்யருள் பாலிக்கும் பெருமானே அறியாமையால் செய்த பிழையை மன்னித்து என்மேல் இரக்கம் அருளுக! யான் செய்த பிழைக்குப் பிராயச்சித்தமாக உமது பிரதிரூபத்தை ஏழு ஸ்தலங்களில் பிரதிட்டை செய்து வழிபடுவேன்" என்று வாக்குறுதி பண்ணிக் கொல்லங்கலட்டி முதலாக தென் திசை நோக்கி ஒரே நிரையில் ஏழு ஸ்தலங்களில் விக்னேஸ்வரப் பிரதிஷ்டை செய்வித்தாள். அத்தலங்களாவன கொல்லங்கலட்டி, வரத்தலை, அளகொல்லை, கும்பழாவளை, பெருமாக்கடவை, ஆலங்குழாய், கல்வளை என்பனவாகும்.

இவைகளுள் மத்திய ஸ்தலமாயுள்ள கும்பழாவளையில் விக்னேஸ்வர அர்ச்சனை முடியவே இராஜகுமாரத்தியின் குதிரைமுகச்சாயை அவளது சொந்தப் பார்வைக்கும் முற்றாய் நீங்கியதாயிற்று. இத்திவ்விய சரித்திர உண்மை.இக் கும்பழாவளையின் முன் னுள்ள சோலைக்கு மாவிழி திட்டி (மா+இழி+திட்டி) எனவும், இத்தலத்தின் தென்கிழக்கு மூலையிலிருக்கின்ற வயல் (இது முன்பு குளமாயிருந்தது) "குமாரத்தி குளம்" எனவும் அழைக்கப்பட்டது. குதிரைமுகம் நீங்கிய பின் கும்பழாவளைக்கு அடுத்ததாக ஸ்தாபித்த தென்தலத்துக்குப் "பெருமாக்கடவை" எனவும் அழைக்கப்பட்டது.

இந்த அரசிளங்கன்னிகைக்கு அனுக்கிரகித்தது மாத்திரமன்றி கும்பழாவளை விக்னேஸ்வரப் பெருமான் மெய்யடியார்களுக்கு அருள் பொழிந்து வினைகள் தீர்த்து செய்த அற்புதங்கள் எத்தனையோ உள. அவைகள் ஒவ் வொன்றையும் எடுத்துக் கூறுவோமாயின் எண்ணிலடங்கா. இந்த அற்புதங்கள் யாவற்றையும் பல புலவர்களா ல் கும்பழாவளை விநாயகர் தோத்திரத்திரட்டு என்னும் நூலில் அச்சேற்றுவித்து பேணிப் பாதுகாக்கப்பட்டுள்ளது என்பதைக் கூறி வைக்க விரும்புகிறோம்.

- தர்மகர்த்தா சபையினர்.

## இன்றைய நாள் பொன்னான நாள்



இசை வளமும், கலைவளமும் ஒருங்கே சிறந்து விளங்கும் அளவையம்பதியிலே சரித்திரப் புகழ்பெற்று அற்புதங்கள் நிறைந்து விளங்கும் வினைகளைத் தீர்க்கும் விநாயகப் பெருமான் இன்று தேரேறி வருகின்றார். அழுது, தொழுது நிற்கும் அடியார்களின் அல்லல் களைந்து, இன்னல் போக்கி, துன்பம்துடைக்கும் கும்பழாவளையான் சித்திரத்தேரிலே பக்தர்களுக்கு அருட்காட்சி அளிக்கின்றார்.

இன்றைய தேர்த்திருவிழா ஒரு பொன்னான நன்னாள். மஹோற்சவத்திலே ரதோற்சவம் அழித்தலைக் குறிப்பதாகும். ஆகவே எம்பெருமான் அகந்தையை அழித்து அசுரத்தனத்தை ஒடுக்கி ஆணவத்தை அடக்கி வினைகள் தீர்ப்பவனாக தேரேறிப் புறப்பட்டு விட்டார். தேரேறிச் சிங்காரப் பவனி வரும் சிங்காரக் காட்சி சிந்தையைக் குளிரவைக்கும் சிறந்ததொரு காட்சியாகும். விநாயகப் பெருமான் அழகிய தேரிலே ஆரோகணித்து வரும் காட்சி பக்திபூர்வமானது. "நம்பினார் கெடுவதில்லை நான்கு மறைத் தீர்ப்பு" என்றபடி அருளை அள்ளிச் சொரியும் அற்புத ஆலயம் கும்பழாவளைப் பிள்ளையார் ஆலயம் ஆகும். இனிமேல் நல்லதே நடக்கப் போகிறது. தீயவை அழியப் போகின்றன. அவனது எல்லையில்லா பேரருட் கருணை பக்தர் குழாமுக்கு கிடைக்க வேண்டுமென்று அவருடைய பாதாரவிந்தங்களைப் பணிந்து உளமாரப் பிரார்த்தித்து வாழ்த்தி, போற்றி, துதித்து நல்லாசிகளை வழங்குகின்றேன்.

ம.பத்மநாதன்,
தர்மகர்த்தா சபைத் தலைவர்.


தேர்த் திருவிழாச் சிறப்புற பிரார்த்திப்போரும் அனுசரணையாளர்களும்

வசந்தமண்டப பூசை காலை 8.30 மணிக்கு.
முற்பகல் 10 தேர் வீதியுலா ஆரம்பமாகும். (சி/290)(2-6-7)

விநாயகர்
களஞ்சியம் அன்
விநாயகர் சுப்பர் மாக்கெட்,
கூட்டுறவாளர் வீதி,
அளவெட்டி.

அழகுசாதனப் பொருள்கள், பாடசாலை உபகரணங்கள், அன்பளிப்புப்பொருள்கள், கையடக்கத்தொலைபேசிகளுக்கான சிம் அட்டைகள், தொலைபேசி பில் கட்டணங்கள் அனைத்தும், Reload, கையடக்கத் தொலைபேசிக்கான அனைத்து காட் வகைகள், யாழ்.கொழும்பு AC Bus
கஜமுகன் பல்பொருள்
விற்பனை நிலையம்
பிரதான வீதி, அளவெட்டி தெற்கு.
தொ.பே:021 2240155
E-mail:kajamukan98@yahoo Com,
Fax : 021 224 0260

V.S.N
CONCRETE PRODUCTION CENTER
Mr. S.NAVANEETHAN & Mr. S.NANTHAKUMARAN
Brothers' 0774939423
0776054089
Dutch Road,
Alaveddy West,
Alaveddy.

பிள்ளையார்
களஞ்சியம்
பல்பொருள்
வாணிபம்
கும்பழாவளை
வீதி,
அளவெட்டி.

பிரியா தையலகம்
பெண்களுக்கான ஆடைகள் சிறந்த முறையில் தைத்துக்கொடுக்கப்படும்.
மகாத்மா வீதி, கும்பழாவளை,
அளவெட்டி.

அம்பாள்
ஸ்ரோர்ஸ்
பல்பொருள் வாணிபம்
மல்லாகம் வீதி, மாகியப்பிட்டி,
அளவெட்டி.

றமணன் டிஜிற்றல்
0777910805 VIDEO சென்ரர்
VIDEO எடிற்றிங்,
வெளிப்புற படப்பிடிப்புக்கள்.
பிரதான வீதி, அளவெட்டி.

உணவு சிற்றுண்டி வகைகள், குளிர்பான வகைகள் அனைத்தையும் பெற்றுக்கொள்ள
விநாயகர்
சைவ உணவகம்
கூட்டுறவாளர் வீதி, அளவெட்டி.

ஐஸ்கிறீம் வகைகள், குளிர்பானங்கள் அனைத்தையும் பெற்றுக்கொள்ள
அம்பிகா
கிறீம் ஹவுஸ்
மலைவேம்படி, அளவெட்டி மேற்கு,
அளவெட்டி.

ஐஸ்கிறீம் வகைகள், குளிர்பானங்கள் அனைத்தையும் ஓடருக்குப் பெற்றுக்கொள்ள
ஸ்ரீ காளி
கிறீம் ஹவுஸ்
கட்டுவன் றோட், மல்லாகம். தொ.பே.0770870516

மீரா பல்பொருள்
வாணிபம் மல்லாகம் வீதி,
மாகியப்பிட்டி.
தொ.பே.0217901699

Vimal
PHOTO & VIDEO , STUDIO
Alaveddy South,Alaveddy
Indoor Outdoor Progammes, Video Mixing,
Editing Photos, Making Albums & Designing,
Photo Diuro Frames, Leminating, Fax ,& Photo Copy
Tel:- 0776305183, 0789142250,0213218042
Fax:-0212240318
E.Mail:- Vimal photo alaveddy @ gmail.com

ரூபன் பல்பொருள் வாணிபம்
K.R
நிரு மெடிக்கல் கிளினிக்
தினமும் M.B.B.S. டக்டர்கள் மாலை 4.30-7.00pm வரை நோயாளர்களைப் பார்வையிடுவார்கள்.
அளவெட்டி.

மகாராசா
ஹாட்வெயர் அன்சன்ஸ்
மல்லாகம் வீதி,
அளவெட்டி.

குமார் தொழிற்சாலை
விநாயகர் பந்தல் சேவை
மகாத்மா வீதி, கும்பழாவளை,
அளவெட்டி.
தொ.பே.0779116337

காளி அம்பாள்
ஸ்ரோர்ஸ்
பல்பொருள் வாணிபம்
மகாத்மா வீதி, கும்பழாவளை.
அளவெட்டி.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சுழிபுரம் – பறாளாய் அருள்மிகு ஶ்ரீ

# தேர்த்திருவிழா சிற



## ஷண்முகனைக்காண இரு கண்கள் போதாது

மூர்த்தி, தலம், தீர்த்தம் என்னும் சிறப்புக்களையுடைய சுழிபுரம் பறாளாய் ஶ்ரீ சிவசுப்பிரமணிய சுவாமி கோயிலில் வருடாந்த உற்சவம் சென்ற பத்துத் தினங்களாக நடைபெற்று இன்று இரதோற்சவம் நடைபெறுகின்றது. அந்தணர்கள் வேதம் ஓத, நாதஸ்வர தவில் இசையுடன் தேவார திருவாசக கோஷங்களோடு அடியார்கள் புடைசூழ முருகப் பெருமான் தேரில் வரும் காட்சியைக் காண இரு கண்கள் போதாது. வேண்டுவார்க்கு வேண்டுவதை எல்லாம் தந்து அடியார்கள் துயர்போக்கி ஆட்கொள்பவன் முருகன். அவனது அருளை வேண்டி ஆயிரக்கணக்கான பக்தர்கள் திரண்டு வந்து முருகனது திருக் கோலத்தைக் கண்டு களிப்பார்கள். ஷண்முகப் பெருமான் தன்னைத் தரிசிக்கவரும் அடியார்களுக்கு அருளை வாரி வழங்கி அவர்களது துயர்களைப் போக்கி நல்வாழ்வு தருவான். இன்று முருகனது இரதோற்சவம் காணவரும் அடியார்களுக்கு ஷண்முகப் பெருமானின் திருவருள் கிடைக்க முருகனைப் பிரார்த்திக்கின்றேன்.

*ஸர்வே ஜனா சுசினோபவந்து*
*கந்தன் கருணை மகத்தானது.*

மு.பாலகுருசாமி சர்மா, ஆலய பரம்பரை பூசகர்.

## மூர்த்தி, தல

### ஆலய வரலாறு

ஆதியு...
யாழ்ப்பாண...
மூளாய் என்...
வடக்கு, தெற்கு என அமைந்துள்ளது. வட...
மரங்கள் சூழ்ந்த இடமும் மேற்புறம் சரித்திர...
விளங்கும் இடம் சுழிபுரம். இப் பகுதியில் ...
கொண்டு அமைந்துள்ளன. மூர்த்தி, தலம், ...
தொடக்கம் ஆரம்பமாகி 03.06.2012 இன்று ...
இந்த ஆலயத்தில் நித்திய, நைமித்திய பூ...
2 ஆம் வீதியில் அமைந்துள்ளது. ஆலயத்தி...
ஆடிச் செல்லும் அடியார்கள் பலர். இந்த ஆல...
சித்திரத் தேர் 1985 ஆம் ஆண்டு பழைய தே...
12 தினங்களும் இந்த ஆலயம் சூழ பக்தர்...
பகுதி எல்லாம் விழாக் கோலம் பூண்டு கா...
பெருவிழா வள்ளி தேவ யானையுடன் சண்...
ஆனந்தம் அடைந்து பெருவாழ்வு வாழ வ...
சங்காபிஷேகம் நடைபெற்று இப் பெருவிழ...
"வாரீர் ...

## ஆனந்தம் தந்திட தேர் ஏறிவருகின்றான்

சகல செல்வங்களும் நிறைந்த சுழிபுரப்பதியில் வந்த வினையும் வருகின்ற வல்வினையும் போக்கவல்ல பறாளாய் அம்பதி முருகன் இன்று தேர் ஏறி வருகின்ற கண்கொள்ளாக் காட்சி ஆனந்தத்தைத் தருகின்றது.

இந்த ஆலயத்தில் எமது தொண்டர் சபையினர் சகல தொண்டுகளையும் செய்து வருகின்றனர். குறிப்பாக மஹோற்சவ காலங்களில் அன்னதானம் சகல அடியார்களுக்கும் சிறப்பாக வழங்கப்படுகின்றது. தாக சாந்தியும் சிறப்பாக நடைபெறுகின்றது.

எமது தொண்டுக்கு சகல வழிகளாலும் அடியார்கள் உதவி செய்து வருகின்றார்கள். சகல அடியார்களும் பறாளாய் முருகன் அருள் பெற்று சீரும் சிறப்புடனும் வாழ வேண்டுகின்றோம்.

**தொண்டர் சபையினர்,**
பறாளாய், சுழிபுரம்.

## ஆலய மகோற்சவ குருவின் ஆசிச் செய்தி

சிவபூமி எனத் திருமூலரால் சிறப்புப் பெற்ற யாழ்ப்பாணத்தின் வடபால் அமைந்த வயல்களால் சூழப்பட்டு மூர்த்தி, தலவிருட்சம், தீர்த்தம் இவைகளால் சிறப்புப் பெற்ற சுழிபுரம் பறாளாய் எனும் பதியில் தன்னை நாடி வந்து வணங்குகின்றவர்களின் இன்னல்கள் போக்கும் பொருட்டு உருவத் திருமேனி கொண்டு வனவள்ளி, சுந்தரவள்ளி சமேதரான சிவசுப்பிரமணிய பெருமானுக்கு வருடாவருடம் வைகாசி மாதம் பௌர்ணமி திதியை முடிவாக வைத்து பன்னிரு தினங்கள் மகோற்சவம் நடைபெறுகின்ற இக் காலத்தில் பதினோராம் நாளாகிய இரதோற்சவம் நடைபெறுகின்ற வேளையில் நாமும் அவனுடைய தேர்வடம் பிடித்து எங்களுடைய மலங்களை அழித்து அவனுடைய அருட்கடாட்சத்தைப் பெறுவோமாக. இவ்வேளையில் அப்பெருமானை நானும் வணங்கி எல்லோருக்கும் ஆசி கூறுவதில் மகிழ்வடைகின்றேன்.

மகோற்சவ குரு கிரியா பூஷணம் சு.முரளீதரக்குருக்கள்,
அரியாலை நீர்நொச்சித்தாழ்வு,
ஶ்ரீ சித்தி விநாயகர் ஆலய குரு.

## துன்பங்கள் போக்கிட காத்தருள் முருகா

பறாளாய் அம்பதியில் கோயில் கொண்டு அருள் பாலிக்கும் கந்த வேற் பெருமான் இன்று அழகிய சித்திரத் தேரில் வீதியுலா வருகின்றார். இந்த அருமையான நன்னாளில் அடியார்கள் அனைவரும் சகல செல்வங்களைப் பெற்று பல்லாண்டு சீரும் சிறப்புடனும் வாழ எல்லாம் வல்ல எம்பெருமான் சண்முகப் பெருமானை வேண்டி நிற்கின்றோம்.

வேலாயுத இரத்தினசபாபதி
தலைவர், தர்மகர்த்தா சபை,


சேவற்கொடியோனே முருகா சரணம்!
சேவடி காப்பவனே முருகா சரணம்!!

**தேர்த் திருவிழாச் சிறப்புற பிரார்த்திப்போரும் அனுசரணைய...**



தென்னாடுடைய சிவனே போற்றி! எந் நாட்டவர்க்கும் இறைவா போற்றி!! வெற்றி வேல் முருகா அரோஹரா
எங்களிடம் சகல பொருள்களும் தரமாகவும் மலிவாகவும் பெற்றுக்கொள்ளலாம்.
**ஶ்ரீ அம்பாள் குறோசறிஸ்**
பண்டத்தரிப்பு

உங்களை அழகுபடுத்தும் நகைகளுக்கு நாடவேண்டிய இடம்
**S.K.T மகாலட்சுமி ஜுவலர்ஸ்**
கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

**பாக்கியரத்தினம் ஹாட்வெயர் ஸ்ரோர்ஸ்**
163, 165 பிரதான வீதி, சங்கானை.
கிளை : தரன் றேடர்ஸ்
130, 132 ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.
021 222 2664

புத்தம் புதிய புடைவை வகைகளுக்கும் அழகு சாதனப் பொருள்களுக்கும் நீங்கள் நாடவேண்டிய இடம்
**முத்துமாரி புடைவை பான்சி பலஸ்**
பண்டத்தரிப்பு

சகல வகையான புடைவை வகைகளையும் பெற்றுக்கொள்ள
**விநாயகர் பட்டுச்சோலை**
பிரதான வீதி, சங்கானை.

பலசரக்குப்பொருள்களை நியாய விலையில் பெற்றிட..
**கந்தசாமி அன்சன்ஸ்**
பல்பொருள் வணிக நிலையம்
பிரதான வீதி, சங்கானை.

நவநாகரிக பட்டுப்புடைவைகளை மலிவு விலையில் பெற்றுக்கொள்ள
**புதிய அபிராமி புடைவை மாளிகை**
பிரதான வீதி, சங்கானை.

**VRV றேட் சென்ரர்**
பிரதான வீதி, சுழிபுரம்.

**இ.ராசநாயகம்**
பறாளை வீதி, சுழிபுரம்.

**கேதீஸ் களஞ்சியம்**
பிரதான வீதி, வடக்கம் பரை, சுழிபுரம்.

**க.தம்பு அன்...**
பிரதான வீ...
சுழிபுரம்...

**விஜி பியூட்டி ஸ்பொட்**
அரசடி வீதி, பண்டத்தரிப்பு

**குமார் ஸ்ரோர்ஸ்**
சுழிபுரம் மத்தி,
சுழிபுரம்.

**ஈஸ்வரா நெற் கபே**
ஈஸ்வரா பல்பொருள் வாணிபம்
பிரதான வீதி, சுழிபுரம்.

**கலைமகள் விலாஸ்**
சைவ உணவகம், பிரதான வீதி, சங்கானை.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஸ்ரீ சிவசுப்பிரமணிய தேவஸ்தானம்

# றப்பு மலர் 03.06.2012



## லம், தீர்த்தம் ஒருங்கே அமையப்பெற்ற திருத்தலம்

ஆதியும் அந்தமுமில்லா அரும்பெரும் சோதியான முருகன் எழுந்தருளியுள்ள இக்கோயில் சிறப்பு இலங்கையில் வடபால் அமைந்த ப்பாணத்தில் வட மேற்குப் புறமாக விளங்கும் சுழிபுரம் கிழக்கே பனிப்புலம், பண்ணாகம் என்னும் ஊர்களும் தெற்கே தொல்புரம், ய் என்னும் ஊர்களும் தென்.மேற்கே பொன்னாலை, நெல்லியான் என்னும் ஊர்களும் அமையப்பெற்ற சுழிபுரம் கிழக்கு, மேற்கு, வடபுறம் நெல்வயல்களும், மேற்குப்புறம் நெல்வயல்கள் தோட்ட நிலங்களும் அமைந்துள்ளன. அதற்கு அப்பால் அடர்ந்த பனை த்திர பிரசித்தி பெற்ற திருவடி நிலை தீர்தத் தலமும் அமைந்த நீர்வளம், நிலவளம் சிறப்பாக அமைந்த சைவமும் தமிழும் சிறந்து யில் மருதம் எனப் போற்றப்படும் பறாளாயில் இரு கண்களாக ஆனைமுகன், ஆறுமுகன் ஆலயங்கள் அருள் மழை பொழிந்து தலம், தீர்த்தம் ஒருங்கே அமையப்பெற்ற இப் புண்ணிய பூமியில் ஆறுமுகன் ஆலய வருடாந்த மகோற்சவப் பெருவிழா 24.05.2012 இன்று தேர்த்திருவிழா சிறப்பாக நடைபெறுகிறது. வைகாசி பூரணையைத் தீர்த்தமாகக் கொண்டு இப் பெருவிழா அமைந்துள்ளது. நிய பூசைகள் தவறாது நடைபெறுகின்றன. இந்த ஆலயத்தில் மூன்று வீதிகள் அமைந்துள்ளன. அழகிய தாமரைத் தடாகம் ஆலய யத்தில் நடைபெறும் அபிஷேக தீர்த்தம் இந்தத் தடாகத்திலேயே இடம்பெறும். பல பிணிகளைத் தீர்க்க இத் தீர்த்தக்கேணியில் தீர்த்தம் த ஆலயத்தில் முன் புறத்தில் அழகிய ராஜகோபுரமும் அதன் இரு மருங்கும் ஆறுபடை வீடுகளும் அமைய உள்ளது. இந்த ஆலயத்தில் ழய தேர் சிற்பவடிவில் புதிதாக அமைத்து திருநெல்வேலி சிற்ப கலாநிதி ஆறுமுகம்ஜீவரட்ணம் அவர்களால் உருவாக்கப்பட்டது. பக்தர்கள் விரதம் இருந்து தமது நேர்த்திக்களை நிவர்த்தி செய்து வருகிறார்கள். இன்று தேர்த் திருவிழா என்றால் ஆலயம் சூழ் டு காட்சிதரும். காவடிகள், பிரதட்டைகள், அடி அழிக்கும் காட்சிகள் ஆனந்த காட்சியாகும். இந்த ஆலயத்தில் இன்று தேர் ா சண்முகநாதன் தேரில் அடியார் குறை தீர்க்க ஆடி ஆடி அசைந்துவரும் கண்கொள்ளாக் காட்சியைக் கண்டு, தேர் வடம் பிடித்து ாழ வாரீர். நாளை காலை திருவடிநிலை தீர்தத் தலத்தில் தீர்த்த உற்சவம், மாலை கொடி இறக்கம். 8 ஆம் திகதி வெள்ளி மகா ருவிழா நிறைவுபெறும்.

ாரீர் தேர்வடம் பிடிக்க, வேல் உண்டு வினை தீர்க்க, மயில் உண்டு எமைக்காக்க"

- முருகன் அடியான் வாகை.

நாளை (04.06.2012) திங்கட்கிழமை காலை 9 மணிக்கு திருவடிநிலையில் தீர்த்தமும் (08.06.2012) வெள்ளிக்கிழமை மகா சங்காபிஷேகமும் நடைபெற்று, அன்னதானமும் இடம்பெறும்

## இராமரின் கால் பதியப்பட்ட திருவடிநிலையில் தீர்த்தோற்சவம்

மூர்த்தி, தலம், தீர்த்தம் எனும் சிறப்புக்களுடைய நாற்புறமும் வயல்களினால் சூழப்பட்ட சுழிபுரம் பறாளாய் எனும் பதியில் வள்ளி தேவசேனாபதியாக விளங்குகின்ற முருகப் பெருமானுக்கு வைகாசி மாதத்தில் மஹோற்சவம் நடைபெறுகின்ற இந்நாளில் அவனுடைய பெருமையை நினைப்பதில் அகம் மகிழ்கின்றேன். இராமரின் கால் பதியப்பட்ட திருவடிநிலையில் தீர்த்தோற்சவம் நடைபெறு கின்ற இவ்வாலயத்தில் 11 ஆம் நாள் தேர்த் திருவிழாவும் நாளை திருவடிநிலையில் தீர்த்தத் திரு விழாவும் நடைபெறும்

இத்தினத்தில் அவனுடைய அடியார்களுக்கு எம்பெரு மானுடைய திருவருள் கிடைக்க வேண்டும் என்று அவனை வேண்டி நிற்கின்றோம்.

அப்புத்துரை நித்தியானந்த மனுநீதி.
நிர்வாகி, தர்மகர்த்தா சபை.



## யாளர்களும்

ல குளிர்பான வகைகளுக்கும்
ஐஸ்கிறீம் வகைகளுக்கும்
நாடவேண்டிய இடம்
**விதுஷா**
கிறீம் ஹவுஸ்
பிரதான வீதி, சங்கானை.

ல வணிகப் பொருள்களையும்
வு விலையில் பெற்றுக்கொள்ள
**கணேஸ்**
ஸ்ரோர்ஸ்
பிரதான வீதி, பண்டத்தரிப்பு.

ட்டுப் புடைவைகளை
லிவாகவும் தரமாகவும்
பெற்றுக்கொள்ள
**ளர்பிறை**
பட்டுச்சோலை
ரதான வீதி, சங்கானை.

**ன்சன்ஸ்**
வீதி,
ரம்.

**பாபு**
**களஞ்சியம்**
சுழிபுரம் மேற்கு, பெரியதம்பிரான்
கோயில் வீதி, சுழிபுரம்.

**கலைவாணி**
நகைமாளிகை
111 - B, கஸ்தூரியார்
வீதி, யாழ்ப்பாணம்.

**மனோச்**
எலக்ரிக்கல்
100, ஸ்ரான்லி றோட்,
யாழ்ப்பாணம்.

**ந.ஏரம்பு கடை**
பிரதான வீதி,
சுழிபுரம்.

**நியூ கிருஸ்ணா**
போன்சொப்
பிரதான வீதி,
சங்கானை.

(6189) (2-6-7)

மலர் அமைப்பு: கோநாத்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தருவது வித்தியா இன்றைய நாள் உங்களுக்கு எப்படி?

**மேடம்:** மறைந்து கிடந்த திறமைகளை வெளிப்படுத்துவீர்கள். சகோதர வகையில் நன்மை உண்டு. கல்யாணப் பேச்சு வெற்றியடையும். தாயாரின் உடல் நலம் சீராகும். உத்தியோகத்தில் அதிகாரிகள் முன்வைத்த கோரிக்கைகள் நிறைவேறும். தன்னம்பிக்கை துளிர்விடும் நாள்.

**இடபம்:** பணப்புழக்கம் அதிகரிக்கும். உங்களிடம் பழகும் நண்பர்கள், உறவினர்களின் பலம் பலவீனத்தை உணர்வீர்கள். அரசால் அனுகூலம் உண்டு. வியாபாரத்தில் சில மாற்றங்கள் செய்வீர்கள். உத்தியோகத்தில் உயரதிகாரிகள் அதிசயிக்கும்படி நடந்து கொள்வீர்கள். திடீர் யோகம் கிட்டும் நாள்.

**மிதுனம்:** குடும்பத்தின் அடிப்படை வசதிகளை மேம்படுத்துவீர்கள். சிக்கனமாகச் செலவழித்து சேமிக்கத் தொடங்குவீர்கள். உறவினர்களால் ஆதாயம் உண்டு. ஆன்மிக நாட்டம் அதிகரிக்கும். உத்தியோகத்தில் புதிய பொறுப்புகள் தேடி வரும். நினைத்தது நிறைவேறும் நாள்.

**கடகம்:** புதிய கோணத்தில் சிந்தித்து பழைய சிக்கலைத் தீர்ப்பீர்கள். மகளுக்கு நல்ல வரன் அமையும். வெளி வட்டாரத் தொடர்புகள் அதிகரிக்கும். வியாபாரத்தில் கடினமாக உழைத்து லாபம் பெறுவீர்கள். உத்தியோகத்தில் இழந்த உரிமையைப் பெறுவீர்கள். உழைப்பால் உயரும் நாள்.

**சிங்கம்:** துணிச்சலான முடிவுகள் எடுப்பீர்கள். உடன்பிறந்தவர்கள் உறுதுணையாக இருப்பார்கள். அரசாங்கத்தாலும், அதிகாரப் பதவியில் இருப்பவர்களாலும் ஆதாயம் உண்டு. வியாபாரத்தில் வேலையாள்களை மாற்றுவீர்கள். உத்தியோகத்தில் உங்களின் புதிய முயற்சிகளை அதிகாரி பாராட்டுவார். வெற்றிபெறும் நாள்.

**கன்னி:** கடந்த இரண்டு நாள்களாக இருந்த சச்சரவு நீங்கும். குடும்பத்தினருடன் சுப நிகழ்ச்சிகளில் கலந்து கொள்வீர்கள். விலகி நின்றவர்கள் விரும்பி வருவார்கள். நட்பு வட்டம் விரியும். வியாபாரத்தில் பழைய மிகுதிகள் வசூலாகும். உத்தியோகத்தில் சக ஊழியர்கள் ஆதரிப்பார்கள். புத்துணர்ச்சி பெருகும் நாள்.

**நாளை**

வைகாசி 22 திங்கட்கிழமை 04.06.2012
திதி: பூரணை மா. 05.21 வரை
நட்சத்திரம்: அனுசம் பி.ப 11.31 வரை
சுபநேரம்: 11.52- 01.22 வரை
ராகு காலம்: 07.22- 08.52 வரை

**துலாம்:** ஒரே நேரத்தில் இரண்டு, மூன்று வேலைகளை இழுத்துப் போட்டு பார்க்க வேண்டி வரும். சிலர் உங்களை மட்டம் தட்டிப் பேசினாலும் உணர்ச்சி வசப்படாதீர்கள். வியாபாரத்தில் வாடிக்கையாளர்களின் எண்ணிக்கை குறையும். உத்தியோகத்தில் அதிகாரிகளால் அலைக்கழிக்கப்படுவீர்கள். விட்டுக்கொடுக்க வேண்டிய நாள்.

**விருச்சிகம்:** சில வேலைகளை நீங்களே முன்னின்று முடிப்பது நல்லது. உறவினர், நண்பர்கள் சிலர் பணம் கேட்டு நச்சரிப்பார்கள். யாரிடமும் உணர்ச்சிவசப்பட்டு பேசாதீர்கள். வியாபாரத்தில் அவசர முடிவுகள் வேண்டாம். உத்தியோகத்தில் மறைமுக எதிர்ப்புகள் வந்து நீங்கும். தடைகளைத் தாண்டி முன்னேறும் நாள்.

**தனுசு:** குடும்பத்தினரின் எண்ணங்களைக் கேட்டறிந்து பூர்த்தி செய்வீர்கள். பழைய கடனை கொடுப்பீர்கள். வெளிவட்டாரத்தில் அந்தஸ்து அதிகரிக்கும். பிரபலங்கள் உதவுவார்கள். புதுத்தொழில் தொடங்கும் முயற்சி வெற்றி அடையும். மதிப்புக் அதிகரிக்கும் நாள்.

**மகரம்:** திட்டமிட்ட காரியங்கள் கைகூடும். பிள்ளைகளால் பெருமையடைவீர்கள். சிலர் உங்களை நம்பி முக்கிய பொறுப்புகளை ஒப்படைப்பார்கள். வியாபாரத்தில் புதிய ஒப்பந்தங்களால் லாபம் அதிகரிக்கும். அலுவலகத்தில் மரியாதைக் கூடும். சாதித்துக் காட்டும் நாள்.

**கும்பம்:** கடந்த இரண்டு நாள்களாக கணவன்- மனைவிக்குள் இருந்த மனப்போர் நீங்கும். வர வேண்டிய பணம் கைக்கு வரும். சில வேலைகளை விட்டுக் கொடுத்து முடிப்பீர்கள். விசேடங்களை முன்னின்று நடத்துவீர்கள்.

**மீனம்:** சந்தேகப்படுவதை முதலில் நிறுத்துங்கள். குடும்பத்தில் உள்ளவர்களுடன் வளைந்துக் கொடுத்துப்போவது நல்லது. அநாவசியமாக எந்த உறுதி மொழியும் வழங்க வேண்டாம். வியாபாரத்தில் ஒப்பந்தங்கள் தள்ளிப் போகும். பொறுப்புணர்ந்து செயற்பட வேண்டும்.

# சுடோக்கு

## எண் விளையாட்டு

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 8 | | 5 | | | | | 2 | |
| | | 6 | 9 | | 2 | 8 | | |
| 7 | 2 | | 6 | | 5 | 3 | | 4 |
| | 8 | | 3 | 4 | 7 | | | |
| | | 7 | | | | 9 | | |
| | | | 1 | 9 | 8 | | 6 | |
| 9 | | 8 | 4 | | 3 | | 1 | 7 |
| | | 3 | 5 | | | 4 | | |
| | 7 | | | | | 5 | | 6 |

## சுடோக்கின் நேற்றைய விடை

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 8 | 5 | 1 | 6 | 4 | 9 | 3 | 2 | 7 |
| 3 | 9 | 7 | 2 | 8 | 1 | 5 | 4 | 6 |
| 4 | 6 | 2 | 3 | 5 | 7 | 9 | 1 | 8 |
| 2 | 7 | 3 | 8 | 1 | 6 | 4 | 9 | 5 |
| 1 | 8 | 6 | 4 | 9 | 5 | 2 | 7 | 3 |
| 9 | 4 | 5 | 7 | 3 | 2 | 6 | 8 | 1 |
| 5 | 2 | 8 | 9 | 7 | 3 | 1 | 6 | 4 |
| 6 | 3 | 4 | 1 | 2 | 8 | 7 | 5 | 9 |
| 7 | 1 | 9 | 5 | 6 | 4 | 8 | 3 | 2 |

சுடோக்கு ஒரு எண் விளையாட்டு. தர்க்க ரீதியான ஒழுங்குபடுத்தல்தான் இதன் அடிப்படை. 1–9 வரையான எண்களை ஒழுங்குபடுத்தி ஒரே கோலத்தை ஏற்படுத்த வேண்டும். இந்தப் பெட்டி 9 நிரல்களையும் 9 நிரைகளையும் கொண்டது. 3X3ஆக உள்ளேயும் 3 நிரல்களையும் 3 நிரைகளையும் கொண்டிருக்கிறது. (உள்ளே இருப்பவற்றை பெட்டிகள், கட்டங்கள், பகுதிகள், உபசதுரங்கள் என்றும் அழைக்கிறார்கள்). இந்த ஒவ்வொரு நிரையிலும் நிரலிலும் 1–9 வரையான எண்கள், இரண்டு தடவைகள் (மீண்டும் மீண்டும்) வராமல் நிரப்பப்பட வேண்டும். அவ்வாறு நிரப்பப்படுகையில் உள்பெட்டிகளுக்குள்ளும் அவ்வாறே 1–9 இலக்கங்கள் இரட்டைப் படாமல் வரவேண்டும். சில கட்டங்கள் ஏற்கனவே நிரப்பப்பட்டிருக்கும் தர்க்க ரீதியில் ஏனையவற்றை நிரப்ப வேண்டியதே வேலை. சுடோக்கு என்பது ஜப்பானியச் சொல். அதன் பொருள் 'தனி எண்' என்பதாகும். 1986 இல் ஜப்பானிய நிறுவனமான 'நிகோலி' இதனை அறிமுகப்படுத்தி வெற்றிகரமாகப் பரவலாக்கியது. 2005இல் இது உலக அளவில் பிரபல்யமானது.

# மக்களிடம் வரவேற்பு பெற்ற சுகவாழ்வு சிகிச்சைப் பிரிவு

தென்மராட்சி, ஜூன் 3

யாழ். மாவட்ட ஆதார வைத்தியசாலைகளில் ஆரம்பிக்கப்பட்டுள்ள சுகவாழ்வு சிகிச்சைப் பிரிவு மக்கள் மத்தியில் நன்மதிப்பைப் பெற்று வருகிறது. அங்கு பெருமளவு மக்கள் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

35 வயதுக்கு மேற்பட்ட ஆண், பெண் இருபாலாரும் இந்த சிகிச்சைப் பிரிவுக்கு வந்து தமக்கு நோய் உள்ளதா என்று பரிசோதனைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

இந்த சிகிச்சை நிலையத்தில் ஒருவரின் உடல் நிறை, திணிவுச் சுட்டி, கண், காது, மூக்கு, சுவாசத் தொகுதி, இருதயத் தொகுதி, நரம்புத் தொகுதி, இனப்பெருக்கம், சுகாதாரம், எலும்பு மூட்டுப் பகுதிகள், உளவளம், மனவளம் போன்ற பரிசோதனைகள் மேற்கொள்ளப்படுவதுடன் விசேடமாக பல், மார்புப்புற்று நோய், சிறுநீர் அடைப்பு, மலவாசல்புற்றுநோய் பரிசோனைகளுடன் இரத்தம், ஈ.சீ.ஜீ, ஸ்கான் எக்ஸ்ரே பரிசோதனைகளும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இந்தப் பரிசோதனைகள் மூலம் தொற்றாநோய் பற்றிய விவரங்கள் முழுமையாக வழங்கப்படுகின்றன. சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் மாதாந்தம் பிரதி வெள்ளிக்கிழமைகளில் நடத்தப்படும் சுகவாழ்வு சிகிச்சைப்பிரிவு, சிறப்பு பயிற்சி பெற்ற வைத்திய நிபுணர்களால் நடத்தப்படுகிறது.

இதனால் பெரும் எண்ணிக்கையில் மக்கள் கலந்து கொள்கின்றனர். வருடத்தில் ஒரு தடவை சிகிச்சைப் பிரிவில் பரிசோதனை புத்தகம் கலந்துகொள்வோருக்கு வழங்கப்படுகிறது.

இந்தச் சிகிச்சை மூலம் ஒருவருக்கு தொற்றாநோய் ஏற்பட்டிருப்பது இலகுவாக கண்டறிய முடியும்.

சுகாதார திணைக்களத்தால் அண்மையில் வெளியிடப்பட்ட அறிக்கையின் பிரகாரம் கடந்த வருடம் மரணமானவர்களில் தொற்றா நோய்களால் இறந்தவர்களின் எண்ணிக்கை அதிகம் எனக் குறிப்பிடப்பட்டுள்ளது.

யாழ். பிராந்திய சுகாதார சேவைகள் மாகாணப் பணிப்பாளர் வைத்திய கலாநிதி ஆ.கேதீஸ்வரன், பிராந்திய தொற்றாநோய் பிரிவுப் பொறுப்பதிகாரி வைத்திய கலாநிதி யோகேஸ்வரன் ஆகியோரின் ஏற்பாட்டில் நடத்தப்படும் சுக வாழ்வு சிகிச்சைப் பிரிவில் அரச, அரச சார் பற்ற நிறுவனங்களில் கடமையாற்றுவோருக்கு ஒரு மணி நேரம் விசேடமாக ஒதுக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ம-9)

# விண்ணப்பம் கோரல்

தீவகக் கல்வி வலயத்தில் சரவணை றோ.க.த.க பாடசாலை வகை III பாடசாலையின் அதிபர் பதவி வெற்றிடத்துக்கு விண்ணப்பம் கோரப்பட்டுள்ளது.

அதிபர் தரத்தைச் சேர்ந்தவர்கள் விண்ணப்பிக்காதவிடத்து இலங்கை ஆசிரியர் சேவையைச் சேர்ந்தவர்களின் வகுப்பு-1, வகுப்பு -2-1 விண்ணப்பங்கள் பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளப்படும்.

விண்ணப்பப்படிவங்களை தீவகக் கல்வி வலயத்தில் பெற்று எதிர்வரும் 10 ஆம் திகதிக்கு முன்னர் விண்ணப்பிக்குமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. (வ)

* * *

வடமராட்சி வலயக் கல்வி அலுவலக முறைசாராக் கல்விப் பிரிவினால் நடத்தப்படவுள்ள மாலை நேர எழுத்தறிவு வகுப்புக்கு போதனாசிரியர் பதவிக்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன. தகுதியுடைய விண்ணப்பதாரிகள் எதிர்வரும் 7 ஆம் திகதிக்கு முன்னதாக வடமராட்சி வலயக் கல்வி அலுவலக முறைசாராக் கல்விப் பிரிவில் நேரடியாக ஒப்படைக்குமாறு வலயக் கல்விப் பணிப்பாளர் அறிவித்துள்ளார். (வ-14)

# சமய சந்நிதிகளில்

யாழ்ப்பாணம், ஜூன் 3

அளவெட்டி கும்பழாவளைப் பிள்ளையார் ஆலய வருடாந்த பெருந்திருவிழா கடந்த 25 ஆம் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமாகித் தொடர்ந்து நடைபெற்று வருகின்றது. இந்த ஆலயத்தின் தேர்த் திருவிழா இன்று ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10 மணிக்கு இடம்பெறவுள்ளது. நாளை முற்பகல் 10 மணிக்கு தீர்த்தத் திருவிழா இடம்பெறும். (வ)

* * *

யாழ்ப்பாணம், ஜூன் 3

சாவகச்சேரி நுணாவில் மேற்கு விளைவேலி மருதடி வீரகத்தி விநாயகர் ஆலய பெருந்திருவிழா கடந்த 26 ஆம் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி நடைபெற்று வருகிறது. இன்று ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10 மணிக்கு தேர்த் நாளை தீர்த்தத்திருவிழாவும் இடம்பெறும். (ந-9)

* * *

சாவகச்சேரி சங்கத்தானை சிந்தாமணி விசாகப் பெருமான் ஆலய விசாகப் பொங்கல் இன்று ஞாயிற்றுக்கிழமை அதிகாலை ஆரம்பமாகும். (வ-8)

* * *

யாழ்ப்பாணம், ஜூன் 3

வரலாற்றுப் பிரசித்தி பெற்ற அராலி ஆவரம் பிட்டி முத்துமாரியம்மன் ஆலய கொடியேற்றம் கடந்த வியாழக்கிழமை ஆரம்பமானது. (வ-50)

* * *

கரவெட்டி புனித அந்தோனியார் தேவாலய வருடாந்தத் திருவிழா நாளை திங்கட்கிழமை பிற்பகல் 4.30 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகவுள்ளது.

எதிர்வரும் 11 ஆம் திகதி வரை தினமும் மாலை நவநாள் ஆராதனைகள் நடைபெறும். எதிர்வரும் 12 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை மாலை, கரவெட்டிப் பங்குத் தந்தை எமில்போல் தலைமையில் நற்கருணை ஆராதனை இடம்பெற்று மறுநாள் 13 ஆம்திகதி புதன்கிழமை காலை கூட்டுத் திருப்பலியும், சொரூப பவனியும் நடைபெறுவதுடன் திருவிழா நிறைவடையும்.

* * *

யாழ்ப்பாணம், ஜூன் 3

கொல்லன்கலட்டி கேணிக்கரை ஸ்ரீவீரகத்தி விநாயகர் ஆலயத்தின் தேர்த்திருவிழா இன்று ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10 மணிக்கு நடைபெறவுள்ளது. (ம-14)

* * *

யாழ்ப்பாணம், ஜூன் 3

கரம்பொன் அன்னை வேளாங்கண்ணி யாத்திரைத்தல பெருவிழா இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 6.45 மணிக்கு திருப்பலிச் செபமாலையுடன் ஆரம்பமாகி தொடர்ந்து காலை 8.30 மணிக்கு திருச்சொரூப திருப்பவனி இடம்பெறும். (ம-14)

* * *

யாழ்ப்பாணம், ஜூன் 3

நவாலி களையோடை கண்ணகையம்மன் ஆலயத்தின் விசாகத் திருவிழா இன்று ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10 மணிக்கு நடைபெறவுள்ளது. இரவு 7.30 மணிக்கு விசேட மேளக்கச்சேரி இடம்பெறும். (ம-14)

* * *

யாழ்ப்பாணம், ஜூன் 3

வட்டுக்கோட்டை உடுக்கியவளை ஸ்ரீ மகா கணபதிப் பிள்ளையார் ஆலயத்தின் நந்தன வருட சங்காபிஷேகம் எதிர்வரும் 8 ஆம் திகதி வெள்ளிக்கிழமை நடைபெறவுள்ளது. இதன் ஆரம்பக் கிரியைகள் எதிர்வரும் 7 ஆம் திகதி வியாழக்கிழமை நடைபெறும். (ம-14)

* * *

யாழ்ப்பாணம், ஜூன் 3

புங்குடுதீவு மேற்கு 4 ஆம் வட்டாரம் பிட்டியம்பதி ஸ்ரீ காளிகா பரமேஸ்வரி ஆலயத்தின் பெருந்திருவிழா எதிர்வரும் 17 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி தொடர்ந்து 10 தினங்கள் திருவிழாக்கள் இடம்பெறவுள்ளன.

இடம்பெறும் திருவிழாக்காலத்தில் எதிர்வரும் 25 ஆம் திகதி திங்கட்கிழமை முற்பகல் 10 மணிக்கு தேர்த்திருவிழாவும், மறுநாள் தீர்த்தத் திருவிழாவும் நடைபெறும். (ம-14)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொது மக்களுக்கான அறிவித்தல்

## நிதி குத்தகைக்குவிடும் தொழிலை மேற்கொள்வதற்கு இலங்கை மத்திய வங்கியுடன் பதிவு செய்யப்பட்டுள்ள நிதி குத்தகைக்குவிடும் கம்பனிகள்

**2000ஆம் ஆண்டின் 56ஆம் இலக்க நிதி குத்தகைக்குவிடும் சட்டத்தின் ஏற்பாடுகளின் கீழ் இலங்கை மத்திய வங்கியினால் வழங்கப்பட்ட அதிகாரப் பதிவு சான்றிதழின் கீழ் பதிவு செய்யப்பட்டவர்கள் தவிர வேறு எந்தவொரு ஆளும் நிதி குத்தகைக்குவிடும் தொழிலை மேற்கொள்ளக்கூடாது** என பொதுமக்களுக்கு இத்தால் அறிவிக்கப்படுகின்றது. மேற்குறிப்பிட்ட சட்டத்தின் கீழ், இலங்கை மத்திய வங்கியுடன் பதிவு செய்யப்பட்டுள்ள நிதி குத்தகைக்குவிடும் நிறுவனங்களின் பெயர்கள் கீழே பட்டியலிடப்பட்டுள்ளன. பெயர்கள் 2012.06.01 இல் உள்ளவாறு தமிழ் அகரவரிசைப்படி தரப்பட்டுள்ளன.

### உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகள் (1988ஆம் ஆண்டின் 30ஆம் இலக்க வங்கித்தொழில் சட்டத்தின் கீழ் உரிமம் பெற்றவை)

1. அமானா பாங்க் லிமிடெட்
2. அட்டன் நசனல் பாங்க் பிஎல்சி
3. இலங்கை வங்கி
4. எம்சிபி பாங்க் லிமிடெட்
5. கொமர்சல் பாங்க் ஒவ் சிலோன் பிஎல்சி
6. சம்பத் பாங்க் பிஎல்சி
7. செலான் பாங்க் பிஎல்சி
8. டீஎவ்சீசீ வர்தன பாங்க் பிஎல்சி
9. நெசனல் டிவலொப்மன்ட் பாங்க் பிஎல்சி
10. நேசன்ஸ் ரஸ்ட் பாங்க் பிஎல்சி
11. பான் ஏசியா பாங்கிங் கோப்பிரேசன் பிஎல்சி
12. மக்கள் வங்கி
13. யூனியன் பாங்க் ஒவ் கொழும்பு பிஎல்சி

### உரிமம் பெற்ற சிறப்பியல்பு வாய்ந்த வங்கிகள் (1988ஆம் ஆண்டின் 30ஆம் இலக்க வங்கித்தொழில் சட்டத்தின் கீழ் உரிமம் பெற்றவை)

14. எம்பீஎஸ்எல் சேவிங்ஸ் பாங்க் லிமிடெட்
15. சணச டிவலொப்மன்ட் பாங்க் லிமிடெட்
16. சிறிலங்கா சேவிங்ஸ் பாங்க் லிமிடெட்
17. டிஎவ்சீசீ பாங்க்
18. பிரதேசிய சங்வர்த்தன பாங்க்
19. லங்காபுத்திர டிவலொப்மன்ட் பாங்க் லிமிடெட்

### உரிமம் பெற்ற நிதிக் கம்பனிகள் (2011ஆம் ஆண்டின் 42ஆம் இலக்க நிதித்தொழில் சட்டத்தின் கீழ் உரிமம் பெற்றவை)

20. அபான்ஸ் பினான்ஸ் பிஎல்சி
21. அலயன்ஸ் பினான்ஸ் கம்பனி பிஎல்சி
22. அசோசியேட்டட் மோட்டார் பினான்ஸ் கம்பனி பிஎல்சி
23. ஆர்பிகோ பினான்ஸ் கம்பனி பிஎல்சி
24. ஈ.ரி.ஜ பினான்ஸ் லிமிடெட்
25. எல்பி பினான்ஸ் பிஎல்சி
26. ஏசியன் பினான்ஸ் லிமிடெட்
27. ஏஎம்டபிள்யூ கபிட்டல் லீசிங் பிஎல்சி
28. ஏசியா அசெற் பினான்ஸ் பிஎல்சி
29. கன்றிச் பினான்ஸ் லிமிடெட்
30. கப்பிட்டல் எலையின்ஸ் பினான்ஸ் பிஎல்சி
31. கொமர்சல் கிறடிட் அன்ட் பினான்ஸ் பிஎல்சி
32. கொமாசல் லீசிங் அன்ட் பினான்ஸ் லிமிடெட்
33. சிங்கர் பினான்ஸ் (லங்கா) பிஎல்சி
34. சிலோவ் பினான்ஸ் பிஎல்சி
35. சிங்கபுத்ர பினான்ஸ் பிஎல்சி
36. சிட்டி பினான்ஸ் கோப்பிரேசன் லிமிடெட்
37. சிற்றிசன்ஸ் டிவலொப்மன்ட் பிசினஸ் பினான்ஸ் பிஎல்சி
38. சென்றல் இன்வெஸ்ட்மன்ட்ஸ் அன்ட் பினான்ஸ் பிஎல்சி
39. சென்றல் பினான்ஸ் கம்பனி பிஎல்சி
40. செங்கடகல பினான்ஸ் பிஎல்சி
41. சொவ்ற்லொயிக் பினான்ஸ் பிஎல்சி
42. ட்ரேட் பினான்ஸ் அன்ட் இன்வெஸ்ட்மன்ட்ஸ் பிஎல்சி
43. த பினான்ஸ் அன்ட் கரண்டி கம்பனி லிமிடெட்
44. த பினான்ஸ் கம்பனி பிஎல்சி
45. த ஸ்ரான்டட் கிறடிற் லங்கா லிமிடெட்
46. திவச பினான்ஸ் லிமிடெட்
47. நந்தா இன்வெஸ்ட்மன்ட்ஸ் அன்ட் பினான்ஸ் பிஎல்சி
48. நேஷன் லங்கா பினான்ஸ் பிஎல்சி
49. பார்ட்லீட் பினான்ஸ் பிஎல்சி
50. பிம்புத் பினான்ஸ் பிஎல்சி
51. பீப்பிள்ஸ் பினான்ஸ் பிஎல்சி
52. பீப்பிள்ஸ் மர்ச்சன்ட் பினான்ஸ் பிஎல்சி
53. மல்ரி பினான்ஸ் பிஎல்சி
54. மர்க்கன்டைல் இன்வெஸ்ட்மன்ட்ஸ் அன்ட் பினான்ஸ் பிஎல்சி
55. மர்ச்சன்ட் கிறடிற் ஒப் சிறிலங்கா லிமிடெட்
56. லங்கா ஒறிக்ஸ் பினான்ஸ் பிஎல்சி
57. வெலிபல பினான்ஸ் பிஎல்சி
58. ஸ்வர்ணமகால் பினான்ஷியல் ஸர்விஸஸ் பிஎல்சி

### சிறப்பியல்பு வாய்ந்த குத்தகைக்குவிடும் கம்பனிகள் (2007ஆம் ஆண்டின் 7 இலக்க கம்பனிகள் சட்டத்தின் கீழ் கூட்டிணைக்கப்பட்டவை)

59. அசற்லையின் லீசிங் கம்பனி லிமிடெட்
60. இசுறு பினான்ஸ் கம்பனி லிமிடெட்
61. இந்திரா பினான்ஸ் லிமிடெட்
62. எல்ஓஎல்சி மைக்றோ கிரேடிட் லிமிடெட்
63. எஸ்எம்பி லீசிங் பிஎல்சி
64. ஒரியன்ட் பினான்சியல் சோவிஸஸ் கோப்பிரேசன் லிமிடெட்
65. சம்பத் லீசிங் அன்ட் பக்ரறிங் லிமிடெட்
66. சிலீஸ் லிமிடெட்
67. சொவ்ற்லொஜிக் கிரேடிற் லிமிடெட்
68. கொஷிபா லீசிங் கம்பனி லிமிடெட்
69. கோப்பறேரிவ் லீசிங் கம்பனி லிமிடெட்
70. பீப்பிள்ஸ் லீசிங் கம்பனி பிஎல்சி
71. மேர்ச்சன்ட் பாங்க் ஒவ் சிறிலங்கா பிஎல்சி
72. லிஸ்வின் இன்வெஸ்மென்ற்ஸ் லிமிடெட்

## இலங்கை மத்திய வங்கி

மேலதிக விபரங்களுக்கு தொடர்பு கொள்ளவும் : வங்கியல்லா நிதி நிறுவனங்கள் ... இலங்கை மத்திய வங்கி, இல 30, சனாதிபதி மாவத்தை, கொழும்பு 01. தொலைபேசி : 011 2477500, 011 2477555, 011 2477020 தொலைநகல்: 011 2477738, மின்னஞ்சல்: secdsnbf@cbsl.lk

(C/625)


# ILE RESIDENCE / CAR FOR RENT IN JAFFNA






- Heart of the Town
- AC Rooms with Vehicle Park Facilities
- Reasonable Charge

- Full Option AC Cars
- For Daily / Weekly / Monthly Rent
- Reasonable Charge
( For coporate clients only )

(18773)

**Contact - 0772539466 / 0777712670 / 0773608642**



## மகளிருக்கான 3 மாத பயன்மிகு பயிற்சிகள்

யாழ் கலாலயா பயிற்சியகம்
பெருமாள் கோயிலுக்கு அண்மையில், யாழ்ப்பாணம்
Yazh **Kalalaya** Academy
Jaffna

கடந்த எமது 26 வருடகால சேவையில் எம்மிடம் பயிற்சிபெற்ற ஆயிரக்கணக்கானோர் உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் இத்துறையில் முன்னணியில் திகழ்கின்றனர். நீங்களும் அவ்வாறே ஆகவேண்டுமா?

**இதோ**

- *கேக் ஐசிங், உணவு தயாரித்தல்*
- *முடி சீராக்குதலும் கூந்தல் வடிவமைப்புகளும் (Hair Dressing & Styling)*
- Facials, மணப்பெண் அலங்காரம், Pedicure, Manicure பயிற்சிகள். ஏழு வகையான சாறி உடுத்தும் முறைகள்.

**மேற்படி பயிற்சிகளின் முடிவில் சான்றிதழ் வழங்கப்படும்.**

- தையல் தெரிந்தவர்களுக்கான சான்றிதழ் அற்ற சாறி பிளவுஸ், சுரிதார், சட்டை, தைக்கும் பயிற்சிகள்

**ஆரம்பம்: 06.06.2012 புதன்கிழமை காலை 9.30 மணி.**



# Diploma in English

City & Guilds

## COURSE COMPONENTS

Reading : From Beginner to Advanced
Writing : From Beginner to Advanced
Speaking : Effective Speaking - Basic to Advanced

**பரீட்சைகள் யாழ்ப்பாணத்தில் நடைபெறும்.**

திருமணம் செய்த இல்லத்தரசிகள் அல்லது British பிரஜைகளை திருமணம் செய்ய இருக்கும் அனைவரும் கட்டாயமாக ஆங்கிலத்தில் தேர்ச்சியடைய வேண்டும். UK Border Agency அங்கீகரிக்கும் பாடநெறி City & Guilds இன் Diploma in English (A1, B1) மட்டுமே 02 மாதங்களில் பூரண கல்வியை பெற்று எமது கல்லூரியில் பரீட்சையை எழுத முடியும்.

**ஏன் நீங்கள் Diploma of English City College இல் கற்க வேண்டும்**

- எமது விரிவுரையாளர்கள் பல்கலைக்கழகங்களில் பல வருடங்கள் விரிவுரைகள் ஆற்றிய அனுபவமுடையவர்கள்
- பல தடவைகள் Vincent Sidowicz and Bridgel Bloom அவர்களின் பயிற்சிப்பட்டறைகளில் பங்கு பற்றி இருக்கின்றனர்.




| Course Schedule | Mon -Tue-Wed-Thu-Fri | Sat & Sun |
| --- | --- | --- |
| Duration | 2 Months (100 hours) | 2 Months (100 hours) |
| Time | 8.30.10.30 a.m 10.30.12.30 p.m | 2.00 - 5.00 p.m |
| Commencement | 06.06.2012 | 06.06.2012 |

## வகுப்புகள் 02.06.2012 ஆரம்பம்

# CITY COLLEGE OF ENGLISH

(திருநெல்வேலிச் சந்திக்கும் கல்வியங்காட்டுச் சந்திக்கும் இடையில்)
143, Adiyapatham Road, Thirunelvely.
T.P. 0212220384 - 0778803887 - 0776220670



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கட்டடம் தேவை

சகல வசதிகளுடன் இருப்பிட வசதி, காட்சியறை வசதி, சிறிய களஞ்சிய அறைகளுடன் சிறிய மற்றும் பெரிய வாகனங்கள் தரிப்பிட வசதியுடன் ஒரு கட்டடம் வாடகைக்குத் தேவை. யாழ் நகர் அல்லது யாழ் நகரை அண்டிய பகுதியில் (3-4km) விரும்பத்தக்கது.

**தொடர்பு: 0772753146** (18480) (6,7,10)

## வவுனியாவில் இயங்கும் சின்பொன் வெதுப்பகத்திற்கு பணியாள்கள் தேவை

- ★ கணக்குப் பதிவாளர்
- ★ உற்பத்தி வேலை (கேக், ஐசிங்கேக்)
- ★ ஐசிங்கேக் வேலை பழக விரும்புபவர்களும் தொடர்பு கொள்ளலாம்

வவுனியா நகரை அண்மித்தவர்கள் விரும்பத்தக்கது.

**தொடர்பு: 077 7104 559** (16867) (45.6.7)

## பாடசாலை அபிவிருத்திச் சங்கம் யா/மகாஜனக் கல்லூரி தெல்லிப்பழை வருடாந்தப் பொதுக்கூட்டம் 10.06.2012

பாடசாலை அபிவிருத்திச் சங்கத்தின் ஆண்டுப் பொதுக்கூட்டம் எதிர்வரும் 10.06.2012 அன்று நடைபெற உள்ளது. அங்கத்தவர்கள் தவறாது கலந்து சிறப்பிக்குமாறு கேட்டுக்கொள்கின்றோம்

தலைவர் :- திரு. கு. வேல்சிவானந்தன் (அதிபர்)
இடம் :- பாவலர் துரையப்பாபிள்ளை மண்டபம்
காலம் :- 10.06.2012 ஞாயிற்றுக்கிழமை
நேரம் :- முற்பகல் 9.30 மணி

நிகழ்ச்சி நிரல்

01. இறைவணக்கம்
02. தலைவர் உரை
03. செயலாளர் அறிக்கை
04. செயற்றிட்ட அறிக்கை
05. பொருளாளர் அறிக்கை (கணக்காய்வு அறிக்கை)
06. புதிய நிர்வாக சபைத் தெரிவு
07. பிற விடயங்கள்
08. நன்றியுரை
09. கல்லூரிக் கீதம்

குறிப்பு:- அங்கத்துவப்பணம் செலுத்திய அங்கத்தவர்கள் மட்டும் பொதுக் கூட்டத்தில் பங்குபற்ற முடியும். அங்கத்துவப் படிவத்தைப் பெற்று அங்கத்துவப் பணத்தைச் செலுத்திப் பற்றுச் சீட்டைப் பெற்றுக்கொள்ளவும்.

கு. வேல்சிவானந்தன் தலைவர் (C\297) (6,7,10) ந.துளசிதாசன் செயலாளர்

## 12 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



மலர்வு 23 ★ 07 ★ 1940
உதிர்வு 17 ★ 05 ★ 2000

**அமரர் சபாபதி திருநாவுக்கரசு**

(முன்னாள் அதிபர் - யா/ கலட்டி அ.மி.த.க. பாடசாலை - யா/ நல்லூர் சாதனா பாடசாலை)

பண்பின் இருப்பிடமாய் பாசத்தின் உறைவிடமாய்
எம் கண்முன் இருந்த காலத்தை மறக்க முடியுமா?
உமது எதிர்பார்ப்பை நிறைவேற்ற
உமது ஆசி வேண்டி நிற்கின்றோம்.

இல. 1/5, மடம் வீதி, யாழ்ப்பாணம். (18868) (45.6.7) மனைவி, மகள், மருமகன், பேரன்மார்.

## பத்தொன்பதாம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம் 01.01.1954
மறைவு 07.06.1993

**திருமதி நகுலேஸ்வரி நகுலராசா**

திதி: சதுர்த்தசி - 03.06.2012

:ஆண்டுகள் பத்தொன்பது வந்தென்ன
ஆயிரம் உறவுகள் இருந்தென்ன
ஆனந்தமாக எமைத்தாங்கி
அரவணைத்து ஆறுதலளித்த
நீங்கள் இல்லையே! ......
நித்தம் இறைவனை இறைஞ்சி நிற்கும்:

அம்பன், குடத்தனை, வடமராட்சி கிழக்கு. (18901) (45.6) குடும்பத்தினர்

## பணியாளர் தேவை

தனியார் நிறுவனம் ஒன்றிற்கு கணினி அறிவுடைய கணக்கு எழுதுநர் தேவை.

**தொடர்பு : 077 1844900** (18955)(6-7-8)

## நீங்கள் நீரிழிவு நோயினால் அவதிப்படுகிறீர்களா இதோ உடன் நிவாரணி

"கொத்தல கிம்பட்டுவ"
KOTHALA HIMBATU PANAYA

இந்த மருந்தின் பலாபலனை குறுகிய காலத்தில் அறிந்து கொள்ளலாம். உங்கள் அருகில் உள்ள சித்த ஆயுர்வேத டாக்டரிடம் ஆலோசித்துப் பாவியுங்கள்

சந்தைப்படுத்துவோர்:
சிவா நறுமணப் பூங்கா, 288, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
தொ.பேசி. 021 2222 567 (இ/296) (45.6.7)

## வீடு விற்பனைக்கு

உரும்பிராய் சந்தி யாழ். பலாலி வீதியில் பழைய தபாற்கந்தோர் ஒழுங்கையில் இரண்டாவதாக அமைந்துள்ள 4 பரப்புக்காணியில் விசாலமான பெரிய வீடு விற்பனைக்கு உண்டு. சனி, ஞாயிறு தினங்களில் பார்வையிடலாம்.

**தொடர்பு: 077 7901 367** (18874) (45.6.7)

## மணமகள் தேவை

யாழ். இந்து கௌரவகுடும்பம், 1979 உத்தரட்டாதி 2ஆம் பாதம் கிரக பாவம் 65 செவ்வாய்க்குற்றமில்லை. U S A Citizen . CIMA Qualified. Accountant/ Manager மணமகனுக்கு படித்த, கலையார்வமுள்ள மணமகள் தேவை.

**தொடர்பு: 077 507 6082** (18878) (45.6.7)

## வீடு வாடகைக்கு

வட்டுக்கோட்டை மூளாய் வீதியில் மாவடிச் சந்திக்கு அருகில் சகல வசதிகளுமுடைய பெரிய வீடு வாகனத்தரிப்பிடத்துடன் வாடகைக்கு உண்டு. அரச தனியார் நிறுவனங்களுக்கு உகந்தது.

**தொடர்புகளுக்கு : 077 7802900** (சி/267)(6-7-8)

## German, Swiss மொழிகள்

தமிழ் மொழி பெயர்ப்புடன் German Embassy யில் கேட்கப்படும் A1 Certificate க்கு ஏற்றவாறு நடைபெறுகிறது. தங்கிப் படிப்பதற்கு ஏற்ற வசதிகளும் செய்து கொடுக்கப்படும்.

**10, Palaly Road, Jaffna T.P : 077 1604823** (18903)(6-7-8)

## IRON SAFE (இரும்புப் பெட்டகம்) விற்பனைக்கு

திண்டுக்கல் இரும்பு பெட்டகம் (IRON SAFE) 4 அடி உயரம் 2½ அடி அகலம் விற்பனைக்கு உள்ளது.

**தொடர்பு : 077 7197145** (18806)(6-7-8)

## மணமகள் தேவை

யாழ் R.C கௌரவ குடும்பம்1978 இல் பிறந்த MBBS டாக்டருக்கு தகுதியான உத்தியோகம் பார்க்கும் மணமகள் தேவை

**தொடர்புகளுக்கு : 0772484676, 0772834323** (18597) (6,7,10)

## தேவை

Medical Rep. ஒருவருக்கு யாழ். நகரை அண்டிய பகுதியில் சகல வசதிகளுடன் கூடிய Room ஒன்று தேவை.

தொடர்பு: 075 0442 099 (18603) (45.6.7)

## VACANCY

**AREA SALES REPRESENTATIVE - 01**

we are an established company dealing with imports and distribution of Cement, looking for suitable candidates to fulfill the following positions

**1. AREA SALES REPRESENTATIVE**

- * ENERGETIC YOUNG MEN' PREFERABLY BELOW AGE OF 35 YEARS, RESIDING IN JAFFNA
- * GOOD SECONDARY EDUCATION WITH MINIMUM G.C.E. A/L QUALIFICATION
- * GOOD COMMUNICATION SKILLS
- * MINIMUM THREE YEARS EXPERINCE IN SALES & MARKETING

Please apply with CV and contact details of two non related Referees
Within 7 days of this Advertisement.
E-Mail: cd4vacancy@gmail.com
Phone-0112591362 (C\236) (6,7,10)

## நீங்காத நினைவில் 22ஆம் ஆண்டு நினைவஞ்சலி



வையகத்துள் அறிமுகம் 26★03★1964
தெய்வத்துள் சங்கமம் 07★06★1990

திதி: சதுர்த்தசி (03.06.2012)

செல்வி
**நர்மதா கனகரட்ணராஜா**

(நடன ஆசிரியை, யா/மெமோறியல் ஆங்கில பாடசாலை)

எங்கள் அன்பின் திருவுருவே! பாசதீபமே!!
ஆசையின் மணிவிளக்கே! பாசத்தின் பிறப்பிடமே!!
குடும்பத்தின் ஒளிவிளக்கே எங்கள் குடும்பத்தில்
முதல் சொத்தாகப் பிறந்த முத்தான முத்தே!
எம்மை எல்லாம் ஆறாத் துயரில் விட்டு விட்டு
மீளாத் துயில் கொண்ட எம் அன்புச் செல்வமே!
எத்தனையோ உறவுகள் இருந்தாலும்
அம்மா என்று சொல்ல உன் உயிர் இல்லையம்மா
ஆண்டுகள் இருபத்து இரண்டு சென்றாலும் உன்
நினைவுகள் எம் நெஞ்சை விட்டகலாதம்மா!

உன் பிரிவால் துயருறும்;
அம்மா, மாமாமார், மாமிமார், சித்திமார், சித்தப்பா, தம்பிமார், தங்கைமார்.

சந்தைபடி, மானிப்பாய். (18904) (6,7,10)

## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்



தோற்றம் 13 ★ 04 ★ 1947
மறைவு 04 ★ 05 ★ 2012

**அமரர் மகேஸ்வரி நாகராசா**

கடந்த (04.05.2012) வெள்ளிக்கிழமை இறைபதமடைந்த எமது குலவிளக்கின் அந்தியேட்டிக் கிரியைகள் இன்று (03.06.2012) ஞாயிற்றுக்கிழமை எமது இல்லத்தில் நடைபெறவுள்ளதால் அத்தருணம் தாங்கள் தங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து அன்னாரின் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் தொடர்ந்து நடைபெறும் மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

அழைப்புக் கிடைக்கப் பெறாதவர்கள் இதனைத் தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளவும்.

ஐயனார் கோயிலடி, கொடிகாமம். (சீ/247) (6,7,10) குடும்பத்தினர்.

## மரண அறிவித்தல்

**சின்னத்தம்பி இராசானந்தன்**

(முன்னாள் பொது முகாமையாளர் யாழ்.மாவட்ட அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம்)



உரும்பிராய் தெற்கைப் பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும், கனடாவை தற்போதைய வதிவிடமாகவும் கொண்டிருந்த சின்னத்தம்பி இராசானந்தன் (உரும்பிராய் இந்துக் கல்லூரி பழைய மாணவன்) நேற்று முன்தினம் (30.05.2012) புதன்கிழமை காலை கனடாவில் இறைபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான மலாயன் பென்சனியர் சின்னத்தம்பி- அரியம் தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான நாகேந்திரம் ( புகையிரத நிலைய முன்னாள்அதிபர்)-சரஸ்வதி தம்பதியரின் அன்பு மருமகனும், தங்கலட்சுமியின் (தங்கம் ரீச்சர்-உரும்பிராய் இந்துக் கல்லூரி முன்னாள் ஆசிரியை) பாசமிகு கணவரும், அனகனின் பாசமிகு தந்தையும், யாழினியின் மாமனும், மீனுகாவின் பேரனும், காலஞ்சென்றவர்களான திரவியம், சர்வானந்தன், பரமானந்தன், Dr.விவேகானந்தன் மற்றும் கிருஷ்ணானந்தன் ஆகியோரின் சகோதரனும், வீரசிங்கம் மாஸ்டர் (ஆஸ்திரேலியா), பத்மாசனி (லண்டன்), சத்தியேஸ்வரி, Dr.மீனலோஜினி, வடிவாம்பிகை ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (03.06.2012) ஞாயிற்றுக்கிழமை மு.ப. 10 மணியளவில் கனடா ஒட்டாவாவில் இடம்பெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

"உமாபதி", பலாலி வீதி, உரும்பிராய் தெற்கு. (18862)

தகவல்:
சி.கிருஷ்ணானந்தன்
(சகோதரன், அப்பு மாஸ்டர்)
001-6134915022 (கனடா)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## விற்பனைக்கு/ வாடகைக்கு

டொயாட்டா Crew Cab 50 - பச்சை நிறம் Body Engine புனரமைக்கப்பட்டது. Radio, Pen Drive System, Speaker இகக Duble Cap 50 - AC Canoby New Paint. TVS Excel Seventy CC சிவப்பு நிறம். Yamaha 110 CC நீல நிறம் புதியது விற்பனைக்கு உண்டு. சிசில் பிரிஜ் Double Door விற்பனைக்கு உண்டு. தொடர்புகளுக்கு: 0714544393 (16870)(2-6-7)

## REALMATRIMONY யின் மணப்பந்தல்

- 1986, பூசம், Bank Officer , மணமகளுக்கு மணமகன் தேவை.
- 1986, உத்தராடம் 1ம் பாதம், Doctor மணமகளுக்கு மணமகன் தேவை.
- 1984, அஸ்வினி , BSc & MSc மணமகளுக்கு மணமகன் தேவை.
- 1982, புணர்பூசம், BSc & MSc , மணமகளுக்கு மணமகன் தேவை.
- 1986, திருவோணம், BSc & MSc , மணமகளுக்கு மணமகன் தேவை.
- 1986, சித்திரை , BSc & MSc , மணமகளுக்கு மணமகன் தேவை.
- 1982, கேட்டை, Engineer, Australia PR, மணமகனுக்கு மணமகள் தேவை.
- 1981, திருவாதிரை, IT Professional, UK PR மணமகனுக்கு மணமகள் தேவை.
- 1975, சுவாதி, Accountant,மணமகனுக்கு மணமகள் தேவை.
- 1985, கேட்டை, Engineer, UK Citizen மணமகனுக்கு மணமகள் தேவை.
- 1976, மூலம், Germany PR மணமகனுக்கு மணமகள் தேவை.
- 1975, திருவோணம், Engineer, Canada Citizen மணமகனுக்கு மணமகள் தேவை.

இல.18, மல்லிகா லேன், கொழும்பு 06.
www.realmatrimony.com
E.Mail:support@realmatrimony.com
Contact : 011- 4344229

MMW (f/621)

## வாடகைக்கு

யாழ்ப்பாணம் அரியாலை A9 வீதிக்கு அருகில் வீடு வாடகைக்கு. அரச, தனியார் நிறுவனங்களுக்கும் உகந்தது. காலை 10.00 மணிக்குபின் தொடர்பு கொள்ளவும் 0777-448899 / 021-2221454 (f/631)

## சிறுநீரகம் தேவை

42 வயதுடைய ஆணுக்கு O பொசிட்டிவ் (O +) வகை சிறுநீரகம் அவசரமாகத் தேவைப் படுகிறது. வழங்கி உதவ விரும்புவோர் கீழ்வரும் இலக்கத்துடன் தொடர்புகொள்ளவும் சன்மானம் வழங்கப்படும். 075 2672 794

## விசா

- கனடா, அவுஸ்திரேலியா, லண்டன் (3 கிழமை)
- செங்கன் விசா (போர்த்துக்கல், செக் குடியரசு - 2 கிழமை) லித்துவேனியா, போலன்ட் (6 கிழமை)
- சைபிரஸ் (2 நாள்)
- பெலாரஸ் (3 கிழமை)
- ஜப்பான் (4 கிழமை)
- லண்டன், பிரான்ஸ், புயிலன்ட் Student visa

அனைத்து வகையான விசாக்களுக்குமான சிறந்த வங்கிகளினூடான பணவைப்புக்கள்

EURO PROFILE
16B, E.S பெர்னாந்து மாவத்தை, வெள்ளவத்தை
0750833005 (f/627)

## தவறிவிட்டது

இராஜேந்திரன் நிஷேன் (நங்கன்) 12ஆம் ஒழுங்கை, பரந்தன் என்பவருடைய பச்சை நிற முச்சக்கரவண்டியின் (N.P.QB - 6123) மூலப்பிரதி (புத்தகம்) பரந்தன் சந்திக்கும், ஓராம் கட்டைக்குமிடையில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் ஜென்சி கூல்பார் பரந்தனில் ஒப்படைக்கவும். தகுந்த சன்மானம் வழங்கப்படும். தொடர்பு: 077 0873 474

## கடை வாடகைக்கு

யாழ்ப்பாணம், 146, மானிப்பாய் வீதியில் பள்ளி வாசலுக்கு முன் பாக எல்லாவித மான வியாபாரத் துக்கும் ஏற்ற கடை, சிறிய ஹோட்டல் நடத்தக் கூடிய வச தியும் உண்டு
தொடர்பு: 0772915826 (18921)

## வீட்டுப்பணிப் பெண்கள் சிங்கப்பூர் வேலைவாய்ப்புக்கள்



| | |
|---|---|
| தொழில்தலைப்பு | வீட்டுப்பணிப்பெண்கள் |
| தொகை | 100 பேர் |
| மாதாந்த சம்பளம் சிங்கப்பூர் டொலர் | 350 - 450 டொலர் |

**நிலைப்பாடுகளும் நிபந்தனைகளும்**

- ☑ உணவு (தினசரி மூன்று வேளை திருப்தியான உணவு) தங்குமிட வசதிகளும், வைத்திய வசதிகளும் தொழில்தருநரால் செய்து கொடுக்கப்படும்.
- ☑ வேலை நேரம் 12 மணித்தியாலயங்களுக்கு மேற்படாது.
- ☑ சிங்கப்பூருக்கு செல்லும் விமான பயணச்சீட்டு இலங்கையிலுள்ள முகவரால் அல்லது சிங்கப்பூர் முகவரால் கொடுக்கப்படும்.
- ☑ சிங்கப்பூர் செல்வதற்கான விமானசிட்டு சிங்கப்பூர் முகவரின் செலவில் கொடுக்கப்பட்டால் அந்தப்பணம் தவணை முறையில் இரண்டு மூன்று தவணைகளில் வீட்டுப் பணிப் பெண்களின் சம்பளத்திலிருந்து கழிக்கப்படும். எவ்வாறாயினும் இந்த மொத்தத் தொகை 300 சிங்கப்பூர் டொலரைவிட கூடியதாகாது.
- ☑ சிங்கப்பூரிலிருந்து திரும்பி வரும்போது விமான பயணச்சீட்டு தொழில் தருநரால் பெற்றுக் தரப்படும்.
- ☑ வயதெல்லை 23க்குக் குறையாமலும் 40 க்குக் கூடாமலும் இருத்தல் வேண்டும்.
- ☑ விண்ணப்பதாரிகள் இலகுவான ஆங்கிலத்தில் பேசக்கூடியவராகவும் 8ம் தரம் வரை கல்வித்தகைமை உள்ளவராக இருக்க வேண்டும்.
- ☑ ஒப்பந்த காலம் இரண்டு வருடங்களாகும்.(புதுப்பிக்கக்கூடியது)
- ☑ 12 மாதங்களின் பின் வருடாந்தம் 15 நாட்கள் விடுமுறை ஏற்புடையதாகும்.
- ☑ ஏனைய நிலைப்பாடுகளும் நிபந்தனைகளும் சிங்கப்பூர் அரச தொழில் சார்ந்த சட்டத்துக்கு அமைவானது.

FREE RECRUITMENT

தொழிலைப்பற்றி நாம் கரிசனை கொள்வோம்.

**என். பீ. மேன்பவர் கன்சல்டன்ட்ஸ்**
இல. 24A, விசாகா ரோட், பம்பலப்பிட்டி, கொழும்பு 04. (Oppt. House of Fashion)
தொ. இல :- 011-2591596 / 011 2591597 / 0772 907506 / 0773 200589
தொலை நகல் : - 011 2591598
பதிவு இல. : 2617

Colombo Ads : 077 244 24 25 (f/623)

## தேவை

கொஸ்பல் போ ஏசியா (Gospel for Asia) நிறுவனத்தால் நடைமுறைப்படுத்தப்படும் பிரிட்ஜ் ஒப் ஹோப் (Bridge of Hope) சிறார் மேம்பாட்டுச் செயற்திட்டத்தின் (Children Development Project) யாழ்ப் பாணக் கிளைக்கு (உரும்பிராய்) நம்பிக்கைக்குரிய செயற்திட்ட ஒருங்கிணைப்பாளர் (Project Coordinator) ஒருவர் உடனடியாகத் தேவைப்படுகிறார்.

**தகைமைகள்:**

- ★ அங்கிகரிக்கப்பட்ட பல்கலைக்கழகப் பட்டதாரியாக அல்லது க.பொ.த (உ/த) திறமைச் சித்தி பெற்றவராக இருக்க வேண்டும்.
- ★ கிறிஸ்தவராக இருக்க வேண்டும் (Born again Christian)
- ★ சிறார் சேமநலன் சார்ந்த முன் அனுபவம் மேலதிக தகைமை யாகக் கருதப்படும்.

அனைத்துச் சான்றிதழ்களினதும் பிரதிகளுடன் நேரில் அல்லது தபால் மூலம் தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி:

**Gospel for Asia Lanka**
**BRIDGE OF HOPE**
No.54, Jayasooria Mawatha, Kandana.
Tel: 0112-237474 / 0112-247600

(C616) (6,9,10)

## தங்கப் பவுணுக்கு அதிகூடிய பணம் தரும் வங்கி



24 கரட்
ரூ. 48,500/-

22 கரட்
ரூ. 44,500/-

ரூ. 50,000/- அல்லது அதற்கு மேற்பட்ட சகல அடகுக் கொடுக்கல் வாங்கல்களுக்கும்* சுடுநீர் போத்தல் ஒன்று இலவசம்



NDB பூன்னய
அடகுச் சேவை

இச்சலுகையை பின்வரும் NDB கிளைகளில் பெறமுடியும்

| | | | |
|---|---|---|---|
| அம்பலாங்கொட | ஜா-எல | குளியாப்பிட்டிய | புத்தளம் |
| அம்பலாந்தோட்ட | யாழ்ப்பாணம் | மாலபே | இரத்தினபுரி |
| அம்பாறை | கல்முனை | மாத்தளை | திருகோணமலை |
| பதுளை | களுத்துறை | மாத்தறை | வவுனியா |
| பண்டாரவளை | கந்தான | மதுகம | வத்தளை |
| மட்டக்களப்பு | கண்டி | நீர்கொழும்பு | வென்னப்புவ |
| சிலாபம் | கேகாலை | நிட்டம்புவ | வாரியபொல |
| காலி | கொள்ளுப்பிட்டி | பிலிமத்தலாவ | அளுத்கம |
| ஹொரண | கொட்டாஞ்சேனை | பிலியந்தலை | எம்பிலிப்பிட்டிய |

அழையுங்கள் 011 2 44 88 8

இச்சலுகை 2012 மே 02 முதல் ஜூலை 02 வரை மட்டுமே

- நிபந்தனைகளுக்கு உட்பட்டது.
- இருப்பு உள்ளவரை மட்டுமே.

(f/614) PHOENIX O&M

நெஷனல் டிவலப்மென்ட் பேங்க் பிஎல்சி ஆனது, இலங்கை மத்திய வங்கியின் மேற்பார்வையின் கீழ் இயங்கும் அனுமதி பெற்ற ஒரு வர்த்தக வங்கியாகும்.

NDB வங்கி

## டுபாய் வேலைவாய்ப்பு

**AL SEER TRADING AGENCIES**

UAE இல் உலக புகழ்பெற்ற பிராண்ட்கள் முன்னணி விநியோகஸ்தராக இருக்கும் இக் கம்பனி, 1961 இல் தொடங்கி இப்போது 100 பிராண்ட்களுக்கும் மேல் பகிர்ந்தளிக்கின்றனர்......

Dettol HARPIC KRAFT Colgate Herbal AIR WICK Anchor

(f/628)

### உதவியாளர்கள் (HELPERS)

சம்பளம் - 600Dhs
கொடுப்பனவு - 900Dhs
(உணவு Dhs200 + இருப்பிடம் Dhs700)
TOTAL1500 Dhs = (ரூபாய் 52500/=)

- ■ 2 வருட ஒப்பந்தம்
- ■ மருத்துவ வசதி, போக்குவரத்து இலவசம்
- ■ உணவு கொடுப்பனவு Dhs200 மற்றும் தங்குமிட கொடுப்பனவு Dhs700
- ■ வேலை நேரம் நாளொன்றுக்கு 8 மணி நேரம் கிழமைக்கு 1 நாள் விடுமுறை
- ■ வேலை சேர்வதற்கு மற்றும் நாடு திரும்புவதற்கான இலவச விமான டிக்கட்
- ■ ஏனைய நிபந்தனைகள் ஐக்கிய அரபு இராச்சியத்தின் தொழிலாளர் சட்ட திட்டங்களுக்கு அமைவானது

Govt. Approved charges Only Rs.25000

AppNo.AL/2134/Advt/7/12

நேர்முக பரீட்சை 11th June 2012 அன்று வெளிநாட்டு முகவர்களால் நடாத்தப்படும்.
வடமாகாண விண்ணப்பதாரர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்

**Colombo ManPower Company**
Labor Licence No. 2134
51 1/1 D.S.Senanayake Mawatha, Borella, Colombo 8.
(OPPOSITE YMBA)
Tel : 0117632115/ 0773535158 / 0773660665
Email: jobs@colombomanpower.com

COLOMBO MANPOWER

FLEX Graphic

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கண்ணீர் அஞ்சலி



கள்ளித்தெரு, தங்கோடை, காரைநகரை பிறப்பிடமாகவும் கந்தரோடை, சுன்னாகத்தை வசிப்பிடமாகவும் கொண்ட

## பரமசிவம்பிள்ளை செல்வராணி

அன்புக்கு ஓர் இலக்கணமாய்
பண்புக்கு ஓர் உதாரணமாய்
பாசத்திற்கு ஓர் ஒளிச்சுடராய்
நற்குணங்களில் சிகரமாய்
நல்லதொரு குடும்பத்தலைவியாய்
இறைபக்தியிலும் சிறந்து விளங்கிய எமது
செல்வராணியை இறைவன் வெகு விரைவில்
அழைத்திட நினைத்தது ஏனோ !

ஆத்மா சாந்தி அடைய இறைவனை பிரார்த்திக்கின்றோம்.
ஓம் சாந்தி....சாந்தி....சாந்தி

மணற்பிட்டி,
காரைநகர். (18923)(6-7-8)

சகோதரர்கள்
தில்லைநாதன், தேவராஜா,
புஸ்பராஜா, மச்சாள்மார்கள்,
மருமக்கள்மார்கள்.

## புதிய நெறியாளர் குழு

யாழ்ப்பாணம், ஜூன் 3

வடபிராந்திய பாரவூர்த்தி உரிமையாளர் கூட்டுறவுச் சங்கத்துக்கு புதிய நெறியாளர் குழு நேற்றுமுன்தினம் கிளிநொச்சி மாவட்ட கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளரினால் நியமிக்கப்பட்டுள்ளதாக வடபிராந்திய பாரஊர்த்தி கூட்டுறவுச் சங்கத்தினர் அறிவித்துள்ளனர். (16)

## மகா கும்பாபிஷேகம்

யாழ்ப்பாணம், ஜூன் 3

யாழ்ப்பாணம்-கோண்டாவில் அருள்மிகு ஸ்ரீவல்லிபுரநாதர் தேவஸ்தான திரிதள, பஞ்சகலச பஞ்சகுண்ட நூதன இராஜகோபுர பிரதிஷ்டா மஹா கும்பாபிஷேகம் நாளை காலை 7.45 மணி முதல் 8.45 மணி வரை நடைபெறவுள்ளது.

இதில்எண்ணெய்க் காப்பு இன்று காலை 9 மணிமுதல் 5 மணி வரைநடைபெறவுள்ளது.


### விற்பனைக்கு

12 அடி நீளம் 1½ அடி அகலத்தில் கவுண்டர் மேசை 2, 12 அடி நீளம், 8 அடி உயரம் அலுமினியபிறேம் கண்ணாடியுடன் றாக்கை 3 விற்பனைக்கு உண்டு
தொடர்பு : 075 0407934
(18888)(6-9-8)

### உதயன் விளம்பரத் தொடர்புக்கு
advt@uthayan.com
0215671111

### முகவர் கணனி நிறுவனங்கள் தேவை

ஏற்கனவே கணினி பயிற்றுவிக்கும் நிறுவனங்கள் அல்லது புதிதாக கணனி மையங்கள் ஆரம்பிப்பவர்களும் விண்ணப்பிக்கலாம்.
சர்வதேச தரத்திலான கணனி பாடநெறிகளையும், சான்றிதல்களையும் பெற இன்றே இணைந்திடுங்கள்.
இந்தியா, சிங்கப்பூர், மத்திய கிழக்கு மற்றும் தென்அமெரிக்க நாடுகளில் 600 க்கு மேற்பட்ட கிளைகளைக் கொண்ட,

G- TEC Computer Education
152/1B, Sea Street, Negombo.
Phone - 071-4860222 / 031-2227022 www. gteceducation.com

Gama Abacus Academy - India வின் அபாக்கஸ் பயிற்சி மையங்களை மேற்கொள்ளவிரும்புவோர் உடனடியாக தொடர்பு கொள்ளவும்.
Abacus Training , Mental Arithmetic, Memory Technique.
பயிற்சியின் மூலம் உங்கள் குழந்தைகளை கணித மேதையாக்குங்கள்.
தொடர்புகளுக்கு : 0714860222 http://www.gamaabacus.com/
(சி/18883)

### விசேட சலுகை...! இன்றே இணையுங்கள்
பிரிவு- 02 ஆரம்பம் 06.06.2012
APTECH COMPUTER EDUCATION INDIA

VIDYA
- Operating System
- CPU Architecture
- MS Office
- Internet & email
- Create Web Pages

கணனிக்கற்கை நெறியில் இணைபவர்களுக்கு ஆங்கில அல்லது சிங்கள வகுப்பு இலவசம்

APTECH Computer Eduation, INDIA - Jaffna Branch
Mind Vishion College of International Studies ( Pvt.) Ltd.
(Reg No: PV 85546)
No.04, Clock Tower Lane, Navalar Road, Jaffna 0212219456

### விற்பனைக்கு (கிறேன்) பாரம் தூக்கி

யாழ்ப்பாணம், ஆனைப்பந்தியில் லொறி, பஸ் போன்ற வாகனங்களின் செசியில் இருந்து எஞ்சினை கீழே இறக்குவதற்கும், பின்பு செசியில் ஏற்றுவதற்கும் உரியது. இங்கிலாந்தில் செய்யப்பட்டது.
தொடர்புகளுக்கு: 021-7200467 (C632)

### மணமகள் தேவை

யாழ். இந்து கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த 39 வயது, ரேவதி 4, லண்டன் குடியுரிமை பாவம் குறைவு இவருக்கு இதே குலத்தில் மணமகள் தேவை. தொடர்பு : 077 4055507
(சி/630)(6-7-8)

### மணமகள் தேவை

யாழ் உயர் கௌரவ குடும்பத்தில் 1978 ஆம் ஆண்டு ஆயிலிய நட்சத்திரத்தில் பாவம் குறைந்த BSC பட்டதாரி ஆசிரிய மண மகனுக்கு மணமகள் ஆசிரியை அல்லது அரச உத்தியோகத்தர் விரும்பத்தக்கது.
(18887) தொடர்பு: 0750428073

### காணி விற்பனைக்கு

இணுவில் புகையிரத நிலையத்திற்கு முன்பாகவும் இராமநாதன் நுண்கலை பீடத்திற்கு அருகில் உள்ள 7 பரப்புக் காணி விற்பனைக்கு உண்டு
தொடர்புகளுக்கு: 0774734953 (18930)

### கார் விற்பனைக்கு

Dr பயன்பாட்டிலுள்ள Toyota Vitz 2007 2 air bag Silver Colour கார் விற்பனைக்குண்டு (3M)
தொடர்புகளுக்கு:
0778448310 / 0778905446 (18925)

### Study in Lithuania

Visa Valid to travel Europe countries

Dear Student's
Lithuania College, one of the oldest academic institutions in Lithuania, Offers the following accredited programs of Study.

1. Administration of institutions & Enterprises
2. Applied Informatics
3. Business Management
4. Economics
5. Recreation & Tourism Management
6. Trade management
7. Constructions Business Management
8. Law
9. Accounting

intake June - July 2012

- Deadline for immigration - June 30th 2012
- Visa is Guaranteed
- Required qualifications - G.C.E. O/L Or G.C.E. A/L
- English 50% or IELTS
- Part time jobs after six months
- Pickup & Accommodation Services provided by our client in Lithuania

For Further details & Consultation contact:
Sai Int'l Consultant Services
109/25, Gorakagaha Road, Borella, Colombo 08.
Tel : 0112 683005, 0725 687003
e-mail : info@saiconsultant.lk
www.saiconsultant.lk
(சி/619)

### இந்திய சாஸ்திரியார் வருகை

யாழ்ப்பாணப் புண்ணிய பூமிக்கு மீண்டும் வருகை தந்துள்ளார்
ஓம் சக்தி அருள் வாக்கு பெற்ற பரம்பரை ஜோதிடர்
S.N. குமாரசாமி

கைரேகை, ஜாதகம், எண்கணிதம் மற்றும் திருமணத்தடை, கல்வித்தடையா, குழந்தை பாக்கியம் மற்றும் புதிய தொழில் தொடங்க வேண்டுமா? தொழில் முன்னேற்றம் இல்லையா நேரில் சந்திக்கவும்.
(காலை 9 மணி முதல் மாலை 5 மணிவரை) செவ்வாய் விடுமுறை
பீப்பிள்ஸ் இன் (PEOPLE INN)
இல.112/1, மானிப்பாய் வீதி, யாழ்ப்பாணம்.
(பிள்ளையார் ஹோட்டல் முன்பாக)
T.P: 072 6816681, 0726816691
(18927) (6,7,10)

### சேவிஸ் ஸ்டேஷன்

பைக் லிப்ட் ஓட்டோ லிப்ட்
(Car, Lorry Lift)
கொம்பிரஷர் ( Air Compressor)
கிரிஸ் பம்ப் வெக்கும் கிளினர்ஸ்
(Vaccum Cleaners)
நீர் உயர் அழுத்திப்பம்புகள்
(High Press Pumps)

காட்சியறை:
CARTEC TRADING (P) LTD,
94, 4ஆம் குறுக்குத் தெரு, யாழ்ப்பாணம்
தொடர்பு : 077 6872656, 072 1260760
(18929)(6-7-8)

### பதவி வெற்றிடம் (முகாமையாளர் - காப்புறுதி)

பின்லேஸ் இன்சூரன்ஸ் புரோக்கர் (பிறை) லிமிட்டெட் கம்பனி விரைவில் யாழ்ப்பாணத்தில் அதன் கிளையொன்றைத் திறப்பதற்கு உத்தேசித்துள்ளதால் அதன் முகாமையாளராக சேவையாற்றுவதற்கு ஆளுமையும் அனுபவமும் மிக்க ஒருவரை நியமிப்பதற்குத் தீர்மானித்துள்ளது.

#### தகைமைகள்

- ஆரம்பத்தில் யாழ்ப்பாணக் கிளையை ஆரம்பித்து அதன் பின்னர் அதன் முகாமையாளராகத் தலைமை ஏற்று நடாத்துவதற்கான ஆற்றல்.
- காப்புறுதி அல்லது வங்கித்தொழிலில் அனுபவம். ஓய்வுபெற்றவர்களும் கவனத்தில் கொள்ளப்படுவர்.
- யாழ்ப்பாணத்தை வதிவிடமாகக் கொண்ட தமிழில் உரையாற்றும் ஆற்றல் உள்ளவர்.
- காப்புறுதித் துறையில் அனுபவம் இருத்தல் கட்டாயமல்ல. எனினும் அது அனுகூலமானதாக இருக்கும்.
- காப்புறுதி வணிகத்தில் வளமிடுவதற்கான (Sourcing) ஆற்றலைக் கொண்டிருத்தல் வேண்டும்.

தெரிவு செய்யப்படும் விண்ணப்பதாரிக்கு பேசித் தீர்க்கப்படும் சம்பளத்தை உள்ளடக்கிய கவர்ச்சிகரமான ஊதியங்களுடன் ஏனைய நன்மைகளும் PERQUISITE வழங்கப்படும்.

கனிஷ்ட நிறைவேற்றுப் பதவியினர் Junior Executive, காப்புறுதி எழுதுவினைஞர் மற்றும் Data Entry Operators ஆகிய பதவிகளுக்கான வெற்றிடங்கள் கம்பனி அதன் கொழும்பு, கண்டி, கட்டுநாயக்க மற்றும் யாழ்ப்பாணக் கிளைகளில் மேலே சொல்லப்பட்ட பதவிகளுக்கான விண்ணப்பங்களையும் கோருகின்றது. தேர்ந்தெடுக்கப்படும் இளைஞர்களுக்கு மேலே சொல்லப்பட்ட நுழைவு மட்ட பதவிகளில் தேர்ச்சி பெறுவதற்கான கம்பனி அவர்களைத் தேர்ந்தெடுத்து பயிற்சியளிக்கும்.

#### தகைமைகள்

- ஆகக்குறைந்தது க.பொ.த (உ/த) பரீட்சையில் மூன்று சித்திகளைக் கொண்டுள்ள பாடசாலையை விட்டு விலகியோர்.
- சிறந்த தகவல் தொழில்நுட்பத் தேர்ச்சிகளும் ஆங்கிலத்தில் பணிகளை மேற்கொள்வதற்கான ஆற்றலும்.
- 23 வயதுக்குக் குறைந்தவர்களாக இருத்தல் வேண்டும்.
- காப்புறுதி உயர் தொழில் துறையில் கற்பதற்கு ஆர்வம் உள்ளவர்களாக இருத்தல் வேண்டும்.

விண்ணப்பங்கள் விண்ணப்பிக்கும் பதவியை தலைப்பிட்டு positions@finlays.lk என்னும் மின்னஞ்சல் முகவரிக்கு விண்ணப்பங்களை அனுப்புதல் விரும்பத்தக்கது. இன்றேல், உங்கள் விண்ணப்பங்களை சான்றிதழ்களின் பிரதிகள், இரண்டு உறவினர் அல்லாத Referees களின் பெயர்கள் ஆகியவற்றுடன் இவ்விளம்பரம் பிரசுரிக்கப்படும் நாளிலிருந்து 10 நாட்களுக்குள் எமக்குக் கிடைக்கக்கூடியதாக தபால் மூலம் அனுப்பி வைக்கலாம். விண்ணப்பத்தைக் கொண்டுள்ள கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் தாங்கள் விண்ணப்பிக்கும் பதவியைக் குறிப்பிட்டு பின்வரும் முகவரிக்கு அனுப்பி வைக்கவும்.

HEAD OF HUMAN RESOURCE DEVELOPMENT
Finlays Colombo PlC
186, Vauxhall Street, Colombo 02.
www.finlays.lk
(சி/634)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மணமக்கள் தேவை

யாழ். இந்து வேளாள குடும்பம் கனடாவில் குடியுரிமையுள்ள 1973 விசாகம், 1982 சதயம்
M.Sc சொப்வெயார் இஞ்சினியருக்கு மணமகளும், 1982 விசாகம் ஜேர்மன் டொக்டர், 1984 அத்தம் ஆஸ்திரேலியா இஞ்சினியருக்கும் M.Sc. மணமகளும் தேவை.
(கொழும்பு வரன் விவரங்கள்)
கிளைகள்: யாழ்ப்பாணம் - கிளிநொச்சி
077 1307 185 - 077 8501 013
வவுனியா: 077 6184 434 - மட்டக்களப்பு - 077 8501 013
(18656) (45.6.7)

## CABS SERVICE (TAXI)

வாடிக்கையாளர் நலன் கருதி புதிய ரக Nano Car ரை சேவையில் ஈடுபடுத்துகின்றோம். பாதுகாப்பாகவும், சொகுசாகவும், குளிரூட்டப்பட்ட Nano Car இல் பயணித்திட இன்றே அழையுங்கள். 1km க்கு45 ரூபா மட்டுமே.
தரிப்பிடம்:- கண்டுக்குழி
Mobile No:
0775998255 / 0775541668
(18920) (6,7,10)

சாதாரண Auto கட்டணம் என்பதை வாடிக்கையாளருக்கு அறியத்தருகின்றேன்

## Study in GEORGIA

Transfer option available to Shenegen Countries Universities and Colleges

- Bachelor Degree in Nursing (BSN) - 4 years
- Bachelor of Business Administration (BBA) - 4 years
- Master of Business Administration (MBA) - 2 years
- Hospitality Management Certificate Program (HM) - 6 months
- Medicine (MD) - 6 years

Required Qualification - G.C.E. (O/L)

NO Need IELTS
Interview
Need Bank balance

Admission available

Fees: After completion of VISA
Further details contact
**Sai Int'l Consultant Services**
109/25, Gorakagaha Road, Borella, Colombo 08.
Tel : 0112 683005, 0725 687003
Email : info@saiconsultant.lk Web : www.saiconsultant.lk

## விற்பனைக்கு

CG 125 மோட்டார் சைக்கிள் ஒறிஜினல் தரத்தில் விற்பனைக் குண்டு.
தொடர்புக்கு:
0750432800
(சி/410)(2-6-7)

## தவறிவிட்டது

தட்டாதெருச் சந்திக்கும் பிள்ளையார் கோயிலுக்குமிடையில் தங்கச் சங்கிலி தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் கீழ்வரும் தொ.பே. இலக்கத்துடன் தொடர்பு கொள்ளவும். தகுந்த சன்மானம் வழங்கப்படும்.
தொடர்புகளுக்கு: 2230370, 0779672780
(18896)(2-6-7)

## விற்பனைக்கு

புதிய இருப்பிலான 5 தூண் அரியும் பெட்டி விற்பனைக்கு உண்டு. உயரம் 7 அடி. (வேலிக்குத் தூண் அரியும் பெட்டி)
தொடர்புகளுக்கு:
0750432800 (சி/409)(2-6-7)


## காரைநகர் இந்துக் கல்லூரி
### பழைய மாணவர் சங்கக் கொழும்புக் கிளையின் புதிய நிர்வாக சபையினர்

யா /கலாநிதி ஆ. தியாகராசா மத்திய மகா வித்தியாலயத்தினது (Karainagar Hindu College ) பழைய மாணவர் சங்கக் கொழும்புக் கிளையின் ஆண்டுக் கூட்டம் மே மாதம் 20.05.2012 ஞாயிற்றுக்கிழமை மாலை இராமகிருஷ்ண மிஷன் விரிவுரை மண்டபத்தில் நடைபெற்றது. குறித்த சங்கக் கிளையினது ஆண்டுக் கூட்டத்தில் 2012/13ஆம் ஆண்டுக்கான நிர்வாக சபை பதவிவழி உத்தியோகத்தர்களாகவும் மற்றும் அங்கத்தவர்களாகவும் சபையினரால் பின்வருவோர் ஏகமனதாகத் தெரிவு செய்யப்பட்டுள்ளனர். தலைவர்: திரு. க. ஜெகதீசன், உபதலைவர்கள்: திருவாளர்கள். சி. நேசேந்திரன், க. அம்பலவாணர், செயலாளர்: திரு.தி.மார்க்கண்டு, உபசெயலாளர்: திரு. சி. கணேசன், பொருளாளர்: வைத்திய கலாநிதி. ஆ சிவசோதி, உபபொருளாளர்: நா. கணநாதன் மற்றும் அங்கத்தவர்களாக: திருவாளர்கள். கு. இராசையா, க .சிவசுப்பிரமணியம், ஆ. முருகேசு, மு.கனகலிங்கம், நா. சபாநாதன், சு. நிமலேஸ்வரன், செ. இராஜசிங்கம், சு. குலசேகரம். கணக்குப் பரிசோதகர்: திரு. ப. விக்னேஸ்வரன்

## மரண அறிவித்தல்
### திருமதி சரஸ்வதி சிதம்பரப்பிள்ளை



தென்புலோலியூர் குடக்கம்பரையைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி சரஸ்வதி சிதம்பரப் பிள்ளை கடந்த (31.05.2012) வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற டாக்டர் சிதம் பரப் பிள்ளையின் அன்பு மனைவியும், காலஞ் சென்றவர்களான பாக்கியம், இராச மாணிக்கம், இராசம்மா ஆகியோரின் சகோதரியும், தங்கமலர், தங்கராணி, தங்கராஜா, காலஞ்சென்றவர்களான தங்கத்துரை, தங்கயோகன் மற்றும் நவமணி, தங்கரத்தினம், தங்கேஸ்வரி, தங்கேஸ்வரன் ஆகியோரின் பாசமுள்ள தாயும், காலஞ்சென்ற கார்மேக ராஜேந்திரம் மற்றும் நாகநாதன், சிவனேஸ்வரி, குகனொளிபவ, நந்தகுமார், மீனகுமார் ஆகியோரின் மாமியும், கேசவ ஆழ்வார், தெய்வஞானி, தேனுமதி, நாவேந்தன், ஹேமட்குமார், மணிமேகலா, மணிவண்ணன், மாதுமை, குருபரன், காயத்திரி, சோபியா, அகல்யா, தனுஸ்கா, அனுஜா, ஆரணி ஆகியோரின் பேர்த்தியும், அகல்யா, அரண், அரவிந்தன், மீரா, மிலோஸ், அபிராமி, பைரவி, சங்கவி ஆகியோரின் பாசமுள்ள பூட்டியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (04.06.2012) திங்கட்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக முற்பகல் 9 மணியளவில் ஆனைவிழுந்தான் இந்து மாயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

குடக்கம்பரை,
தென்புலோலி. (18924)(45.6.7)

தகவல்:
குடும்பத்தினர்.

## மரண அறிவித்தல்
### விவேகானந்தன் கமலரேகா



திக்கம், அல்வாய் மேற்கை வசிப்பிடமாகக் கொண்ட விவேகானந்தன் கமலரேகா நேற்று (02.06.2012) சனிக்கிழமை இறைவனடி சேர்ந்துள்ளார்.

அன்னார் காலஞ்சென்ற ஆறுமுகம் - சின்னாச்சிபிள்ளை தம்பதியரின் கனிஷ்ட புதல்வியும் காலஞ்சென்ற விவேகானந்தன் (நடத்துநர்) அவர்களின் அன்புமனைவியும், சசிரேகா (முகாமைத்துவ உதவியாளர், நீர்ப் பாசன திணைக்களம் வவுனியா), நிரஞ்சினி (முகாமைத்துவ உதவியாளர் கட்டடங்கள் திணைக்களம் - கிளிநொச்சி), முகுந்தராஜ் (பொறியியலாளர் - சிங்கப்பூர்) ஆகியோரின் அன்புத்தாயும், நந்தகுமார் (படவரைஞர், நீர்ப்பாசனத் திணைக்களம், மட்டக்களப்பு) அவர்களின் மாமியும், அக்ஷேத்திரா, அத்வைதா ஆகியோரின் அம்மம்மாவும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (03.06.2012) ஞாயிற்றுக் கிழமை பி.ப. 3 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக திக்கம் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், அயலவர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

அருந்தியாவளவு,
அல்வாய் மேற்கு, திக்கம் (16872)(6-7-8)

தகவல்:
குடும்பத்தினர்

# மரண அறிவித்தல்



## ஆறுமுகசாமி விக்னேஷ்வரன்

(செல்வன் - அண்ணாச்சி-Swiss)

வல்வெட்டித்துறை, ஊரிக்காட்டை பிறப்பிடமாகவும் சுவிற்சர்லாந்தை நிரந்தர வதிவிடமாகவும் தற்போது 173, வாசல வீதி, கொட்டாஞ்சேனை, கொழும்பு-13இல் வசித்த ஆறுமுகசாமி விக்னேஷ்வரன் (செல்வன் - அண்ணாச்சி-Swiss) நேற்று (02.06.2012) சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான ஆறுமுகசாமி - பங்கேற்செல்வி (தவம்) தம்பதியரின் அன்பு மகனும், பாலசுப்பிரமணியம் (ராசா- அன்னை முத்துமாரி டிரவல்ஸ்), வரதன் (சுவிஸ்), தவராசா, தனவதி ஆகியோரின் அன்புச் சகோதரனும், Dr.முரளி (களுபோவில ஆதார வைத்தியசாலை), கஸ்தூரி (சுவிஸ்) ஆகியோரின் மைத்துனரும்,விஸ்னுசரனின் மாமனும், விதார்த்தின் (சுவிஸ்), பெரியப்பாவும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (03.06.2012) ஞாயிற்றுக்கிழமை பி.ப 3.00 மணிக்கு 173, வாசல வீதி, கொட்டாஞ்சேனையில் உள்ள அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக மாதம்பிட்டிய இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

173, வாசல வீதி,
கொட்டாஞ்சேனை,
கொழும்பு - 13
(C/423) (6.10)

தகவல் :
பாலசுப்பிரமணியம் (ராசா)
(அன்னை முத்துமாரி டிரவல்ஸ்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



யாழ்ப்பாணத்தில் முதல் தடவையாக கொரியர் விரைவு தபால் சேவை நேற்று முன்தினம் வெள்ளிக் கிழமை ஆரம்பித்து வைக்கப்பட்டது. வடமாகாண தபால்மா அதிபர் என்.ரட்ணசிங்கம் மங்கள விளக்கேற்றுகிறார். சேவைக்குத் தயாராகும் தபால் ஊழியர்களும் உள்ளனர். [ம-7]



வடக்கு மாகாண கிராம அபிவிருத்தி திணைக்களத்தின் அனுசரணையுடன் வலி.கிழக்கு பிரதேச செயலக மகளிர் அபிவிருத்தி நிலையம் நடத்திய தையல், மனையியல், அழகியல் கண்காட்சியை யாழ்.மாவட்ட கிராம அபிவிருத்தி அலுவர் திருமதி நவமணி ஜெயராசா பிரதேச விருந்தினராகக் கலந்துகொண்டு நாடா வெட்டித் திறந்து வைத்தார். [ம-11]





காரைநகர் வலந்தலை தெற்கு அ.மி.த.க. பாடசாலையின் விளையாட்டுப் போட்டி நிகழ்வில் விருந்தினர்கள் பாண்ட் இசையுடன் வரவேற்கப்படுகின்றனர். வடமாகாண கல்விப் பணிப்பாளர் ப.விக்னேஸ்வரன் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு வெற்றிபெற்ற மாணவர்களுக்கு பரிசில் வழங்குகிறார். [ம-250]



சர்வதேச புகைத்தல் எதிர்ப்பு தினத்தை முன்னிட்டு யாழ்.பிரதேச செயலக சமுர்த்தி மகா சங்கம் நடத்திய நிகழ்வில் சிகரெட் மாதிரிகளைத் தீயிட்டு அழித்து விழிப்புணர்வை யாழ்.பிரதேச செயலர் திருமதி சுகுணாவதி தெற்வேந்திரம் ஆரம்பித்து வைத்தார். [ம-23]




கோண்டாவில் பொது நூலகத்தின் ஏற்பாட்டில் இடம்பெற்ற நூலக வலுவூட்டல் நிகழ்வு நல்லூர் பிரதேச சபைத் தலைவர் ப.வசந்தகுமார் தலைமையில் நடைபெற்றது. இதில் பிரதம விருந்தினராக யாழ்.பல்கலைக்கழக சிரேஷ்ட உதவி நூலகர்கள் எஸ்.கேதீஸ்வரன், நல்லூர் பிரதேச சபை உறுப்பினர் சு.சுரேஸ்குமார் ஆகியோர் விருந்தினர்களாகக் கலந்துகொண்டனர். [ம-14]



மானிப்பாய் பொலிஸ் பிரிவில் குற்றத் தடுப்பு பொலிஸ் அதிபராகக் கடமையாற்றிய கி.சந்திரபாலா இடமாற்றம் பெற்றதையடுத்து நவாலி வடக்கு சனசமூக நிலையம் நடத்திய பிரியாவிடை நிகழ்வில் வலி.தென் மேற்கு பிரதேச சபை உறுப்பினர் கௌரிகாந்தன், மருத்துவர் சுந்தரராஜன் ஆகியோர் பொன்னாடை போர்த்திக் கௌரவித்தனர். [ம-100]



வலி.வடக்கு பிரதேச சபையின் நூலக வலுவூட்டல் வாரத்தை முன்னிட்டு நூலகக் கண்காட்சி இடம்பெற்றது. இதில் 'முப்பரிமாண நூலகத்தினை' தெல்லிப்பழை சுகாதார வைத்திய அதிகாரி நந்தகுமார் திறந்து வைக்கிறார். அருகில் வலி.வடக்கு பிரதேச சபையின் தலைவர் சோ.சுகிர்தனும் உள்ளார். [ம-5]



[illegible] றோ.க.த.க.பாடசாலையில் மாணவர் தலைவர்களுக்கான சின்னம் சூட்டும் நிகழ்வில் மாணவத் தலைவர் ஒருவருக்கு பாடசாலை அதிபர் கனகலிங்கம் சின்னம் சூட்டுகிறார். [ம]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வாடகைக்கு

இல.146, சிவப்பிரகாசம் வீதி, வண்ணார்பண்ணை, யாழ்ப்பாணத்தில் (K.K.S. வீதிக்கு மிக அருகில்) கீழ் மேல் வீடு வாடகைக்குண்டு.
தொடர்பு:- 0775361370, 0771526874
(18917) (2-6-7)

## வாடகைக்கு விடப்படும்

வீடு மற்றும் Rooms வாடகைக்குக் கொடுக்கப்படும். பரமேஸ்வரா சந்திக்கு அருகில்.
T.P.0771304944
(18902) (2-6-7)

## காணி விற்பனைக்கு

பருத்தித்துறை தும்பளை கணக்கிலா வத்தைப் பகுதியில் அமைந்துள்ள 15 பரப்புடைய காணி நன்னீர் கிணற்றுடன் விற்பனைக்குண்டு. பண்ணை வீடு அமைப்பதற்கு உகந்தது. (தரகர் தேவையில்லை)
(சி/403)(6-7-8) தொடர்பு : 077 4355752


# கட்டுநாயக்கா விமான நிலையத்தில் கணினிகள் செயலிழந்தன

கொழும்பு, ஜூன் 3

கட்டுநாயக்கா சர்வதேச விமான நிலையத்தில் உள்ள குடிவரவு குடியகல்வுத் திணைக்களத்தின் கணினி வலையமைப்பு நேற்றுப் பிற்பகல் திடீரெனச் செயலிழந்து போனதால், பயணிகளின் உள்வரவு, வெளிச்செல்லல் நடவடிக்கைகள் நிறுத்தப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது

நேற்றுப் பிற்பகல் 3 மணி தொடக்கம் மாலை 5 மணி வரை கணினிகள் செயலிழந்து இருந்ததாகவும் இதனால் விமான நிலையத்தில் பெருமளவு பயணிகள் காத்திருக்க வேண்டி ஏற்பட்டதாகவும் தெரிவிக்கப்பட்டது. எனினும் 5 மணிக்குப் பிறகு நிலைமைகள் சீர் செய்யப்பட்டு பயண ஒழுங்குகள் தொடர்ந்து மேற்கொள்ளப்பட்டதாக அங்கிருந்து கிடைத்த செய்தி ஒன்று தெரிவித்தது.

இதேவேளை தாய்லாந்துக்கு பயணம் மேற்கொண்டிருந்த இலங்கை ஜனாதிபதி நேற்று இரவு 8.30 மணிக்கு கட்டுநாயக்கா விமான நிலையத்தை வந்தடைந்தார் எனவும் தெரிவிக்கப்பட்டது.(10)

# கண்ணீர் அஞ்சலி



## வீரசிங்கம் ஜெகதீஸ்வரன்

(ஆசிரியர்/யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி)

02.06.2012 அன்று அகால மரணமடைந்த எமது கல்லூரி ஆசிரியரின் மறைவினால் துய ருற்றிருக்கும் அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரி வித்து கொள்வதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

ஆசிரியர் வட்டம்
யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி,
யாழ்ப்பாணம்

(18939)(6-8)

# கண்ணீர் அஞ்சலி



## திருமதி மஞ்சுளா உதயகுமார்

(லிகிதர்- ஸ்ரீதுர்க்காதேவி தேவஸ்தானம்)

ஸ்ரீ துர்க்கா தேவி தேவஸ்தானத்தால் நிர்வகிக்கப்படும் துர்க்காபுரம் மகளிர் இல்லத்தில் வளர்ந்து ஸ்ரீ துர்க்கா தேவி தேவஸ்தானத்தில் லிகிதராகப் பணி புரிந்து 31.05.2012 அன்று இயற்கை அடைந்த

திருமதி மஞ்சுளா உதயகுமார்

அவர்களின் மறைவையிட்டு துயரடைவதுடன் அன்னாரின் பிரிவால் துயருறும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

40, நவீன சந்தை,
(உட்புறம்), யாழ்ப்பாணம்.

மகா சில்க்ஸ், பியூட்டி சில்க்ஸ்
கவுஸ் ஒவ் செலக்ஷன்

# மரண அறிவித்தல்

## வன்னித்தம்பி நடராசா



கோப்பாய் தெற்கைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட வன்னித்தம்பி நடராசா (ஓய்வு பெற்ற பதவி நிலை உத்தியோகத்தர் Tele Com, யாழ்ப்பாணம்) (01.06.2012) வெள்ளிக்கிழமை அன்று இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான வன்னித்தம்பி - மீனாட்சி தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான பெரியதம்பி - சின்னத்தங்கம் தம்பதியரின் அன்பு மருமகனும், காலஞ்சென்ற கனகம்மாவின் அன்புக் கணவரும், சத்தியசீலன் (ஓய்வுபெற்ற தபாலதிபர், சங்கானை), சற்குணபூபதி, பாலசிங்கம் (சாயிராமா ரெக்ஸ்டைல், இருபாலை), சர்வேஸ்வரன் (கனடா) ஆகியோரின் அன்புத் தந்தையும் வேலாயுதப் பிள்ளை (ஓய்வு பெற்ற ஆசிரியர்), தயாநிதிதேவி (ஓய்வுபெற்ற ஆசிரியை), பாலசரோஜா (ஆசிரிய ஆலோசகர், யாழ்.கல்வி வலயம்), சாந்தி (கனடா) ஆகியோரின் அன்பு மாம னும், கலைச்செல்வி (வைத்திய கலாநிதி), சுவித்தா (பொறியிய லாளர்), சுதர்சினி, கிருசாயி, கஜானன், சிவஆரணி, சிரோமி, பகான் ஆகியோரின் பேரனும், கந்தையாவின் அன்புச் சகோதரரும் அஸ்வினின் பூட்டனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (04.06.2012) திங்கட்கிழமை மு.ப 11 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக இருபாலை இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
சத்தியசீலன்
(மகன்)

பகவான் பாதை,
கோப்பாய் தெற்கு, கோப்பாய். (18937)(6.10)

## யாழ். மாவட்ட விளையாட்டு விழா

யாழ். மாவட்ட பிரதேச செயலகங்களுக்கிடையிலான விளையாட்டு விழா இன்றுபி.ப2மணிக்கு துரையப்பா விளையாட்டரங்கில் , யாழ். மாவட்ட மேலதிக அரச அதிபர் திருமதி ரூபினி வரதலிங்கம் தலைமையில் இடம் பெறவுள்ளது. இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ். மாவட்ட அரச அதிபர் சுந்தரம் அருமைநாயகம் கலந்து கொள்ளவுள்ளார்.(5)


## வலி. கிழக்கில் புதிய உதயம்



இல்லத்தரசிகள், குடும்பத் தலைவர்களுக்கு மகிழ்ச்சிகரமான நற்செய்தி

நீர்வேலியில் சர்ஜிகா பூட் சிற்றி

உங்கள் வீட்டில் நடைபெறும் அனைத்து நிகழ்வுகளிற்கும் தேவையான மளிகைப் பொருள்கள் மற்றும் ஏனைய பொருள்கள் ஓடருக்கு மலிவு விலையில் நேரில் கொண்டு வந்து விநியோகிக்கப்படும்.



ஒரு முறை விஜயம் செய்து பாருங்கள்

**Sargiha Food City**
சர்ஜிகா பூட் சிற்றி
குறுக்கு வீதி, நீர்வேலி



முக்கிய குறிப்பு: 5500 /= ற்கு மேல் கொள்வனவு செய்யும் வாடிக்கையாளருக்கு குலுக்கல் அடிப்படையில் பெறுமதி மிக்க பரிசில்கள் வழங்கப்படும். தெரிவு செய்யப்படும் வாடிக்கையாளர் பத்திரிகை மூலம் அறிவிக்கப்படுவார்.
தொலைபேசி இல. 021-7903726, 071-3896361
(C418) (6,7,10)


# முதலாம் ஆண்டு நினைவு



அன்னை மடியில்
27*06*1983

அரணடியில்
16*05*2011

அமரர்
## இரத்தினம் இதயராசா

திதி: 03.06.2012

கண்ணிமைக்கும் கணப்பொழுதில்
கடுகதியாய் வந்தானோ காலன்?
எண்ணி முடியுமுன் வந்ததையா ஓராண்டு!
குன்றா உழைப்பும், குறையா ஊக்கமும்
வற்றா அன்பும், வியக்கும் கடமையும்
நித்தமும் மலருதடா எம் மனதில்
மங்காத உன் நினைவுடன் என்றும் வாழ்வோம்.
சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

மானா வளவு,
கரணவாய் கிழக்கு,
கரவெட்டி.

குடும்பத்தினர்.

(C415) (6,10)


## வாடகைக்குத் தேவை

முழு அலுமினிய பொடியுடன் விநியோகத்திற்கு (Sale) கன்ரர் வாகனம் மாதாந்த வாடகைக்குத் தேவை
தொடர்புகளுக்கு: 0757599546
(18936)

## வாடகைக்கு



அலுமினியம் Body 10½ ISUZU சேல்ஸ் தேவைக்கு மிகவும் பொருத்தமான வாகனம் வாடகைக்கு உண்டு.
தொடர்புகளுக்கு:
0777361215 / 0779189464
(18889) (6,7,10)

## BIG OPPORTUNITY FOR JAFFNA

16 வருடகாலமாக பல கிளைகளைக் கொண்டு நடாத்தும் *Multinational Company.*

இலங்கையின் பிரதான கம்பனியுடன் இணைந்து யாழ் மண்ணில் ஆரம்பிக்கப்பட்டுள்ள புதிய கிளைக்கான பதவி வெற்றிடங்கள்.

- Supervisor
- Administrative
- Manager Traning

தகமை
O/L or A/L

பயிற்சியின்போது 10,000/- பின் 45,000/-
[illegible]
தொடர்பு : 0771 85 87 83


# 31 ஆம் நாள் நினைவஞ்சலி



## அமரர் செல்லப்பா நாகமணி

அன்புள்ள அப்பாவே!
கண் இமைபோன்ற காவலரே!
எங்கள் இதயங்கள் அழும் ஓசை
உறங்கிய உங்கள் செவிகளுக்கு கேட்டிடுதே!

கடந்த (04.05.2012) அன்று இறைபதமடைந்த எமது குடும்பத்தலைவர் செல்லப்பா நாகமணியின் ஆத்ம சாந்திப் பிரார்த்தனை இன்று (03.06.2012) ஞாயிற்றுக் கிழமை நண்பகல் 12 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெறுவதுடன் மதிய போசன நிகழ்விலும் கலந்துகொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

பூதர்மடம்,
கோப்பாய் வடக்கு, கோப்பாய்.

குடும்பத்தினர்

(18932) (45,6,7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வூஷ் தற்காப்புக் கலை நேற்று யாழில் அறிமுகம்

யாழ்ப்பாணம், ஜூன் 3

இலங்கை சீனத் தூதரகத்தின் அனுசரணையுடன் இலங்கை வூஷூ சம்மேளனத்தினால் வூஷூ தற்பாதுகாப்புக் கலையை அறிமுகம் செய்யும் நிகழ்வு நேற்று யாழ்.இந்துக் கல்லூரி, குமாரசாமி மண்டபத்தில் நடைபெற்றது.

சர்வதேச வூஷூ மத்தியஸ்தரும் இலங்கை வூஷூ சம்மேளனத்தின் செயலாளருமான கிபூ மாணல் தர்மகீர்த்தி தலைமையில் இந்த அறிமுக நிகழ்வு இடம்பெற்றது.

இந்த அறிமுக ஆரம்ப நிகழ்வுக்கு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் ஈ.சரவணபவன், யாழ்.இந்துக் கல்லூரி அதிபர் வி.கணேசராசா ஆகியோர் விருந்தினர்களாகக் கலந்து கொண்டனர்.

நேற்றுக் காலை 9 மணிக்கு ஆரம்பமான வூஷூ பயிற்சி முகாம் மாலை 5 மணிவரை இடம்பெற்றது.

இந்தப் பயிற்சி முகாமில் 90 இற்கும் மேற்பட்ட மாணவர்கள் கலந்துகொண்டனர். இவர்களுக்கான பயிற்சிகளை வூஷூ அணியின் பயிற்றுநர் குழாம் வழங்கியது.

இந்தப் பயிற்சி முகாம் இன்றும் நாளையும் காலை 9 மணி தொடக்கம் மாலை 5 மணிவரை இடம்பெறவுள்ளது. (த-7-23)



தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் ஈ.சரவணபவனும் இலங்கை வூஷூ சம்மேளனத்தின் செயலாளருமான கிபூ மாணல் தர்மகீர்த்தியும் மங்கள விளக்கேற்றும் போது...



வூஷூ தற்காப்புக் கலை அறிமுகத்தின் போது...



பயிற்றுநர் குழாம்



வூஷூ தற்காப்புக் கலை பயிற்சியின் போது மாணவர்கள்...

# மைலோ கிண்ணத்தை வென்றது பொன்னாலை வரதராஜப் பெருமாள்

வலி.வடக்கு, ஜூன் 3

பொன்னாலை வரதராஜப் பெருமாள் வித்தியாலயம் பலத்த போராட்டத்தின் பின்னர் மைலோ கிண்ணத்திற்கான யாழ். மாவட்ட வெற்றிக் கிண்ணத்தைத் தனதாக்கிக் கொண்டது.



யாழ்.மாவட்டப் பாடசாலைகளின் 14 வயதுப் பிரிவினர்களுக்கான மைலோ வெற்றிக் கிண்ணத்திற்கான வலைப்பந்தாட்டப் போட்டியின் இறுதி ஆட்டம் மல்லாகம் மகா வித்தியாலய மைதானத்தில் கடந்த வியாழக்கிழமை இடம் பெற்றது.

இறுதிப் போட்டியில் பொன்னாலை வரதராஜப் பெருமாள் வித்தியாலயமும் வடமராட்சி மெதடிஸ்த மகளிர் கல்லூரியும் மோதிக்கொண்டன.

இரு அணிகளும் சம நிலையில் காணப்பட்டாலும் பொன்னாலை வரதராஜப்பெருமாள் அணி தன் விடாமுயற்சியினால் எதிரணியை வெற்றி பெற விடாது விளையாடி முதல் பாதி ஆட்டத்தில் 7:6 புள்ளிகள் பெற்றது.

இரண்டாம் பாதி ஆட்டத்தில் இரு அணிகளும் பெரும் சோதனைகளுக்கு உள்ளாகிய போதிலும் இரு அணிகளும் புள்ளிகள் பெறுவதில் முனைப்புடன் செயல்பட்டன.

இரு அணிகளும் இரண்டாம் பாதி ஆட்டத்தில் தலா 3 புள்ளிகளைப் பெற்றும் சம நிலையில் இருந்த வேளை ஆட்டம் முடிவடைந்தது. ஆட்ட நிறைவில் பொன்னாலை வரதராஜப்பெருமாள் [illegible] வெற்றிபெற்றது. (த-86)

### பெண்களுக்கான ஹொக்கி வவுனியா தமிழ் ம.வியில்

வலிவடக்கு, ஜூன்3

வடமாகாண கல்வித் திணைக்களத்தினால் மாவட்ட மட்டத்தில் தெரிவு செய்யப்பட்ட பாடசாலை அணிகளுக்கு இடையேயான 19 வயதுப் பிரிவு பெண்களுக்கான ஹெக்கிப் போட்டிகள் எதிர்வரும் 09 ஆம், 10ஆம் திகதிகளில் வவுனியா தமிழ் மத்திய மகா வித்தியாலய மைதானத்தில் நடைபெறவுள்ளன.

இந்தப் போட்டிகளில் மோதவுள்ள அணிகளின் விவரம் வருமாறு

*மன்னார் புனித வளனார் றோமன் கத்தோலிக்க தமிழ் கலவன் பாடசாலை எதிர் வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி

*யாழ்ப்பாணம் கனகரத்தினம் மத்திய மகாவித்தியாலயம் எதிர் வவுனியா சுந்தரபுரம் சரஸ்வதி வித்தியாலயம்.

இரண்டாம் சுற்றில் இருந்து கடந்த ஆண்டில் முதல் இரண்டு இடங்களைப் பெற்ற உடுவில் மகளிர் கல்லூரியும் [illegible] அரசினர் [illegible] பாடசாலையும் மோதவுள்ளன. (த-86)

## இன்றைய ஆட்டங்கள்

கைதடி வளர்மதி சனசமூக நிலையத்தின் 53 ஆவது ஆண்டு நிறைவு விழாவை முன்னிட்டு கைதடி வளர்மதி விளையாட்டுக் கழகம் தென்மராட்சிக்குட்பட்ட விளையாட்டுக் கழகங்களுக்கிடையே நடத்தி வரும் மென்பந்து கிரிக்கெட் சுற்றுப் போட்டியின் காலிறுதி ஆட்டத்தில் இன்று ஞாயிற்றுக் கிழமை மோதும் கழகங்கள் வருமாறு,

*கைதடி நவசக்தி வி.க எதிர் நாவற்குழி கிழக்கு பிக்பூட்.வி.க.

*மட்டுவில் தெற்கு வளர்மதி வி.க எதிர் கோவிலாக் கண்டி மகாவிஸ்ணு வி.க

*சாவகச்சேரி சிங்கர் நிறுவன வி.க எதிர் கைதடி மேற்கு குமரன் வி.க ஆகியன மோதுகின்றன. (288)

***

யாழ்ப்பாணம் பிரிமியர் லீக் கிரிக்கெட் போட்டி ஆட்டத்தில் (ஜே.பிஎல்) நாளை திங்கட்கிழமை யாழ். இந்துக் கல்லூரி மைதானத்தில் நடைபெறவுள்ள ஆட்டத்தில் மோதவுள்ள அணிகளின் விவரம் வருமாறு.

காலை 9 மணி

ஜொலிஸ்ரார் விளையாட்டுக்கழகத்தை எதிர் தெல்லிப்பழை கிறாஸ் கொப்பேர்ஸ் விளையாட்டுக்கழகம் மோதவுள்ளது.

மதியம் 1.30 மணி

கொக்குவில் மத்திய சனசமுக நிலைய விளையாட்டுக்கழகம் எதிர் யாழ்.சென்ரலைட்ஸ் விளையாட்டுக்கழகம்.(86)

***

யாழ்ப்பாணம் சென்ரலைட்ஸ் விளையாட்டுக்கழகம் யாழ்.மாவட்ட கிரிக்கெட் விளையாட்டுக்கழகங்களுக்கு இடையே நடத்தும் அமரர் டொனால்ட் கணேசகுமார் ஞாபகார்த்த வெற்றிக் கிண்ணத்திற்கான 50 பந்துப் பரிமாற்றம் மட்டுப்படுத்திய கிரிக்கெட் போட்டி ஆட்டத்தில் இன்று காலை 9 மணிக்கு யாழ். மத்திய கல்லூரி மைதானத்தில் நடைபெறவுள்ள ஆட்டத்தில் கொக்குவில் மத்திய சனசமுக விளையாட்டுக்கழக "எ" அணி எதிர் அரியாலை ஸ்ரான்லி விளையாட்டுக்கழகம். (த-86)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பெரேராவின் மிரட்டலுக்கு பணிந்தது பாகிஸ்தான்




முதலாவது 'ரி-20' ஆட்டத்தில் பெரேராவின் அபாரா ஆட்டத்தின் மூலம் 37 ஓட்டங்களால் இலங்கையிடம் தோல்வியடைந்தது பாகிஸ்தான்.

இலங்கைக்கு சுற்றுப் பயணம் மேற்கொண்டுள்ள பாகிஸ்தான் அணி இரண்டு 'ரி-20' ஆட்டங்கள் கொண்ட தொடரில் விளையாடுகின்றது. முதலாவது ஆட்டம் அம்பாந்தோட்டை விளையாட்டரங்கில் நேற்று முன்தினம் இடம்பெற்றது. முதலாவது 'ரி-20' ஆட்டத்திற்கு தலைமை தாங்கும் ஹபீஸ் ஆரம்பத்தில் நாணயச்சுழற்சியில் மஹேலவிடம் தோல்வி கண்டார். மஹேல முதலில் துடுப்பெடுத்தாட தீர்மானித்தார்.

ஆரம்பத் துடுப்பாட்ட வீரர்களாக மஹேல, டில்ஷான் களமிறங்கினர். நீண்ட காலத்திற்குப் பின்னர் பாகிஸ்தான் அணியில் இடம்பிடித்த சொகைல் தன்வீர் முதலாவது பந்துப் பரிமாற்றத்தை வீச முதல் பந்திலேயே மஹேல 2 ஓட்டங்களைப் பெற்று கணக்கை தொடங்கினார். தொடர்ந்து மூன்றாவது பந்தில் தன்கைவரிசையை காட்டிய தன்வீர், மஹேலவின் இலக்கை தகர்த்தெறிந்தார். தொடர்ந்து மூன்றாவது பந்துப் பரிமாற்றத்தை தன்வீர் வீச டில்ஷான் 5 ஓட்டங்களுடன் பவிலியன் திரும்பினார்.

தொடர் இலக்கு சரிவுகளால் சலித்திருந்த இலங்கை ரசிகர்களுக்கு அடுத்த பந்து பரிமாற்றத்தில் சங்ககார தொடர்ச்சியாக மூன்று பவுண்டரிகள் விளாசி கலக்கினார். அந்தக் கலக்கல் அடுத்த பந்துப் பரிமாற்றத்தை மீண்டும் தன்வீர் வீச கலைந்து போனது. 12 பந்துகளில் 19 ஓட்டங்களுடன் சங்காவுக்கு குட்பை சொல்லியனுப்பினார் தன்வீர்.

அதன் பின்னர் சிறிது நேரம் மத்தியூஸ், சந்திமால் தடுப்பாட்டத்தை மேற்கொண்டனர். பாகிஸ்தானிய பந்து வீச்சாளர்களின் தொடர்ச்சியான அச்சுறுத்தலுக்கு இலங்கை அணி அடிபணிந்தது. மொஹமட் சமியின் பந்து வீச்சில் சந்திமால் 10 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார்.

அடுத்து களமிறங்கிய திரிமன்னே வந்த வேகத்தில் இரண்டு பவுண்டரிகள் விளாசி தெம்பூட்டினார். மறுமுனையில் அடக்கி வாசித்த மத்தியூஸை, அஜ்மல் தனது சுழலில் வெளியேற்றினார். தொடர்ந்து நுழைந்த கௌசல்ய லொக்கு ஆராய்ச்சி மறுமுனையில் திரிமன்னேக்கு சந்தர்ப்பம் வழங்கி ஓட்டங்களைக் குவித்தார். இவர்களது வேகமான இணைப்பில் இலங்கை அணி கௌரவமான இலக்கை நோக்கி பயணித்தது.

ஆட்டத்தின் 17 ஆவது பந்துப் பரிமாற்றத்தில் முதலாவது பந்திலேயே சர்ச்சைக்குரிய ரன் அவுட் மூலம் லொக்குஆராய்ச்சி 11 ஓட்டங்களுடன் பவிலியன் திரும்பினார். மறுமுனையில் சிறப்பாக ஆடிய திரிமன்னே அடுத்த பந்தில் றிவேர்ஸ் ஸவீப் ஷொட் அடித்து வீணாக 30 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார். 16.2 பந்துப் பரிமாற்றங்களில் இலங்கை அணி 89 ஓட்டங்களுக்கு 7 இலக்குகளை இழந்து தடுமாறியது.

அதன் பின்னர் இணைந்த திஸ்ஸர பெரேரா, குலசேகரா ஜோடி ஆட்டத்தின் போக்கை மாற்றியமைத்தது. திஸ்ஸரவின் துடுப்பில் பட்ட பந்துகள் சரவெடியாக ஓட்டங்களைக் குவிக்க இலங்கையின் ஓட்ட எண்ணிக்கை எகிறியது. ஆட்டத்தின் 18 ஆவது பந்துப் பரிமாற்றத்தை உமர் குல் வீச 5 ஆவது பந்தில் ஆட்டத்தின் முதலாவது சிக்ஸரை திஸர விளாச அணி 100 ஓட்டங்களைத் தாண்டியது.

இறுதியில் 20 பந்துப் பரிமாற்றங்களின் நிறைவில் இலங்கை அணி 7 இலக்குகளை மாத்திரம் இழந்து 132 ஓட்டங்களைப் பெற்றுக் கொண்டது. திஸ்ஸர பெரேரா 16 பந்துகளில் தலா 2 சிக்ஸர்கள், பவுண்டரிகள் அடங்கலாக 32 ஓட்டங்களையும், குலசேகர 6 ஓட்டங்களையும் ஆட்டமிழக்காது பெற்றுக் கொண்டனர். இந்த ஜோடி 8 ஆவது இலக்குக்காக 27 பந்துகளில் 43 ஓட்டங்களைப் பகிர்ந்து ருவன்ரி-20' சர்வதேச ஆட்டங்களில் அதிகபட்ச ஓட்ட எண்ணிக்கையாக பதிவாகியது.

பந்து வீச்சில் தன்வீர் 4 பந்துப் பரிமாற்றங்கள் பந்து வீசி 12 ஓட்டங்களுக்கு 3 இலக்குகளை கைப்பற்றினார்.

பதிலுக்கு இலகுவான இலக்கை விரட்டத் தொடங்கிய பாகிஸ்தான் அணிக்கு முதலாவது பந்துப் பரிமாற்றத்திலேயே குலசேகரா நெத்தியடி கொடுத்தார். அணித்தலைவர் மொஹமட் ஹபீஸையும், சகீல் அன்சரையும் முதலிரண்டு பந்துகளில் வெளியேற்றி அதிர்ச்சி வைத்தியம் கொடுத்தார். இருப்பினும் குலசேகராவின் ஹற்றிக் வாய்ப்பை லத்தீப் தடுத்தார்.

எனினும் அவரால் நிலைத்து நிற்கமுடியாது போக மத்தியூசின் பந்தில் 3 ஓட்டங்களுடன் பவிலியன் திரும்பினார். அடுத்து வந்த சொஹைப் மலிக் நிதானமாக ஆட முற்பட்டார். 9.2 பந்துப் பரிமாற்றங்களில் அணி 46 ஓட்டங்களைப் பெற்றபோது மலிக் (9) ஆட்டமிழந்தார். 4 இலக்குகள் இழந்து வெறும் 46 ஓட்டங்களுக்குள் இழந்து பரிதவித்தது பாகிஸ்தான். உமர் அக்மல், அஹமட் சிகாட்டுடன் இணைந்து ஓரளவுக்கு ஆறுதல் அளிக்கும் வகையில் ஓட்ட வேகத்தை அதிகரிக்க முற்பட்டார். ஆனால் துரதிஷ்ட வசமாக 12 ஓட்டங்களுடன் மலிங்கவின் வேத்தில் துக்கிவீசப்பட்டார். அடுத்து களமிறங்கிய அணியின் நம்பிக்கை நட்சத்திரம் அப்ரிடி நிலைமையை உணர்ந்து ஆடாது அணியை கைவிட்டு வந்த வேகத்திலேயே பவிலியன் திரும்ப, சொகைல் தன்வீர் (1) அவரைப் பின் தொடர்ந்து நடையைக் கட்டினார். ஆரம்ப வீரராகக் களமிறங்கி அணியை சரிவில் இருந்து மீட்கப் பாடுபட்ட அகமட் சிகாட் 15.2 பந்துப் பரிமாற்றங்களில் 85 ஓட்டங்களை அணி பெற்றிருந்தபோது சேனநாயக்கவின் பந்தில் ஆட்டமிழந்தார். அதன்பின் உமர் குல் (5), சையிட் அஜ்மல் (5) ஆட்டமிழந்தனர். இலங்கையின் பந்து வீச்சுக்கு முகம் கொடுக்க முடியாமல் 17.4 பந்துப் பரிமாற்றங்களில் சகல இலக்குகளையும் இழந்து 95 ஓட்டங்களை மாத்திரமே பாகிஸ்தானால் பெறமுடிந்தது. 37 ஓட்டங்களால் இலங்கை இந்த ஆட்டத்தை வெற்றிகொண்டது. பந்து வீச்சிலும் துடுப்பாட்டத்திலும் மிரட்டிய பெரேரா ஆட்டநாயகனாகத் தெரிவானார்.

(ங-16-5)

## வெடிக்கிறது மோதல்

# தலைமைக்குத் தயார் காம்பீர் அதிரடி அறிவிப்பு

அணித்தலைமை ஆசையில் மிதக்கிறார் கவுதம் காம்பீர். டெஸ்ட் அணிக்கு தலைமை ஏற்க தயார் என்று அதிரடியாக அறிவித்துள்ளார். இதன் மூலம் டோனியை மீண்டும் உரசிப் பார்க்கிறார்.

ஆசிய கிண்ணத் தொடரின் போது காம்பீருக்கு பதிலாக விராத் ஹோக்லிக்கு துணைத் தலைவர் பதவி வழங்கப்பட்டது. ஏற்கனவே 6 ஒரு நாள் ஆட்டங்களில் காம்பீர் தலைமையில் இந்திய அணி வென்றிருந்தது. இந்த நிலையில், இவரிடம் இருந்து துணைத் தலைவர் பதவி பறிக்கப்பட்டது பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தியது. இதனால் அணித் தலைவர் டோனி, காம்பீர் இடையே பனிப் போர் உருவானது.

இந்த நிலையில், சமீபத்திய ஐ.பி.எல்., தொடரின் இறுதியாட்டத்தில் காம்பீர் தலைமையிலான கொல்கத்தா அணி, டோனியின் சென்னை சூப்பர் கிங்ஸ் அணியை வீழ்த்தி கிண்ணத்தை வென்றது. இதையடுத்து காம்பீருக்கு ஆதரவு அதிகரித்தது. டெஸ்ட் தொடர்களில் வரிசையாக 7 தோல்விகளை சந்தித்த டோனிக்கு பதிலாக இவரை அணித்தலைவராக நியமிக்க வேண்டும் என்று கங்குலி உள்ளிட்ட பலரும் வலியுறுத்தினர். ஆனாலும், தேர்வாளர்களின் அதீத நம்பிக்கையை பெற்ற டோனியிடம் இருந்து அணித்தலைமைப் பதவியை பறிப்பது அவ்வளவு எளிதான காரியம் அல்ல.

இது குறித்து காம்பீர் கூறியதாவது:

இந்திய டெஸ்ட் அணியின் தலைமைப் பொறுப்பை ஏற்க தயாராக உள்ளேன். இதனை மிகப் பெரும் கௌரவமாக கருதுவேன். இந்த சவாலை சந்திக்க மனதளவில் தயாராக இருக்கிறேன். ஆனாலும், என்னைப் பொறுத்தவரை அணித்தலைவரால் மட்டும் சாதிக்க முடியாது. வெற்றிகரமான அணியால் தான் வெற்றிகரமான அணித்தலைவரை உருவாக்க முடியும். மாறாக வெற்றிகரமான அணித்தலைவரால், வெற்றிகரமான அணியை உருவாக்க முடியாது. சில ஆட்டங்களில் விரைவாக ஆட்டமிழந்து விட்டால், அணியில் இருந்து நீக்கி விடுவார்களோ என்ற அச்சம் எனக்குள் எப்போதும் இருக்கும்.

**சமீபத்திய ஐ.பி.எல்., தொடரின் இறுதியாட்டத்தில் காம்பீர் தலைமையிலான கொல்கத்தா அணி, டோனியின் சென்னை சூப்பர் கிங்ஸ் அணியை வீழ்த்தி கிண்ணத்தை வென்றது. இதையடுத்து காம்பீருக்கு ஆதரவு அதிகரித்தது. டெஸ்ட் தொடர்களில் வரிசையாக 7 தோல்விகளை சந்தித்த டோனிக்கு பதிலாக இவரை அணித்தலைவராக நியமிக்க வேண்டும் என்று கங்குலி உள்ளிட்ட பலரும் வலியுறுத்தினர்.**

### தடை வேண்டாம்

ஐ.பி.எல்., தொடரை தடை செய்ய வேண்டும் என்ற கோரிக்கை தேவையில்லாதது. பெரும்பாலான ஆட்டங்கள் கடைசிப் பந்துப் பரிமாற்றத்தில் தான் முடிந்தன. இது ஆட்டத்தின் தரத்தை சுட்டிக் காட்டியது. இந்திய அணிக்காக விளையாடும் வாய்ப்பை பல வீரர்கள் ஐ.பி.எல்., மூலம் பெற்றுள்ளனர். களத்துக்கு வெளியே நடக்கும் சில தவறான சம்பவங்களுக்கு, ஐ.பி.எல்., தொடர் மீது பழி சுமத்தக் கூடாது - என்றார். (5)



## விளையாடுவதற்கு நேரமில்லை

பாகிஸ்தான் அணி இந்தியாவிற்கு சுற்றுப்பயணம் மேற்கொண்டு கிரிக்கெட் தொடர்களில் பங்கேற்றால் நல்லது தான். ஆனால் இரு அணிகளுக்கும் இடையிலான தொடருக்கு நேரம் இருக்கிறதா என்று தெரியவில்லை என்று இந்திய அணியின் அணித்தலைவர் டோனி தெரிவித்துள்ளார்.

இந்தியா, பாகிஸ்தான் நாடுகளுக்கு இடையிலான கிரிக்கெட் உறவு, கடந்த 2008 ஆம் மும்பை தீவிரவாத தாக்குதலுடன் முறிந்தது. அதன் பிறகு இந்தியாவில் கடந்த ஆண்டு நடைபெற்ற உலகக் கிண்ண தொடரில் தான் இரு அணிகளும் மோதின.

அதன் பின்பு இரு நாடுகளுக்கும் இடையிலான கிரிக்கெட் ஆட்டங்கள் எப்போது நடைபெறும் என்று கிரிக்கெட் ரசிகர்களிடையே பெரும் எதிர்பார்ப்பு நிலவியது. இந்த நிலையில் இந்தியாவிற்கு பாகிஸ்தான் அணி சுற்றுப்பயணம் மேற்கொள்ள உள்ளதாக செய்திகள் வெளியாகி உள்ளது. ஆனால் ஆட்டங்கள் எப்போது நடைபெறும் என்பது தீர்மானிக்கப்படாத நிலையில் உள்ளது.

இந்திய அணிக்கு தொடர்ச்சியாக நியூசிலாந்து, இங்கிலாந்து, இலங்கை என்று பல நாட்டு அணிகளுடன் ஆட்டங்கள் உள்ளன.

இதனால் இந்த ஆட்டங்கள் குறித்து டோனி கூறுகையில், இந்தியாவிற்கு பாகிஸ்தான் அணி சுற்றுப்பயணம் மேற்கொண்டு கிரிக்கெட் தொடர்களில் பங்கேற்றால் நாங்கள் வரவேற்கிறோம். ஆனால் இரு நாடுகள் பங்கேற்க உள்ள தொடர்கள் எப்போது நடைபெறும் என்று தெரியவில்லை.

இந்தியாவிற்கு சுற்றுப்பயணம் மேற்கொண்டு வரும் போது, இங்குள்ள சூழ்நிலைகளுடன் அவர்களால் ஒத்து போக முடியுமா என்று தெரியவில்லை. ஆனால் நாங்கள் விளையாடத் தயாராக உள்ளோம் என்றார்.

அவர் மேலும் கூறுகையில், இங்கிலாந்து அதிரடி வீரர் கெவின் பீற்றர்சன், ஒரு நாள் மற்றும் 'ரி-20' ஆட்டங்களில் இருந்து திடீர் ஓய்வு பெற்ற செய்தி அதிர்ச்சி அளித்தது. சிறந்த துடுப்பாட்ட வீரரான பீற்றர்சனின் துடுப்பாட்டத்தை பலமுறை ரசித்து பார்த்துள்ளேன்.

அவருடன் ஆடுகளத்தில் செலவழித்த நேரம் இனிமையானது. எனவே அப்போது, அவர் எதிரணி வீரரை போல தெரிந்ததில்லை - என்றார். (5)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சம்பியன் லீக் தென்னாபிரிக்காவுக்கு மாற்றம்

இந்தியாவில் நடக்க இருந்த நான்காவது சம்பியன்ஸ் லீக் 'ரி-20' தொடர், தென்னாபிரிக்காவுக்கு இடமாற்றப்படுகின்றது.

உள்ளூர் 'ரி-20' தொடரில் சாதித்த அணிகளுக்கு சம்பியன்ஸ் லீக் தொடரில் விளையாட வாய்ப்பு கிடைக்கும். நான்காவது தொடர் எதிர்வரும் ஒக்ரோபர் முதல் (10-28) சென்னை, கொல்கத்தா, ஹைதராபாத், பெங்களூர், டெல்லி ஆகிய 5 இடங்களில் நடக்க இருந்தது. ஆனால், இந்த சமயத்தில் கொல்கத்தாவில் துர்க்கா பூஜை நடைபெறும். எனவே, அங்கு ஆட்டங்களை நடத்துவதில் சிரமம் ஏற்படும். தவிர, நாட்டின் பல பகுதிகளில் மழைக் காலம் தொடங்கி விடும் என்பதால், பாதுகாப்பு உட்பட பல்வேறு பிரச்சினைகள் உருவாகும். இதனை கருத்தில் கொண்டு தொடரை, வேறு இடத்துக்கு மாற்ற திட்டமிடப்பட்டது.

இது தொடர்பாக சமீபத்தில் சென்னையில் நடந்த சம்பியன்ஸ் லீக் நிர்வாக கவுன்சில் கூட்டத்தில் விவாதிக்கப்பட்டது. இதில், தென்னாபிரிக்காவுக்கு இடமாற்றம் செய்ய முடிவு செய்யப்பட்டது. இதற்கு எதிர்வரும் 26 ஆம் திகதி கோலாலம்பூரில் மீண்டும் நடக்க உள்ள நிர்வாக கவுன்சில் கூட்டத்தில் இறுதி ஒப்புதல் அளிக்கப்படும் என்று தெரிகிறது. ஏற்கனவே, 2009 இல் ஐ.பி.எல்., தொடர், 2010 இல் சம்பியன்ஸ் லீக் தொடர் தென்னாபிரிக்காவில் நடத்தப்பட்டுள்ளது.

**மும்பைக்கு வாய்ப்பு**

ஐ.பி.எல்., தொடரில் முதல் மூன்று இடங்களைப் பெற்ற கொல்கத்தா, சென்னை, டெல்லி அணிகள் இந்த முறை சம்பியன்ஸ் லீக் தொடரில் வழக்கம் போல் பங்கேற்கின்றன. தவிர, நான்காவது இடம் பெற்ற மும்பை அணிக்கும் வாய்ப்புக் கொடுக்கப்பட்டுள்ளது.

கடந்த 2010 இல் தென்னாபிரிக்காவில் சம்பியன்ஸ் லீக் தொடர் நடத்தப்பட்ட போது சென்னை அணி, வாரியர்ஸ்(தென்னாபிரிக்கா) அணியை வீழ்த்தி கிண்ணம் வென்றது குறிப்பிடத்தக்கது.

(5)


## கார் விற்பனைக்கு

TOYATA COROLLA 121 மொடல், வெள்ளை நிற, one owner, WP JW xxxx தொடர் இலக்கமுடைய கார் விற்பனைக்கு உண்டு. Company maintaining, Topping condition.

தொடர்பு: T. சண்முகநாதன், YOGIS. BEAUTY 75, அம்மன் வீதி (வீரமாகாளி அம்மன் கோயில் முன்பாக), நல்லூர், யாழ்ப்பாணம்.



## தவறிவிட்டது

பண்ணை பஸ் தரிப்பிடத்துக்கும் ஓட்டுமடம் சந்திக்கும் இடையில் திமிரி அர்ஜீன் என்பவருடைய வாகன அனுமதிப்பத்திரம், 910804162 V இலக்க தேசிய அடையாள அட்டை அடங்கிய கைப்பை தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் தந்துதவவும்.

தொடர்புகளுக்கு: 0771242322, 0212229224, 0777111128



## THE SCIENCE CORNER
CLOCK TOWER LANE - JAFFNA

புதிய பிரிவுகள் ஆரம்பம்
04.06.2012 திங்கள்

**அசேதன இரசாயனம்**
Mon, Fri.- 3.30 -5 p.m.
BY: RAJAH

**புலங்கள்**
Mon, Fri.- 5.00 -6.00 p.m.
BY: செந்தில் குமரன்



## இலவச வகுப்பும் Video DVD யும்

ஆசிரியர்கள், அரச அலுவலர்கள், நிறுவன அலுவலர்கள் வங்கியாளர்கள் அனைவருக்கும் ஆங்கிலத்தின் அனைத்து அமைப்புக்களும் அடங்கிய

**வீட்டிலிருந்து கற்பதற்கான Video DVD முற்றிலும் இலவசம்**

பிரிவு 1 : 03.06.2012 ஞாயிறு காலை 9.00 – 10.00
பிரிவு 2 : 03.06.2012 ஞாயிறு மாலை 3.00 – 4.00
பிரிவு 3 : 04.06.2012 திங்கள் காலை 9.00 – 10.00
பிரிவு 4 : 04.06.2012 திங்கள் மாலை 3.00 – 4.00
[ ஏதாவதொரு பிரிவில் கலந்துகொள்ளலாம் ]

**MyWay Language Research Institute**
182, Stanley Road, Jaffna. 077 33 63 456



# Diploma courses

MS Office, DTP, Web Design, Hardware with Networking, Accounting, Autocad-2D &3D, Multimedia

மேலதிக விபரங்களுக்கு தயக்கம் இன்றி MCAI CAMPUSடன் தொடர்பு கொள்ளுங்கள்

**MCAI CAMPUS**
SMS Your name & Course to 775520940 & Get Schol.
243, Adiyapatham Road, Kalviyankadu
Qualified Lectures panel, Passing Guarantee, 12 Years Experience
Supported by Jaffna Computer Society
Www.mcaicampus.info
facebook: mcaicampus



## PHYSICS
N.Edision

A/L 2014
நிலையியல்
Mon, Wed, - 6.15 a.m.
A/L 2013
புலங்கள் (ஈர்ப்புப்புலம்)
Mon, Wed, - 5 p.m.
வாயுக்கள்
Tue, Thu, - 6.15 a.m.
ஆரம்பம்
04.06.2012 Mon,

NEC
பருத்தித்துறை வீதி, ஆவரங்கால், யாழ்ப்பாணம்.


## கண்ணீர் அஞ்சலி



வீரசிங்கம் ஜெகதீஸ்வரன் (ஜெகன்)
(யாழ். மத்திய கல்லூரி)

எமது நிறுவன சிரேஷ்ட கணித ஆசிரியர் வீ.ஜெகதீஸ்வரன் (ஜெகன்) அவர்கள் அகாலமரணமடைந்த செய்தி கேட்டு மிகவும் துயரடைந்தோம்.

அன்னாரின் ஆத்மா சாந்தியடைய எல்லாம்வல்ல இறைவனைப் பிரார்த்திப்பதோடு அன்னாரின் இழப்பால் துயருற்றிருக்கும் அவர்தம் குடும்பத்தினருக்கும் எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

எடிசன் அக்கடமி.


# BRITISH COLLEGE OF HIGHER STUDIES
BCHS

சர்வதேச பாடத்திட்டத்தின் தராதரத்திற்கு அமைய நவீன தொழில் நுட்பத்துடன் வழங்கும்

## Spoken English with Grammar — 1 1/2 Months
(ஆங்கிலத்தில் பேசுவதற்கு 100% உத்தரவாதம்) (Quick Learning course)

## Diploma in English — 2 1/2 Months

* எமது கற்கை நெறிகள் Writing, Speaking, Reading, Listening என வகைப்படுத்தப்பட்டு ஒவ்வொரு பிரிவும் மிகச்சிறந்த ஆசிரியர்களினால் கற்பிக்கப்படுகின்றது.
* O/L, A/L பரீட்சை எழுதிய மாணவர்கள், தொழில் தேடுவோர், தொழில் புரிவோர் மற்றும் ஆங்கிலம் கற்க விரும்பும் அனைவருக்கும் ஏற்றது.
* Excellent Teachers' Panel & Individual Attention

Jaffna Branch:
No. 15, Sirambiyady Lane,
off Stanley Road, Jaffna. Tel: 021 222 4550

Vavuniya Branch:
No. 3, 6th Lane, Vairavarkovil Veethy,
Vairavarpulliyamkulam,
Vavuniya. Tel: 024 324 5287

Hot Lines: 0777 222 422 / 0777585913 / 071 4299935 / 0777730074

கிழமை நாட்கள் மற்றும் சனி, ஞாயிறு வகுப்புக்களும் ஆரம்பமாகின்றன.
அனுமதிகள் மட்டுப்படுத்தப்பட்டுள்ளதால் தங்கள் பதிவுகளுக்கு முந்துங்கள்

Batch - 1: 05.06.201 9.00 - 12.00
Batch - 2: 05.06.201 3.00 - 5.00
Batch - 3: 11.06.2012 9.00 - 12.00


## எடிசன் அக்கடமி
### முக்கிய அறிவித்தல்

எமது நிறுவனத்தின் சிரேஷ்ட கணித ஆசிரியர்

**வீ.ஜெகதீஸ்வரன் (ஜெகன்)**

அவர்கள் அகாலமரணமடைந்ததையிட்டு அன்னாருக்கு அஞ்சலி செலுத்தும் முகமாக இன்றும், நாளையும் வகுப்புகள் யாவும் நடைபெறமாட்டாது என்பதனை மாணவர்கள், பெற்றோர்கள், ஆசிரியர்களுக்கு அறியத் தருகின்றோம்.

மு.கு.: இன்று பி.ப. 2 மணிக்கு இறுதிக்கிரியைகள் நடைபெறவிருப்பதால் இதில் கலந்துகொள்ளவிருக்கும் மாணவர்களுக்கு எமது நிறுவனத்திலிருந்து போக்குவரத்து வசதிகள் செய்யப்பட்டுள்ளது.

நல்லூர் எடிசன் மு.ப. 10.30 மணி

கொக்குவில் எடிசன் மு.ப. 11 மணிக்கு மாணவர்களை சமுகம் தருமாறு கேட்டுக்கொள்கிறேன்

விவரங்களுக்கு: 0777570593

(18944)

நிர்வாகி,
எடிசன் அக்கடமி.


வியப்பான வியாபார விருத்திக்கு
வின்றிச் ஐஸ்கிறீம் இயந்திரம்




50,000/- மேல் மாத வருமானம்

* சோயா வெனிலா சொக்லட் சுவைகள்
* நவீன தொழில் நுட்பம்
* இலவச பயிற்சி
* விற்பனையின் பின் சேவை

விலை ரூ 99,000/- இல் இருந்து — புத்தம் புதியது

WINRICH INTERNATIONAL (PVT) LTD.
(Member of Pluss int.)
No. 18, Ground Floor, Lucky Plaza, St. Anthony's Mawatha, Kollupitiya, Colombo 03, Sri Lanka.

தமிழில் தகவல்பெற (யோகேஸ்)
Hot Line: 077 106 6902, 077 391 8870



## வாகனம் விற்பனைக்கு/ வாடகைக்கு

PQ xxxx தொடரிலக்கமுடைய Mahinthira Jeep Single Cap, LD xxxx தொடரிலக்கமுடைய Toyata 250 ரக Canter - Full Aluminium Body, La தொடரிலக்கமுடைய Nisan 250 ரக Canter விற்பனைக்கு / வாடகைக்கு உண்டு.

தொடர்புகளுக்கு - 0777716243



## விற்பனைக்கு

செங்கல், கருங்கல்சல்லி, அத்திவாரக்கற்கள், நிலப்பதிப்புக்கற்கள் குறைந்த விலையில் விற்பனைக்கு

தொடர்புகளுக்கு-077-3818799



## Personal Class (கணினி)

* கற்கைநெறிகள் யாவும் உங்கள் வீடுகளில் வந்து கற்பிக்கப்படும்
* Ms office, DTP, Internet and E-mail, Web design, Graphic Design சிறுவர்களிற்கான பயிற்சிநெறி
* குறிப்பு : கணினி இல்லாதவர்களிற்கு எனது Laptop மூலமாகப் பயிற்சியளிக்கப்படும்

ஆசிரியர் : K.R.C T.P : 077 9672038
★ சான்றிதழ்கள் வழங்கப்படும் — நல்லூர்
(18832)(6-7-8)



MAG
saves lives builds futures

**உடனடி வேலை வாய்ப்பு - மக் நிறுவனம் - வவுனியா**

கண்ணி வெடி அகற்றுநர்(Deminer)(பெண்கள்,ஆண்கள்)

முதலுதவியாளர்(Medic)(பெண்கள்,ஆண்கள்)

இயந்திர இயக்குநர்(operator)(ஆண்கள்)

மேற்குறிப்பிட்ட பதவிகளுக்காக இத்துறையில் தகுந்த அனுபவம் வாய்ந்தவர்களிடம் இருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றது

விண்ணப்பங்கள் அனுப்பிவைக்கப்படவேண்டிய முகவரி :

மனிதவள உத்தியோகத்தர்
மிதிவெடி அகற்றும் குழு(MAG)
இல -133,1ம் ஒழுங்கை,
கோவில் வீதி,
குருமன்காடு ,
வவுனியா.

மின்னஞ்சல் முகவரி : millika@magsrilanka.org

விண்ணப்பங்கள் அனுப்பவேண்டிய இறுதித்திகதி : 20/06/2012


இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட் [illegible] வீதியில் 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 03.06.2012 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வெற்றியாளர்கள்

# 5 மில்லியன் தங்கம்

## மாதாந்த சுப்பர் பரிசுகள்




ஜனவரி மாதத்திற்கான அதிஷ்டசாலி வெற்றியாளர்
திருமதி. A.G.S.P டயஸ் - கம்பஹா




பெப்ரவரி மாதத்திற்கான அதிஷ்டசாலி வெற்றியாளர்
திரு. W.G.F. பர்னான்டோ - வென்னப்புவ




மார்ச் மாதத்திற்கான அதிஷ்டசாலி வெற்றியாளர்
திரு. M.A.J. மஞ்சநாயக - புவக்பிடிய

WP/GT/3467

**27,000 க்கும் அதிகமான வெற்றியாளர்களுக்கு 60 மில்லியன் ரூபா பெறுமதியான பரிசுகள் வழங்கப்பட்டுள்ளது**

டயலொக் ரீலோட் செய்து மற்றும் சரியான திகதியில் பில் கட்டணங்களை செலுத்தி ஒவ்வொரு ரூ.50/- மூலமும் வெற்றி வாய்ப்பினை பெற்றுக் கொள்ளுங்கள்

## அடுத்த வெற்றி வாய்ப்பு உங்களுக்கே!

www.dialog.lk

எந்த ஒரு வலையமைப்பிலிருந்தும் 1777 க்கு அழையுங்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பிரண்டையின் மருத்துவ குணங்கள் என்ன?

பிரண்டையை மேல்தோல் நீக்கி, சிறு சிறு துண்டுகளாக வெட்டி, புளித்த மோரில் ஒருநாள் முழுவதும் ஊறவைத்து, மறுநாள் இடித்து, வறுத்த மிளகு, சீரகம், எள், ஓமம், மல்லி, உப்பு ஆகியவற்றைத் தலா 50 கிராம் சேர்த்து நன்கு அரைத்து, பட்டாணியளவு மாத்திரைகளாகவோ அல்லது உலர்த்தி, பொடியாகவோ எடுத்துக்கொள்ள வேண்டும்.

1 முதல் 2 மாத்திரைகள் அல்லது 1 கிராம் பொடி தினமும் ஒரு வேளை சாப்பிட்டுவர பசி உண்டாகும். உணவு நன்கு சமிபாடடையும். கல்லீரல் பலப்படும்.


"கடும் முயற்சியினால் எமது சொந்த எதிர்பார்ப்புகளை நாமே முந்திவிடுவோம்"

ரொபர்டா வில்லியம்ஸ்

புதுவிதமான தொழில்நுட்பத்தினை பாவிக்கும் மற்றும் வாடிக்கையாளருக்கு தனித்துவமான அனுபவத்தினை பெற்றுக்கொடுக்கும் வகையில் ஊழியர்களின் ஆற்றல்களை மேம்படுத்த உபயோகிக்கும் "உணர்வுபூர்வமான நோக்கு" இனை DIMO வைச்சேர்ந்த நாம் நம்புகிறோம். இந்த நோக்கின் மூலம், உல்லாசமான தொழிற்சூழலையும் தொழிற்துறை முழுவதும் சிறந்த அனுபவங்களையும் DIMO வழங்குகிறது.

கடந்த 7 தசாப்தங்களாக DIMO, தனது மதிப்புக்குரிய வாடிக்கையாளர்களுக்கு உலகத்தர தொழில்நுட்பத்தினை வழங்கியதன் மூலம் இலங்கையின் பொறியியல் துறையின் தளத்தினை மாற்றி வந்தது. பொறியியல் துறையில் முன்னணியில் திகழும் DIMO, கடந்த 50 வருடங்களுக்கும் மேலாக உலகின் அதிசிறந்த தயாரிப்புகளை இலங்கையில் பிரதிநிதித்துவம் செய்கிறது.

இப்போது நாம் DIMO வின் உலகத்தர தொழில்நிபுணர் அணியுடன் இணையக்கூடிய செயற்றிறன் மிகுந்த தனி நபர்களை எதிர்ப்பார்க்கிறோம்.

BOSCH

சிறந்த பானையைக் கொடுக்கும் தலைசிறந்த மோட்டார் வாகன பாகங்களையும் பவர் டூல்களையும் உற்பத்தி செய்யும் உலகப் புகழ் பெற்ற ஜெர்மனிய நிறுவனமே BOSCH. இப்பொழுது BOSCH நிறுவனம் திறன்வாய்ந்த நபர்களை கீழ்காணும் பதவிகளில் இணைத்துக் கொள்ளவுள்ளது.

**விற்பனை அதிகாரிகள் - பவர் டூல்ஸ்/ துணைப் பொருட்கள், கராஜ் உபகரணங்கள் மற்றும் மோட்டார் வாகன பாகங்கள்**

தகைமைகள்
- க.பொ.த. உயர் தரப்பரீட்சையில் சித்தி
- மேற்கூறப்பட்ட துறையில் குறைந்தது 2 வருட முன் அனுபவம் இருத்தல் வேண்டும்
- கட்டுமாணம் / கட்டுமாண பொருட்கள் அல்லது ஒடோமோபைல் / லுப்ரிகன்ட் துறைகளில் முன் அனுபவங்கள் இருத்தல்
- ஆங்கிலம் மற்றும் தமிழில் தேர்ச்சியும் சிங்கள மொழியில் போதிய அறிவும் இருத்தல் மேலதிக தகைமையாகும்
- வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் மிகக் குறைந்த மேற்பார்வையில் சுதந்திரமாக வேலை செய்யும் இயலுமை
- செல்லுபடியாகும் சாரதி அனுமதிப்பத்திரம் இருத்தல் வேண்டும்

பொறுப்புகள்

நிர்ணயிக்கப்பட்டுள்ள இலக்குகளை அடைவதுடன் எமது உற்பத்திகள் பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்துவதுடன், எமது முகவர் மற்றும் விநியோகஸ்தர் வலையமைப்பை விஸ்தரிப்பதிலும் பங்கேற்க வேண்டும். மேற்கூறப்பட்ட தொழில்துறைகள் சம்பந்தப்படும் இடங்களில் (கட்டுமாண இடங்கள், கராஜ்கள், சேவை நிலையங்கள்) நீண்ட நேரங்கள் வேலை செய்யவும் தாயாராக இருத்தல் வேண்டும்.

DIMO சமசந்தர்ப்பம் வழங்கும் தொழில் வழங்குனர் ஆவர்

DIMO குடும்பத்தில் அங்கம் பெறுவதால் கிடைக்கும் வரப்பிரசாதங்கள் சகிதம் கவர்ச்சிகரமான ஊதியமும் வழங்கப்படும். உங்கள் சுயவிபரக்கோவையை பெயர், முகவரி, உறவினரல்லாத இருவரின் விபரத்துடனும் தபாலுறையின் இடதுபக்க மேல் மூலையில் விண்ணப்பிக்கும் பதவியினையும் குறிப்பிட்டு கீழ்காணும் முகவரிக்கு 7 நாட்களுக்குள் அனுப்பவும்.

General Manager - Human Resources
DIESEL & MOTOR ENGINEERING PLC
65, ஜேதவன வீதி, கொழும்பு 14.
E-mail: careers@dimolanka.com
www.dimolanka.com
www.facebook.com/careersDIMO

BOSCH
Invented for life

dimo TECHNOLOGY


## மனித உடலுக்குள் இத்தனை அழகா..

நம் உடலின் உள்ளே இத்தனை அழகா..? எண்ணி வியந்து போகும் அற்புத அழகு. மனித உடம்பின் உள்ளுறுப்புக்களின் துல்லிய படங்கள் இவை. அதி துல்லிய உருப்பெருக்குக் காட்டியின் துணைகொண்டு பிடிக்கப்பட்ட படங்கள்.

**மனிதமுட்டையின் குறுக்குச் செல்கள்**



**மனித விந்தணுவின் மூலவுரு**



**மூளையிலுள்ள நியூரான்கள்**



**குருதிச் செவ்வணுக்கள்**



**தலைமுடியின் பரி**




கண்ணுக்கு விருந்தாகும் காட்சிகள் அபூர்வ வெகுமதியுடன்!




32" LCD TV
- Resolution 1366 x 768
- Clear Motion Rate 50
- Dynamic Contrast Ratio High Contrast
- ConnectShare™ (USB2.0) JPEG
- Wide Color Enhancer Plus
- Picture Engine DNIe+
- SRS TheaterSound
- Teletext (TTXT)

ரூ. 49,900/-
ரூ. 956/-

இலவசம்!
ஒவ்வொரு SAMSUNG 32" LCD TV உடனும் ஒரு SAMSUNG DVD பிளேயர்

SAMSUNG

* சொவ்ட்லொஜிக் உத்தரவாதத்தின் பக்கபலம்

உடனடி அழைப்பு
011 5 705 705

softlogic


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# முக அழகை பாதுகாக்கும் கற்றாழை



வீட்டுத்தோட்டத்தில் வளர்க்கப்படும் சோற்றுக் கற்றாழை முக அழகை பாதுகாக்கும் அழகு சாதனப்பொருளாக பயன்படுகிறது.

கோடை காலத்தில் சருமம் வறட்சியடையாமல் பாதுகாப்பதோடு கொப்பளங்கள், முகப்பரு போன்றவை ஏற்படாமல் தடுக்கிறது.

கற்றாழையை உபயோகித்து காசு செலவில்லாமல் சருமத்தை பாதுகாப்பதற்கு அழகியல் நிபுணர்கள் கூறும் ஆலோசனையை படியுங்கள்.

**கோடை கொப்பளங்கள்**

கோடைகாலத்தில் சருமத்தில் ஆங்காங்கே கொப்பளங்கள் ஏற்படுவது இயல்பு. இதனால் வலியும் எரிச்சலும் ஏற்படும். இதற்கு கற்றாழை சிறந்த மருந்தாக செயல்படுகிறது.

கற்றாழையை பறித்து அதனை பிழிந்து சாறு எடுத்து அதில் சில துளிகள் எலுமிச்சை சேர்த்து கலக்கவும். இதனை ஒரு பருத்தி துணியில் தொட்டு முகத்தில் நன்றாக பூசவும். பத்து நிமிடம் கழித்து வெதுவெதுப்பான நீரில் கழுவி விடலாம். இதனால் சருமம் பொலிவாகும். சருமம் வறட்சி நீங்கி ஈரப்பதத்தை தக்கவைக்கலாம்.

**மூலிகை பேக்**

கற்றாழைச் செடி அனைத்து சருமத்திற்கும் ஏற்ற சிறந்த மூலிகையாகும். இதனை ஜெல் போல செய்து முகத்தில் பூசி வர சருமம் ஜொலிக்கும். கற்றாழைச் செடியை பறித்து நன்றாக அரைத்து அதனுடன் ரோஸ் வாட்டர் சேர்க்கவும் கண்களைத் தவிர பிற பகுதிகளில் திக்காக பேக் போல போடவும்.

பின்னர் நன்றாக மூன்று நிமிடங்கள் வரை மசாஜ் செய்யவும். இதனால் முகத்தில் உள்ள உயிரிழந்த செல்கள் உதிர்ந்து விடும். பதினைந்து நிமிடங்கள் கழித்து முகத்தை கிளன்சர் கொண்டோ அல்லது குளிர்ந்த நீரிலோ கழுவி விடலாம். வாரம் ஒருமுறை இவ்வாறு செய்து வர முகம் பொலிவாகவும் மென்மையாக இருக்கும்.

**முகப்பரு வராது**

கற்றாழையை பறித்து அதை நன்றாக கொதிக்கும் நீரில் போட்டு வேக வைக்கவும். இதனை எடுத்து நன்றாக அரைக்கவும் அதனுடன் தேன் சேர்க்கவும். இந்த கலவையை நன்றாக முகம் முழுவதும் பூசவும். நன்றாக் காயவிட்டு பின்னர் குளிர்ந்த நீரில் கழுவவும். இதனை வாரம் ஒருமுறை செய்து வர முகப்பரு இருந்தால் மறைந்து விடும். முகப்பருவோ வடுக்களோ ஏற்படாது.

சென்சிடிவ் சருமம் உள்ளவர்கள் கற்றாழையுடன் வெள்ளரிக்காய், தயிர் சேர்த்து அரைத்து பேஸ்ட் போல செய்யவும். பதினைந்து நிமிடம் ஊறவைத்து நன்றாக குளிர்ந்த நீரில் கழுவ முகம் புத்துணர்ச்சியோடு இருக்கும்.




# துளசி குடிநீர்

துளசி நமக்கு அருமருந்தாகும். துளசி இலையுடன் சீரகம் சேர்த்து நீரில் கொதிக்க வைத்து குடிநீராக அருந்தி வந்தால் உடலுக்கு பல நன்மைகள் உண்டு. அடிக்கடி வெளியூர் பயணம் செய்பவர்களுக்கும், வெயில் மற்றும், மழைக்காலங்களில் அலைந்து திரிபவர்களுக்கு துளசி குடிநீர் அருமருந்தாகும். இது உடற்ᄀடு, பத்தம் போன்றவற்றைத் தணிக்கக் கூடியது.

மஞ்சள் காமாலை, மலேரியா, காலரா நோய்கள் ஏற்படாமல் தடுக்கும். தொண்டைச்சளி, வறட்டு இருமல், புகைச்சல், தலையில் நீர் கோர்த்தல், அடிக்கடி தும்மல், போன்றவற்றைப் போக்கும். இரத்தத்தில் உள்ள சளியை நீக்கி இரத்தத்தை சுத்தப்படுத்தும்.

**வல்லாரை குடிநீர்**

எல்லா நோய்களுக்கும் கொடுக்கப்படும் மருந்தில் முதல் மருந்தாகவும், துணை மருந்தாகவும் இருப்பது வல்லாரை.

இதனை சரஸ்வதி மூலிகை என்று அழைக்கின்றனர். இது மூளைக்கும், அதன் செயல்பாட்டிற்கும் அதாவது அறிவுத் திறனுக்கும், ஞாபக சக்திக்கும் ஏற்ற மூலிகையாகும்.

காயவைத்த வல்லாரை பொடியை நீரில் போட்டு கொதிக்க வைத்து அனைவரும் அருந்தலாம்.

இது ஞாபக சக்தியைத் தூண்டுவதுடன், பித்த அதிகரிப்பைக் குறைக்கும். இரத்தத்தில் ஏற்படும் இரும்புச் சத்துக் குறைபாட்டைப் போக்கி இரத்தச் சோகையை நீக்கும். நரம்புகளுக்கு புத்துணர்வு கொடுக்கும். தொழுநோய், யானைக்கால் நோய், மூலம், மூட்டுவலி போன்ற வற்றிற்கு சிறந்த மருந்தாகும்.

**சீரகக் குடிநீர்**

சீர்+அகம் =சீரகம். அகம் என்னும் உடலை சீர்படுத்துவரே சீரகத்தின் சிறப்பான குணமாகும்.

சீரகத்தை நீரில் கொதிக்க வைத்து வடிகட்டி ஆறிய நீரை தினம் பருகி வருவது நல்லது. இது உடற் சூட்டைத் தணிக்கும். பித்தத்தைக் குறைக்கும். இரத்தத்தில் உள்ள தேவையற்ற பொருள்களை நீக்கி, இரத்தத்தைக் சுத்தப்படுத்தும். வியர்வை மற்றும் சிறுநீரைப் பெருக்கும்.

கண் சூடு குறைக்கும். வாய்ப்புண் வயிற்றுப்புண்ணைப் போக்கும். சரும நோய்கள் வராமல் தடுக்கும். இதயத்திற்கு இதமான குடிநீர்தான் சீரகக் குடிநீர்.

**மாம்பட்டைக் குடிநீர்**

மாம்பட்டையை இடித்து நீரில் கொதிக்க வைத்து குடிநீராக்கி அருந்தினால், நரம்புகள் பலப்படும், உடல் சூடு தணியும், சரும நோய்கள் ஏற்படாமல் தடுக்கும். பித்தத்தைக் குறைக்கும். அஜீரணக் கோளாறை நீக்கும்.

**நெல்லிப்பட்டைக் குடிநீர்**

நெல்லி மரப் பட்டையை காயவைத்து இடித்து பொடியாக்கி குடிநீரில் இட்டு காய்ச்சி அருந்துவது நல்லது.

இது ஆஸ்துமா, சளி, இருமல், வறட்டு இருமல், தொண்டைக் கட்டு, நுரையீரல் சளி, இரத்தச் சளி போன்றவற்றைப் போக்கும். இரத்தைச் சுத்தப்படுத்தும். உடல் சூட்டைத் தணிக்கும். குடல்புண்களை ஆற்றும். மூலநோய்க் காரர்களுக்கு மூலநோயின் பாதிப்பைக் குறைக்கும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வீடு வாடகைக்கு

யாழ்.வண்ணார்பண்ணையில் மூன்று பேருக்கு உட்பட்ட குடும்பம் வசிக்கக் கூடிய சிறிய வீடு வாடகைக்கு உண்டு.

தொடர்புகளுக்கு:
0773548333 (18882)(2-6-7)

## காணி விற்பனைக்கு

நீர்வேலி தச்சன் மடத்துக்கு அருகில் நடு ஒழுங்கையில் 4 பரப்புக் காணி விற்பனைக்கு உண்டு.

தொடர்புகளுக்கு:
011 2583499/ 072 2242805 (f/289)(2-6-7)

## திருமண சேவை

சுலபமான சுய தெரிவுமுறையில் மணமக்களைத் தெரிவுசெய்ய செவ்வாய், வியாழன் தவிர்ந்த மற்றைய நாள்களில் முற்பகல் 11.00 - 1.00 மணிக்குள் வேல் அமுதனிடம் விவரங்களை விசாரித்தறிக.
தொடர்பு:- 3-3, Medro Apartment, 55 th Lane, Wellawatte, Colombo - 06.
T.P. 0114873929/ 0112360488 (f/615)(2-6-7)

## கார் விற்பனைக்கு

நல்ல நிலையில் உள்ள Zen Estilo, NP, Kl.xxxx மோட்டார் இலக்கமுடைய குறைந்த Km ஓடிய கார் மேலதிக Fittings உடன் விற்பனைக்குண்டு.

தொடர்புகளுக்கு:
0728000122 (18913)(2-6-7)

# கேள்விகோரல்

வியாபார நோக்கத்திற்கு வாடகை அல்லது குத்தகை முறையில் இரு மாடிகளைக் கொண்ட கட்டடம் தேவைப்படுகின்றது.

யாழ்பாணத்தில் வியாபார முதலீடு செய்யும் நோக்கத்தில் 4,000சதுரஅடிகளைக் கொண்ட இரு மாடிகளையுடைய கட்டடம் யாழ் போதனா வைத்தியசாலைக்கு அண்மையில் வாடகைக்கு அல்லது குத்தகைக்கு தேவையாக இருப்பதால் இதில் விருப்பமுடையோர் தமதுகேள்விப் பத்திரங்களை லங்கா ஹொஸ்பிடல்ஸ் (Lanka Hospitals) ஆகிய ஸ்தாபனத்திற்கு சமர்ப்பிக்குமாறு கோரப்படுகின்றனர்.

இக்கட்டடத்திற்கு பின்வரும் வசதிகள் இருத்தல் வேண்டும்.

01) 4 - 5 வாகனத் தரிப்பிடம்
02) 3 பேஸ் மின்சாரம் (3 Phase Electricity)
03) . நீர்வழங்கல் வசதி
04) தொலைபேசிவசதி (SLTவிரும்பத்தக்கது)
05) நல்ல காற்றோட்டவசதி

கேள்விப் பத்திரங்களையும் தீர்மானங்களையும் 2012 ஆனிமாதம் 12ம் திகதிக்கு முன்னதாக பதிவுத் தபால் மூலம் அல்லது கூரியர் சேவை மூலம் அல்லது நேர்முகமாகவோ இலட்சணையுடனான கடித உறையில் பின்வரும் முகவரியிலுள்ள பெறுநர் குழுவிற்குக் கிடைக்குமாறு அனுப்பிவைக்கவும்.

இது தொடர்பாக மேலதிக விபரங்களிற்கு உதவிப் பொதுமுகாமையாளரான வைத்தியகலாநிதி இறைவன் அவர்களை 0773497474 எனும் தொலைபேசி இலக்கத்தில் தயவுசெய்து தொடர்புகொள்ளவும்.

முகவரி :
தலைவர் - பெறுநர் குழு
த லங்காஹொஸ்பிடல்ஸ் (The Lanka Hospitals)
578 எல்விட்டிகலமாவத்தை
நாரஹேன்பிட்டி
கொழும்பு - 05

LANKA HOSPITALS

# IP TECH

IP Tech Training & Consultancy

யாழ்ப்பாணத்தில் முதன்முதலாக **Computer System & Networking** துறையில் மட்டுமே கற்பித்தலை மேற்கொள்ள சிறந்த கணனி கற்கை நிறுவனமாக மிக சிறந்த ஆசிரியர்களுடன் **IP Tech Training & Consultancy** இங்கு உருவாக்கப்பட்டுள்ளது. நாங்கள் மாணவர்களுக்கு **Microsoft,Cisco & Linux** போன்றவற்றின் **Online Certifications** ஆக கற்பிக்கின்றோம்.



**கற்கை நெறி விபரங்கள்**

- Cisco Certified Network Associate (CCNA)
- Cisco Certified Network Professional (CCNP)
- Microsoft Certified Technology Specialist (MCTS)
- Microsoft Certified IT Professional (MCITP)
- Red Hat Certified System Administrator (RHCSA)
- Hardware & Advance Networking
- Diploma in Computer Networks

**விசேட சலுகைகள்**

- முதல் 3 மாதங்களுக்குள் பதிவு செய்யும் மாணவர்களுக்கு எல்லா கற்கை நெறிகளுக்கும் 50 % கட்டணக்கழிவு உண்டு.
- **CCNA, CCNP, MCTS & MCITP** ஆகிய கற்கை நெறிகளுக்கு பதிவு செய்யும் மாணவர்களுக்கு **"Hardware & Advance Networking"** என்ற கற்கை நெறி இலவசமாக வழங்கப்படும்.
- உங்களது கட்டணத்தை இலகுவான தவணை முறை அடிப்படையில் கட்டலாம்.

IP Tech Training & Consultancy
255, K.K.S Road, Mathavadi, Chunnakam Web: www.iptech.lk
Email: info@iptech.lk T.P: [illegible]

## நிதி சேகரிப்பில் அநாமதேய நபர்கள்

அச்சுவேலி, ஜூன் 3

புத்தூர் ஸ்ரீ சோமஸ்கந்த கல்லூரியின் அபிவிருத்திக்கு பயன்படுத்துவதற்கு நிதி உதவிகோரி அனாமதேய நபர்கள் நிதி சேகரிக்கும் மோசடியில் ஈடுபட்டுள்ளனர்.

இந்த நிலையில் எவரும் நிதி வழங்க வேண்டாம் என்று கல்லூரியின் அதிபர் ஆர். இராஜமனோகரன் அறிவித்துள்ளார்.

கல்லூரியின் பெயலில் நிதி சேகரிப்பதற்கு யாருக்கும் அனுமதி வழங்கப்படவில்லை என்றும் கல்லூரியின் பெயலில் நிதி வசூலிக்க முற்படுபவர்களை இனங்கண்டு கல்லூரிக்கு தகவல் வழங்குமாறும் அவர் தெரிவித்துள்ளார். (ம-11)

## விற்பனைக்கு

250 மிற்சுபிசி ரக கூலர் (10 அடி) விற்பனைக்கு உண்டு. நகைத் தொழிலுக்குரிய தட்டு, கம்பி, அரைக்கும் மெசின் மற்றும் டை மெசின் விற்பனைக்கு உள்ளது.

தொடர்புகளுக்கு: 0777804493 (18918)(2-6-7)

## பணியாளர்கள் தேவை

வவுனியா A-9, பிரதான வீதியில் இயங்கும் White stone றெஸ்ரோரண்டுக்கு பணியாளர் கோரப்படுகின்றனர்.

★ சமையலாளர்
★ சமையல் உதவியாளர்
★ உபசரிப்பாளர்
★ அலுவலகப் பணியாளர்

ஆண்கள் மட்டும் - உணவு, தங்குமிட வசதிகள் இலவசம்

தொடர்பு: 024 222 6262, 077 7367 767 (16868) (45.6.7)

## வாடகைக்கு



இரண்டு மாடிக் கட்டடம் (யாழ்.இந்துக் கல்லூரிக்கு அருகில்) மாத வாடகைக்கு அல்லது ஒப்பந்த அடிப்படைக்குக் கொடுக்கப்படும். வங்கிகள், அரசசார்பற்ற நிறுவனங்கள், விரிவுரை வகுப்புக்களுக்கு உகந்த இடம்.

தொடர்புகளுக்கு: 0773577212 (f/4122)(2-6-7)

## காணவில்லை



கெருடாவில் வடக்கு, சாவகச்சேரியைச் சேர்ந்த **ஆறுமுகம் குணசிங்கம்** (562024026V) என்பவரை 14.05.2012 அன்று 11 மணிக்கு வீட்டில் இருந்து புறப்பட்டவர் இன்னமும் வீடு திரும்பவில்லை. இவருடைய தகவல் தெரிந்தவர்கள் பொலிஸ் நிலையத்திற்கோ அல்லது கீழ்காணும் இலக்கத்திற்கோ தொடர்பு கொண்டு தெரிவிக்குமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

தகவல்:- மனைவி புஸ்பராணி - 077 3588252, பராசக்தி கலை, கலாசார நல்வாழ்வு மன்றத் தலைவர் - 077 1530543 (14724)(2-6-7)

## மரண அறிவித்தல்

### கந்தையா இராசரத்தினம் (செட்டியார்)



சுன்னாகம் கிழக்கைப் பிறப்பிடமாகவும் இந்தியா, திருச்சியை வதிவிடமாகவும் கொண்ட கந்தையா இராசரத்தினம் (24.05.2012) வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கந்தையா-செல்லம்மா தம்பதியரின் அருமைப் புதல்வனும், வடிவேலு- சரஸ்வதி தம்பதியரின் அன்பு மருமகனும், காலஞ்சென்ற பரமேஸ்வரி அவர்களின் பாசமிகு கணவரும், கங்கதேவன் (லண்டன்), தர்மதேவன் (நோர்வே), இராஜதர்ஷினி (லண்டன்), ரமணதேவன் (நோர்வே), காலஞ்சென்ற விஜயதர்ஷினி மற்றும் விஜயதேவன் (லண்டன்) ஆகியோரின் அன்புத் தந்தையும், வேணுகா (லண்டன்), சதா (நோர்வே), மனோகரன் (லண்டன்), மஞ்சுளா (நோர்வே), சுமித்தா (லண்டன்) ஆகியோரின் பாசமிகு மாமனும், சிவபாக்கியம் (பஞ்சனம்), காலஞ்சென்ற நடராசா, காலஞ்சென்ற பாலாமணி, காலஞ்சென்ற தேவி மற்றும் தம்பிராசா, கிட்ணர் (தங்கர்), சற்குணம் ஆகியோரின் அருமைச் சகோதரரும், மீனாம்பாள், தெய்வேந்திரம், பாலேஸ்வரி, பரமானந்தராசா, சிவானந்தராசா ஆகியோரின் அன்பு மைத்துனரும், சஞ்சிகா, சருகேஷ்(லண்டன்), ரூபிகா, சாரிகா, ஹரிசன் (நோர்வே), தாரணி, தாருகன் (லண்டன்), ரட்சிகா (நோர்வே), காவியன், அகல்யா (லண்டன்) ஆகியோரின் பாசமிகு பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (03.06.2012) ஞாயிற்றுக்கிழமை அவரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் ஓயாமரி (இந்தியா, திருச்சி) மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

Tharnadevan
05, Chelampu st,
Ayyarthottam L.T.C. Caloni,
K.K.Nagar Trichy-21.
சுன்னாகம் கிழக்கு, சுன்னாகம். (18845) (6,14,10)

தகவல்:
பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்
தொலைபேசி இல.
00919865270839

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முதுமையில் தாய்மை அடையும் பெண்கள்

இப்போதெல்லாம் திருமணம் ஆன தம்பதியர் பலர், குழந்தை பெற்றுக் கொள்வதை தள்ளிப்போட்டு வருகிறார்கள். இவர்களில் பலர், தங்கள் லட்சியத்தை எட்டுவதற்காகவும், குடும்பத் தேவைகள் அனைத்தையும் பூர்த்தி செய்வதற்காகவும் குழந்தை பெறுவதை சிறிது காலத்திற்கு தள்ளிப்போடுகிறார்கள்.

இப்படி, குழந்தை பெறுவதை தள்ளிப்போட்டு, முதுமையில் தாய்மைப்பேற்றை அடையும் பெண்களின் எண்ணிக்கை சமீப காலமாக அதிகரித்து வருவதாக சமீபத்தில் லண்டனில் நடைபெற்ற மருத்துவ மாநாட்டில் ஆய்வு கட்டுரை ஒன்று சமர்ப்பிக்கப்பட்டது.

அதில் மேலும் தெரிவித்ததாவது:-

பெண்கள் வயது அதிகம் ஆன கால கட்டத்தில் தாய்மைப்பேறு அடைய விரும்புவது என்றபிரச்சினை உலகின் பல நாடுகளிலும் காணப்படுகிறது.

செயற்கை கருத்தரிப்பு முறை கண்டு பிடிக்கப்பட்டு சுமார் 25 ஆண்டுகளுக்கு மேல் ஆகிவிட்டாலும், இந்த காலதாமதமான தாய்மைப்பேறு என்பது மருத்துவ அறிவியலின் உதவியுடன் அடையக் கூடியதாக ஒன்றாகவே ஆகியுள்ளது.

ஆனால், மருத்துவ ரீதியாக இது சாத்தியமாகிவிட்டாலும் 40 வயதுக்கு மேல் குழந்தை பெற்றுக்கொள்ளும் தாய்மார்கள் உடல்ரீதியாகப் பல பிரச்சினைகளை எதிர்நோக்குகிறார்கள். மேலும், இவ்வாறு பிறக்கும் குழந்தைகளும் மருத்துவ ரீதியான பல பிரச்சினைகளை எதிர்கொள்கின்றன.

இதுதவிர, சமூக, உளவியல் ரீதியான பிரச்சினைகளும் இம்மாதிரியான கால தாமதமான தாய்மைப்பேறு காரணமாக ஏற்படுகின்றன என்று, பல தகவல்கள் அதில் இடம்பெற்றிருந்தன.

நீங்களும் குழந்தை பெறுவதை தள்ளிப் போடும் தம்பதியர் என்றால் இப்போதே உஷாராகிவிடுங்கள். குறித்த காலத்தில் விதைத்தால்தான் பயிர் சரியாக கிடைக்கும் என்பது இதற்கும் பொருந்தும்.




# டொல்பினை இறக்குமதி செய்யத் தடை



சுவிட்சர்லாந்தின் நாடாளுமன்றம் விலங்கு உரிமைச் சிந்தனையாளர்களின் வழிகாட்டுதலின் படி விலங்குகளை அதன் வாழ்விடத்துக்குப் பொருந்தாத வேறு இடங்களில் கொண்டுவந்து வளர்க்கக் கூடாது என தெரிவித்துள்ளது.

டொல்பின், திமிங்கிலம் போன்ற கடல்வாழ் உயிரினங்களைக் கடலே இல்லாத சுவிட்சர்லாந்தில் வைத்து வளர்ப்பது இயற்கைக்கு மீறிய செயல் என்பதால் இதனை விலங்கு உரிமையாளர் ஆதரித்துள்ளனர். ஆனால் விலங்குக் காட்சிசாலைகள் இந்தத் தீர்மானத்திற்கு எதிர்ப்பு தெரிவித்தன.

மார்ச் மாதம் நடத்திய பொது வாக்கெடுப்பில் டொல்பின்களை இறக்குமதி செய்யக்கூடாது என்பதுடன் இங்கு வைத்து வளர்க்கவும் கூடாது என முடிவுக்கு வந்தது.

விலங்குரிமைகளுக்காகப் போராடி வரும் வழக்கறிஞர் ஆண்டோயின் கோஷெல், இந்தத் தீர்மானத்தை ஆதரித்ததுடன் இது ஒரு நல்ல ஆரம்பம் என்று வரவேற்றார். இறக்குமதி செய்வதனால் ஏற்படும் அதே விளைவுகள் தாம் இங்கு வைத்து வளர்ப்பதனாலும் ஏற்படும் என்று ஊடகத்திற்கு அளித்த பேட்டியின் போது தெரிவித்தார்.

விலங்குகளை பாதுகாக்கும் தனிப் பண்புடைய இந்தத் தீர்மானம், சுவிஸ்ஸின் அரசியலுரிமைச் சட்டத்துடன் ஒத்துப் போவதாகவும் கோஷெல் கூறியுள்ளார்.







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உங்களுக்கான ஆடம்பரமான வீடு யாழ்ப்பாணத்தில்

**TULASI MAHAL**

யாழ்ப்பாணத்தில் முதல் ஆடம்பர அபார்ட்மெண்ட் திட்டம்

யாழ் நகரில், கச்சேரி வீதியில் வசதியாக அமைந்திருக்கிறது துளசி மஹால். இரண்டு படுக்கை அறை, ஒரு வரவேற்பறை, சாப்பாட்டறை மற்றும் நவீன வசதியுடைய சமையலறை என்பன கொண்ட அபார்ட்மென்களாக தங்குமிட வசதிகள் உள்ளன. இரண்டு அறை கொண்ட அபார்ட்மென்கள் சில, தேவையேற்படின் மேலதிகமாக ஒரு தனிப் படுக்கையறையை வாடகைக்கு எடுத்துக் கொள்ளும் வசதி கொண்டவை.

**இப்போது கட்டட வேலைகள் நடைபெறுகின்றன. நிர்மாணப் பணிகள் 2013 ஆம் ஆண்டு ஒக்டோபரில் பூர்த்தியாகும்.**

உங்கள் விருப்பை உடனடியாக எங்களுடன் தொடர்பு கொண்டு பதிவுசெய்து கொள்ளுங்கள்

**விலை 12 மில்லியன் ரூபாவிலிருந்து**



Sanken
www.tulasimahal.lk

**0714 960 160**
பெனின்சுலர் புரொபர்டி டிவலபர்ஸ் பிரைவேட் லிமிட்டட்
இல. 10, அல்பர்ட் கிரசன்ட், கொழும்பு 7.



TOP RANKED UNIVERSITY www.herts.ac.uk | www.hibt.uk.com

University of Hertfordshire UH SIXTY YEARS

# Study in UK



At the University of Hertfordshire we have established a valuable reputation that will help shape your future.

- Entrepreneurial University of the year 2010
- Top 4% of world Universities - The World University Rankings 2011/12
- Top UK University for Business Courses

**2012 செப்டெம்பர் மாத நுழைவு இப்பொழுது ஆரம்பித்துள்ளது**

இப்பல்கலைக்கழகத்தில் 500 மேலதிக தபால் மூல பட்டப்படிப்பிற்கான பாடநெறிகள் அடங்கியுள்ளது

- Art and Design
- Film, Music and Media
- Business and Management
- Accounting and Finance
- MBA
- Humanities, Law and Education
- Computer Science and Engineering (Aerospace, Automotive, Electrical and Mechanical)
- Physics, Astronomy and Maths
- Biological and Life Sciences

புலமைப்பரிசில்களுக்கான ஆரம்பம்

Safe campus in a fantastic location - only 25 minutes by train to central London
First-class learning facilities and inspiring world class teaching

சாதாரணதர பெறுபேறுகளுக்கமைய அனுமதிப்பத்திரம் வழங்கப்படும்

மேலதிக தகவல் தொடர்புகளுக்கு, உடனே அழைக்கவும்.
**UAS Universal Academic Services**
15 ½,கிருலப்பன அவனியூ, கிருலப்பன, கொழும்பு – 05.

உடனடி அழைப்பு : 0115 054 888 0112 512 976

மின்னஞ்சல் : srilanka@uas.org.uk | காரியாலய நேரத்திற்கு பின் அழையுங்கள் : 0778 756 949



பசுமையான, மென்மையான, மிருதுவான இளம் தோற்றமுடைய அழகிய சருமம் மறுநாள் காலையில்

# NNO

## நொரிஷிங் நைட் ஒயில்

ஜொஜோபா எண்ணெய் மற்றும் விற்றமின் E அடங்கியதால், சருமத்துக்கு ஈரலிப்பு, போஷாக்கு மற்றும் இளமையான தோற்றத்தையும் வழங்குகிறது...




விலை 650/=

**NNO**
செயற்திறன் மிக்கதாய், இரவு முழுவதும், ஈரலிப்பு, போஷாக்கு போன்றவற்றை வழங்கி சருமத்தை இளமையாக திகழச் செய்கிறது

சிறந்த சேர்மானம் மற்றும் இதமான நறுமணம் கொண்டது

நாடு முழுவதுமுள்ள முன்னணி பார்மசிகள் மற்றும் சுப்பர் மார்க்கட்களில் விற்பனைக்குண்டு.

அனுமதி பத்திரம் வழங்கியவர்
மெகா உயிரியல்விஞ்ஞானம் (அவுஸ்திரேலியா) பிரை லிமிட்டெட
தொலைபேசி: +94 11 4305366, +94 11 4366576, +94 773 410071
www.megawecare.lk/nno

MEGA We care Human Wellness

நாடெங்கிலுமுள்ள சுப்பர் மார்க்கட்களிலும் பார்மசிகளிலும் ... 1897 ஆம் ஆண்டிலிருந்து இறக்குமதி செய்து விநியோகித்து வருகிறது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



கல்வியில் விழிப்புணர்வு

08



எப்படி நிற்கிறது?

05



அடிமைகளின் மீட்பர்

07

நல்லிணக்கம் இல்லாத அறிக்கை



23

எதை மாற்ற விரும்புகிறீர்கள்



17


# சூரியகாந்தி

உதயன்

ஞாயிறு சிறப்பம்சம்

01

உதயன் 03 ஜூன் 2012 ஞாயிற்றுக்கிழமை பக்கங்கள்: இருபத்துநான்கு


# பாவங்களைக் கழுவுதல்

ஊரான்யன்

மனிதாபிமான நடவடிக்கை என்றால் என்ன?

- போர், இயற்கை அழிவுளால் பாதிக்கப்படும் பகுதிகளுக்குச் சென்று அங்குள்ள மக்களுக்கு இன, மத பேதமின்றி, உடனடியாகவும் பக்கச் சார்பின்றியும், எந்தவொரு ஆபத்தின் மத்தியிலும், அந்த மக்கள் குறித்த துயரில் இருந்து மீண்டெழும் வகையிலும், தொடர்ந்தும் பாதிக்கப்படாதவாறும் நடவடிக்கை எடுத்தல்.

அழிவுகளை இனங்காணல், பாதிக்கப்பட்ட பகுதிகளில் அகப்பட்டுள்ளவர்களை மீட்டெடுத்தல். உணவு, உறைவிடம், மருத்துவம் போன்ற அடிப்படை வசதிகளை ஏற்படுத்திக் கொடுத்தல், மக்களுக்கு இடையே தடைப்பட்டு போன தொடர்பாடலை மீள ஏற்படுத்தல் என்பன இத்தகைய மனிதாபிமான நடவடிக்கைகளில் சிலவாகும்.

(புரிந்துணர்வு ஒப்பந்தம் நடைமுறையில் இருந்த காலப் பகுதியில் வன்னியில் முழத்துக்கு முழம் முளைத்திருந்த சர்வதேச தொண்டு நிறுவனங்கள் வெளியிட்டிருந்த பளபளப்பான தாளில், நான்கு வர்ணங்களில் அச்சிடப்பட்ட, துண்டுப் பிரசுரம் ஒன்றில் பொறிக்கப்பட்டிருந்த மகா வாக்கியங்கள் இவை)

---

தொண்டு நிறுவனங்கள் எல்லாமே துயருக்குள் மூழ்கியிருப்போரின் கண்ணீரைத் துடைப்பதற்காகவே எழுந்தவை. ஹென்றி டுனாண்ட் என்ற செல்வந்தர் போரின் அழிவுகளையும் அதன் போது காயமடைந்த வீரர்கள் படுகின்ற அவலத்தையும் தற்செயலாகக் காண நேர்ந்ததன் விளைவாகவே சர்வதே செஞ்சிலுவைச் சங்கம் பிறப்பெடுத்தது. இப்படி அநேகமாக எல்லாத் தொண்டு நிறுவனங்களும் உருவெடுத்தமைக்கு ஏதேனும் ஒரு 'பிளாஷ்-பேக்' கதை இருக்கவே செய்யும்.

அந்தக் கதைகள் வெவ்வேறான தளங்களில், வெவ்வேறான மனிதர்களைப் பற்றிப்பேசினாலும், மனிதாபிமானம் என்ற விடயத்தையே அடி நாதமாக அவை கொண்டிருக்கும்.

'ஓயாத அலைகள்-3' நடவடிக்கை மூலம் தமது இராணுவ மேலாதிக்கத்தை விடுதலைப் புலிகள் நிலை நாட்டிய பின்னர் நோர்வே அரசின் அனுசரணையுடன் உருவாக்கப்பட்ட புரிந்துணர்வு ஒப்பந்தம் தற்காலிகமாகப் போருக்கு ஓய்வைக் கொடுத்தது.

இந்தக் காலப் பகுதியில் பல்வேறு அபிவிருத்தித் திட்டங்களை நடைமுறைப்படுத்தப் போவதாகக் கூறிக்கொண்டு, புழுதியைக் கிளப்பிக் கொண்டு சீறிவரும் வெண்ணிற வாகனங்களோடு, பல வர்ணங்களுடன் கூடிய இலச்சினைகளோடு, மக்களின் மீட்பர்கள் தாமே என்பது போல வந்திறங்கின ஏராளமான தொண்டு நிறுவனங்கள். ஆனால் அவற்றின் கெட்ட காலமோ, என்னவோ அப்போது போர் இல்லாததால் அந்த நிறுவனங்கள் எந்தவொரு மனிதாபிமான நடவடிக்கையையும் செய்ய முடியவில்லை. எனவே ரூம் போட்டு யோசித்து, விதம் விதமான வேர்க்சொப்களையும், செயற் திட்டங்களையும் அவை முன்னெடுக்கத் தொடங்கின.

கை கழுவுவது எப்படி? குழந்தைக்கு பால் கொடுப்பது எப்படி?, தாயும் பிள்ளையும் உரையாடுவது எப்படி? என்பன போன்ற முக்கியத்துவம் வாய்ந்த பயிற்சிப் பட்டறைகளை அவை நடத்தின. இது தவிர ஒரு சில அபிவிருத்தித் திட்டங்களும் - வீதிப் புனரமைப்பு, குளங்கள் தூர்வாரல் போன்றன செயற்படுத்தப்பட்டன.

தம் பிரசன்னத்தின் நோக்கத்தை வெளிப்படுத்துவதற்காக தொண்டு நிறுவனங்கள் துண்டுப் பிரசுரங்களையும் அடிக்கடி அச்சிட்டு வெளியிட்டு வந்தன. அவற்றில் ஒன்றிலேயே மேற்படி மகா வாக்கியங்கள் இடம்பெற்றிருந்தன.

ஆனால் சும்மா பொழுது போகாமல் அச்சிட்ட இந்த வார்த்தைகள் பின்னொரு காலத்தில் தமக்குச் சங்கடத்தை ஏற்படுத்தும் ஒரு விடயமாக மாறப் போகின்றது என்பது அப்போது அந்தத் தொண்டு நிறுவனங்களுக்குத் தெரியவேயில்லை.

போர் மூண்டது. இந்த முறை எந்தவித ஈவிரக்கமுமின்றி, உயிர் தின்னுதலையும், நிலம் விழுங்குதலையும் மட்டுமே போர் முழு மூச்சாகக் கொண்டு ஆவேசத்தோடு மேலெழுந்தது. எல்லா வீடுகளின் வாசல்களிலும் சாவும், பட்டினியும், நோயும் சப்பாணி கட்டிக்கொண்டு உட்கார்ந்திருந்தன. அவற்றிடம் அகப்படாது வாழவே முடியாது என்ற நிலை.

நாளொரு இடமும், பொழுதொரு தங்குமிடமுமாக நிரந்தரமில்லா வாழ்வே மக்களுக்குச் சொந்தமாகிப் போனது. இதுநாள் வரையும் ஏ.சி. அறைகளுக்குள் இருந்து திட்டங்களை நடைமுறைப் படுத்தி வந்த தொண்டு நிறுவனங்கள் உண்மையிலேயே மனிதாபிமான நடவடிக்கையில் இறங்க வேண்டிய கட்டாயம். காயப்பட்டோரை உடனடியாக மருத்துவமனைகளுக்கு எடுத்துச்செல்லல், உணவு மற்றும் மருந்துப் பொருள்களை எடுத்து வருதல், தற்காலிகத் தங்குமிடங்களை அமைத்தல், மக்களிடையே தொடர்புகளை ஏற்படுத்திக் கொடுத்தல் என்னும் செயற்பாடுகளில் இந்தத் தொண்டு நிறுவனங்கள் இறங்கின.

இதனால் போரால் நொந்து போன மக்களுக்கு சிறிதேனும் ஒத்தடம் கிடைத்தது. போர் வன்னியின் எல்லா வாசல்களையும் அடைத்தபடி, மக்களின் இருப்பிடங்களை குறுக்கியபடி வளையமிட்டு நெருங்குகையில் மிகச் சிறிய இடைவெளியை உண்டு பண்ணி, அவர்கள் சுவாசிப்பதற்கேனும் காற்றைக் கொண்டு வர தொண்டு நிறுவனங்கள் உழைத்தன.

சர்வதேச தொண்டு நிறுவனங்கள் போர் நடைபெறும் பகுதிகளில் இருப்பதால் தாம் நினைத்தபடி குருதி வேட்டையை நடத்த முடியாது என்று அதிகாரத்துக்கு நன்கு தெரியும். ஏனெனில் தொண்டு நிறுவனங்கள் யாவும் தம்மிடமுள்ள அதி சக்தி வாய்ந்த தொடர்பாடல் சாதனங்கள் மூலம் போரின் போது தெறிக்கின்ற ஒவ்வொரு குருதித்துளியையும்



தமது தலைமையகங்களுக்கு ஆதாரங்களோடு அனுப்பிக் கொண்டிருந்தன.

மிகக்கோரமாக அரங்கேற்ற எண்ணியிருந்த இனவழிப்பு ஆற்றுகைக்கு இந்த ஆதாரங்கள் தடையாக இருக்கும் என்று எண்ணிய அரசு, போர் நடக்கும் இடங்களில் இருந்து தொண்டு நிறுவனங்கள் வெளியேற வேண்டும் என்று கடுந்தொனியில் கட்டளையிட்டது. ஆனால் குறித்த சர்வதேச தொண்டு நிறுவனங்கள் வெளியிட்டிருந்த துண்டுப் பிரசுரங்களில் அச்சிட்டிருந்த மகா வாக்கியங்களை மக்கள் மனப்பாடம் பண்ணி வைத்திருந்ததால், ஒருபோதும் போர் அழிவில் சிக்கியிருக்கும் தங்களைக் கைவிட்டு விட்டு தொண்டு நிறுவனங்கள் வன்னியில் இருந்து வெளியேற மாட்டா என்றே நம்பினார்கள். அது பொய்த்துப்போனது.

சிம்ம ராசியும் தனு லக்கினமும் கூடிய ஒரு சுபதினத்தில் வன்னியில் இருந்து வெளியேற தொண்டு நிறுவனங்கள் முடிவெடுத்தன.

அவற்றில் ஐ.நா. சார்ந்த அமைப்புகளே இந்த முடிவை முந்திக் கொண்டு எடுத்தன. மூதூரில் 'அக்சன் பாம்' ஊழியர்களுக்கு நடந்த நிலை எமக்கும் வரக்கூடாது என்பதற்காகவே இந்த முடிவை எடுக்கும் நிலைக்கு நாம் நிர்ப்பந்திக்கப்பட்டுள்ளோம் என்று அவை சப்பைக்கட்டு கட்டின.

இப்போது இலங்கை மீது மேற்கொள்ளப்படுகின்ற அழுத்தத்தின் ஒருதுளியையாவது அப்போது சர்வதேசநாடுகள் பிரயோகித்திருந்தாலாவது, வன்னியில் இருந்து தொண்டு நிறுவங்களின் வெளியேற்றத்தை தடுத்திருக்கலாம்.

ஆனால் எல்லா நாடுகளும் கும்பகர்ணனின் தம்பியாக மாறி ஆழ்ந்த உறக்கத்தில் இருந்தன. தமது மூட்டை முடிச்சுக்களுடன் தொண்டுநிறுவனங்கள் வெளியேற முயன்ற போது, ''எங்களை விட்டுட்டுப் போகாதீங்கோ. நீங்களும் போனால் அவங்கள் எங்களை அழிக்கிறதை கடவுளாலையும் தடுக்க முடியாமல் போடும்'' என்று கண்ணீரோடு குறித்த நிறுவனங்களுக்கு முன்னால் அகிம்சைப் போராட்டத்தில் மக்கள் குதித்தனர்.

வழமையாகவே இத்தகைய சர்வதேசத்தின் காதுகளில் ஓங்கி ஒலிக்க முயற்சிக்கும் வெகுஜனக் குரல்களின் பின்னணியில் புலிகள் இருப்பர். ஆனால் இதன் போது எந்தவித பின்புல உந்துதலும் இன்றி தாமாகவே, தங்களை காப்பதற்காக மக்கள் இந்தப் போராட்டத்தில் குதித்தனர்.

தொண்டுநிறுவனங்கள்வெளியேறிவிட்டால், 'அம்பயர்' இல்லாத ஐ.பி.எல். மட்ச் மாதிரி, அதிகாரவர்க்கம்தான் நினைத்தபாட்டுக்கு எப்படி வேண்டுமானாலும் விளையாடலாம்.


*(22ஆம்பக்கம் பார்க்கவும்)*


எந்த விதியை


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முறிகண்டிப் பிள்ளையார் யாருக்கு சொந்தமாவார்?

விகேளம்



"அதில இறங்கி ஒரு கச்சான் பை என்றாலும் வாங்கிக் கொண்டு வந்திருக்கலாம் தானே அது ஒரு புதுமையான கடவுள். கும்பிட்டதாகவும் போச்சுது."

வன்னியில் மட்டுமல்ல ஏ-9 வீதியைக் கடந்து வவுனியா நோக்கியோ, யாழ்ப்பாணம் நோக்கியோ செல்லும் பலர் அந்தக் கோயில் மீதான நம்பிக் கையையும் அங்கே விற்கப்படும் கச்சானுக்கான மவுசையும் என் றும் நினைவில் வைத்திருந்தனர்.

இற்றைக்கு 92 வருடங்கள் பழமையான அந்தக் கோயிலின் வரலாறு வெள்ளையர்களால் எழுதப்பட்டது எனலாம். பிரிட் டிஷ்காரர்கள் இலங்கையில் கிறிஸ்தவ மதத்தைப் பரப்புவ தற்காக நிலைகொண்டிருந்த அந் தக் காலத்தில், இந்து சமயத்தைப் எவரும் பின்பற்ற முடியாது எனக் கருதப்பட்ட காலத்தில் பிள்ளை யார் கோயில் ஒன்றுக்கு பிரிட்டிஷ் விக்ரோறியா மாகாராணியே நன் கொடையாக ஆறு பேர்ச் நிலப் பரப்பை அன்பளிப்பாக வழங்கி யிருந்தார் என்பது அந்தக் கடவு ளின் புதுமையே.

றோட்டு வேலை, காட்டில் மரம் வெட்டுதல், புகையிரதப் பாதை அமைப்புப் போன்ற பணி களுக்காகத் தென்னிலங்கையைச் சேர்ந்தவர்களும், வடபகுதியைச் சேர்ந்தவர்களும் முறிகண்டியை அண்டிய காட்டுப் பகுதியில் வேலை செய்துகொண்டிருந்த காலம் அது. வேலைகளை இலகு படுத்துவதற்காகவும் குடி தண்ணீ ரைப் பெற்றுக்கொள்வதற்காகவும் அந்தக் காலத்தில் மூன்று கிலோ மீற்றருக்கு ஒரு கிணறு என்ற கணக்கில் கிணறுகள் வெட்டப் பட்டன. அப்போது முறிகண்டிப் பகுதியில் வெட்டப்பட்ட கிணற் றில் இருந்து கண்டெடுக்கப்பட்ட பிள்ளையார் வடிவிலான கல் ஒன்றை பாலை மரத்தின் கீழ் வைத்து வழிபடத் தொடங்கினர் அங்கு வேலையில் ஈடுபட்டி ருந்த சிலர். கிணறு கோயிலுக்குக் கிழக்குப் பக்கமாக ஆறு அடி சுற்றுவட்டத்தில் இப்போதும் உள்ளது. எந்தக் கோடை காலத்தி லும் நீர் வற்றாத, ஆழம் குறைந்த கிணறாகவே அது காணப்படு கிறது.

பின்னர் பிள்ளையாருக்கு ஒரு சிறிய கொட்டகை அமைக்கப் பட்டது. இதைக் கேள்வியுற்ற வெள்ளைக்காரர்கள் அங்கு சென்று அந்தச் சிலையை அகற்றி விட்டுப் பாலை மரத்தைத் தறிக்க முற்பட்ட வேளை அந்த மரத்தில் இருந்து இரத்தம் கொட்டியதாக வும் இதனை விக்ரோறியா மகா ராணிக்கு அவர்கள் தெரியப் படுத்தியதாகவும் கூறப்படுகிறது. அதிர்ச்சியுற்ற விக்ரோறியா மகாராணி அந்தப் பாலை மரத் தைத் தறிக்கத் தடை விதித்த துடன் அந்த இடத்தில் பிள்ளை யாரைத் தொடர்ந்து வழிபட வசதி யாக ஆறு பேர்ச் நிலத்தையும் அன்பளிப்புச் செய்தாராம்.

இதன்போது கோயிலைப் பராமரிக்கத் தொடங்கினார் சின் னட்டியார் என்பவர். இவர் அந் தப் பகுதியில் நீர்ப்பாசனத் திணைக் கள ஓவசியராகக் கடமையாற்றிக் கொண்டிருந்தார். சின்னட்டியார் திருமணம் செய்யாததால் அவ ருக்கு வயது செல்ல அவரது மருகனான பொன்னுத்துரை என்பவருக்குக் கோயிலின் உரி மத்தை மாற்றிக் கொடுத்தார்.

1940 ஆம் ஆண்டுக்குப் பின்னர் இரண்டாம் உலகப் போர் மூண்டிருந்த காலத்தில் சின்னட்டி யாரின் தம்பியாரான செல்லப்பா என்பவர் சிங்கப்பூரில் இருந்து இலங்கைக்கு இடம்பெயர்ந்தார். இதன்போது முறிகண்டிக்கு வந்த அவர், தனது அண்ணனின் கோயிலை அவதானித்து அதன் வருவாயில் கண்வைத்துள்ளார்.

பொன்னுத்துரையின் உரிமத் தைத் தன்வசம் ஆக்குவதற்காக முல்லைத்தீவு நீதிமன்றில் வழக்கு ஒன்றைத் தாக்கல் செய்தார். எனினும் சின்னட்டியாரால் உரி மம் பொன்னுத்துரைக்கு எழுதப் பட்டதால் அதனை வாதாடி வெல்ல முடியாது போக அண்ணனின் சொத்து என்ற அடிப்படையில் பொன்னுத்துரை என்பவர் மனமு வந்து செல்லப்பாவுக்கு என்பவ ருக்கு ஒரு வருட பங்கைக் கொடுக்க முன்வந்தார். (பங்கு ஒருவருடம் பொன்னுத்துரைக் கும் மற்றைய வருடம் செல்லப் பாவுக்குமாக மாறிமாறி வரும்). எனினும் பொன்னுத்துரையிடம் இருக்கும் அந்தப் பங்கையும் கைப்பற்றுவதற்காக செல்லப்பா தனது மகளை (தன லட்சுமி) 1948இல் பொன்னுத்துரைக்குத் திருமணம் செய்து வைத்து அன் றைய தினமே உரிமத்தை மாற்றி எழுதிக் கொண்டார். பின்னர் பொன்னுத்துரை 1975இல் இறந்து போக மாவிட்டபுரம் பகுதியில் இருந்து கல்விப் பணிக்காக வன் னிக்கு வந்திருந்த அரசரட்ணம் என்ற ஆசிரியர் முறிகண்டியா னுக்குத் திருப்பணி செய்யத் தொடங்கினார். பின் வந்த காலப் பகுதியில் செல்லப்பாவின் ஆளு கையின் கீழ் கோயில் இருந்தது.

1990களில் முறிகண்டிக் கோயிலை விடுதலைப் புலிகள் தமது நிர்வாகத்தின் கீழ் கொண்டு வந்தனர். கோயிலில் இருந்து கிடைக்கும் வருமானம் விடுத லைப்புலிகளால் நடத்தப்பட்ட சிறுவர் இல்லங்களுக்குப் பகிர்ந்த ளிக்கப்படவேண்டுமென முடிவு செய்யப்பட்டு அவ்வாறே நடை முறைப்படுத்தப்பட்டதாம். இந் தக் காலப்பகுதியில் கோயிலைச் சுற்றி கடைகளும் பிரபல்யம் ஆகின.

19 வருடங்களாக விடுதலைப் புலிகளின் நிர்வாகத்தின் கீழி ருந்த முறிகண்டிப்பிள்ளையாரின் உரிமம் 2009 ஆம் ஆண்டு போர் முடிந்தபின் இலங்கை இந்து மா மன்றத்தின் பெயரில் கொண்டு வரப்பட்டது.

### உரிமை வழக்கு

செல்லப்பாவின் மகனான குணரட்ணம் குடும்பம் 1988ஆம் ஆண்டு காலப்பகுதியில் நாட்டை விட்டு வெளியேறி இந்தியாவில் வசித்து வந்தனர். குணரட்ணம் செல்லப்பா என்பவரின் மகன் மணிவண்ணன் (இப்போது கோயிலுக்கான உரிமம் கோரு பவர்) என்பவர் இந்தியாவில் இருந்து இலங்கைக்கு போர் முடிந்த பின்னர் வந்துள்ளார். இந்த நிலையில் கோயிலுக்கான உரிம வழக்கு மீண்டும் மணி வண்ணன் என்பவரால் தொடரப் பட்டுள்ளது. "முறிகண்டிப் பிள் ளையார் கோயிலைத் தன்னிடம் ஒப்படைக்க வேண்டும், பரம் பரை வழிவந்த தர்மகர்த்தா நானே" என்று அவரது முறைப் பாட்டில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை பிரிட்டிஷ் விக் ரோறியா மகாராணியால் வழங் கப்பட்ட காணிக்கான உரிமத்தில் பிள்ளையாருக்கு அன்பளிப்பு என்றே எழுதப்பட்டுள்ளது. அத னைப் பராமரித்து வந்தவர்கள் என்ற அடிப்படையில் பரம்பரை பரம்பரையாக சின்னட்டியாரின் வழிவந்தவர்கள் உரிமம் பெற்று வந்துள்ளனர். இந்த நிலையில் இப்போதுள்ள மணிவண்ணன் என்பவரும் அந்த உரிமத்தைக் கோருகிறார் என்று முறிகண்டி யைச் சேர்ந்த முதியவர் ஒருவர் தெரிவித்தார்.

இதேவேளை, கோயிலைச் சூழவுள்ள கடைகள் அவை அமைந்துள்ள காணிகளும் குத் [illegible] வையே. எனினும் குத்தகைப் பணம் அரசுக்கு ஒழுங்குமுறை யாகச் செலுத்தப்படவில்லை. அந்தக் கடைகளையும் பரம்பரை பரம்பரையாக தகப்பன், பிள்ளை கள் எனக் கடையை உரிமை கோரி நடத்தி வந்துள்ளனர். இப் போது வீதி அகலிப்பு, கடைத் தொகுதி அமைப்புப் போன்ற வேலைகளுக்கு இந்த உரிமப் பிரச்சினை நெருக்கடியாக உள் ளது. எனினும் குத்தகை நிலத் துக்கு சரியாக குத்தகை செலுத் தப்படாமையால் அதை அவர்கள் உரிமை கோர முடியாது. அந்தக் காணிகளும் அரசுடமையாகவே கருதப்படுகிறன.

ஏ-9 வீதியால் முறிகண்டிப் பிள்ளையாரைக் கடந்து செல் லும் பெரும்பாலானவர்கள் வாகனச்சாரதிகள் அனைவருமே பிள்ளையாரைத் தரிசித்து ஒரு சில நிமிடங்கள் இளைப்பாறி விட்டுச் செல்வது ஒரு மரபாக இன்றுவரை உள்ளது. நீண்ட தூரத் துக்குப் பயணம் செய்யும் பயணி கள் பிள்ளையாரை வணங்கி அங்கே விற்கப்படும் கச்சானைக் கொறித்துவிட்டு வீட்டுக்கும் வாங்கிச் செல்லும் வழக்கத்தால் "முறிகண்டிக் கச்சான்" பிரபல் யம் ஆனது.

பொதுவாக வழிப்போக்கர் களின் தேவைகருதி உருவாகிய பிள்ளையார், அவர்களாலேயே செல்வத்தைத் திரட்டி அனாதைச் சிறுவர்களை வளர்த்து வந்தார். விடுதலைப் புலிகளின் நிர்வாகத் தின்போது கோயிலுக்குக் கிடைத்த வருவாய் இவ்வாறே செலவிடப் பட்டுள்ளதாகக் கணக்குக் காட் டப்பட்டுள்ளது. இப்போது போர் நிறைவுற்று கோயில் புனரமைக் கப்பட்டு ஒரு கிராமத்துக் கோயி லாகவும், பயணிகளின் வழிபாட் டுத் தலமாகவும், சுற்றுலாத்தல மாகவும் முறிகண்டிப்பிள்ளை யார் உருவெடுத்துள்ளார்.

தனியாரிடம் இருந்து விடுத லைப் புலிகளிடமும் பின்னர் அவர்களிடம் இருந்து அரசிட மும் கைமாறியுள்ள உரிமத்தை மீண்டும் பெற்றுக்கொள்ளும் தனி யார் ஒருவரின் முயற்சி, அனா தைகளாக்கப்பட்ட சிறுவர்களின் கல்வி வளர்ச்சிக்காகவா என்ப தில் கேள்விகள் எழுந்துள்ளன. 1948 இல் கோயிலின் முழு உரி மத்தையும் பெறுவதற்காக தனது மகளைச் செல்லப்பா பொன்னுத் துரைக்குத் திருமணம் செய்து வைத் தார். அதன்மூலம் கோயிலின் வருவாயை அவரே முழுமை யாக்கிக் கொண்டார். இதுபோலவே மணிவண்ணனும் கோயிலின் வரு வாயை உரிமையாக்கிக் கொள் ளவே பரம்பரைச் சொத்து என வழக் குத் தொடர்ந்துள்ளார் என ஊர் மக்கள் குற்றம் சாட்டாத படிக்குப் பார்த்துக் கொண்டால் நல்லது.

எது எப்படியாயினும் எதிர் வரும் ஓகஸ்ட் மாதம் குறித்த வழக்கு மீண்டும் விசாரணைக்கு எடுக்கப்படவுள்ளது. இதன் போதோ அல்லது ஒரிரு தவ ணைகளின் பின்னரோ முறிகண் டியாரைப் பராமரிக்கும் உரிமை யாருக்கு என்பது தெளிவாகி விடும்.

✱



**இந்து சமயத்தை எவரும் பின்பற்ற முடியாது எனக் கருதப்பட்ட காலத்தில் பிள்ளையார் கோயில் ஒன்றுக்கு பிரிட்டிஷ் விக்ரோரியா மாகாராணியே நன்கொடையாக ஆறு பேர்ச் நிலப்பரப்பை அன்பளிப்பாக வழங்கியிருந்தார் என்பது அந்தக் கடவுளின் புதுமையே.**

**செல்லப்பா கோயிலின் முழு உரிமையையும் பெற பொன்னுத்துரைக்கு எதிராக 1944 இல் முல்லைத்தீவு நீதிமன்றில் வழக்குத் தொடுத்தார். எனினும் அது வெற்றிபெறாத நிலையில் பொன்னுத்துரை மனமுவந்து ஒரு பங்கை அவருக்குக் கொடுத்திருந்தார்.**

**விடுதலைப் புலிகள் தோற்கடிக்கப்பட்ட பின்னர் இந்துமா மன்றம் கோயிலைப் பெறுப்பேற்றுள்ள நிலையில் பரம்பரை வழிவந்த மணிவண்ணன் என்பவர் கோயிலின் உரிமைகோரி இப்போது வழக்குத் தொடர்ந்துள்ளார்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கை அரசியலில் புத்தர்

மூனாத்தானா

இலங்கையின் அரசியல் வரலாறு- பெரும்பான்மையின அரசு, சிறுபான்மையின மக்களை அடக்கி ஒடுக்குவது, சிறுபான்மை மக்களாகிய தமிழ் பேசுகின்ற பிரதேசங்களில் ஆக்கிரமிப்பு நடவடிக்கைகளை மேற்கொள்வது, சிங்கள மக்கள் தமிழ் பேசும் மக்கள் மத்தியில் இடைவெளியையும் பகைமையையும், முறுகல் நிலையையும் உருவாக்குவது, ஆகிய கொள்கைகள் ஊடான இனவாத அரசியல் நீண்டு செல்கின்றது.

சுதந்திரம் கிடைக்கும்முன்னர் சிங்கள அரசியலாகவே தலைவர்களால் தீட்டப்பட்ட இனவாதத் திட்டங்கள் இன்று புத்தர் சிலைகளை அதிரடியாக வைத்தல், விகாரைகளைக் கட்டுதல், பள்ளிவாசல்கள், இந்துக் கோயில்களை அழித்தல், தமிழ் மக்களின் காணிகளை அபகரித்தல், சிங்கள மக்களைக் குடியேற்றுதல், தமிழ் மாவட்டங்களில் சிங்கள அரச அதிபர்களை நியமித்தல், தமிழர் பிரதேச எல்லைகளை மாற்றி அமைத்தல் அல்லது சிங்கள கிராமங்களுடன் இணைத்துவிடுதல், சிங்கள உயரதிகாரிகளை நியமித்தல் என போகின்றன.

அறுபத்தைந்து வருட அரசியல் வரலாற்றில் வடக்கு, கிழக்கு மாகாண தமிழ் பேசும் மக்கள் நிலத்தை இழந்தும், உரிமைகளை இழந்தும் அடிமைகளாக வாழ்ந்து கொண்டிருக்கின்றனர்.

''இலங்கையில் தமிழர்கள் வந்தேறுகுடிகள், சிங்களவருக்கே இந்த நாடு சொந்தம். இலங்கை ஒரு பௌத்த நாடு, நாங்கள் கொடுப்பதை மட்டுமே நீங்கள் பெற்றுக்கொள்ளலாம். பெரும்பான்மை மக்களாகிய எங்களுக்குக் கீழேதான் தமிழர்களாகிய நீங்கள் வாழ முடியும். தமிழர்களாகிய நீங்கள் இலங்கையில் தொடர்ந்து வாழ வேண்டுமானால் எந்த உரிமைகளையும் கேட்கலாகாது. தமிழர்கள் அரச மரத்தைச் சுற்றியிருக்கின்ற சிறு கொடிகளே. போர் என்றால் போர்; சமாதானம் என்றால் சமாதானம்'' என்கின்ற அதி உச்ச இனவாத கோசங்களுடன் ஆரம்பித்த இனவாதப்போர் முடிவடைந்தும் ஆயுதச் சண்டைகள் இன்றி இன்றும் தொடர்ந்து கொண்டே செல்கின்றது.

போர் முடிவடைந்து மூன்று ஆண்டுகள் முடிந்த நிலையில் தமிழ் பிரதேசங்களில் தமிழர்களை அச்சுறுத்துகின்ற நடவடிக்கைகளை இன்றைய சிங்கள அரசு மேற்கொண்டு வருகின்றது. புத்தர் சிலைகளை நிறுவுவது, விகாரைகளை உருவாக்குவது போன்றவை அரசுக்குத் தேவையான செயற்பாடுகளாக உள்ளன.

இதேவேளை தமிழர்களின் நிலங்களை ஆக்கிரமிப்புச் செய்தல், தென்னிலங்கையிலிருந்து வரும் சிங்கள மீனவர்களை வடக்கு கிழக்கு கடலில் மீன்பிடித் தொழில் செய்ய அனுமதித்தல் , சிங்கள மக்களைத் தீவிரமாக குடியேற்றுதல் என்பன மூன்றாண்டுகளிலும் மிக முனைப்பாக அரங்கேற்றப்படுகின்றன.

பௌத்த விரிவாக்கத்தின்படி தமிழ் பேசும் மக்களின் பூர்வீகமண்ணில் அவர்களது வாழ்விடங்களில் புத்தர் சிலைகள் வைப்பது, விகாரை ஆக்கிரமிப்பு போன்றன தொடர் கதைகளாகவே இருக்கின்றன. இந்த நடவடிக்கைகளானவை திட்டமிட்ட நிகழ்ச்சி நிரலின் அடிப்படையிலேயே நடைபெற்று வருகின்றன. அரசியல் ரீதியிலான சிங்களக் குடியேற்றங்களை ஏற்படுத்துவது, மதரீதியிலான கலாசார ரீதியிலான ஆக்கிரமிப்பு நடவடிக்கைகள் போன்றனவும் இடம்பெறுகின்றன.

கிழக்கு மாகாணமாகிய திருகோணமலையில் 2005 ஆம் ஆண்டு மே மாதம் இனவாதிகளால் வைக்கப்பட்ட புத்தர் சிலை விவகாரமும், திருக்கேதீஸ்வரத்தில் அண்மையில் வைக்கப்பட்ட புத்தர் சிலை விவகாரமும் ஒரேமாதிரியான நடவடிக்கைகளே. அப்போதைய ஜனாதிபதியாக இருந்த சந்திரிகா பண்டாரநாயக்காவின் காலத்தில் ஜே.வி.பியினரால் திருகோணமலை பஸ் நிலையத்தில் மே மாதம் 13 ஆம் திகதி இரவோடிரவாகப் புத்தர் சிலை நிறுவப்பட்டது. இது திருகோணமலை வாழ் தமிழர்கள் மத்தியில் அச்சத்தையும், கவலையையும் ஏற்படுத்தி இருந்தது. தமிழ் மக்கள் மிகச் செறிந்து வாழும் நகர்ப் பிரதேசத்தில் புத்தர் சிலையை வைத்தமை பெரும் போராட்டத்துக்கு வழி வகுத்திருந்தாலும் புத்தர் சிலையை அப்போதைய ஜனாதிபதியால் அகற்றுவிக்கமுடியவில்லை.

புத்தர் சிலையினை அகற்றக் கோரி திருகோணமலை நீதிமன்றில் வழக்கு இடம்பெற்றது. போராட்டத்தை முன்னெடுத்த தமிழர் தரப்புடன் பேச்சு வார்த்தை நடத்தப்பட்டது. இரண்டு முயற்சிகளும் தோல்வியில் முடிவடைந்தன. மூன்று தடவைகள் நடைபெற்ற பேச்சு வார்த்தைகளில் இப்போதைய அமைச்சர்களான சுகாதார அமைச்சர் மைத்திரி பால சிறிசேன, வெளிநாட்டு வேலைவாய்ப்பு நலன்புரி அமைச்சர் டிலான் பெரேரா ஆகியோர் கலந்து கொண்டிருந்தனர்.

இதே காலப்பகுதியில் பொத்துவிலின் எல்லைப் பிரதேசமான தமிழ்க் கிராமத்தில் உள்ள எல்லையில் வைக்கப்பட்ட புத்தர் சிலை அங்கு நிரந்தரமாகி விட்டது. பின்னர் ஓமந்தை ஏ –9 வீதியில் உள்ள பிள்ளையார் ஆலயப் பகுதியில் திடீரென புத்தர் சிலை வைக்கப்பட்டு தமிழ் மக்களையும் வழிபடுமாறு படைத்தரப்பால் அறிவுறுத்தப்பட்டது.

போர் நின்று மூன்றாண்டுகள் முடிவடைந்துள்ளன. வடகிழக்கு தமிழர் தாயகப் பிரதேசத்தில் தமிழர்களுக்கெதிராக புத்தர் பெருமான் பயன்படுத்தப்படுகின்றார். புத்தர் சிலைகளை நிறுவுவது என்பது என்றுமே எழுதப்படாத சட்டம்போலும்..?

கிளிநொச்சி நகரப் பகுதியில் புத்தர் சிலை நிறுவப்பட்டு விகாரையும் அமைக்கப்பட்டு வழிபாட்டுத் தலமாக விளங்குகின்றது. பரந்தன் சந்தியிலும் புத்தர்சிலை நிறுவப்பட்டு அரச மரப் பகுதி வழிபாட்டுத் தலமாக ஆக்கிரமிக்கப்பட்டுள்ளது.

> ''யுத்தம் முடிவடைந்து மூன்று ஆண்டுகள் முடிந்த நிலையில் தமிழ் பிரதேசங்களில் தமிழர்களை அச்சுறுத்துகின்ற நடவடிக்கைகளை இன்றைய சிங்கள அரசு மேற்கொண்டு வருகின்றது. புத்தர் சிலைகளை நிறுவுவது, விகாரைகளை உருவாக்குவது போன்றவை அரசுக்குத் தேவையான செயற்பாடுகளாக உள்ளன.

கடந்த வருடம் ஏ–9 வீதியில் கனகராயன் குளப்பகுதியில் புத்தர் சிலை அமைப்பு பெரும் அச்சுறுத்தலானது. அங்கு புத்தவிகாரைவடிவமைக்கப்பட்டுள்ளது. அந்தப் பகுதி எதிர்காலத்தில் சிங்களமயமாக மாறும் என்ற அச்சம் தமிழ் மக்கள் மத்தியில் கடுமையாக நிலவுகின்றது. அந்தப் பகுதியில் உள்ள சில வீதிகளுக்கு சிங்களப் பெயர்களைச் சூட்டியுள்ளனர். கசா வாபேரா வீதி, அனுரப் பெரேரா வீதி, மதகுருயத்திரி வன விமலதேரர் மாவத்தை என சிங்களப் பெயர்களை சூட்டியிருப்பது தமிழ் மக்களிடையே உள்ளக் குமுறல்களை ஏற்படுத்தியுள்ளது.

மன்னார் மாவட்டத்தில் உள்ள முருங்கன் முத்துமாரி அம்மன் ஆலய வளாகத்தில் கடந்த வருடம் பிக்கு ஒருவர் அடாவடித்தனமான முறையில் இரண்டு புத்தர் சிலைகளை நிறுவி புராதன விகாரை என்ற பெயர் பலகை ஒன்றையும் நட்டுள்ளார். ஆலயத்துக்குச் சொந்தமான காணியில் தொடர்ந்தும் விகாரை அமைப்பதற்கும் நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றார். தற்போது இந்த விடயம் நீதிமன்றம் வரை செல்லவுள்ளது.

மன்னார் திருக்கேதீச்சரப் பகுதியில் புத்தர் சிலை நிறுவப்பட்டுள்ளது. பண்டைய சரித்திரப் பிரசித்தி பெற்ற இந்து மக்களின் புண்ணியஸ்தலமான திருக்கேதீச்சரப் பெருமான் ஆண்டருளும் இடத்தில் அத்துமீறி புத்தர் சிலையை சிங்கள அரசு அமைத்திருப்பது திட்டமிட்ட நிகழ்ச்சி நிரலில் அமைந்துள்ளது எனலாம். விகாரை அமைக்கப்பட்டு இந்தப் பகுதியில் சிங்களக் குடியேற்றத்தை முழு வீச்சில் நிறுவுவதே குறிக்கோளாகும்.

திருக்கேதீச்சரத்தில் புத்தர் சிலை நிறுவப்பட்டிருப்பதை எதிர்த்து தமிழ் அரசியல்வாதிகள், இந்து சமய அமைப்புகள் சாத்விகமான முறையில் போராட்டங்களை முன்னெடுக்கப்போவதாக அரசை எச்சரித்திருக்கின்றனர்.

இருப்பினும் சில பௌத்த பிக்குகளின் அடாவடித் தனமான இனவாத செயற்பாடுகளுக்கு அரசே துணை போகின்றது. பௌத்தம் அரச மதமாகவுள்ளது. பௌத்தமதக் கோட்பாடுகளை முன்னெடுப்பதற்கு தனியான அமைச்சு உள்ளது. பௌத்தர்களின் விசேட வழிபாட்டுக்காக மாதத்தில் வரும் பூரணை அரசால் உத்தியோக பூர்வமாக பிரகடனப்படுத்தப்பட்டு அதற்கு விடுமுறையும் வழங்கப்பட்டுள்ளது.

பௌத்த மதத்தை விரிவாக்கம் செய்தல், அதனைப் பாதுகாத்தல் என்பது எங்கு செல்கின்றார்கள், எப்படிப் பாதுகாக்கின்றார்கள் என்பனவற்றை ஆராய்ந்து பார்க்கின்றபோது வடக்கு மாகாணத்தையே சிங்கள அரசுகுறியாக எடுத்துள்ளது என்பது புரிகிறது. இதன் அடிப்படையிலேயேதான் கடந்த வருடம் மன்னார் மாவட்டத்துக்கு சிங்கள அரச அதிபராக சரத் ரவீந்திரவும், இம்மாதம் வவுனியா மாவட்டத்துக்கு சிங்கள அரச அதிபராக விஜயரட்ண சகலசூரியவும் அரசால் அதிரடியாக நியமிக்கப்பட்டுள்ளனர். மேலும் முல்லைத்தீவு, கிளிநொச்சி மாவட்டங்களுக்கும் சிங்கள அரச அதிபர்கள் நியமிக்கப்படலாம். இலங்கையில் உள்ள வடக்கு, கிழக்கு மாகாணத்தை பௌத்த விரிவாக்கம் செய்தல் என்ற நடவடிக்கைக்கு வடக்கு, கிழக்கு மாகாணத்தில் உள்ள தமிழ் அரச அதிபர்கள் ஒத்துழைக்கமாட்டார்கள் என்ற நிலையில் அரசு தமிழ் மாவட்டங்களில் சிங்கள அரச அதிபர்களையே நியமித்து வருகின்றது.

2009ஆம் ஆண்டு மே மாதம் 18 ஆம் திகதி போர் முடிந்த பிற்பாடு சிங்களக்குடியேற்றம், நில ஆக்கிரமிப்பு, புத்தர் சிலை நிறுவுதல், விகாரை கட்டுதல் என்பனவும் ஆரம்பிக்கப்பட்டு விட்டன. இப்போது தம்புள்ள பள்ளிவாசல்களை இடித்தல், இந்துக் கோயில்களையும் இடித்தல், அபகரித்தல், இலங்கையில் உள்ள ஈஸ்வர ஆலயங்கள் அமைவதற்கு முன்பு பௌத்த விகாரைகள் இருந்ததாகவும் அவை யாவும் முற்றாக அழிக்கப்பட்டு சிவன் ஆலயங்கள் கட்டப்பட்டது என்று கோஷமெழுப்பும் என்று அராஜகங்கள் தொடர்கின்றன.

இலங்கையில் புத்தர் சிலையை தமிழ்ப் பகுதிகளில் நிறுவுவதன் மூலம் ஒரு விதமான அச்ச நிலையைத் தோற்றுவிக்க முடியும். புத்தர் சிலைகளை நிறுவுவதன் மூலம் தமிழ்த் தரப்பிலிருந்து கடும் எதிர்ப்புகள் ஏற்படுகின்றபோது ஊடகங்களின் கவனமும், இனவாதிகளின் கவனமும் திசைதிருப்பப்படும். இதன் விளைவாக சிங்கள- தமிழ் இனங்களுக்கிடையே மேலும் பதற்ற நிலைமை அதிகரிக்கும். இது நீண்ட இடைவெளியையும்–பகைமையையும் உருவாக்கும். இனப்பிரச்சினைக்கான தீர்வு எந்தக்கால கட்டத்திலும் ஏற்படப் போவதில்லை. அறுபத்தைந்து ஆண்டுகளாக நீடித்து வருகின்ற இனப்பிரச்சினை புத்தர் சிலை விவகாரத்தாலும் தீவிரப்படுத்தப்பட்டுள்ள பௌத்த மதக் கோட்பாடுகளாலும் ஒரு முடிவுக்கு வரவே வராது.

இன்று புத்தர் சிலை வைக்கப்பட்டுள்ள வடக்கு கிழக்கு மாகாணங்களின் நிலப்பகுதியானது பொது மக்களுக்குரியதும் அரச திணைக்களங்கள் மற்றும் நிறுவனங்களுக்கு உரியதுமாகும். பார்க்குமிடமெல்லாம் புத்தர் சிலைகளாக இருக்க வேண்டும், இதனைப் பார்க்கும் மூவின மக்களும் புத்தம் சரணம் கச்சாமி என்று உச்சரிக்க வேண்டும். என்ற நோக்கத்தில் தான் இவை நிறுவப்படுகின்றன. இப்படிப்பட்ட நிலையில் தமிழ் மக்களுக்கு உளவியல் நெருக்கடியை இலங்கையில் பௌத்தம் உருவாக்கியுள்ளது.

இந்த வகையில் திருக்கேஸ்தீச்சரத்தில் நிறுவப்பட்டிருக்கின்ற புத்தர் சிலையை எடுக்குமாறு கோரி வழக்குத் தொடர்ந்தால் என்ன, போராட்டங்களை முன்னெடுத்தாலென்ன எதுவுமே தமிழர்களின் பக்கம் நியாயமான தீர்வாக எதிர்பார்க்க முடியாது. திருக்கேதீச்சரத்தில் அமைக்கப்பட்டுள்ள புத்தரும் நிரந்தரமாக்கப்பட்டு விடுவார். திருகோணமலை பஸ்நிலையத்தில் வைக்கப்பட்ட புத்தர் சிலை விவகாரத்தில் நீதிமன்றம் சென்றும் பயனில்லை. பேச்சு நடத்திப் பிரயோசனமில்லை. இன்றும் புத்தர் அங்கே நிரந்தரமாக்கப்பட்டுவிட்டார். திருக்கேதீசரத்தில் அமைக்கப்பட்டுள்ள புத்தர் சிலை விவகாரம், தமிழர் தரப்பில் சாதகமாகவோ அல்லது பாதகாமாகவோ ஒரு முடிவுக்குள் வருவதற்கு தமிழ் மாவட்டங்களில் வேறு பகுதிகளில் கூட பல புத்தர்கள் திடீரென தோன்றி விடுவார்கள். தமிழர் விதி அப்படி. இனரீதியில் நடைபெற்ற போர் இப்போது மதரீதியில் வந்து விட்டது.

★

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வடக்கு

## தமிழர்களுக்கு மட்டுமே சொந்தம்

ஜெரா

வடக்கும் தமிழர்களுக்குச் சொந்தமில்லை என்று சொல்லப்பட்டாயிற்று. அது வரலாறு தெரியாதவர்களின் அழைப்பாயினும் அதிகாரத் தரப்பினருக்குத் தானே வரலாறு எப்போதும் சொந்தமாயிருக்கின்றது. எனவே இன்னும் சில ஆண்டுகளில் அவர்களின் கூற்று மெய்ப்படக்கூடும். அதனை மெய்ப்பிக்க வடக்கில் இருக்கும் சில அடிவருடிகளும் ''வரலாற்று ஆய்வாளர்களும்'' தயாராகி வருகின்றனர்.

தமிழினம் என்றும், எங்கும் சந்திக்காத இனச் சிதைப்புப் போரை சந்திக்கும் இந்த நேரத்தில்தான் எமக்கான உரிமைகோரலை வலுப்படுத்த வேண்டும். ஆனால் அதற்கான புறச்சூழல் இல்லையென்றே கூற வேண்டும். விக்கிரமபாகு கருணாரட்ண இந்தவிடயத்தில் எடுத்துக் கொண்ட அக்கறையளவுக்குக் கூட தமிழ் அரசியலாளர்கள் எடுத்துக்கொள்ளவில்லை. அவர்களை விட தமிழ் பரப்பில் இருக்கும் இந்த விடயத்தில் கவனம் செலுத்த வேண்டிய எந்தப் புலமையாளர்களும் வாய்திறக்காமை தான் விந்தையானது. ஏனெனில் அவர்கள் சிங்களவர்களிடம் நக்கி நாவிழந்தவர்கள். அவர்கள் வாய் திறந்தால் அது கோத்தபாய குற்றம்.

இந்த நிலையில்தான் வடக்கு, கிழக்கு நிலம் தமிழர்களுக்கு மட்டும் சொந்தமானது என உரிமைபேச வேண்டிய சூழல் ஒவ்வொரு தமிழர்க்கும் களந்திறந்திருக்கின்றது.

### இலங்கையின் முதல் குடிகள் யார்?

தமிழர்கள்தான். அதற்கான ஆதாரங்கள் மலைபோல் குவிந்து கிடக்கின்றன. நிலத்துக்கு அடியிலும், நிலத்துக்கு மேலும், பிற வரலாற்று இலக்கியங்களிலும் இருந்து இதற்கான 100 வீத ஆதாரங்களைத் திரட்டிக் கொள்ளமுடியும்.

உலகின் மூத்த நாகரிகமான சிந்து வெளி தென்னாசியாவில் காணப்படுகின்றது. இற்றைக்கு கி.மு. 3250 தொடக்கம் கி.மு 2750 வரை அது நிலவியது. அந்த நாகரிகத்தில் பாவிக்கப்பட்ட எழுத்துவடிவம் இன்றுவரை வாசித்தறியாதபடியால் இன்னமும் தென்னாசியாவின் பண்பாட்டுத் தொடக்க காலத்தை சரிவரக் கணக்கிட முடியாமல் இருக்கின்றது. ஆனால் வட இலங்கையிலிருந்து கிடைக்கின்ற ஒரு ஆதாரம் தென்னாசியப் பண்பாட்டுத் தொடக்கத்திற்கு முதன்நிலை ஆதாரத்தை வழங்குகின்றது.

அந்த ஆதாரம் யாழ்ப்பாணத்தில் உள்ள ஆனைக்கோட்டையில் இருந்தது. 1970ஆம் ஆண்டுகளில் தீவிரம் பெற்றிருந்த வரலாற்றுத் தேடலின் விளைவால் ஈழத் தமிழ் வரலாற்று அறிஞர்களால் கண்டுபிடிக்கப்பட்டது. ஒரு ஆண் மகனின் எலும்புக்கூடு நிலத்துக்கடியில் புதைக்கப்பட்டிருந்த நிலையில் அகழ்ந்தெடுக்கப்பட்டது. அதற்கு அருகில் ஒரு பாண்டத்தில் மோதிரமும் வேறுசில பொருள்களும் இருந்தன. அந்த மோதிரத்தில் ஆதி பிராமியில் (அதாவது தென்னாசிய எழுத்துருவாக்கத்திற்கும், திராவிட மொழிகளின் எழுத்துக்களின் தோற்றத்துக்கும் அத்திவாரமிட்ட ஒருவகை ஆரம்பகட்டக் குறியீட்டு எழுத்து) ''கோவேத'' என்ற வாசகம் பொறிக்கப்பட்டிருந்தது. தமிழில் கோ என்றாலும் வேத அல்லது வேந்த என்றாலும் மன்னன் என அர்த்தப்படும். எனவே கி.மு 1000 ஆண்டுகளுக்கு முன்னர் வட இலங்கையில் தமிழ் அரச பாரம்பரியம் ஏற்பட்டுவிட்டது என்பதை இந்தக் கண்டுபிடிப்புக்கள் நிரூபித்தன. ஆனால் இவை இன்றில்லை. இந்த ஆதாரத்தை இந்திய இராணுவம் யாழ்.பல்கலைக் கழகத்திலிருந்து தூக்கிச் சென்று எங்கேயோ எறிந்துவிட்டது.



ஆனைக்கோட்டையில் மீட்கப்பட்ட மனித எலும்புக்கூடும் ''கோவேத'' என்ற ஆதி பிராமி எழுத்தும்.

இதற்குப் பின்னர் புத்தர் வட இலங்கையில் உள்ள நாகநாட்டு அரசர்களின் குழப்பத்தை தணிக்க இங்கு ஒரு தடவை வந்தார் என சிங்கள வரலாற்று இலக்கியமென கூறப்படும் மகாவம்சம் குறிப்பிடுகின்றது. அவர் வருகைதந்து மன்னர்களின் குழப்பத்தை தீர்த்து வைத்ததோடு அவர்களை தம் மதத்தில் சேர்த்துக் கொண்டார் எனவும் அது குறிப்பிடுகின்றது. நாகர்கள் தமிழர்கள் என்பதை சிங்கள ஆய்வாளர்கள் கூட ஏற்றுக் கொண்டிருக்கின்றனர். இந்த நாகர்களின் வழிவந்த மக்கள் தான் வட இலங்கையில் பரவலாக கிளைவம்சங்களை உருவாக்கியுள்ளனர் என்ற ஆய்வு முடிவுகளும் முன்வைக்கப்பட்டுள்ளன. இந்த நாக மன்னர்கள் வெளியிட்ட நாணயங்களில் அதிகளவு தமிழ் பிராமி எழுத்துக்கள் காணப்படுகின்றன. அத்தோடு தமிழ் சொற்களே அதில் பாவிக்கப்பட்டும் உள்ளன. குறிப்பாக ''நாகபூமி'', ''நாகநாடு'', ''நாக'' போன்ற நாணய வாசிப்புக்கள் நாகர்கள் தமிழர்களே என்பதை உறுதிப்படுத்துகின்றன. அத்தோடு இதனை தமிழக வரலாற்று ஆதாரங்களும் உறுதிப்படுத்துகின்றன. எனவே மகாவம்சம் ஒரு ஐதீகக் கட்டுக்கதை இலக்கியமாயினும் தொல்லியல் ஆதாரங்களால் உறுதிப்படுத்தக் கூடிய நாகநாடு தொடர்பான வரலாற்றுச் செய்தியை தருவதனால்ஒ, இந்த வகையில்தான் பௌத்தம் வடக்கில் நிலைகொண்டிருந்த தமிழர் மத்தியில் செல்வாக்குப் பெற்றது எனலாம்.

வடக்கில் வாழ்ந்த தழிழர்களும், தமிழ் வணிகர்களும் பௌத்த பிக்குகளுக்கு ஆதரவளித்தனர் என்பதை வவுனியா, பெரியகுளம் பகுதியிலிருக்கின்ற கல்வெட்டுகள் முன்னிலைப்படுத்துகின்றன. சமூகத்தில் ஆதிக்கம் பெற்றிருந்த தலைவர்கள் பிக்குகளுக்கு குடை தானங்களையும் படுக்கைகளையும் வழங்கியதாக அந்தக் கல்வெட்டுக்கள் குறிப்பிடுகின்றன.

இதைவிட வடக்கில் காணப்படும் கந்தரோடை, வல்லிபுரம், உருத்திரபுரம், பூநகரி, சாட்டி, வேலணை போன்ற இடங்களில் காணப்பட்ட அதிகளவான மட்பாண்ட ஓடுகளில் தமிழ் எழுத்துக்களும் தமிழ் பெயர்களும் காணப்படுகின்றன. இவை இந்தப் பரப்பில் ஏற்பட்டிருந்த தமிழர்களின் செல்வாக்கையே காட்டுகின்றன.

### பௌத்தம் எப்படி வடக்குக்கு வந்தது?

இவ்வாறு தழைத்தோங்கியிருந்த தமிழ் மரபில்தான் பௌத்தம் முதல் முதலாக அறிமுகமாகியது. மேலே குறிப்பிட்ட காலத்துக்குப் பிற்பட்ட நூற்றாண்டுகளில் ஈழத்துக்கு வருகைதந்த பௌத்த மதப் பரப்புரையாளர்கள் முதலில் இலங்கையின் வடகரையையே அடைந்தனர். தமிழகத்திலிருந்து மிக அண்மையில் காணப்படும் மாதோட்டம், வல்லிபுரம், கந்தரோடை, ஆனைக்கோட்டை, நெடுந்தீவு போன்ற வட பிராந்திய இடங்கள் பௌத்தத்தை வரவேற்றது. உள்வாங்கிக் கொண்டது. அதற்குக் காரணம், அந்தக் காலப்பரப்பில் இங்கு வலுவான மானுட விழிப்பைத் தரும் சமய நம்பிக்கைகளுக்கு வெற்றிடம் இருந்தது. எனவே பௌத்தம் அந்த இடத்தைப் பிடித்துக் கொண்டது. மொழி தமிழாக இருக்க மதம் பௌத்தமாகியது. அதுவும் மரபுரீதியாக வழிபட்டுவந்த சைவ ஆலயங்களோடு இணைத்தே பௌத்தத்தையும் வைத்து வழிபட்டு வந்திருக்கின்றனர். இதற்கான ஆதாரங்கள் வல்லிபுரம், கந்தரோடை போன்ற பகுதிகளில் காணப்படுகின்றன. இதோடு இணைந்து தமிழகம், ஆந்திரா போன்ற பகுதிகளில் இருந்து பௌத்த கட்டட கலைமரபும் வட இலங்கையில் நிலைகொண்டது.

ஆனாலும் அதிக காலம் பௌத்தத்தினால் இங்கு நிலைகொள்ள முடியவில்லை. இங்கு இருந்த மக்களின் சமய நம்பிக்கைகள் அசைக்க முடியாதனவாய் இருந்தன. இதனால் பௌத்தம் தனிப் பிரிவாக வளரமுடியாத நிலை தொடர்ந்தும் காணப்பட்டது. அத்தோடு தமிழகத்தில் பல்லவர் காலத்தோடு பௌத்த மதத்திற்குப் பெரும் பின்னடைவு ஏற்பட்டது. அதன் பிரதிபலிப்பு வட இலங்கையிலும் ஏற்பட்டிருக்கும் என்பதில் ஐயமில்லை.

அத்தோடு பௌத்த பரப்புரையாளர்கள் மக்கள் வாழும் இடங்களிலிருந்து காடுகளுக்குள் தனித்திருக்க வேண்டுமென அந்தத் தத்துவம் குறிப்பிடுகின்றது. அதன்படி பரப்புரையாளர்கள் பெருங்காடுகளில் உள்ள குகைளிலேயே வாழ வேண்டும். அதற்கான ஒழுங்குகளை மதத்தைப் பின்பற்றும் மக்களும் தலைவர்களும் மேற்கொள்வர். ஆனால் அவர்கள் தங்கியிருக்க கூடிய குகைகளோ, அல்லது கற்படுக்கைகளோ வட இலங்கையில் அதிகம் காணப்படவில்லை. வன்னியின் சிலபகுதிகளில் காணப்பட்டாலும் ஆதரிக்கக் கூடியளவில் மக்கள் மத்தியில் பௌத்தம் செல்வாக்குப் பெறமுடியவில்லை.

### தெற்கில் குடிகொண்ட பௌத்தம்

தமிழ் மக்களால் ஆதரிக்கப்படாத பௌத்தம் தெற்கு நோக்கிப் புறப்பட்டது. தெற்கில் வலுவான சமய மரபுகள் காணப்படாததால் அங்கு அமோக வெற்றி கண்டு நிலைகொண்டது. அதற்கு சாதகமான இயற்கைச் சூழல் பௌத்தத்தை மேலும் வளர்த்தது.

பல்லவர் காலத்தோடு வடக்கு தமிழகப் பண்பாட்டுடன் நெருங்கிய உறவைப் பேணியது. குறிப்பாக சைவம் இங்கு தழைத்தோங்கியது. மாதோட்டம், திருக்கோணேஸ்வரம் போன்ற ஈழ ஆலயங்கள் பல்லவப் புலவர்களின் பாடல் பெற்ற தலங்களாயின. கிட்டத்தட்ட வடக்கிலிருந்து பௌத்தம் இந்தக் காலத்தோடு முற்றாக அழிந்தது. சிங்களவர்களுக்கு வலுவான மதமில்லை என்ற குற்றவுணர்வால் பௌத்தத்தைப் பற்றிப் பிடித்துக் கொண்டனர்.

அதற்கு அடுத்து வந்த சோழர்கள் வட இலங்கையை முற்றுமுழுதான தமிழ் மண்டலமாக்கினர். பொலநறுவை வரை தமிழரின் அரச ஆதிக்கம் படர்ந்தது. இலங்கை வரலாற்றிலேயே முதல் தடவையாக தமிழ் நிர்வாக மொழியாக மாறியது. சைவம் பௌத்தத்தை விழுங்கிவிடும் அபாயத்தை சிங்களவர்கள் உணர்ந்தனர். வடக்கு, கிழக்கு சோழர்களின் வருகையோடு வலுவான தமிழ் அடையாள நிலமாகியது. இது சிங்கள மக்களுக்கு இருப்புத் தொடர்பாக பெரும் அச்சுறுத்தலை வழங்கியது. சோழர்களோடு சேர்த்து தழிழர்களையும் எதிரியாக அவர்கள் பார்க்கத் தொடங்கினர். ஈழத் தமிழர்களும் சோழர்கள் பக்கம் தான் எப்போதும் இருந்தனர். ஏனெனில் தேசங்களால் இரு இனத்தவரும் வேறாயினும் மொழியால் மதத்தால் இரு இனத்தவரும் ஒன்றுபட்டவர்கள். ஆனால் சிங்களவர்களுக்கு சோழர்களை விரும்புவதற்கு இதுபோன்ற ஏற்கத்தக்க காரணங்களும் இருக்கவில்லை. சோழர்கள் எதிரிகள். ஆக்கிரமிப்பாளர்கள். அவர்களை ஆதரிக்கும் தமிழர்களும் ஆக்கிரமிப்பாளர்கள் என்ற எண்ணம் மேலோங்கி வளர்ந்தது. இந்த எண்ணம் பௌத்த மதத்தை அடிப்படையாகக் கொண்டு உருவாக்கப்பட்டதால் மொழி மற்றும் சமயங்களின் அடையாளப்படுத்தல்களோடு இலங்கையில் தமிழ் சிங்கள இனங்கள் உருவாகின. சோழர்கள் இலங்கையிலிருந்து விலகியதோடு இந்த எண்ணம் மேலும் இறுக்கமாகியது.

### மதத்தின் வழியே இரு இன உருவாக்கம்

காலனிய ஆதிக்க விலகலோடு மேலும் இரு இனங்களிடையேயும் முரண்பாடுகள் முற்றின. தமிழர்கள் சனத்தொகை விருத்தியிலும் சிறுபான்மையினர் ஆயினர். அதுவரை கிடைத்து வந்த தமிழக ஆதரவும் அத்தோடு கிடைக்காமல் போனது. சிங்களவரின் இனவொடுக்கல் ஆட்டம் ஆரம்பமாகியது. முள்ளிவாய்க்கால் வரை தமது ஆட்டத்தை சிறப்பாக ஆடித் தமிழரை வெற்றி கொண்டனர் சிங்களர். இப்போது இனச் சிதைப்புப் பணியை தீவிரப்படுத்தி இந்த நாட்டிலிருந்தே தமிழர்களை அப்புறப்படுத்தும் வேலைத்திட்டத்தை முன்னெடுத்து வருகின்றனர்.

அதில் ஒன்றுதான் வரலாற்றிலிருந்து தமிழர்களை ஓரங்கட்டலாகும். அதற்கு சிங்கள மேலான்மைவாதிகள், வடக்கில் பல இடங்களிலும் பௌத்த மத எச்சங்கள் இருக்கின்றன. எனவே அது தமிழர்களுக்கு சொந்தமல்ல. சிங்களவர்களுக்குத் தான் சொந்தம் என்ற வாதத்தை முன்வைக்கின்றனர். அப்படியாயின் தெற்கில் அம்பாந்தோட்டையில் கூட கிறிஸ்துவுக்கு முற்பட்ட கால சைவ ஆலயங்கள் அண்மையில் கண்டுபிடிக்கப்பட்டன. ஆகவே தெற்கு தமிழர்களின் சொந்த இடம் ஆகுமா?

பௌத்தத்தைப் பின்பற்றியவர்கள் எல்லோரும் எப்போதும் சிங்களவர்களாக மட்டுமே இருந்திருக்கின்றனர் என்ற முட்டாள்தனமான கருத்தை ஏற்றுக் கொள்பவர், இலங்கையில் வாழும் அனைத்துக் கிறிஸ்தவர்களும் வெள்ளைக்காரர்களும் என்ற கருத்தையும் ஏற்றுத்தான் ஆகவேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


© SWNS.COM

டெய்ஸி ஒக்ஸ்டன் (மடியில் இருப்பவள்) உலகின் வெகு அபூர்வக் குழந்தைகளில் ஒருத்தி. இந்த இரண்டு வயதுக் குழந்தை அழுதால் உயிரிழந்துவிடுவாள். உலகில் இவளைப் போல் 130 பேர் மட்டுமே இருக்கிறார்கள். பிறக்கும்போதே மண்டை ஓட்டின் ஒரு சிறிய பகுதி (6 X 7cm அளவு) இவளுக்குக் காணாமல் போய்விட்டது. சிறிய தடித்த தோலினாலான படையால் மட்டுமே அந்தப் பகுதி பாதுகாக்கப்படுகிறது. 'அடம்ஸ் ஒலிவர் சின்ட்ரோம்' என்று இந்த நோயை அழைக்கிறார்கள். என்ன பாடு பட்டாவது அவள் அழுவதைத் தடுத்துவிட வேண்டும் என்பதுதான் மருத்துவர்கள் அவளது பெற்றோருக்கு வழங்கியிருக்கும் வரம். டெய்ஸி எப்போதும் சிரித்துக் கொண்டேயிருக்கிறாள்.


© MATRIXPICTURES.CO.UK

இங்கிலாந்தின் கால்பந்தாட்ட நட்சத்திரம் டேவிட் பெக்காம் ஒரு 'பாஷன்' பிரியர். ஆகக் கடைசியான அவரது தோற்றமே இது. மூன்று ஆண் பிள்ளைகளுக்குப் பின்னர் ஒரு பெண் குழந்தை பிறந்தது பெக்காமுக்கு. அதைக் கொண்டாடோ கொண்டாடு எனக் கொண்டாடும் பெக்காம், தனக்கு ஒரு பெண் குழந்தை இருக்கிறது என்பதை இன்னமும் நம்ப முடியவில்லை என்கிறார். மகளுக்கு அடுத்த மாதம்தான் ஒரு வயது பூர்த்தியாகிறது. போதாததற்கு இன்னும் இரண்டு பிள்ளைகளைப் பெற்றுக் கொள்ளும் எண்ணமும் உண்டாம்.

லண்டனில் நடக்க உள்ள ஒலிம்பிக் போட்டியின் பரிசளிப்பு விழா ஒத்திகைகள் நேற்றுமுன்தினம் நடந்தன. இம்முறை 'தீம்' நிறமாக நாவல் (பேர்பிள்) தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளது. இந்த நிறம் வழக்கமான சீருடை என்பதற்கும் அப்பால் தோற்றமளிக்கக் கூடியது என்பதால் அது தெரிவு செய்யப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. அத்துடன் வழக்கத்துக்கு மாறாக இந்த முறை, பதக்கங்களையும் பூச்செண்டுகளை ஆண் தொண்டரே காவி வருவார். பெண் தொண்டர்கள் வீரர்களைப் பக்கத்துணையாக அழைத்து வருவார்கள். வழக்கமாக பெண்களே பதக்கங்களைத் தாங்கி வருவார்கள். இந்த நடைமுறை மாற்றப்பட்டிருப்பது புதிய சர்ச்சையைக் கிளப்பும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.




© Facebook

அம்மணி கல்லூரியில் பயில்கிறார். ஆனால் அவரது ஒதுக்குப்புற வீட்டில் இருந்து பேரழிவு தரக்கூடிய ஆயுதங்களை மீட்டதாக அமெரிக்கப் புலனாய்வாளர்கள் வழக்குத் தாக்கல் செய்துள்ளனர். அவரது வீட்டிலிருந்து பெரிய துப்பாக்கிகள், வெடிபொருள்கள், போதைப் பொருள் என்பன கைப்பற்றப்பட்டதாக அதிகாரிகள் கூறுகின்றனர். அது பற்றியெல்லாம் அம்மணி அலட்டிக் கொள்ளவில்லை. கேட்டதற்கு "அதெல்லாம் எனது பொழுதுபோக்கு. ஆயுதங்களை நான் காதலிக்கிறேன்'' என்று தத்துவமாய் உதிர்த்திருக்கிறார். ஆடிப்போன அதிகாரிகள் அம்மணியை உள்ளே தள்ளுவதில் குறியாக இருக்கிறார்கள்.


© Ed Watts / Retna Pictures

வெறும் 100 பவுன்ஸில் ஓர் இணையத் தளத்தை ஆரம்பித்தார் இந்த மனிதர். 'மணி சேவிங் எக்ஸ்பேர்ட்' என்பதுதான் அவர் ஆரம்பித்த இணையம். இப்போது அந்த இணையத் தளம் 87 மில்லியன் பவுன்ட்ஸ் விலைக்கு விற்கப்பட்டுள்ளது. ஆனால் மார்ட்டின் லூவிஸின் விற்கும் முடிவு சுயநலம் மிக்கது என்று அவரது வாடிக்கையாளர்கள் குமுறியுள்ளனர்.

நடக்கும்போது இவரது ஆடைகள் ஒன்றும் கிழிந்துவிடவில்லை. பாரிஸைத் தளமாகக் கொண்டியங்கும் பெல்ஜிய ஆடை வடிவமைப்பாளர் அந்தோனி வக்காரிலோஸ் வேலை மினக்கெட்டு வடிவமைத்த ஆடைகளே இவை. பார்ப்பவர்கள் எல்லோரும் இந்த ஆடை உடலில் இருந்து விழாமல் எப்படி நிற்கிறது என்று கேட்கிறார்களாம். தனது 'மொடல்'கள் மாதிரி ஒல்லிக்குச்சி உடம்புக்காரிகளுக்குத்தான் சரிவருமாம்.


© AFP/GETTY IMAGES






ஆப்கானிஸ்தானில் பெண்களுக்கு நடக்கும் கொடுமைகளை அப்பட்டமாக உலகுக்கு வெளிச்சம் போட்டுக் காட்டியது 'டைம்' இதழ். அது அட்டைப்படத்தில் வெளியிட்ட மூக்கு அறுக்கப்பட்ட ஓர் இளம் பெண்ணின் படம். சர்வதேச மட்டத்தில் மிகச் சிறந்த படமாக அது 2010ஆம் ஆண்டு தெரிவானது. அதேபோன்று 32 வருடங்களுக்கு முன்னர் கணவனால் மூக்கு அறுக்கப்பட்ட பாகிஸ்தான் பெண் அல்லா ராக்கிக்கு சில தினங்களுக்கு முன்னர் அறுவைச் சிகிச்சை மூலம் மூக்கு பொருத்தப்பட்டுள்ளது. மூக்கு அற்ற தனது முகத்தைப் பார்க்கும் போதெல்லாம் செத்து விடலாம் என்று தனக்குத் தோன்றியதாகக் கூறும் அல்லா, இப்போது மூக்குத் திரும்பக் கிடைத்திருப்பது மகிழ்ச்சியளிப்பதாகக் கூறுகிறார்.

ஹொலிவூட் நடிகை கிரிஸ்டனை, மற்ற நடிகைகள் தடுமாறும்போது துணிவுடன் முடிவு எடுத்தவர் என்று வர்ணித்துப் புகழ்ந்து தள்ளியுள்ளது 'லண்டன் மெயில்' பத்திரிகை. 22 வயதான நடிகை கிரிஸ்டன் தனது முடிவுக்காக வருத்தப்படவில்லை என்றும் கூறியிருக்கிறாராம். அதாவது 'ஒன் த ரோட்' என்ற தனது அடுத்த படத்தில் மேலாடை ஏதுமின்றித் தோன்ற அவர் எடுத்த முடிவுக்குத்தான் இத்தனை அலப்பறையும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தெற்குக்குத் தங்கம் வடக்குக்கு தகரம் கூட இல்லை

மீளக்குடியமர்ந்த மக்கள் அரை குறையாக வீடுகளை திருத்தியமைத்து விட்டு அதிலே அசௌகரிய வாழ்க்கையை வாழ்ந்து கொண்டிருக்கின்றனர்.

■ தில்லாலங்கடி

"இது எங்கட வீடில்ல. பக்கதில இருக்கிறதுதான் எங்கட வீடு. அது முழுக்க இடிஞ்சு போட்டுது. இப்ப அதைத் திருத்தக் கன காசு முடியும். இந்த வீட்டுக்காரர்கள் வெளிநாட்டில இருக்கிறதால இஞ்ச இருக்கிறன்'' என்று கூறும், வலி. வடக்கில் கடந்த வருடம் மே மாதம் மீளக் குடியமர்த்தப்பட்ட முதியவர் பேசும்போதே பெருமூச்செறிகிறார்.

அவர் தங்கியிருக்கின்ற வீடு, அவரது சொந்த வீட்டுடன் ஒப்பிடுகையிலேயே தரமானதாக இருக்கின்றதே ஒழிய அந்த வீட்டிற்கும், கதவுகள், யன்னல்கள் எவையும் கிடையாது. இருபது வருடங்களாக இராணுவத்தினரின் இரும்புப் பிடிக்குள் இருந்து கடந்த வருடம் விடுதலை பெற்ற வலி.வடக்கின் சில கிராமங்களின் நிலையிது. அந்தப் பகுதியில் எந்தவொரு வீடும் மக்கள் மீளக் குடியமர்வதற்குஏற்றவகையில் அமைந்திருக்கவில்லை.

பெரும்பாலான வீடுகள் இராணுவத்தினரால் காப்பரண் அமைப்பதற்காக முற்றாக இடித்து அழிக்கப்பட்டன.

எஞ்சிய வீடுகள் அனைத்தும் முண்டம் போன்றே காட்சியளித்தன. வீடு இருக்கும் ஆனால் கூரையிருக்காது. சீமெந்து சுவர் இருக்கும், நிலையுடன் கதவு, யன்னல்கள் பிடுங்கப்பட்டிருக்கும். இவ்வாறுதான் அந்தப் பகுதி வீடுகள் இருபது வருட இரும்புப் பிடியிலிருந்து விடுதலையாகும் போது இருந்தன. இப்போதும் இருக்கின்றன.

இராணுவத்தினரால் அமைக்கப்பட்ட முன்னரங்க நிலைகளுக்கு, அந்தப் பகுதி வீடுகளிலிருந்து பிடுங்கப்பட்ட கதவுகளும், யன்னல்களுமே காப்பரண்கள் ஆகியுள்ளன. பெறுமதியான மரங்களும் வெட்டப்பட்டு காப்பரணங்கள் அமைக்கப்பட்டுள்ளன. மக்களது வீட்டுப் பொருள்கள் யாவும் இராணுவத்தினரால் எடுக்கப்பட்டு தங்களது முன்னரங்க நிலைகள் அமைப்பதற்கு பயன்படுத்தியிருந்தனர்.

இவ்வாறு இராணுவத்தினரால் - அரசால் - அழிக்கப்பட்ட வீடுகளுக்கு அவர்களால் இதுவரையில் நட்டஈடு வழங்கப்படவில்லை. எந்தவித பரிகாரங்களும் செய்யப்படவில்லை. மாறாகத் தன்னார்வத் தொண்டு நிறுவனங்களால் அரை நிரந்த வீடுகள் சிறியளவில் அமைத்துக் கொடுக்கப்பட்டுள்ளது. இந்திய வீட்டுத் திட்டம் வரும், வரும் என்று சொல்லியே காலம் கடத்தப்படுகின்றது. அழித்தவர்கள் வீடுகளை மீளவும் அமைத்துக் கொடுப்பதற்கு இம்மியளவேனும் அக்கறை கொள்ளவில்லை.

இதனால் மீளக்குடியமர்ந்த மக்கள் அரை குறையாக வீடுகளை திருத்தியமைத்து விட்டு அதிலே அசௌகரிய வாழ்க்கையை வாழ்ந்து கொண்டிருக்கின்றனர். அரசின் நிவாரணங்கள்கூட அவர்களுக்குக் கிடைப்பதில்லை.

தென்னிலங்கையின் பேரினவாத அரசியல் தொடர்ந்தும் தமது வெற்றிக் கொண்டாட்டங்களை மறப்பதற்கு தயாராக இல்லை. 30 வருட போரை வெற்றி கொண்டதாகச் சொல்லி படையினருக்கான பாராட்டுக்களும் குறையவில்லை. கடந்த வாரத்தில் பொலன்னறுவையில், ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தலைமையில் இராணுவத்தினருக்கான வெற்றிக் கொண்டாட்ட நிகழ்வு ஒன்று இடம்பெற்றது.

இந்த நிகழ்வில் வைத்து இராணுவத்தினருக்கு 43 வீடுகள் கையளிக்கப்பட்டன. இவையனைத்தும் புதிதாக நிர்மாணிக்கப்பட்டு அவர்களிடம் கையளிக்கப்பட்டன. ''நமக்காக நாம்'' நிதியத்தின் ஊடாகவே இந்த வீடுகள் கட்டப்பட்டுள்ளன.

'' தெற்கினது சுதந்திரம் தங்கத்தினாலானதாக இருந்தால் வடக்கினது சுதந்திரம் தகரத்தினாலானதாக இருக்க முடியாது '' இதனை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ, யாழ்ப்பாணத்தில் கடந்த வருடம் இடம்பெற்ற தேசிய பொங்கல் விழாவில் வைத்து பேசிய 'பஞ்ச்' வசனங்களின் ஈரம் காயும் முன்பே தெற்குக்கு தங்கமும் வடக்குக்கு அது கூட இல்லாத நிலையும் காணப்படுகிறது. அதன் பின்னர் இந்த '' பஞ்ச் டயலொக்கை '' இணக்க அரசியல் நடத்தி வருவதாக சொல்லும் யாழ்ப்பாணத்தின் அமைச்சர் அடிக்கடி கூறிவருகின்றார். ஆனால் அவராலும் மக்களுக்கு ஒரு வீட்டைத் தானும் அமைத்துக் கொடுக்க முடியவில்லை.

இவர்களது கருத்துக்கள் எந்தளவு தூரத்துக்கு உண்மை என்பதை இந்த வீட்டு விடயமே போட்டுடைத்திருக்கின்றது. எப்போதும் சிங்கள மேலதிகமே முதல்; அதன் பின்னரே தமிழர்கள். இராணுவத்தினர்தான் இங்குள் வீடுகளை தரை மட்டமாக்கினர். போரில் பல சொத்துக்களை தமிழர்கள் இழப்பதற்கு இந்த அரசுதான் காரணம். ஆனால் அதற்கான பரிகாரங்கள் இல்லை.

தமிழர்களின் மண்ணில் வீடுகளை அழித்தவர்களுக்கு அங்கே வீடுகள் கட்டிக் குடியேற்றங்கள் அமைத்துக் கொடுக்கின்றார்கள். போரில் காயமடைந்த படையினருக்கு, எங்கள் மண் பலாலியில் வைத்து உணவுப் பொதிகளை வழங்குகின்றனர். ஆனால் போரில் ஊனமுற்ற எங்கள் உறவுகள் தங்கள் வாழ்வாதாரத்துக்காக ஏங்கிக் கொண்டிருக்கின்றன.

ஒரு புறம் குற்றவாளி சரத் பொன்சேகா பொது மன்னிப்பில் விடுவிக்கப்படுகின்றார், மறுபுறம் சந்தேகத்தில் கைது செய்யப்பட்ட தமிழ் கைதிகள் தொடர்ந்தும் தடுத்து வைக்கப்படுகின்றனர். தென்பகுதியில் மசூதிகள் இடித்தழிக்கப்படுகின்றன. ஆனால் வடபகுதியில் விகாரைகள் புதிதாக முளைக்கின்றன.

இதுதான் ''தெற்கினது சுதந்திரம் தங்கத்தினாலானதாக இருந்தால் வடக்கினது சுதந்திரம் தகரத்தினாலானதாக இருக்க முடியாது'' என்பதற்கான அர்த்தமா ? அல்லது சிங்கள ஏகாதிபத்தியம் சொல்லும் ஆனால் செய்யாது; தமிழர்கள் வாய் பொத்தி கை கட்டி வேடிக்கை மட்டும்தான் பார்க்க முடியும். அதுதான் இங்கு நியதி.

# சமுதாயத்தின் ஆணிவேர் மாணவர்களே

■ நித்தியா

சமுதாயத்தின் முக்கிய ஆணிவேராக இருக்கக்கூடிய மாணவ சமுதாயம் இன்று சீர்கெட்டு சின்னா பின்னாமாகி வருகிறது. இதனால் பெற்றோர்கள் அடிவயிற்றில் நெருப்பைக் கட்டிக்கொண்டு பதைபதைக்கின்றனர். இந்த விடயத்தில் கவனம் செலுத்த வேண்டிய முக்கிய பங்கு பெற்றோர்கள் மற்றும் ஆசிரியர்களைச் சார்ந்ததே. முக்கியமாக பெற்றோர்கள் குழந்தையின் எதிர்காலம் குறித்து சிந்தித்து வழிப்படுத்த வேண்டிய பொறுப்பில் உள்ளனர். சில பெற்றோர் எவ்வளவு பணம் கொடுத்தாவது தமது பிள்ளைகளைப் பாடசாலையில் சேர்த்தால் போதும்; பெற்றதன் கடமை முடிந்து விட்டது; இனி ஆசிரியர் பார்த்துக் கொள்வார் என்று எண்ணிவிடுகின்றனர். இத்தகைய எண்ணமே இன்றைய பெற்றோர்களின் பெரும்பாலானோரின் மனதில் நிறைந்துள்ளது.

பணம் சேர்ப்பதே வாழ்வின் இலட்சியம் என்ற குறிக்கோளுடன் இந்தக் காலத்துப் பெற்றோர்கள் பலர் செயற்படுவதால் மாணவர்கள் வேலியில்லாத பூந்தோட்டமாக மாறி விடுகிறார்கள். செல்வம் தேடுவதில் குறியாயிருந்தது. தங்கள் பிள்ளைகளில் நல்ல எதிர்காலத்தைத் தவறவிடுகிறார்கள்.

வீட்டில் வேலைக்காரர்களுடனும், தனித்தும் இருக்கும் பிள்ளைகள், நல்வழிப்படுத்த எவரும் இல்லாத நிலையில் பெற்றோர்களால் கிடைக்கவேண்டிய அன்பை இழக்கின்றனர். வழிகாட்டத் துணையிருந்தால் தவறு செய்யும் மாணவர்கள் கூட, நல்வழிக்குச் செல்வார்கள்.



அவ்வாறே ஆசிரியர்களும் மாணவர்களின் வளர்ச்சியிலும் நன்னடத்தையிலும், ஒழுக்கத்திலும் அக்கறை காட்டவேண்டும். அவர்களை வழிநடத்திச் செல்லவேண்டும். இந்த இடத்தில் ஆசிரியருக்கும் மாணவருக்கும் இடையிலான உறவு தெய்வத்துக்கும் பக்தனுக்கும் இடையிலான உறவாக அமைந்திருக்கவேண்டும். மாணவர்களின் மனம் புண்படாதவாறு கல்வி கற்றலின் அவசியத்தை எடுத்துக் கூறுவது ஆசிரியர்களின் கடமையாகும்.

இந்தக் கால மாணவர்கள் எதையும் எளிதில் புரிந்துகொள்ளக் கூடியவர்கள். வகுப்பு நேரத்தில் ஐந்து நிமிடங்களை மாணவர்களின் நலனுக்காக ஒதுக்கி, நல்லொழுக்கத்தையும், வாழ்க்கை முறைகளையும் தினமும் கற்றுக்கொடுப்பது ஆசிரியர்களின் அவசியமான கடமையாக இருக்கவேண்டும்.

ஒவ்வொரு மாணவரதும் இயல்பையும் ஆசிரியர் அறிந்து வைத்திருப்பதால், அந்த மாணவனை இனம் கண்டு, அவனது பிரச்சினைகளில் இருந்து விடுவிக்க, [illegible] வேண்டும். சேரும் நண்பர்கள்தான் சகல பழக்க வழங்கங்களுக்கும் மூலவேர். எனவே வேலை தேடும் போது நட்பு பேசாது. பெற்ற மதிப்பெண் தான் பேசும். இதை மாணவர் மத்தியில் உணர்த்த வேண்டும்.

சிலவேளைகளில் பெற்றோர்களின் முரட்டுத் தனங்களால் ஆசிரியர்கள் மாணவர்களைக் கண்டிக்க முடியாமல் உள்ளனர். இந்த நிலை மாறவேண்டும். மாணவர்கள் ஆசிரியருக்கு உரிய மதிப்பை வழங்க வேண்டும். பள்ளிப் பருவம்தான் மாணவர்களை மேம்படுத்தும் சரியான பருவம். ஐந்தில் வளையாதது ஐம்பதில் வளையாது என்பார்கள். ஐந்திலிருந்தே நல்ல ஒழுக்கத்தை பெற்றோர் கற்றுக்கொடுப்பதுடன் குறைகளை அன்பாகச் சுட்டிக் காட்டி திருத்தவேண்டிய பெற்றோர் தங்களுக்கும் உரியை கடமையாக உணர்தல் வேண்டும்.

மாணவர்களும் தங்கள் நிலை, தங்களின் வளர்ச்சிக்காகப் பெற்றோர்கள் படும் துன்ப துயரங்கள், ஆசிரியர்களது கஷ்டங்கள் என்பவற்றை உணர்ந்து படிப்பில் கவனம் செலுத்தி வாழ்வில் முன்னேற முயற்சிக்க வேண்டும்.

தற்காலத்தில் தொழில்நுட்ப யுகதில் எத்தனையோ வகையான வளர்ச்சிகள் ஏற்பட்டு அவை மாணவ மனங்களில் பலமாறு தங்களைக் கொண்டு வரினும் அவற்றினூடான தீய செயற்பாடுகளால் மனம் மாசுபடாது மாணவர் தம்மை வளர்த்துக் கொண்டால் சமூகத்தில் உயர்நிலை அடையலாம்.

ஆனால் அவ்வாறு செய்யாது மதுவின் பிடியிலும், போதைக்கு அடிமையாவதிலும் தீயதான தோழமைகளை ஏற்படுத்தி தமது இளமையை வீணாக்குவார்களானால் மாணவ சமுதாயத்தின் எதிர்காலம் சூனியமாகத்தான் இருக்கும் என்பதை அவர்கள் உணரவேண்டும். இதில் எந்த மாற்றமும் இல்லை.

★

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அடிமைகளின் மீட்பர்

## ஆபிரஹாம் லிங்கன்

நெடுந் தொடர் 3

■ பா.உண்மை

ஆபிரஹாம் லிங்கனின் குடும்பம் ஒரு வழியாக கென்டகியில் இருந்து புதிய குடியிருப்பு நோக்கி ஏராளம் கனவுகளுடன் புறப்பட்டு விட்டது. மிக விரைவாக வளர்ந்து வந்த இண்டியானா மாநிலத்தில் தனது குடும்பத்தின் வாழ்க்கையும் விரைவாக முன்னேறும் என்று லிங்கனின் அப்பா நம்பினார்.

மூன்று குதிரை வண்டிகளில் வீட்டுப் பொருள்களையும் குழந்தைகளையும் ஏற்றிக் கொண்டு, ஏழுநாள்கள் பயணம் செய்து, ஸ்பென்ஸர்ஸ் கவுன்டியை அடைந்தார் தோமஸ்.

இண்டியானா தனி மாநிலமாக உத்தியோகபூர்வமாக அறிவிக்கப்பட்டு அப்போது ஒரு வருடம் கூட ஆகியிருக்கவில்லை. ஆகவே, மிகக் குறைந்த விலைக்கு ஒரு நிலத்தை வாங்கி, அங்கேயே நிரந்தரமாகக் குடியேறிவிடலாம் என்பதுதான் தோமஸ் லிங்கனின் திட்டம். அதேபோல இண்டியானா மரங்களுக்கு நல்ல கிராக்கி இருப்பதால், மரம் வெட்டும் தொழில் செய்தால் நன்கு பிழைத்தக் கொள்ளலாம் என்பதையும் தோமஸ் தெரிந்து வைத்திருந்தார்.




ஆபிரஹாம் தனது வயதுக்கு மீறிய உயரத்தோடும் வலுவோடும் இருந்தான். கோடாரியால் வெட்டுவதற்கும் துப்பாக்கியால் சுடுவதற்கும் அவனுக்கு தெரிந்திருந்தது. அவனுடைய அப்பாவின் எல்லா வேலைகளுக்கும் உதவியாளன் ஆபிரஹாம்தான்.

ஆபிரஹாமின் குடும்பம் புது இடத்துக்கு வந்து சேர்ந்தது நவம்பர் மாதத்தில். குளிர்காலம் நெருங்கிக் கொண்டிருந்தது. ஆனால் அவர்கள் தங்குவதற்கு சிறிய வீடோ, குடிசையோ எதுவுமில்லை. நோயாளியாகவும் சோர்ந்தும் இருந்த அம்மா நான்ஸியையும் சின்னப் பெண் சாராவையும் வைத்துக் கொண்டு என்ன செய்வது? என்று திணறிப் போனார் தோமஸ்.

மிகக்கடுமையான வழிப்பயணத்தால் அவர்கள் களைப்பாக வேறு இருந்தார்கள். வண்டியில் இருந்து குதிரைகளைக் கழற்றியதுமே ஆபிரஹாமும் தோமஸும் கைகளில் கோடாரியைத் தூக்கிக் கொண்டு காடுகளுக்கு விரைந்தார்கள். தடிகளையும் கம்புகளையும் வெட்டி வந்து மள மளவென்று ஒரு கூடாரத்தைக் கட்டி முடித்தார்கள். கொம்புகளாலும் இலை தழைகளைக் கொண்ட கூரையாலும் அமைந்தது அந்தக் கூடாரம். தரையை இலைகள் மற்றும் மான், கரடி போன்ற மிருகங்களின் தோல்களைக் கொண்டு மூடினார்கள்.

இண்டியானாவில் ஆபிரஹாமின் குடும்பம் தங்களது முதல் குளிர்காலத்தை இப்படித்தான் கழித்தது. உடலைக் குடைகிற பனி, சதா தூறிக்கொண்டிருக்கும் பனித்துளிகள், குளிர்காற்று இவற்றுக்கு மத்தியில் குளிர் காலம் மிகக் கடுமையாக இருந்தது அந்தக் குடும்பத்துக்கு. வசந்த காலம் வருவதற்கு முன்பாகவே ஆபிரஹாமின் தாய் நான்ஸியின் உடல் நிலை மிகவும் மோசமாகிவிட்டது.

ஆனால் தோமஸ் லிங்கனுக்குத் தன் மனைவியைப் பற்றிக் கவலைப்படக்கூட நேரமிருக்கவில்லை. அவருக்கும் அவரது கோடாரிக்கும் நிறைய வேலை இருந்தது. தோமஸ் முதல் வேலையாக நிலத்தைச் சுத்தம் செய்தால் தான், அவரால் வசந்த காலத்தில் தானியங்களையோ, காய்கறிகளையோ அதில் பயிர் செய்ய முடியும். அதிவிரைவில் ஒரு வீட்டைக் கட்ட வேண்டும் என்றும் நினைத்திருந்தார். வீட்டைக் கட்டுவதற்காக அவர் மரங்களை வெட்டினார்.

மரம் வெட்டுவது வேட்டையாடுவது, விலங்குகளுக்கு பொறி வைப்பது என்று ஆபிரஹாமும் பரபரப்பாக இருந்தான். விளையாடுவதற்குக்கூடக் குறைவாகத் தான் நேரம் கிடைத்தது.

குளிர் அடிக்கும், காற்று வீசும் நாள்களில், வெளியே வேறு எங்கும் போக முடியாத சூழ்நிலைகளில், நான்ஸி அவனுக்கு எழுதக் கற்றுக் கொடுத்தார். உண்மையில் கென்டகியில் இருந்தது போலல்லாமல் இண்டியானாவில் ஆபிரஹாமின் படிப்பு பாழ்பட்டுத்தான் போயிற்று.

✸

வசந்த காலத்தில் புதுவீட்டைக் கட்டி முடித்துவிட்டார் தோமஸ் லிங்கன். மர வீடுதான். ஆனால் வசதியாக இருந்தது. கீழே ஓர் அறை. மற்றபடி மேலே தான் எல்லா அறைகளும். கென்டகியில் இருந்த மரவீட்டை விடப் பல மடங்குச் சிறந்ததாக. குட்டிச் சொர்க்கமாக இருந்தது புது வீடு.

வீடு கட்டி முடிந்ததும் நிலத்தில் பயிரிட ஆரம்பித்தது குடும்பம். காலையிலிருந்து இருட்டு கிறவரை வீட்டில் இருக்கும் எல்லோருக்குமே வேலை இருந்தது.

கோடை காலம் போய் இலையுதிர் காலம் வந்தது. ஆபிரஹாமின் தாய் நான்ஸியின் உடல் நிலையில் எந்த மாற்றமும் இல்லை. சொல்லப் போனால் முன்பை விட இப்போது மிகவும் மோசமாக இருந்தது. எழுந்து நிற்கவும், நடக்கவும்கூட ஆபிரஹாமோ அல்லது சாராவோ அவருக்கு உதவவேண்டியிருந்தது.

# பெற்றோல் விலை உயர்வு திணறியது மத்திய அரசு

■ யமுனா



விலைவாசி உயர்வு என்பது பொதுவாக காலத்துக்குக் காலம் உலகநாடுகளில் ஏற்படும் ஒன்று தான். எனினும், அது குறிப் பிட்ட ஒரு மட்டத்தை விட அதிகரித்தால் அது குறிப்பிட்ட அந்த நாட்டு அரசைச் சிக்கலுக்குள் இழுத்துச் செல்லும். அதாவது விலைவாசி உயர்வால் பெரிதும்பாதிப்பை எதிர்நோக்குவது நாட்டின் சாதாரண பொதுமக்கள் தான்.

எனவே மக்கள் அலை பொங்கி எழுந்தால் அது அரசின் ஆட்சிக்கே ஈடாட்டம் ஏற்படுத்தி விடும். அந்த வகையில் கடந்த வாரம் இந்தியாவில் மத்திய அரசால் மேற்கொள்ளப்பட்ட பெற்றோல் விலை உயர்வு ஒட்டுமொத்த இந்திய மக்களையும் கொதிப்படைய வைத்துள்ளது.

மக்களின் அன்றாட வாழ்க்கைத் தேவைகளில் முக்கியமான ஒன்று போக்குவரத்து. போக்கு வரத்து வசதி பாதிக்கப்பட்டால் மக்களின் அன் றாடப் பணிகளும் பாதிக்கப்படும்.

மன் மோகன்சிங் தலைமையிலான மத்திய அரசு, கடந்த மாதம் 22 ஆம் திகதி பதவியேற்ற மூன்றாவது ஆண்டு நிறைவு விழாவைக் கொண்டாடியது. அன்றுதான் நாடாளுமன்றத்தின் பட்ஜெட் கூட்டத் தொடர் முடிவுற்றது. விழாவைக் கொண்டாடிய மறுநாளே அரசு பெற்றோல் விலையை லீற்றருக்கு ஏழரை ரூபாவால் உயர்த்தியது. இந்த புதிய விலை கடந்த மாதம் 23 ஆம் திகதி நடைமுறைக்கு வந்தது. இதனால் பொதுமக்கள் கடும் அதிருப்தி அடைந்தனர்.

ஹைதராபாத்தில் ஒரு லீற்றர் பெற்றோல் 81.44 ரூபாவாக அதிகரித்தது. இதையடுத்து அங்கு விலையுயர்வை நடைமுறைப்படுத்த முன்பு பெற்றோல் விநியோக நிலையங்களில் பெற்றோலுக்காக நீண்ட வரிசையில் மக்கள் காத்திருக்க வேண்டிய நிலைமையும் ஏற்பட்டது.

இதேவேளை இந்தியாவில் கர்நாடகத் தலைநகர் பெங்களூரில்தான் பெற்றோல் விலை அதிக பட்சமாக லீற்றருக்கு 8.49 ரூபா அதிகரித்துள்ளது. இதையடுத்து ஹைதராபாத் தில் லீற்றருக்கு 8.36 ரூபா, சென்னையில் 7.98 ரூபா, மும்பையில் 7.91 ரூபா டில்லியில் 7.54 ரூபா என்ற வகையில் பெற்றோல் விலை அதிகரிக்கப்பட்டது.

இந்த நிலையில் பெற்றோல் விலை உயர்வை எதிர்கொள்ள முடியாத மக்கள் நாடு தழுவிய ரீதியில் அரசுக்கு எதிராகப் பொங்கி எழுந்தனர். மக்களுடன் அரசியல் கட்சித் தலைவர்களும் இணைந்து ஆர்ப்பாட்டங்களில் ஈடுபட்டனர். அந்த வகையில் பெற் றோல் விலை உயர்த்தப்பட்டதைக் கண்டித்து மேற்கு வங்க முதல்வரும், திரிணமுல் காங்கி ரஸ் கட்சியின் தலைவருமான மம்தாபானர்ஜி தலைமையில் அந்தக் கட்சியினர் பிரமாண்ட மான பேரணியை நடத்தினர்.

பெற்றோல் விலை உயர்வு குறித்து சம்பந்தப்பட்ட எண்ணெய் நிறுவனங்கள் அறிவிப்பை வெளியிட்ட கையோடு அதற்கான கடும் எதிர்ப்பைத் தெரிவித்தவர் மம்தா பானர்ஜி தான். மத்திய அரசுக்கான தமது ஆதரவை திரும்பிப் பெறநேரும் என்றும் எச்சரித்திருந்தார்.

அதுமட்டுமன்றி, அ.தி.மு.கவும் மத்திய அரசின் பெற்றோல் விலை உயர்வைக் கண் டித்து ஆர்ப்பாட்டங்களில்ஈடுபட்டது. சென்னை, சேப்பாக்கம் விருந்தினர் மாளிகை அருகில் தி.மு.க. தலைவர் கருணாநிதி தலைமையில் ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. இதன் போது அரசு பெற்றோல் விலையுயர்வை குறைக்க வேண்டும். இல்லாவிட்டால் அர சுக்கு எதிரான ஆர்ப்பாட்டம் நீடிக்கும் என்று கருணாநிதி மத்திய அரசுக்கு எச்சரிக்கை விடுத்துள்ளார். ஏனைய மாநிலங்களிலும் அரசு பெற்றோல் விலையை உயர்த்தியமையைக் கண்டித்து ஆர்ப்பாட்டங்கள் பரவலாக இடம்பெற்றுள்ளன.

இத்தகைய ஆர்ப்பாட்டங்களை விட கடந்த வியாழக்கிழமை பாரதீய ஜனதா. இடது சாரிகள் ஆகிய எதிர்க்கட்சிகள் நாடு தழுவிய ரீதியில் முழுமையான கடையடைப்புப் போராட் டத்தில் ஈடுபட்டன. டில்லி, பெங்களூர், மும்பை, பட்னா, அலஹாபாத் மற்றும் வாரனாசி ஆகிய நகரங்களில் கடையடைப்பு முழுமையாக இடம் பெற்றது. போக்குவரத்துச் சேவைகள் முழுமையாக ஸ்தம்பிதமடைந்தன. எனினும் தமிழகத் தில் இயல்பு வாழ்க்கை பாதிப்படையவில்லை.

பெங்களூரில் அரச பஸ்கள் ஆர்ப்பாட்டக் காரரால் தீ வைத்து எரிக்கப்பட்டன. சில பஸ்கள் மீது கல்வீச்சுச் சம்பவங்களும் இடம் பெற்றன. அதேவேளை கோவை, திருச்சி, தஞ்சை ஆகிய மாவட்டங்களிலும் மறியல் போராட்டங்கள் இடம்பெற்றன. சென்னை, அண்ணா சாலையில் இடம்பெற்ற மறியல் போராட் டத்துக்குத் தலைமை தாங்கிய இல. கணேசன், மாநிலத் தலைவர் பொன்.ராதாகிருஷ்ணன் உள்ளிட்டோர் கைது செய்யப்பட்டனர். அவர்களுடன் நூற்றுக் கணக்கான பா.ஜ.கவினரும் கைது செய்யப்பட்டனர். பின்னர் அன்று மாலையே அனைவரும் விடுதலை செய்யப்பட்டனர்.

இவ்வாறு நாடுதழுவிய ரீதியில் நடத் தப்பட்ட எதிர்ப்புப் போராட்டங்கள் காரணமாக மத்திய அரசு தனது முன்னைய முடிவை மாற்றிக் கொண்டுள்ளது. அந்தவகையில் மத்திய அரசின் உத்தரவுப்படி எண்ணெய் நிறுவனங்கள் உயர்த்தப்பட்ட மேலதிக விலையிலிருந்து லீற்றருக்கு ரூபா. 1.60 தொடக்கம் 2 ரூபாவரை குறைக்க முடிவு செய்துள்ளது. இதற்கான அறிவிப்பு ஓரிரு தினங்களில் வெளியாகும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. ★

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கல்வியில் விழிப்புணர்வு தேவை



■ சோபனா

காலத்தால் அழியாத கல்விச் செல்வம் எமக்காக இறைவன் கொடுத்த கொடை. உயர்ந்தோர், தாழ்ந்தோர் எனும் பாகுபாடின்றி அனைவரும் கல்வியைப் பெற வேண்டும் என்று இலவசக் கல்வி வழங்கப்பட்டுவருகின்றது.

இந்தக் கல்விச் செல்வத்தை உரிய காலத்தில் உரிய முறையில் பெற்றுக் கொடுக்க வேண்டிய பொறுப்பு பெற்றோர் கைகளில் தங்கியுள்ளது.

கடந்த காலங்களில் வட மாகாணத்தின் கல்வி நிலை பின்னடைவதற்கு முக்கிய காரணம் 'போர்' என பலராலும் கருத்துக்கள் முன்வைக்கப்பட்டன. ஆனால் இன்று எல்லாமே ஓய்ந்து அமைதியாக நாம் வாழ்ந்து கொண்டிருக்கின்றோம்.

இந்த நிலையில் வடமாகாணத்தின் கல்வி நிலை பாதிப்படைவதற்கு முக்கிய காரணம் பாடசாலை விட்டு இடை விலகும் மாணவர்களின் தொகை அதிகரிப்பதே என்றால் அதற்கு இரு வேறுபட்ட கருத்துகளுக்கு இடமில்லை.

தற்போது கிராமப் புறங்களில் பாடசாலை வயதுடைய மாணவர்கள் பாலர் பாடசாலை செல்லாமல் வீடுகளில் முடங்கி இருப்பதை அவதானிக்க முடிகிறது.

பாடசாலை செல்லாமல் வீடுகளில் மாணவர்கள் முடக்கப்படுவதற்கு காரணம் என்ன? பெற்றோர்கள் இது தொடர்பாக சிந்திக்க வேண்டும்.

தமது பிள்ளைகளின் எதிர்காலம் கல்வியில் தங்கியுள்ளது என்பதை உணர்ந்து கொள்ள வேண்டும்.

பாடசாலை செல்லாமல் வீடுகளில் மாணவர்கள் முடக்கப்படுவதற்கு முக்கிய காரணம் குடும்ப வறுமை என்று கூறிவிட முடியாது. மாணவர்களின் விருப்பமின்மை, கற்றலில் நாட்டம் குறைவு, கல்வியறிவு தாராளமாகக் கிடைக்காமை, பாடசாலைகளில் அசமந்தப் போக்கான கடமைகள், போக்குவரத்துப் பிரச்சினை போன்ற காரணங்களும் இருக்கத்தான் செய்கின்றன.

ஆனால், இந்தக் காரணங்கள் நிறைவேற்றப்பட்டால் மாணவர்கள் தமது கற்றலை தடையின்றி நிறைவேற்ற வாய்ப்பு ஏற்படும் அது மட்டுமன்றி இந்த விடயத்தில் பெற்றோர் அக்கறை காட்டவேண்டியது மிக முக்கியமானதாக உள்ளது.

மாணவர்களின் தேவைகள் நிறைவேற்றப்படாமல் அசட்டை செய்யப்படுவதே மாணவர்களுக்கு பாடசாலையை விட்டு இடைவிலக தூண்டலாக அமைந்து விடுகிறது என்றவாறான கருத்துகளும் பலதரப்பட்டோர் மத்தியில் உள்ளன.

ஒரு பிள்ளைக்கு கல்விச் செல்வம் எந்தளவுக்கு கிடைக்க வேண்டும் என்பதை பெற்றோர் உணர்ந்து கொள்ளவேண்டும். பிள்ளையின் எதிர்காலத்தை அவன் பெறப்போகும் கல்வியே தீர்மானிக்கும் என்பதை நாம் மறுத்துவிட முடியாது.

குடும்ப வறுமை குறித்த மாணவனின் கல்வியைப் பெறுவதற்கு தடையாக இருக்கும் எனும் போது அதனையும் தாண்டி பிள்ளைகளின் கற்றலுக்கு பெற்றோர் முக்கியத்துவம் கொடுக்க வேண்டும்.

மாணவர்கள் உளரீதியாக பாதிப்படையும் போது கற்றலில் வெறுப்பு உண்டாகி பாடசாலை செல்வதை தவிர்த்து விடுவார்கள். பாடசாலை செல்லாமல் வீடுகளில் முடக்கப்படும்போது தேவையற்ற சிந்தனையும், வேண்டாத தீய செயல்களையும் நிறைவேற்றும் குணமுடையவர்களாகவும் தம்மை மாற்றிக் கொள்வர். அத்துடன் இளவயதில் திருமணம், மது, புகைத்தல் போன்ற தீய பழக்க வழக்கங்களுக்கு அடிமையாகி தமது எதிர் காலத்தை சிதறடித்துக் கொள்வார்கள்.

''இளமையில் கல்வி சிலையில் எழுத்து'' என்பது போல இளமையில் தனது கல்வியைப் பெறத் தவறியவர்கள் வாழ்வில் எதிர்கொள்ளும் கஷ்டங்களை ஈடுகொடுக்க முடியாமல் அந்த தருணத்திலேயே கல்வியின் தார்ப்பரியம் தொடர்பாக சிந்திக்க தொடங்கி விடுவார்கள்.

மனித வாழ்வில் கல்வி எந்தளவுக்கு முக்கியம் என்பதை உணர்ந்து கொள்ள வேண்டும். எனவே பெற்றோர் பாடசாலை வயதில் தமது பிள்ளைகளுக்கு தராளமாகக் கல்வியைப் பெற்றுக் கொடுக்க வேண்டும்.

அத்துடன் பாடசாலைகள் மாணவர்களின் வரவு, கல்வி ஒழுங்கு என்பவற்றைக் கவனிக்க வேண்டியது அவசியம். அதிபர், ஆசிரியர்கள் பெற்றோருக்குப் பிள்ளையின் கல்வியின் முக்கியத்துவம் தொடர்பாக விழிப்புணர்வை ஏற்படுத்த வேண்டும்.

கிராமப் புறங்களில் அதிகமாக பெற்றோர் அன்றாட சீவியத்துக்கு அல்லற்படுபவர்களாக இருப்பதால் பிள்ளைகளின் கற்றல் செயற்பாடுகள் அவர்களுக்குத் தூரமாகிவிடும். குடும்ப வறுமை அதற்குக் காரணமாக அமைந்து விடுகிறது.

பிள்ளைகளின் கட்டாயக் கல்வி தொடர்பாக அறிவூட்டல் செய்யும் குழுக்கள் கிராமங்கள் தோறும் விழிப்புணர்வை ஏற்படுத்த வேண்டும் இடைவிலகி வீடுகளில் முடக்கப்பட்டுள்ள மாணவர்களுக்கும், அவர்களின் பெற்றோர்களுக்கும் கல்வியில் முக்கியத்துவம் தொடர்பாக விழிப்புணர்வை ஏற்படுத்தி சிறந்த ஒரு எதிர்கால கல்விச் சமூகத்தை உருவாக்க முன்வர வேண்டும்.

# குடலைச் சுத்தம் செய்யும் வங்காரவள்ளை






### பாற்சொதிக் கீரை

**வேறு பெயர்-** பாற்சோத்திக் கீரை

**தாவரவியற் பெயர்-** Ruellia secunda (ரூலியா செகன்டா)

குடும்பம்-Acemthaceae (அக்காந்தேசியே)

சிறுபூண்டு. தரிசு நிலங்களில் தானாக வளரும் இந்தக் கீரையைச் சமைத்துச் சாப்பிட்டு வர வயிற்றுக் கடுப்பு, கழிச்சல், சீதக் கழிச்சல் என்பன நீங்கும்.

### வங்காரவள்ளைக் கீரை

**வேறு பெயர்-** வன்கிறுவாழை, வங்காரவச்சி

**தாவரவியற் பெயர்-** Sesuvium portulacastrum (சேசுவியம் போர்றுலேகாஸ்ரம்)

குடும்பம்-Aizoacea (ஆய்சோசியே)

''தாயும் தகப்பனும் தள்ளிவிட்ட காலத்தில் வாவென்றழைத்த வங்காரவச்சி'' என்பது பழமொழி. இந்தக் கீரை எங்கும் கிடைக்கக் கூடியதாக இருப்பதாலும் மழைகாலத்தில் வேறு காய்கறிகள் கிடைக்காவிட்டாலும் இந்தக் கீரை தாராளமாகக் கிடைப்பதாலும் ஏழைகளின் கஷ்டகாலத்து உணவாக அமைவதாலும் இவ்விதம் அழைக்கின்றனர் போலும்.

இந்தக் கீரை மழை காலத்தில் பொதுவாக மணற்பாங்கான கடலோரங்களில் நன்கு செழித்து வளரக் கூடியது. தனியிலைகளாகக் காணப்படும்.

எதிரான இலை ஒழுங்கு. சதைப் பிடிப்பானவை. சற்று செம்மை கலந்து காணப் படும். தனிப் பூக்கள் சிவப்பு நிறம்.

இந்தக் கீரையிலைகளைச் சமைத்துச் சாப்பிட்டு வர உடலுக்குப் பலத்தைக் கொடுப்பதுடன் வயிற்றுப் பொருமல், மலச்சிக்கட்டுக்களை நீக்கி குடலையும் சுத்தம் செய்யும். வளி நோய்களும் தணிவடையும்.

### பிண்ணாக்குக் கீரை

**தாவரவியற் பெயர்-** Malochia corchorifolia (மெலோகியா கோகோரிபோலியா)

குடும்பம்-Sterculiaceae (ஸ்ரேகுலியேசியே)

சிறிய பூண்டு வகை. தண்டு, கிளைகள் அழுத்தமாக இருக்கும். இலைகள் பலதரப்பட்ட அளவிலும் வடிவத்திலும் காணப்படும். சிறிய பூக்கள் சிவப்பு நிறம். காம்பற்றவை.

இந்தக் கீரையைக் கறி சமைத்துண்ண மலசலம் நன்கு கழியும். வெள்ளை சாய்தல் குணமாகும். ஆனால் சிலருக்க ஒவ்வாமையை ஏற்படுத்தி கரப்பன் நோயை ஏற்படுத்தும்.

மேலும் வாதநோயை விருத்தியாக்கும் என்பதால் வாத நோயாளிகள் இந்தக் கீரையைத் தவிர்ப்பது நல்லது.



Dr. சே.சிவசண்முகராஜா M.D. (S),
சிரேஷ்ட விரிவுரையாளர், சித்தமருத்துவத்துறை, யாழ்.பல்கலைக்கழகம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இலக்கியக் காட்சி
135



# இராமன் காட்டிய மிருதுத் திறன்கள்

ச.லலீசன், விரிவுரையாளர்,
கோப்பாய் ஆசிரிய கலாசாலை.

ஒரு நாள் ஆட்சிக்கு வரப்போகும் இராமன் மக்களிடம் எவ்வாறு நடந்து கொள்கின்றான் என்பதைக் காட்டுவதற்குக் கம்பன் விளைகின்றான்.

இராமன் கல்வி கற்பதற்காக வசிட்டரின் ஆச்சிரமத்துக்குச் செல்வது வழமை. இது ஊருக்கு வெளியே அமைந்திருக்கிறது. சக்கரவர்த்தி திருமகன் நினைத்தால் எந்த வாகனத்திலும் செல்லலாம். ஆனால் இவன் நடந்தே செல்கிறான் எனக் காட்டுகிறார் கம்பர். இராமனின் எளிமையைக் காட்டுவது கம்பரின் நோக்கமாக இருக்கலாம். ஆனால் இந்தக் காட்சியின் ஊடாக அரசன் காட்சிக்கு எளியவனாக இருக்க வேண்டும் எனப் பதிவு செய்கிறார் கம்பர். தமக்கு எதிரே வருகின்ற நகர மக்களை நிறுத்தி அவர்களுடைய சுகதுக்கங்களை விசாரித்து 'எம்மால் உங்களுக்கு ஆகவேண்டிய காரியங்கள் ஏதும் உள்ளனவா? ஏதேனும் பிரச்சினைகள் இருக்கின்றனவா? உங்கள் மனைவி நலமா? பிள்ளைகள் நலமா? என இராமன் விசாரிக்கிறான்.

*எதிர்வரும் அவர்களை எமையுடன் இறைவன்*
*முதிர்தரு கருணையின் முகமலர் ஒளிரா*
*எது வினை? இடர் இலை? இனிது நும் மனையும்?*
*மதிதரு குமரரும் வலியர் கொல்? எனவே*

என்பது கம்பரின் பதிவு.

எதிர்வரும் அவர்களை என்ற அடி இராமன் நடந்து சென்றான் என்பதற்கான ஆதாரம். வாகனத்தில் சென்றிருந்தால் எதிர்வருபவர்களை நிறுத்திக் குசலம் விசாரிக்க முடியாது போயிருக்கும். இளவரசன் நாட்டில் நடந்து செல்கின்றமை அவனுக்கும் மக்களுக்கும் இடையிலான நல்லுறவைப் பலப்படுத்துவதாகவே அமைகின்றது.

சிறுவனாக இருந்தாலும் மக்களுடன் எவ்வாறு நடந்த கொள்வது என்பது பற்றிய திறனை இராமன் பெற்றிருக்கிறான். இன்றைய இளையோரிடம் மிருதுத் திறன்கள் இல்லை என்ற குறைபாடு பலராலும் முன்மொழியப்படுகின்றது. பிறருடன் தொடர்பாடல் கொள்ளும் போது பண்பான வார்த்தைகளைப் பேசும் திறனைப் பலர் இன்று பெற்றிருக்கவில்லை. மற்றவர் மனங்களை நோகடிக்கக் கூடிய வார்த்தையாடல்களே பெரும்பாலான இடங்களில் இடம் பெறுகின்றன. நேர்மனப்பாங்குடன் மற்றவர்களை அணுகும் போக்கும் அருகியே காணப்படுகின்றன. இத்தகு நிலையில் அன்று இராமன் காட்டிய மென்திறன்கள் நம் எல்லோருக்கும் பாடமாக அமையக் கூடியன.

மென்திறன்களை உச்சமாகக் கொண்டிருக்கும் பண்பு நலஞ் சார்ந்திருப்பவன் கடவுளாகிவிடுவதிலும் ஆச்சரியமில்லை. கம்பனை அறியாமலே அவன் இராமனைக் கடவுள் எனக் காட்டிவிடுகிறான். எமையுடை இறைவன் என்ற தொடர் இதனை மெய்ப்பிக்கின்றது.

எதிர்வருகின்றவர்களைப் பார்த்து, வருங்கால அரசன்தானே தான் என்ற அகங்காரம் சிறிதும் இல்லாது மிக எளிமையாக இராமன் எல்லோருடனும் பேசுகின்றான். இத்தகைய எளிமை இறைவனுக்குத்தானே கைவரப் பெறும் எனக் கம்பன் கருதியிருக்கலாம். இதனால் எல்லா உயிர்களையும் தம்பால் உடையன் (எமையுடை இறைவன்) எனக் குறித்தான்.

இந்த இடத்தில் அயோத்தியில் நடந்துவரும் இராமன் மூலப் பரம் பொருளே 'என்பதையும் அண்டங்களில் உள்ள அனைத்து உயிரினங்களையும் அவன் உடமையாகப் பெற்றுள்ளான் என்பதையும் உயிர்களின் மீதுள்ள கருணையால் அவர்களை நிறுத்திக் குசலம் விசாரிக்கிறான் என்பதையும் கம்பன் காட்சிப்படுத்துகிறான்.

காட்சிக்கெளியனாக இருப்பது கடவுளின் இலக்கணம், அத்தகைய தன்மை அரசனிடமும் இருக்க வேண்டும். அதிகாரிகளிடத்திலும் இருக்க வேண்டும். இத்தகு பண்பு நலம் கைவரப் பெற்றவர்கள் இறைவனாகவே மக்கள் கண்களுக்குத் தெரிவர். கம்பருடைய காலத்தில் அரசன் காட்சிக்கு அரியனாக இருந்தமையால் அவனுக்குப் புத்தி புகட்டும் நோக்கிலேயே இவ்வாறு ஒரு காட்சியைக் கவிஞன் படைத்தான் எனக் கருதுவாரும் உளர்.

அரசனுக்குப் புத்தி புகட்டும் பணியை இந்தக் காலத்தில் பத்திரிகை முதலிய ஊடகங்கள் மேற்கொள்கின்றன. ஆனால் அந்தக் காலத்தில் இந்தப் பணிகளைப் புலவர்களே ஆற்றியிருக்க வேண்டும்.

ஒருவன் நீதி வேண்டி அரசனைக் காண விரும்புகின்ற போது அவன் காட்சிக்கு எளியவனாகத் திகழ வேண்டும். இன்று வா! நாளை வா! என அலைக்கக் கூடாது. எளிமையாகக் காண வருபவரை அணுக வேண்டும் எனச் சங்கப் புலவன் ஒருவன் போதிக்கிறான்.

*முறைவேண்டும் பொழுதின் பதன் எளியோர் ஈண்டு*
*உறை வேண்டும் பொழுதில் பெயர் பெற்றோரே*

என்பது புறநானூற்றுப் புலவராகிய வெள்ளைக்குடிநாகனாரின் கூற்று. அரசன் காட்சிக்கு எளியனாக இருப்பது மழைத்துளியை நாடும் போது பெருமழை பெய்வதற்கு ஒப்பானது என்கிறார் அவர்.

இயந்திரத்தனமாகிவிட்ட எமது வாழ்வில் எமது செயற்பாடுகளும் இயந்திரத் தன்மையாகிவிட்டமை துரதிஷ்டமே. மனிதரை மதிக்கும் பண்பு மனிதருள் வளர்க்கப்பட வேண்டும். அதிலும் நம்மிலும் கீழ் [illegible] துப் போற்றும் [illegible] இது நம்மையும் கடவுளாக்கிவிடும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பேச்சு

சிறுகதை

பேராசிரியர் பாலமுருகனார் நாடறிந்த பேச்சாளர். அவர் மேடையில் பேச எழுந்து விட்டால் தமிழ் அவர் நாவில் கொஞ்சிக் குதித்து விளையாடும். மேடைகளில் புதிய புதிய கருத்துக்களைப் புகுத்துவார். அரசியல், நிர்வாகத் துறையில் பொது வாழ்வில் நிகழும் தில்லு முல்லுகளையும் ஊழல்களையும் மேடையில் அக்குவேறு ஆணிவேறாகக் காட்டும் போது கேட்போர் மூக்கில் விரலை வைப்பர்.

அன்று அகில இலங்கை மாதர் சங்கக் கூட்டம். பெண்களின் முன்னேற்றச் செயற்பாட்டு மண்டபத்தில் கோலாகலமாக நிகழ்வு நடைபெற்றுக் கொண்டிருந்தது. பிரதம விருந்தினராக பேராசிரியர் பாலமுருகனார் அழைக்கப்பட்டிருந்தார். 'பெண்களும் சீதனக் கொடுமையும்' என்ற பொருளில் சீதனக் கொடுமையால் பெண்கள் படும் அவலங்கள் பற்றி ஒரு மணித்தியாலம் உரை நிகழ்த்த எழுந்து நின்றார். அவரது பேச்சின் உணர்வெழுச்சிகளால் இளையோரின் கண்களிலும் கண்ணீர் பனித்தது. பெண்களின் மனதில் மகிழ்வு. அவர் தமது பேச்சின் இறுதியில் கூறிய சொற்கள் கேட்போர் உள்ளங்களை மெய்சிலிர்க்கச் செய்தன. ''அன்பர்களே! கேளுங்கள் இது என் உறுதியுரை'' எனக்கு மூன்று புதல்வர்கள் உள்ளனர். அதில் மூத்த புதல்வன் வைத்தியராக தொழில் புரிகின்றான். அவனுக்கு வயது முப்பது. நான் அவனுக்கு ஒரு சல்லிக் காசும் சீதனம் வாங்காமல் திருணம் செய்து வைக்கப்போகிறேன் என்று சொன்னபோது அங்கு எழுந்த கரகோஷமும் மகிழ்ச்சி ஆரவாரமும் மண்டபத்தை நிறைத்தன.

உரத்த குரலில் சீதனக் கொடுமையைச் சாடி அவரின் பேச்சொலி எழும் போதெல்லாம் கரகோசங்களால் விளைந்த மகிழ்ச்சி ஆரவாரம் அடங்கப் பல நிமிட நேரங்களாயின. ஒரு மணி நேரப் பேச்சினுள்ளே ஓராயிரம் கைதட்டல்கள் தொடரும் கருத்துரை மக்களின் கரகோசத்துக்குத் தீனி போடும் வகையில் அவர் தான் கற்றறிந்த சொல்லடுக்கில் மேலும் மேலும் உரக்கப் பேசினார். அவரின் உள்ளத்திலும் ஒரு பூரிப்பு அவர் படித்தவர். நல்ல அறிவாளி, அத்தோடு மேடைப் பேச்சென்றால் அவருக்கு இணை அவரேதான். துடிப்பு மிக்கவர், துணிவான அவரது சொற்களுக்கு ஒரு கூட்டமே அடங்கி ஆராதித்தன.

இன்று அவரைச் சந்திக்க வந்திருக்கும் நல்ல சிவம் அவரது பெயருக்கேற்ப நல்லவர். பல நாளாக அவர் மனதில் முளைவிட்டிருந்த ஒரு ஆசையை வெளிப்படுத்திப் பாலமுருகனாரின் சம்மதத்தைப் பெற வந்திருந்தார். அவருக்கோ, மூன்று பெண் குமருகள். அவர்களில் ஒருத்தி டாக்டராகப் படித்துப் பட்டம் பெற்றுள்ளாள். அவளுக்கும் அவளோடு பிறந்த ஏனைய பெண்களுக்கும் மனைவிக்கும் அவர் ஒருவரே ஆசிரியராகப் பணியாற்றிப் பெற்ற சம்பளத்தில் கல்வியோடு அத்தியாவசிய தேவைகளுக்கான செலவுகளை நிறைவேற்றி விடுவார். அவருக்கும் உதவியாக மனைவியின் சேவையும் சிக்கனமும் அவரை ஒரு நல்ல மனிதனாக வாழ வைத்திருந்தன.

பாலமுருகனாரின் பேச்சில் அவருக்கு ஒரு விருப்பம். அவரது கருத்துச் செறிவான வாய்மொழிகளில் ஒரு பற்று. அவரைப் போல் அவரின் பேச்சைப் போல் அவரின் மீதும் அவரின் எண்ணங்கள் மீதும் நல்லதையே பார்ப்பவர்.

பாலமுருகனார் வீட்டு வாசற்படியில் வந்து நின்று கொண்டே சற்றுத் தயங்கித் தயங்கி, முட்டையில் தட்டுவது போலக் கதவிலே முதலாவது தட்டை மெதுவாக தட்டினார். அது கதவு திறக்கப் போதுமானதல்ல. தட்டுப் பலமான போது கதவைத் திறந்த பாலமுருகனைக் கண்டதும் நல்லசிவத்தின் கைகள் ஒன்றுசேர.

ஐயா வணக்கம் என்றார். ''யார் நீங்கள்'' ''உள்ளே வாருங்கள்'' நல்ல சிவத்தின் தோற்றம் அவரை மிகவும் பணிவுடன் வீட்டுக்குள் வரவழி செய்தது. வந்தவர் உட்காரு முன்னரே ''என் பெயர் நல்லசிவம் எனக்குத் திருமண வயதில் ஒரு பெண் இருக்கிறார். அவள் பெயர் தர்மினி அவளும் டாக்டர் தான். அன்று மாதர் சங்கக் கூட்டத்தில் நீங்கள் ஆற்றிய சொற்பொழிவை இப்பொழுது நினைத்தாலும் மெய் சிலிர்க்கிறது. அந்தப் பேச்சின் இறுதிப் பகுதி இருக்கிறதே அதுதான்... அதுதான் நல்ல சிவம் வார்த்தைகளை முடிக்கவில்லை. பேராசிரியர் குறுக்கிடுகிறார். ஏன்? அதிலே உங்களுக்கு சந்தேகமா? உள்ளத்தில் உண்மை ஒளி உண்டாயின் வாக்கில் ஒளி உண்டாகும் என்ற போது பாலமுருகனாரை அவரது பரந்த முகத்தை நல்லசிவம் ஒரு முறை நோக்கினார். ''உட்காருங்கள் உட்காருங்கள்'' என்ற போது நல்லசிவம் உட்கார்ந்து விட்டார் என்பது தெரிந்தது.

(18 ஆம் பக்கம் பார்க்க)

நா.கிருஸ்ணாளினி,
ஊர்காவற்றுறை.



# நாடி பிடித்துப் பார்த்து வைத்தியம் செய்த பரியாரிமார்




■ எஸ்.எம்.கோபாலரத்தினம்

யாழ்ப்பாணத்தில் தர்மாஸ்பத்திரி அமைந்த பின்னரும் கூட ஆங்கில வைத்தியத்தில் பெரும்பாலான மக்களுக்கு நம்பிக்கையேற்படவில்லை. இந்த மருந்துகள் உடன் மாற்றத்தை ஏற்படுத்தி சுகம் கொடுத்தாலும் நாளாக நாளாக நோயாளிக்கு கடும் வருத்தங்களையும் புதிய நோய்களையும் கொண்டுவருகின்றனர் என்று பலரும் பயந்தார்கள். தர்மாஸ் பத்திரியில் மருந்துகளும் இலவசம், சிகிச்சையும் இலவசம் என்பதால் மருந்துகளும் சேவையும் நல்லவையாகவும் அக்கறையாகவும் இருக்கமாட்டாதென்ற அபிப்பிராயம் மக்கள் மத்தியில் நிலவியது.

யாழ்ப்பாணத்தில் குறிப்பாக யாழ்ப்பாண நகரில் ஆயுள்வேத சித்த வைத்தியத்தியத்தில் பிரசித்தி பெற்றவர்கள் பலர் இருந்தார்கள். மக்களும் சித்த வைத்தியத்திலும் ஆயுள்வேத வைத்தியத்திலுமே நம்பிக்கை வைத்திருந்தார்கள்.

நாடிபிடித்துப் பார்க்கும் வைத்தியர்கள் என்ன நோய் என்பது பற்றிப் பொதுவாகச் சொல்ல மாட்டார்கள்.

யாழ். நகரில் கைலாயபிள்ளையார் கோயிலடியில் பரிபூரணாநந்தர், இலுப்பையடி சந்திக்கு அருகே இராசவைத்தியர். இராசையா வாத்தியார், 'இராச வைத்தியர்' என்று பட்டமும் பெற்ற வைத்தியர். நாடி பிடித்துப் பார்த்து மருந்து கொடுத்தார் என்றால் அதற்கு நல்ல பயன் கிடைக்கும். ஆனால் இவர் வைத்தியத்துடன் நிற்காமல் சேணிய தெரு சைவப்பள்ளிக் கூடத்தில் வாத்தியாராகவும் தொழில் பார்த்ததுதான் பிள்ளைகளின் துரதிர்ஷ்டம்!சிவந்தமேனி, நரைத்தலை, தடித்த பருத்த உயர்ந்த தோற்றம். இவரின் மனைவியும் ஆண் ஒன்றும் பெண் ஒன்றுமாக இவரின் பிள்ளைகளும் இவரின் நிறத்துக்கு நேர்மாறாக இருந்தனர். இதனால் இவர் படிப்பிக்கும் வகுப்பிலிருந்த வெள்ளைப் பிள்ளைகள் மீது இவருக்கு வெறுப்பு! வெறுப்பா பொறாமையா? அந்தப் பிள்ளைகள் அர்த்தம் இல்லாமல் தண்டனைக்குள்ளாவதுண்டு. பெருமாள் கோயில் பின் வீதியில் இராசாப் பரியாரியார் என்ற சித்த வைத்தியர் இருந்தார். மற்ற வைத்தியர்களைப் போல் அல்லாமல் இவர் பண விஷயத்தில் கறாராக இருப்பார். இவரது பிள்ளைகளும் சிறந்த வைத்தியர்கள். இளைய மகன் டாக்டர் விசுவலிங்கம் சிறந்த வைத்தியர். கஷ்டப்பட்ட மக்களுக்கு உதவியிருக்கிறார். இளம் வயதில் மனைவி மக்களை விட்டுப் போய்ச் சேர்ந்து விட்டார். மனைவியும் பரியாரியார்தான். அவரும் காலமாகி விட்டார். விஸ்வபாரதி வைத்திய நிலையம் இருந்த கன்னாதிட்டி வீதி மணிக்கூட்டு வீதிச் சந்தி இப்போது பலசரக்குக் கடையாகவும் சாப்பாட்டுக் கடையாகவும் இருக்கிறது.

கன்னாதிட்டிச் சந்தியிலிருந்து வடக்கு நோக்கி இன்று உள்ள கஸ்தூரியார் வீதியில் சிறிது தூரம் சென்றால் இந்த வீதிக்கு கஸ்தூரியார் வீதி என்ற பெயர் வரக் காரணமாக இருந்த ''கஸ்தூரியார் வளவு'' இன்று''உதயன்'' என்று பெயர் தாங்கி சுறுசுறுப்புடன் இயங்கிக் கொண்டிருக்கும் ஆள்கள் நிறைந்திருப்பதைக் காணலாம்.

கஸ்தூரியார் பரம்பரைப் பெயர் பெற்றது. சித்த ஆயுள்வேத வைத்தியத்தில் மட்டுமல்ல கல்வி கலாசாரத் துறையிலும் சமூக சேவையிலும் பெயர் பெற்றது. இப்பொழுது உதயன் நிர்வாகப் பகுதியிருக்கும் வாசலில் புறக்ரர் எம். ஆர்.காராளசிங்கம் காலையிலும் மாலையிலும் நின்று மக்களுடன் உரையாடிக் கொண்டிருப்பதைப் பார்த்திருக்கிறேன். . இவர் பின் நாவலர் பாடசாலைக்கு எதிரே காங்கேசன்துறை வீதியில் கஸ்தூரியார் வளவு போல் உயர்ந்த சுவர்களைக் கொண்ட பெரிய வீடு கட்டிக் குடிபெயர்ந்தார். காராளசிங்கம் 7 ஏக்கர் இருந்த கஸ்தூரியார் இல்லத்தில் வைத்திய அத்தியட்சகராக கடமையாற்றிய வி.ரி.பசுபதி வசித்தார்.

இவருடைய மூத்த மகன் இலங்கையின் சட்டமா அதிபராகக் கடமையாற்றிய சிவா பசுபதி, இளையமகன் மருத்துவர் யோகு பசுபதி இவரின் மனைவி நளாயினி பசுபதியும் ஒரு மருத்துவர் தான். இவர்கள் இருவரும் இதே கஸ்தூரியார் இல்லத்தில் முன்பு கஸ்தூரியார் பரம்பரை வாழ்ந்த நாற்சார வீட்டில் தனியார் மருத்துவமனையை இயக்கிவந்தனர். மருத்துவர் நளாயினியின் தந்தையார் உரும்பிராயில் பெயர் பெற்ற மருத்துவராக விளங்கிய மருத்துவர் சிவஞானரத்தினம். இவர் சிறந்த பாடகருமாவர் யாழ். ரசிக ரஞ்சன சபா இசைவிழாக்களில் இவரது கச்சேரியும் இடம் பெறும்.

நானும் இவரது கச்சேரியை பார்த்தும், கேட்டும் ரசித்திருக்கிறேன் வெள்ளாந் தெருவில் சின்னத்தம்பி பரியாரியார் ஒட்டுமடத்தில் பொன்னப்பா பரியாரியார் பரம்பரை, சாயக்கார ஒழுங்கையில் சிவராசாப் பரியாரியார், வைத்தியர் கஸ்தூரியார் பரம்பரையில் கடைசியாகச் சேவை செய்த பரியாரியாரின் பெயர் முத்துக்குமாரு என்று நினைக்கிறேன்.

நாற்சார் வீட்டில் தான் இவர் இருந்தார். இந்த வீட்டின் வாசலில் ஏறி வீட்டினுள் போவதற்கு முன் இரு பக்கங்களிலும் விறாந்தைகள் இருக்கும். வைத்தியம் செய்ய வருபவர்கள் இந்த விறாந்தைகளில் வந்து காத்திருப்பார்கள். எந்த நோயாளி எப்படி முக்கினாலும் முனகினாலும் பரியாரியார் அலட்டிக் கொள்ள மாட்டார். வாசலுக்கு நேரே உள்ள நாற்காலியில் அமர்ந்திருப்பார்.

கதவு அருகே அமர்ந்து நோயாளிகளுடன் கதைத்துக் கொண்டிருப்பார். பரியாரியார் உதவியாளர் பெயர் பரராஜசிங்கம். இவரும் சித்த ஆயுள்வேத வைத்தியம் படித்திருக்க வேண்டும். நோயாளியைப் பரியாரியார் நாடிபிடித்துப் பார்த்த பின் சிறிது நேரம் பேசாமலிருப்பார். பின்னர் உதவியாளர் பரியாரியாரின் அருகே வருவார்.

பரியாரியார் (அவர் பெயர் முத்துக்குமாருவா, கதிரவேலுவா என்பது சரியா நினைவில்லை) பரராஜசிங்கம் அவர்களின் காதில் ஏதோ ·இரகசியமாகச் சொல்லுவார் பரியாரியாரின் கைவிரல்கள் ஆடுவதையும் உதடுகள் அசைவதையும் தான் நாம் காணமுடியும்.உதவியாளர் பவ்வியமாக நின்று தலையாட்டி விட்டு உள்ளே போய் சில மருந்துகளைச் சரைகளாகக் கொண்டு வந்து கொடுப்பார் .

இந்த வைத்தியரிடம் சிகிச்சை பெறுவதற்கு பொறுமை பெரிதாகத்தேவை. ஆனால் அவர் நாடி பிடித்துப்பார்த்துக் கொடுக்கும் மருந்தின் சக்தி மிக பிரசித்தம் ! இவர்கள் யோகர் சுவாமிகளின் பக்தர்கள்!

---

■ எஸ்.அபி
*பளை மத்திய கல்லூரி*

# மாணவர்களே

## ஒரு நிமிடம் சிந்தியுங்கள்!

வாழ்க்கை என்பது ஒரு வட்டம். அந்த வட்டத்தில் 13 வருட காலப் பகுதியை பாடசாலையிலேயே கழிக்கிறீர்கள். அந்த அழகான அற்புதமான பள்ளி வாழ்க்கையை ஒரு முறை சிந்தித்துப் பார்த்தீர்களா?

நீங்கள் பாலர் வகுப்பில் அடியெடுத்து வைத்தபோது அன்னைக்கு நிகராக இன்முகத்தோடு அன்பாக அரவணைக்கிறார்கள் அன்பு ஆசான்கள். நீங்கள் பிறந்தவுடன் தாலாட்டு பாடி உங்களை முத்தமிட்ட அன்னையைப் போன்றே உங்களை மகிழ்ச்சிப்படுத்தும் சிறு பாடல்களூடாகவே உங்கள் கற்றல் செயற்பாட்டை ஆரம்பிக்கிறார்கள்.

ஒரு தாய் தன் பிள்ளையை எவ்வாறு நேசிக்கிறாளோ அதே போன்று ஆசிரியர்கள் ஒரு வகுப்பில் ஒரே நேரம் 40 பிள்ளைகளுக்கு தாயாகக் காணப்படுகிறார்கள். உலகத்தில் போற்றப் படக்கூடிய ஒரு புனிதமான தொழில் ஆசிரியத் தொழில் . ஒவ்வொரு ஆசானும் ஒவ்வொரு மாணவி/மாணவன் மீதும் வைத்துள்ள பாசம், நேசம், கருணை, இரக்கம் என்பவற்றை அறியாமல் ஒவ்வொரு மாணவரும் ஆசிரியரை உதாசீனப்படுத்தும் நிலைக்கு இன்றைய சமூகம் தள்ளப்பட்டுள்ளது.

மாணவர்களே ஒரு நிமிடம் சிந்தியுங்கள்! எத்தனையோ குடும்பச் சுமைக்கு மத்தியிலும் தமது நோய், நொடி, களைப்பு, உறக்கம் எல்லாவற்றையும் தியாகம் செய்து உங்களை சமூகத்தில் ஒரு நற்பிரஜையாக உருவாக்கவே ஆசிரியர்கள் தம்மை அர்ப்பணிக்கிறார்கள்.

> வானத்து சூரியன் தன்னை உருக்கி
> உலக மக்களுக்கு ஒளியை கொடுப்பது
> போலவே ஒவ்வொரு ஆசிரியரும்
> தம்மை உருக்கி உங்கள் வாழ்வுக்கு
> ஒளியூட்டுகிறார்கள். இதற்கெல்லாம்
> நீங்கள் செய்யும் நன்றிக்கடன் என்ன?
> ''பள்ளிக்கூடத்தில் சொன்ன பாடத்தில்
> இந்த உலகத்தை நாம் அறிந்தோம்
> அன்னை மடியைப் போல் எமை
> தாங்கிய இந்த பள்ளியை ஏன்
> மறந்தோம்''
> ஒரு குழந்தை தாயின் கருவிலிருந்து
> பிறக்கும் போது அன்னை உலகத்தை
> மட்டுமே காட்டினாள். ஆனால் உலகம்
> என்றால் என்ன? என்பதை
> புரியவைத்தவர்கள் ஆசிரியர்கள்.

வானத்து சூரியன் தன்னை உருக்கி உலக மக்களுக்கு ஒளியை கொடுப்பது போலவே ஒவ்வொரு ஆசிரியரும் தம்மை உருக்கி உங்கள் வாழ்வுக்கு ஒளியூட்டுகிறார்கள். இதற்கெல்லாம் நீங்கள் செய்யும் நன்றிக்கடன் என்ன?

''பள்ளிக்கூடத்தில் சொன்ன பாடத்தில் இந்த உலகத்தை நாம் அறிந்தோம்

அன்னை மடியைப் போல் எமை தாங்கிய இந்த பள்ளியை என் மறந்தோம்''

ஒரு குழந்தை தாயின் கருவிலிருந்து பிறக்கும் போது அன்னை உலகத்தை மட்டுமே காட்டினாள். ஆனால் உலகம் என்றால் என்ன? என்பதை புரியவைத்தவர்கள் ஆசிரியர்கள்.

உலகத்தில் ஒரு மகத்தான தொழிலை மேற்கொள்ளும் ஆசிரியர்களுக்கு நீங்கள் கொடுக்கும் மதிப்பு என்ன? உங்கள் பக்கம் நியாயம் இருந்தும் உங்களுக்கு எதிராக ஆசிரியர்கள் செயற்படுகிறார்கள் என்றால் அவர்கள் மீண்டும் உங்கள் முன் வரும்படி நீங்களே உங்களில் மாற்றத்தை ஏற்படுத்துங்கள். அந்தக் கணத்தில் உங்களைப் பார்க்கும் போது ஆசிரியர்கள் கூட சந்தோசப் படுவார்கள்.

சிலவேளை உங்கள் அன்னை கூட ஒரு ஆசிரியராக இருக்கலாம். நீங்கள் ஒரு ஆசிரியருக்கு என்ன செய்ய நினைக்கிறீர்களோ அதையே இன்னொரு மாணவன் உங்கள் அன்னைக்கும் செய்வான் என்பதையும் புரிந்து கொள்ளுங்கள். ஒவ்வொரு ஆசானையும் உங்கள் அன்னையைப் போல் யோசியுங்கள். ஒவ்வொரு ஆசிரியர்களையும் உங்கள் நண்பர்களாக நேசித்துப் பாருங்கள். சில சந்தர்ப்பங்களில் நீங்கள் கூட எதிர்காலத்தில் ஒரு ஆசிரியராக வரக்கூடும். ஆசிரியத் தொழிலின் மகத்துவம், வேதனை எல்லாமே உங்களுக்கும் புரியும். இனிய சகோதரர்களே ஒவ்வொரு ஆசிரியர்களும் எமக்கு இறைவனால் கொடுக்கப்பட்ட வரம்தான்.

எவ்வளவுக்கு அவர்களின் மனதை புண்படுத்தாமல், மகிழ்ச்சிக் கடலில் குளிரவைக்க முடியுமோ அந்தளவுக்கு உங்கள் செயற்பாடுகளை மாற்றிக்கொள்ளுங்கள்.

உங்களை சமூகத்தில் ஒதுங்கி வாழாமல் உயர்ந்தவர்களாக மற்றவர்களை நேசிக்கக்கூடிய வகையில் மாற்றியமைக்கிறார்கள் ஆசிரியர்கள்.

ஒவ்வொரு மாணவனும்/ மாணவியும் ஆசிரியத் தொழிலின் மேன்மையையும், புனிதத் தன்மையையும் புரிந்து செயற்பட வேண்டும். ஒரு தாய் தன் பிள்ளையை பெற்றெடுத்தவுடன் எவ்வளவு சந்தோசத்தில் இருக்கிறாளோ அதே போலவே நீங்கள் பல்கலைக்கழக வாசலில் நிற்கும் போது அல்லது சமூகத்தில் உயர்ந்த நிலையில் இருக்கும் போது ஆசிரியர்களும் சந்தோசப்படுவார்கள். எனவே ஒவ்வொரு ஆசிரியர்களையும் உங்கள் அன்னையாய், சகோதரர்களாய், நண்பர்களாய் நேசித்துப் பாருங்கள். யாருமே அறுக்க முடியாத ஒரு உறவுப் பாலம் உங்களுக்குள் உருவாகும். அந்த உறவுப் பாலத்தில் ஏறி சமூகமும் நடைபோடத் தொடங்கினால் வளமானதொரு நாட்டைக் கட்டியெழுப்பலாம்.

ஒவ்வொரு மாணவர்களும் ஆசிரியர்களுடன் இணைந்து வளமானதொரு எதிர்காலத்தைக் கட்டியெழுப்பி நற்பிரஜைகள் நிறைந்த சமூகம் ஒன்றை உருவாக்குங்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org






# விஞ்ஞானத் தகவல்கள்

1. இங்கிலாந்து நாட்டு முதல் விண்வெளி வீராங்கனை யார்?
ஹெலன் பி.விர்மான்
2. கோள்களின் அரசன் எனப்படும் கோள் எது?
வியாழன்
3. உலர் வெடியாக் கனிக்கு ஓர் உதாரணம் தருக?
நெல்
4. பூமிக்கு மிக அருகிலுள்ள கோள் எது?
சூரியன்
5. நட்சத்திரங்கள் விண்வெளியில் இயங்கிக் கொண்டிருக்கின்றன என கண்டுபிடித்தது யார்?
கிறிஸ்டியன் ஜோஹான் டாப்ளர் (1842)
6. சூரியனில் காணப்படும் கரும்புள்ளியைக் கண்டு பிடித்தவர் யார்?
கலிலியோ







அர்த்தநாரீஸ்வரன் சோபிகன்,
தரம்- 10, சாவகச்சேரி இந்துக் கல்லூரி.



சு.டிலக்ஷன்,
யா/புத்தூர் இந்து ஆரம்பப் பாடசாலை.



ஆ.தியூலன்,
யா/ புனித தெரேசா மகளிர் கல்லூரி.



அனுஜிற்றா தவறஞ்சிற்,
தரம்- 1, ஜோன் பொஸ்கோ, யாழ்ப்பாணம்.



பா.சுதாங்கன்,
யா/புத்தூர் இந்து ஆரம்பப் பாடசாலை.

# யார் வள்ளல்....?



முன்னொரு காலத்தில் பொதிகை மலையை நன்மாறன் என்ற அரசன் ஆண்டு வந்தான். வாரி வழங்கும் வள்ளலாக இருந்த அவன் புகழ் எங்கும் பரவியது. கரூர் அரசன் மணிமாறன் இதைக் கேள்விப்பட்டான்.

''சிறிய பகுதியை ஆளும் நன்மாறனுக்கு இவ்வளவு பேரா? நான் அவனைவிட வாரி வழங்கும் பேரும் புகழும் பெற வேண்டும்'' என்று நினைத்தான்.

தன் பிறந்த நாளன்று மக்களுக்கு வாரி வழங்கப் போவதாக அறிவித்தான். பிறந்த நாள் வந்தது. பரிசு பெறுவதற்காக நிறைய பேர் அரண்மனை முன் கூடினர். அங்கிருந்த மேடையில் நின்றபடி ஒவ்வொருவருக்கும் பரிசு வழங்கிக் கொண்டிருந்தான் அவன். அப்போது தெற்கு வாயில் வழியாகக் கிழவி ஒருத்தி வந்தாள். அவன் முன் கை நீட்டினாள். அவனும் பரிசு தந்து அனுப்பினான். சிறிது நேரம் சென்றது. மேற்கு வாயில் வழியாக அவள் வந்தாள்; அவன் முன் கையை நீட்டினாள். மீண்டும் பரிசு பெற அவள் வந்திருக்கிறாள் என்பதை அவன் தெரிந்து கொண்டான். அவளுக்குப் பரிசு தந்து அனுப்பினான்.

மூன்றாம் முறையாக அவள் வடக்கு வாயில் வழியாக வந்தாள். கையை நீட்டினாள். இந்தக் கிழவி திரும்பவும் வந்திருக்கிறாளே என்று முகத்தைச் சுளித்துக் கொண்டான். வேண்டா வெறுப்பாக அவளுக்குப் பரிசு தந்து அனுப்பினான்.

திரும்பத் திரும்பத் தான் வருவதை அரசர் தெரிந்து கொண்டார். அதனால்தான் வெறுப்பைக் காட்டுகிறார் என்பது அவளுக்குப் புரிந்தது. இருந்தும் அவள் நான்காம் முறையாகக் கிழக்கு வீதி வழியாக வந்தாள். அரசனின் முன் கையை நீட்டினாள். அவளைப் பார்த்ததும் அவனால் கோபத்தை அடக்க முடியவில்லை.

''கிழவி! நீ எத்தனை முறைதான் பரிசு பெற்றுச் செல்வாய்? என்னை ஏமாளி என்று நினைத்துக் கொண்டாயா? உனக்குப் பரிசு ஏதும் தர மாட்டேன்,'' என்று அவளை விரட்டினான்.

அங்கிருந்து செல்லாத அவள், ''அரசே! உங்களைப் போலவே பொதிகை மலை அரசர் நன்மாறனும் பிறந்தநாள் பரிசு வழங்கினார். அவரிடம் நான் திரும்பத் திரும்பப் பதினாறு முறை சென்று கையை நீட்டினேன். என்னைத் தெரிந்ததாகவே அவர் காட்டிக் கொள்ளவில்லை. ஒவ்வொரு முறையும் சிரித்த முகத்துடன் பரிசு தந்து அனுப்பினார். ஆனால், நீங்களோ நான் மூன்றாவது முறை வந்தபோதே கோபத்தைக் காட்டினீர்கள். நான்காவது முறை இல்லை' என்றே விரட்டுகிறீர்கள்'' என்றாள்.

இதைக் கேட்ட அவன் தன்னால் நன்மாறனைப் போல வள்ளலாக முடியாது என்பதை அறிந்து கொண்டான்

## விடை தெரியுமா? 162

### உங்களுக்கும் பரிசில்கள்

1. மனித சுவாசத்தைக் கட்டுப்படுத்தும் பகுதி எது?
2. காகித வீடு என அழைக்கப்படும் நாடு எது?
3. இலங்கையில் உள்ள மாகாணங்கள் எது?
4. பூமிக்கு மிக அருகில் உள்ள கோள் எது?
5. மனிதர்கள் காலடி பதிக்காத கண்டம் எது?



### விடைகள் 160

1. வௌவால்
2. சிறுநீரகம்
3. அல்போனியா
4. மும்பை
5. பசுப்பிக் பெருங்கடல்

### வெற்றி பெற்றோர் விவரம் (160)

★ ஆ.தெய்விகா, தரம்- 5, யாழ்.இந்து ஆரம்பப் பாடசாலை.
★ த.தரண்யா, தரம்- 6, கொக்குவில் இந்துக் கல்லூரி.
★ ந.ஜெய்மதுசன், தரம்- 7'பி', சாவகச்சேரி இந்துக் கல்லூரி.
★ ஆ.சிவப்பிரியா, தரம்- 8, யாழ்.இந்துக் கல்லூரி.
★ க.கபிலன், தரம்-9, உடுவில் மான்ஸ் ம.வி
★ கு.மாதங்கி, தரம்- 4'ஏ', இணுவில் இந்துக் கல்லூரி.

**விடை தெரியுமா?**

தெரிந்தால் 09.06 .2012 இற்கு முன்னர் சரியான வீடைகளை அனுப்பும் 6மாணவர்களுக்குப் பரிசில்கள் வழங்கப்படும். முதல் மூவருக்கும் முறையே ரூபா150, ரூபா 125 மற்றும் ரூபா 100 வீதமும் ஏனைய மூவருக்கும் தலா ரூபா75வீதமும் பரிசில்கள் நூல்களாக வழங்கப்படும்.

## பொது அறிவு

01) உலகின் மிகப் பெரிய பெருங்கடல் எது?
பசுபிக் பெருங்கடல் (ஆழம் 12.925 அடி)



02) உலகின் மிகப்பெரிய தீவு எது?
கிறின்லாந்து (பரப்பு சுமார் 840.000 ச.மைல்)
03) உலகின் மிகப்பெரிய பாலை வனம் எது?
சகாரா, வட ஆபிரிக்கா(பரப்பு 125.000 ச.மைல்)



04)உலகின் மிக உயரமான அருவி எது?
ஏஞ்சல் அருவி வெனிசூலா( உயரம் 3.212 அடி)
05) உலகின் மிகவும் குளிர்ச்சியான பிரதேசம் எது?
சைபீரியா
07) பூமியில் மனிதர்கள் வாழாத கண்டம் எது?
அந்தாட்டிக்கா
08) உலகில் அதிக மக்கள் சார்ந்துள்ள மதம் எது?
புத்தமதம்
09) ஒரு தலைமுறை என்பது எத்தனை ஆண்டு?
30 ஆண்டுகள்
10) ஆகாய விமானத்தின் அதிவேகம் எவ்வளவு?
760 மைல்கள்

ச.லக்சிகா, தரம்-8ஏ, யா/சங்கானை சிவப்பிரகாச ம.வி.

சிறுவர்கதிருக்கு ஆக்கங்களை அனுப்ப விரும்பும் சிறார்கள்
சிறுவர்கதிர்,
உதயன், 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
என்னும் முகவரிக்கு அனுப்பி வையுங்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## கண்ணீர்க் காவியம்

பூவை விடவும்
அழகி நீ என்று
எனக்குள்ளே
பூரிப்படைந்தேன்

நீ பார்க்கும்
ஒவ்வொரு
வேளையும்
உன்னருகை நாடி
என் எண்ணங்களை
பேசிக் கொண்டேன்

உன் தூய்மையான
காதலால்
தினமும்
புது உலகை
கண்ணுற்று
என்னுள்ளே
ஏதேதோ
உணர்வுகளை
செதுக்கிக் கொண்டேன்

மேன்மை மிகுந்த
உன் கூந்தல் பதிவிலே
கனகாலம் குடியிருக்க
கனவு கண்டேன்

மெட்டுப் போடும்
உன் விரல்கள் பற்றி
தீ வலம் வர
நினைத்துக் கொண்டேன்

இதழ் முத்தம் தந்து
இதயம் பரிமாறி
உணர்வுகளை எழுதிட
இடம் கிடைக்கும் என்றேன்

ஆசையின் வழிதனிலே
ஆயுளிலே தேடல் தொடர
எனைச் சேர்ந்த
தேவதையே
நீ தந்த
அன்புக்கு நிகர்
எனக்கு எவர்
துணை வருவர்

பள்ளியில் தோழியாய்
கனவுகளில் காதலியாய்
நோய் வருகையில் சேவகியாய்
நிறைந்தென் இதயம் கவர்ந்தாய்

மரணத்தின் நாள்களோடு
இன்று போராடுகிறேன்
கண்ணீரோடு என் காவியத்தை
முடிக்கிறேன்.

*மருதங்கேணியூர்*
*வே.வே.அகிலேஸ்வரன்.*

## காற்றும் தமிழனும்

காற்று!
தென்றலாகவும் வீசும்!
புயலாகவும் மாறும்!
தென்றலாக வீசுவதும்,
புயலாக மாறுவதும்
சூழலின் விளைவு!
அது போல்
தமிழனும் மாறுவது
காலத்தின் தேவை!

கோன்



## காத்திருப்பு

என் மீதுள்ள அன்பு
ஒரு போதும் குறையாது
உன்னை ஒரு போதும் மறவேன்
என்று சொன்னதற்காகவா
என்னை பிரிந்து சென்றாய்.!!
அதே காதலோடும், அன்போடும்,
உன் நினைவுகளோடும்,
நீ கொடுத்த காதல்
கடிதங்களோடும்
உனக்காய் காத்திருக்கிறேன்
நம் அன்பை பரிமாறிய
இடத்தில்..!!!!
என் காதலின் மீதுள்ள
நம்பிக்கையால்
நீ வருவாயென்ற நம்பிக்கையோடு
காத்திருப்பேன்
நான் கல்லறை செல்லும் வரை...!!!

-ஜனா



## வாழ்க! தமிழ்

எம்மொழியாய் இருந்த நீ
செம்மொழியாய் உயர்ந்த போது
எம்மனமெங்கும் நன்மணம் பரவ
உன்புகழ் உயர்ந்தது

சங்கத்தில் உதித்தாலும்-இன்றுவரை
மங்காப் புகழுடன் நீ-பலர்
மனம் நிறைந்திருப்பது
மறைத்திட முடியா ஒன்று

பண்டிதன் மொழியுமாகி
பாமரன் குரலுமாகி
வென்றுவாகை சூடி நிற்கும்
எம்மொழியே என்றும் வாழி!

குன்றிடும் மனத்தோடுன்னை
குன்றினின் றிறக்கப் பார்க்கும்
வஞ்சகர் தன்னை நாங்கள்
துஞ்சிடச் செய்தல் வேண்டும்.

தங்குதடை பல வந்த போதும்
மங்கிடும் மொழியாய் அன்றி
பொங்கிடும் அலையாய் நின்று
வென்றிடும் தமிழே-நீ
என்று[illegible] வாழ்க!

*கிளிநொச்சியூர்,*
*ஜனகா நீக்கிலாஸ்*



## தமிழர் நாகரிகம் இன்று



தமிழ்படும் பாடு இங்கு-அதை
தரிசித்தோ சொல்ல வேண்டும்
தமிழன்னை செவ்வாயில்
தாப்பாளை போட்ட துயாரோ?

ஈழத்தமிழர் திருநாட்டில்
''ஈ'' மொய்க்கும் அளவு தமிழுக்காய்,
ஈய்ந்த உயிர் சொல்லித் தீருமோ?
ஈசன் அவன் தமிழ்த்தாயை வாட்டுவது ஏனோ?

தாலிகட்டும் போது
தடக்கிவிழுந்த மாப்பிள்ளை போல்,
தமிழ் நாவில் வரும் போது-ஏன்
தானம் செய்கிறீர் பிறமொழியை

முன்னொரு காலத்தில்,
விஞ்ஞானம், அகராதி துறைகளில்
தமிழ்த்தாய் ஈழத்தில் செழிப்படைந்தாள்
அவள் நிலை இன்று?

பாரதியவன் கவிபாடினான்
''புத்தம் புதிய கலைகள் மெத்த வளருது மேற்கு''
என்று இப்போது
''புத்தம் புதிய தமிழ் கொலைகள் மேற்கே வளருது''

தற்கால நாகரிகமாம்
தடம்புரளுமாம் தமிழ்
தமிழர் நாவில்- இந்த அவல
தண்டனை வேண்டுமோ?

தவிக்கின்றாள் தமிழ் அன்னை
தமிழன் செந்நாவில்,
தாகம் எடுக்க வேண்டும்
தமிழ் மொழி தமிழனுக்கு

தவறிழைத்தோம் என்றோ
தவம் செய்வோம் அதற்காக இன்று
இளைய தலை முறையே!
இனி ஏன் வீண்யோசனை!
இருதயத்தில் இடம்கொடுங்கள்
''தமிழ் மொழிக்கு''

*பு.தாரணி.*

## சிற்பிகளைச் சிதைக்காதீர்...!

கல்விச்சாலைகளில்
பிரிவினையின் வித்து
பள்ளிச் சிட்டுக்களுக்கு
பாடமென்ற பெயரால்...
சில்லறைகள் மேல் கொண்ட
அளவற்ற பற்றால்-சில
கல்விக் கடவுள்களின்
கட்டாய திணிப்பு...
''அறிவுக் கடலினிலே
முத்தாகிப் போனதென்ற
முட்டாள் தனங்களின்
முழுமையான வெளிப்பாடு..''
அணிகள் பிரித்து
''அவதூறு பகிர்ந்தபடி
அவரில் இது பிழை
இவரில் அது பிழை
ஆய்வுகள் தான் நடக்கிறது
பாட வேளைகளில்...''
எல்லைப் புள்ளிகளை
எட்டுகின்ற மாணவரை
என்னிடந்தான் படித்தாரென்று
மார்பு தட்டும் அறிஞருக்கு
புள்ளிகளைக் கோட்டை விட்டு
வாழ்வினில் பலியாகும் மாணவர் கதை
புரியாமல் போவது தான் வியப்பு..
பிள்ளை மனங்களிலே
பிரிவினையைத் தோற்றுவித்து
தேடல் பாதைக்கு தடைபோடு முன்
ஒரு தடவை சிந்தியுங்கள்
சில்லறைகள் நீர்தேட
சிதைப்பது எம் எதிர்காலச் சிற்பிகளை....

*பா.பொன்நிலவன், மீசாலை.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புத்தியிருந்தால் தப்பலாம்

ரம்யன்

அசை போட ஒரு விடயம் 30

“ஐயாவே உங்களைச் சுகம் பார்க்க ஏராளமான மிருகங்கள் வந்தன. அவையெல்லாம் உங்கள் குகைக்குள் நுழைந்த அடையாளம் தெரிகிறது. ஆனால் எதுவும் வெளியில் போனதற்கான அடையாளத்தையே காணோமே’’

‘அப்பா! நித்திரை வருகுதில்லை. ஒரு கதை சொல்லுங்கோ, கேட்டுக்கொண்டே நித்திரை போய்விடுகிறேன்'' என்று கூறினான் சுட்டிப்பயல் சுப்பண்ணன்.

''சரிதான் என்ன மாதிரி கதை உனக்கு வேணும் சொல்லு'' என்றார் சுப்பண்ணனின் அப்பா அப்பண்ணா.

''என்ன கதையானால் என்ன அப்பா எனக்கு நித்திரை வந்தால் சரி'' என்றான் சுப்பண்ணன்.

“அப்படியென்றால் சரி ஒரு நீதிக்கதை சொல்கிறேன். நீ ஒரு வேளை இதை முந்திக் கேட்டிருந்தாலும் இருப்பாய்''

''பரவாயில்லை, சொல்லித் தொலையுங்கோ. எனக்கு தூக்கம் வரமாட்டேன்கிறது'' என்று அடம்பிடித்தான் சுப்பன். அதன் பிறகு அப்பண்ணா கதையை ஆரம்பித்தார்.

''ஓர் ஊரில் ஒரு சிங்கம் இருந்தது.''

''சிங்கம் ஊரில் இருக்காதே காட்டில் அல்லவா இருக்கும்''

''சரி சரி காட்டில்தான் இருந்தது. அந்தக் காட்டையே தனது ஆட்சியின் கீழ் வைத்துப் பெரும் அடாவடித் தனங்களைச் செய்து வந்தது சிங்கம். காட்டில் உள்ள மிருகங்கள் எல்லாம் அதற்குப் பயந்து நடுங்கிக் கொண்டிருந்தன. அதைப்போலவே ஏனைய மிருகங்களை அடித்துச் சாப்பிட்டு வந்த புலி, கரடி, ஓநாய் போன்ற மிருகங்கள் எல்லாம் அந்தக் காட்டைவிட்டு தூர இடங்களுக்கு இடம்பெயர்ந்து போய்விட்டன.

''அப்ப, சிங்கத்துக்குப் பெரும் கொண்டாட்டமாகப் போயிருக்குமே'' என்று சொன்னான் சுப்பண்ணன் உற்சாகமாக.

''கேட்கவா வேணும்'' என்று கூறிக் கதையைத் தொடர்ந்தார் அப்பண்ணா.

காட்டிலுள்ள மிருகங்கள் குறையத் தொடங்கிவிட்டன. அதேசமயம் சிங்கத்துக்கும் வயது அதிகமாகிக் கொண்டு வந்தது. இறுதியில் அதன் முன்னங்கால்களில் நகங்கள் விழத் தொடங்கிவிட்டன. வாயில் பற்களும் ஆடத் தொடங்கிவிட்டன. கடைசியில் சிங்கத்துக்கு உடலும் தளர்ந்துபோய்விட்டது. வேட்டையாட முடியாத நிலையும் வந்துவிட்டது. இனி உணவுக்கு என்ன செய்வது என்று சிங்கம் யோசித்தது. பலவாறு யோசித்த பிறகு ஒரு முடிவுக்கு வந்தது.''

''என்ன முடிவு'' என்று கேட்டான் மகன்.

''அட, இன்னும் நீ உறங்கவில்லையா?'' என்று கேட்டுவிட்டு அப்பண்ணா தொடர்ந்தார்.

''சிங்கம் தனது குகைக்கு வந்தது. குகையின் வாயிலுக்குச் சற்றுத் தள்ளி உள்ளேயே அமர்ந்து கொண்டது. சிங்கத்தை காணாததால் பல மிருகங்கள் அதற்கு என்ன நேர்ந்தது என்று பார்க்க குகைக்கு வந்தன.

இப்படியே நாள்கள் உருண்டோடவே சிங்கத்தைப் பார்க்க எந்த மிருகமும் வராமல் போனதால் குகையில் சிங்கம் மிகவும் நொந்து வாடிப்போய்விட்டது. இப்படி இருக்கும் போதுதான் ஒரு நாள் அந்தக் காட்டில் இருந்த நரி ஒன்று சிங்கத்தைப் பார்க்க வந்தது.

பசிக் களைப்பில் படுத்திருந்த சிங்கம் மிருக வாடையை உணர்ந்து எழுந்து உட்கார்ந்து கொண்டது.

நரி, ''சிங்க ராசாவே நீங்கள் இப்போது வெளியிலேயே வருவதில்லையாம். அப்படியானால் உணவுக்கு என்ன செய்கிறீர்கள்'' என்று கேட்டது.

''உணவைப் பற்றி நான் இப்போதெல்லாம் கவலைப்படுவதில்லை. ஏனென்றால் நான் முன்போல் மாமிசம் சாப்பிடுவதில்லை. உண்மையில் நான் ஒரு முனிவர் மாதிரி இருக்கிறேன். என்னைப் பார்க்க வரும் உன்னைப் போன்றவர்கள் ஏதும் கொண்டு வந்து கொடுத்தால் சரி மற்றப்படி நான் எந்த மிருகத்தையும் வேட்டையாடுவதில்லை'' என்றது சிங்கம்.

''அப்படியா ஆச்சரியமாக இருக்கிறதே, வேட்டையாடாமல் இருப்பது சிங்கத்தின் குணமல்லவே" என்று ஆச்சரியப்பட்டது நரி.

''இதில் ஆச்சரியப்பட ஒன்றுமில்லை. நீ வேண்டுமானால் உள்ளே வந்துபார் என் முன்னங்கால்களில் நகமில்லை. விழுந்துவிட்டன. பற்கள் எல்லாம் ஆடுகின்றன. என்னால் எழுந்திருக்கவும் முடியாது. நீ நம்பலாம். உள்ளே வந்து பார் என்றது சிங்கம்.

அதுவரை வெளியில் நின்ற இடத்துக்குச் சற்று முன்னே சென்று நின்று கொண்டு குகையின் உள் பக்கமாக நோட்டம் விட்டது நரி.

பயப்படாதே நான்தான் சொன்னேனே நான் இப்போதெல்லாம் மாமிசம் சாப்பிடுவதில்லை உள்ளேவா. இன்னும் உள்ளே வந்து பார். இதற்கு முன் எத்தனை மிருகங்கள் வந்திருக்கின்றன தெரியுமா? என்று கூறி சிங்கம் நரியை உள்ளே வரும்படி வருந்தி அழைத்தது.

நரி எதையோ கண்டுபிடித்துவிட்டதாகச் சடுதியாக விழித்துக் கொண்டு பழையபடி பின்னால் நகர்ந்து கொண்டு சொன்னது.

''பிரபுவே நீங்கள் கெட்டிக்காரர்தான். ஆனால் என்னைப் போல நரிகளை ஏமாற்ற முயன்றதுதான் தப்பு'' என்றது நரி.

"நான் ஏமாற்றுகிறேனா உனக்கு என்னில் நம்பிக்கை இல்லையா'' என்று கேட்டது சிங்கம்.

நரி சொன்னது ''ஐயாவே உங்களைச் சுகம் பார்க்க ஏராளமான மிருகங்கள் வந்தன. அவையெல்லாம் உங்கள் குகைக்குள் நுழைந்த அடையாளம் தெரிகிறது. ஆனால் எதுவும் வெளியில் போனதற்கான அடையாளத்தையே காணோமே'' என்று கூறிவிட்டு சரி தப்பினோம் பிழைத்தோம் என்று நினைத்தபடி வந்த வழியே ஓட்டம் எடுத்தது.

கதையும் முடிந்தது. சுப்பண்ணனும் குறட்டை விடுவது கேட்டது.

# யாருமே குற்றமற்றவர்கள் அல்லர்

வீணா

எதைக் காக்கா விட்டாலும் பரவாயில்லை நங்கையாவது காக்கச் சொன்னார் திருவள்ளுவர்.

ஏனென்றால் எத்தனையோ சோகங்களுக்கும் நாக்குத்தான் மூல காரணமாக இருக்கின்றது. எத்தனையோ குடும்பங்களில் நாக்கால்தான் நிம்மதி காணாமல் போகின்றது.

யாருமே குற்றமற்றவர்கள் அல்ல. எல்லோரும் ஏதாவது சில சமயங்களில் பலவீனர்களாகவே இருந்து விடுகிறோம். பலரும் ஒரு சில விடயங்களில் எப்போதுமே பலவீனர்களாகவே இருக்கிறோம்.

நாக்கைப் பிடுங்கிக் கொள்கிற மாதிரி நான்கு வார்த்தைகள் கேட்க வேண்டும் என்ற எண்ணம் பல நேரங்களில் மேலோங்குவது இயற்கை.

சரியான சந்தர்ப்பம் கிடைக்கிறபோது அப்படி மற்றவர்களைக் கேட்காமல் இருக்க பலராலும் முடிவதில்லை. அப்படிக் கேட்டு விடும் போது அந்த நேரத்தில் கிடைக்கும் திருப்தியே அலாதி என்றாலும் அப்படிக் கேட்டுவிட்டு என்றென்றுமாய் சம்பந்தப்பட்ட மனிதர்களைப் பகைத்துக் கொள்கிறோம் என்பதைப் பலரும் மறந்து விடுகிறோம்.

யாருமே குற்றமற்றவர்கள் அல்ல. எல்லோரும் ஏதாவது சில சமயங்களில் பலவீனர்களாகவே இருந்து விடுகிறோம். பலரும் ஒரு சில விடயங்களில் எப்போதுமே பலவீனர்களாகவே இருக்கிறோம்.

சிலவற்றை காலப் போக்கில் திருத்திக் கொள்கிறோம். சிலவற்றை காலம் கூட நம்மிடம் மாற்ற முடிவதில்லை. அப்படி இருக்கையில் கடுமையான கூர்மையான வார்த்தைகளால் சிலரின் சில குறைகளையும், குற்றங்களையும் சாடுவது சரியல்ல. யாரை அப்படிச் சாடுகிறோமோ அவர்களும் நம்மை அப்படியே சாடுவதற்கு சரியான சந்தர்ப்பத்துக்காகக் காத்திருக்க ஆரம்பித்து விடுகிறார்கள்.

குற்றம் பார்க்கில் சுற்றம் இல்லை என்பார்கள். ஒவ்வொரு குற்றத்துக்காகவும் ஒவ்வொருவரையும் நாக்கால் பதம் பார்க்க ஆரம்பித்தால் பின் சுற்றம் என்பதே நம்மைச் சுற்றி இருக்காது. நாம் தனியராகி விடுவோம். சுற்றம் மட்டுமல்ல நண்பர்களும் நமக்கு மிஞ்ச மாட்டார்கள்.

இன்றைய குடும்பங்களில் விவாகரத்துகள் அதிகரிக்க மிக முக்கியக் காரணம் கட்டுப்படுத்தாத நாக்குத்தான். உப்பு சப்பில்லாத விடயங்களுக்கு எல்லாம் கூர்மையான கடுமையான வார்த்தைகளை உபயோகப்படுத்தி விடுவதுதான். ஒரு காலத்தில் வேறு வழியில்லை என்று சேர்ந்திருந்தார்கள். பொறுமையாக இருந்தார்கள். இன்று அந்த நிலை இல்லை.

இன்றைய விவாகரத்து வழக்குகளில் இரு தரப்பினரும் சொல்லும் காரணங்களில் உண்மையான சித்திரவதை, பெரிய குறைபாடுகள் போன்ற காரணங்கள் குறைவு. பெரும்பாலான காரணங்கள் சிறுபிள்ளைத்தனமானவையாகத்தான் இருக்கின்றன என்கிறார் ஒரு மூத்த சட்டத்தரணி ஒருவர்.

பெரும்பாலான தம்பதிகள் கடைசியாகச் சொல்லும் காரணம் இதுதானாம். அந்த அளவு பேசி விட்ட பிறகு அந்த மனிதருடன் அல்லது மனுஷியுடன் இனியும் கூட வாழ்வது சாத்தியமில்லை என்பதுதான் அவர்களது பதிலாக உள்ளது.

சம்பந்தப்பட்ட தவறுகள் கூட பல சந்தர்ப்பங்களில் மன்னிக்கப்பட்டு விடுகின்றன. ஆனால் சொல்லப்பட்ட வார்த்தைகள் மன்னிக்கப்படுவதில்லை, மறக்கப்படுவதுமில்லை.

ஒருவர் எத்தனையோ விடயங்களில் நல்லவராக இருக்கக் கூடும். அவர் மற்றவர்களுக்கு எத்தனையோ உதவிகள் செய்திருக்கவும் கூடும். ஆனால் கட்டுப்பாடில்லாமல் வார்த்தைகளால் மற்றவர்களை அவர் வேதனைப்படுத்துவாரேயானால் அத்தனை நன்மைகளும், உதவிகளும் மங்கிப் போகும். பேசிய அந்தக் கடுஞ்சொல் மட்டுமே பிரதானமாக நிற்கும்.

இது குடும்பத்துக்குள்ளும், உறவினர்களுக்குள்ளும் மட்டும் பூதாகரமாகும் ஒரு பிரச்சினை அல்ல. அக்கம் பக்கத்திலும், அலுவலகத்திலும், பொது இடங்களிலும் கூட நம் அமைதியை நிர்ணயிக்கும் ஒன்றாக இருந்து விடுகிறது. ஒரு சில நிமிடங்களில் மறந்து விடக்கூடிய எரிச்சல் மிகுந்த சந்தர்ப்பங்களைக் கூட சுடுசொற்களால் பெரிய விடயமாக்கிக் கொள்ளும் எத்தனையோ சம்பவங்களை நாம் வாழ்க்கையில் காண முடியும்.

சிலர் பேசுவதை எல்லாம் பேசி விட்டுப் பின்னர் ஏதோ ஒரு கோபத்தில் சொன்னதை எல்லாம் பெரிது படுத்துவதா? என்று இறங்கி வரக்கூடும். ஆனால் கேட்டு வேதனைப்பட்டவர்கள் அதில் சமாதானமாக முடிவது கஷ்டம்தான். கோபம் எதை வேண்டுமானாலும், எப்படி வேண்டுமானாலும் பேசலாம் என்பதற்கான அங்கீகாரம் அல்ல. எனவே திருப்பி வாங்க முடியாத வார்த்தைகளைப் பேசாமலேயே இருப்பதுதான் அறிவு.

எல்லோரும் ஏதாவது ஒரு சந்தர்ப்பத்தில் நமக்கு உதவக் கூடிய நிலையில் இருக்கக் கூடும். அல்லது நம்மைப் பிரச்சினைக்குள்ளாக்க முடிந்த நிலையில் கூட இருக்கக் கூடும். அந்த நேரத்தில் நாம் பேசிய கடுமையான வார்த்தைகள் மட்டுமே அவர்களுக்கு நினைவு வரக்கூடுமானால் நமக்கு அவர்களால் பெரும் நஷ்டமே நேரக்கூடும்.

வார்த்தைகளால் ஜெயித்துவிட்டு வாழ்க்கையில் தோற்றுப் போகாதீர்கள். வார்த்தைகளைத் தீட்டுவதற்குப் பதிலாகப் புத்தியைத் தீட்டுங்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வெளிநாட்டு மாப்பிள்ளை மோகத்தால் கலைக்கப்படும் பெண்களின் கனவுகள்




- மிருசா

**அ**ண்மைக் காலமாக அதிகரித்து வரும் வெளிநாட்டு மாப்பிள்ளைகளின் மோகத்தால் யாழ்ப்பாணப் பெண்களின் கனவுகள், உணர்வுகள் அனைத்தையும் கொலை செய்கின்றனர் பெற்றோர்கள்.

அயல் வீட்டில் அதிகம் புழக்கத்தில் இருக்கும் வெளிநாட்டுப் பணம், அதனால் ஏற்படும் ஆடம்பர வாழ்வு என்பன பெண் பிள்ளைகளைப் பெற்றவர்களின் மனங்களில் வெளிநாட்டு மோகம் தாண்டவம் ஆட வைக்கின்றது.

வெளிநாட்டில் உள்ள ஓர் ஆணைத் தன் பிள்ளைக்குத் திருமணம் செய்து வைப்பதன் ஊடாக அயல் வீட்டில் ஏற்பட்டிருக்கும் ஆடம்பரம், வாழ்க்கையைத் தாங்களும் அனுபவித்துக் கொள்ளலாம் என்ற ஆசையால் தாங்கள் பெற்ற பிள்ளையின் மனங்களில் நிறைந்து கிடக்கும் உணர்வுகள், கனவுகள் அனைத்தையும் குழிதோண்டிப் புதைத்து விடுகின்றனர் பெற்றோர்கள்.

அயல் வீட்டில் ஏற்பட்ட வெளிநாட்டுப் பணப் புழக்கம் ஒரு பக்கம் இருக்க, நான்கு, ஐந்து பெண் பிள்ளைகளைப் பெற்றெடுத்த பெற்றோர்கள் வீட்டில் தாண்டவம் ஆடும் வறுமையும் இதற்கு ஒரு காரணமாக அமைகின்றது. இதனால் வறுமையை எண்ணிச் சமுதாயச் சந்தையின் போட்டி வியாபாரத்தில் பருவமடையாமல் பறிக்கப்படுகின்றது யாழ்ப்பாணப் பெண்களின் வாழ்க்கை.

தான் பெற்ற பெண் பிள்ளைகளைத் தாத்தாமாருக்கு வாழ்க்கைப் பட வைக்கத் தயாராக்குகின்றனர் பெற்றோர்கள். பெண்களுக்குள் இருக்கும் கனவுகள் விலைபேசப்படுகின்றன வெளிநாட்டு மாப்பிள்ளைகளுக்கு.

பெண் பிள்ளைகளின் இதயத்தின் வலிகளைப் புரிந்து கொள்ளாத பெற்றோர்களால் தன் உணர்வுகளைத் தனக்குள்ளேயே தற்கொலை செய்து கொண்டு பெற்றோரின் அற்ப ஆசைக்காகவும், வறுமைக்காகவும் தனது வாழ்க்கையை அர்ப்பணிக்கின்றனர் பெண் பிள்ளைகள்.

முகம், பெயர் தெரியாத ஒருவருக்கு வாழ்க்கைப்பட்டு, கண் காணாத இடத்தில் கடல் கடந்து சென்று, அவன் எப்படியானவனோ? அவனுக்கு அங்கு சென்று வேறு தாரம் உண்டோ? என்று தெரியாமல் அங்கு நாதியற்றவளாய், கேட்பாரற்று நிலை தடுமாறி, தனிகுனிந்து தமது புது வாழ்க்கையை ஆரம்பிக்கின்றனர்.

அவ்வாறு ஆரம்பிக்கப்பட்ட வாழ்க்கையால் அனுப்பி வைக்கப் படும் பணம் இங்கு அதிஉச்ச ஆடம்பர வாழ்க்கைக்கும், சுகபோக வாழ்க்கைக்கும் செலவழிக்கப்பட, அங்கு அவளின் வாழ்க்கை சின்னாபின்னமாக்கப்படுகின்றது.

எனினும் ஒட்டுமொத்தமாகப் பெற்றவர்கள் அனைவரையும் குறை சொல்வது பொருத்துடையதன்று. அதாவது பெற்றவர்களுக்கு முன், உறவுகளுக்கு முன், பெற்ற பெண் பிள்ளைகளை வாழ வைத்து அதில் மகிழ்ச்சி காண எத்தனையோ பெற்றோர்களுக்கு விரும்பம் இருந்தாலும் கூட, தற்போது யாழ்ப்பாணத்தில் எரிபொருள் விலை போன்று எகிறிக் கொண்டு செல்லுகின்றது சீதனம் என்ற பெயரில் வாங்கப்படும் கப்பம்.

இதனாலும் பெண் பிள்ளைகளைப் பெற்றவர்களின் நிலை பெரிதும் பாதிப்படைவதுடன், சீதனம் இன்றிப் பெண் எடுக்கும் வெளிநாட்டு மாப்பிள்ளைகளையே நாடி நிற்கின்றது. அதிலும் அழகு குறைந்த பெண்ணாக இருந்தால் வெளிநாட்டு மாப்பிள்ளை விரும்ப மாட்டார். ஒட்டுமொத்தத்தில் பெண்களைப் பெற்றவர்களின் நிலை கவலைக் கிடமாகவேயுள்ளது.



# திருமணம் என்பது விளையாட்டல்ல

**இ**ளம் பெண்களால் ஏற்படும் பிரச்சினைகள் அண்மைக் காலமாக அதிகரித்து வருகின்றன. இளம் பெண் பிள்ளைகளின் பெற்றோர் உஷாராக இருந்து அவர்களை வழிநடத்த வேண்டும்.

உங்களுக்கு கிடைத்த அனுபவங்களை வைத்துக்கொண்டு, நீங்கள் சந்தித்த பெண்களை நினைத்துக்கொண்டு உங்கள் மகளைச் சந்தேகப்பட வேண்டாம். அவர்களை ஓரளவு கண்காணிக்க வேண்டும் என்பதுதான் அவசியம். அதற்காக அவர்களது ஒவ்வொரு செயலிலும் மூக்கை நுழைப்பது அவசியமற்றது.

மகளைத் தனியாக இருக்கவும், தனிமையில் இருந்து சிந்திக்கவும் அதிக வாய்ப்புகளைக் கொடுக்கவேண்டாம். தனிமையை விரும்பும் பெண்கள் தன்னம்பிக்கை குறைந்தவர்களாகவும், எளிதாகக் காதல் வசப்பட்டு விடுபவர்களாகவும், சின்னச் சின்னத் தோல்விகளைக் கூடத் தாங்க முடியாதவர்களாகவும் இருப்பர்.

படிப்பு, வேலை, எதிர்காலம், திருமணம் பற்றிய உங்கள் கனவு எப்படி இருக்கிறது என்பதை பெண் பிள்ளைகளிடம் உணர்த்துங்கள்.

நமது பாரம்பரியம், ஒழுக்கம், கலாசாரம் போன்றவைகளை அடிக்கடி மகளிடம் சொல்லிக்காட்டாமல் நீங்கள் அதன்படி நடந்து காட்டுங்கள். அதுதான் அவர்களை நல்வழிப்படுத்தும்.

நீங்கள் பெண் பிள்ளைகளுக்குக் கொடுக்கும் எல்லா வகையான சுதந்திரமும் எல்லைக்குள் இருக்கட்டும்.'நீ எதை வேண்டுமானாலும் படி... நீ எந்த வேலையானாலும் பார்... நீ எந்த நாட்டுக்கு வேண்டுமானாலும் செல்.. நீ யாரை வேண்டுமானாலும் திருமணம் செய்துகொள்...' என்பது போல் சுதந்திர எல்லையைப் பரவலாக்கக் கூடாது. நீ எதைச் செய்ய முன்வந்தாலும் அதில் எங்கள் பங்களிப்பு மிக முக்கியமானதாக இருக்கும் என்பதை அழுத்தமாகச் சொல்லிவையுங்கள். திருமணம் என்பது விளையாட்டல்ல. அது சடங்குகளுக்கும், கோலாகலத்துக்கும் உருவாக்கப்பட்டதல்ல. பொறுப்பும், புனிதமும் நிறைந்தது. அதனால் அதற்குரிய மரியாதையைக் கொடுத்தேயாக வேண்டும் என்பதை உணர்த்துங்கள்.

- நிலா

## ஓர் உயிர் அழுகின்றது



வாழ நினைத்து
வான் பார்த்த
என் இளமை-இன்று
புதைய நினைத்து
பூமி பார்க்கின்றது
கண்ணீரில் கரைந்தது
என் இளமையும் தான்
என் இளமையின் வேர்களை
ஜாதகம் தின்றது.
இளமையின் தளிர்களை
செவ்வாய் தோஷம்
தின்று முடித்தது
இளமையின் மலர்களை
குழப்பம், அச்சம்
சூழ்ந்து கொண்டன
இப்போது
கொடி வாழ நிற்கிறது
இதழ்களை இழந்த காம்போடு



வந்தனா, கரவெட்டி.

# பெண்ணுக்குரிய சடங்கு, ஆசாரங்கள்



- நித்தியா

## மூக்குத்தி

மனிதன் முற்பிறவியில் செய்துள்ள நல்வினை தீவினையின் பயனாகவே இந்தப் பிறவி அமைகிறது. நல்வினை மிகுதியாகச் செய்தவர்கள் நல்ல சௌக்கியமான வாழ்வையும், தீவினை மிகுதியாகச் செய்தவர்கள் துன்பம் மிகுந்த வாழ்வையும் அனுபவிக்கிறார்கள். பெற்றோர் தமக்குப் பிறந்த குழந்தையின் எதிர்காலம் எப்படி இருக்கும்? என அறிந்துகொள்ள உதவுவது ஜாதகமாகும்.

வாழ்க்கைக்குத் துணையாக இருக்கும் பெண்கள் நலமாக இருக்க, ஜோதிட நூல்கள் பெண்கள் எந்தெந்த நட்சத்திரத்தில் பிறந்தால் என்ன பயன்? என்று கூறுகிறது. தீதுறு நட்சத்திரத்தில் பிறந்திருந்தால், அவர்கள் வாழ்க்கை துன்பமயமாக இருக்கும்? இதனைச் சிந்தித்த பெரியவர்கள் பெண்கள் பிறந்த வீட்டில் எவ்வளவு நலமாக இருந்தாலும் புகுந்த வீடான தன் கணவன் வீட்டில் வாழ்நாள் முழுவதும் நலமாக வாழ்ந்தால்தான் அவள் வாழ்க்கை சிறப்புறும், என்று தீதுறு நட்சத்திரங்களின் சக்தியைக் குறைக்க வழிகண்டார்கள். அதுதான் பெண்கள் மூக்குத்தியை அணியச் செய்தது. பெண்கள் ஆரோக்கியமாக வாழ்ந்திட மூக்கு, காதுகளில் துளையிட வேண்டுமென்று ஆயுள்வேத நூல் கூறுகிறது. துளையிட்ட இடத்தில் தங்கம், நவரத்தினங்களை வைப்பதால், மாதந்தோறும் மற்றும் மகப்பேறு காலத்திலும் இழந்த சக்தியை ஈடுசெய்யும் என்று வைத்திய நூல் கூறுகிறது. ஆகையால் பெண்கள் மூக்குத்தி அணிவது மிக அவசியமாகிறது.

பாற்கடலைக் கடைந்தபோது அதில் கிடைத்த பொருள்களுடன் மஹாலட்சுமியும் அவளுக்கு முன் மூதேவியும் தோன்றியதாகப் புராணங்கள் கூறுகின்றன. முன் தோன்றியதால் மூதேவியை அக்கா என்றும் லக்சுமியைத் தங்கையென்றும் கூறுவர். மூதேவி சென்ற இடம் சீரழிந்தும் லக்சுமி சென்ற இடம் சீரும் சிறப்பாக இருப்பதையும் உணர்ந்த மூதேவி, இறைவனிடம் ''என்னை யாரும் விரும்புவதில்லை. என்னை மதிக்கக் கூடிய இடத்தில் இருக்க அருள வேண்டும்'' எனக் கேட்டாள். வேண்டுப்வற்றைத் தருபவனான இறைவன், ''எந்த இடத்தில் இருக்க விரும்புகிறாய்?'' என்று கேட்டபோது, மிக முக்கியமாக எல்லோராலும் மதிக்கப்படக்கூடிய பசுவின் முகத்திலும், பெண்களின் மூக்கிலுயும், ஆண்களின் பருஷ்டபாகத்திலேயும் (இடுப்பு) இருக்க வேண்டினாள். அப்படியே வரம் அருளப்பட்டதை அறிந்த, அந்த மூவரும் இறைவனிடம் '' வணக்கத்துக்கு உரியவர்களாக விளங்கி வரும் எங்களிடம் மூதேவி இருந்தால் யார் எங்களை மதித்து வணங்குவார்கள்?'' என்று கேட்க, இறைவன் '' மூதேவி உங்களிடம் வராமல் இருப்பதற்கு வழி சொல்கிறேன். ஆண்கள் ஆசனமில்லாமல் செய்யும் எந்தக் காரியமும் மூதேவிக்கு உரியதாக ஆகும். ஆசனத்தில் அமர்ந்து செய்யும்போது மூதேவி அங்கு வரமாட்டாள். பசுவுக்கு முகத்தில் மூதேவி இருப்பதால் பின்புறம் லக்சுமி வாசம் செய்வதால் பின்புறம் பூசைவழிபாடு செய்து, எந்த மிருகத்துக்கும் இல்லாத அளவு உன்னுடைய சரீரமே எல்லா தெய்வங்களும் உறைகின்ற இடமாகவும், உன் சரீரத்தில் உண்டாகும் பால், தயிர், நெய், கோமயம் (சாணம்), கோசலம் யாவும் இறைவழிபாட்டுக்கும் மனிதனுடைய ஆரோக்கியத்துக்கும் உபயோகப்படும். பெண்களுக்கு மூக்கில் மூதேவி வாசம் இல்லாமல் இருப்பதற்கு லக்சுமியின் அம்சமான நவரத்தினங்களும் தங்கத்தாலான மூக்குத்தியும் அணிவதால் மூதேவி வரமாட்டாள். லக்சுமி நித்யவாசம் செய்து வருவதுடன் சுமங்கலி பூசை செய்து வழிபடுவாள் என்று ஆசி வழங்கினார். ஆகையால் பெண்கள் மூக்குத்தி அணியவேண்டியது அவசியமாகிறது.

*(வளரும்)*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிந்தனைக்குச் சில
# படித்ததில் பிடித்தது

■ நிஷாவதி

உதவி கேட்காமல் மற்றவர்களின் விடயங்களில் தலையிடாதீர்கள்.

நம்மில் பெரும்பாலோர் மற்றவர்களின் விருப்பங்களில் அடிக்கடி தலையிடுவதன் மூலமே தமக்குத் தாமே பிரச்சினைகளை உருவாக்கிக் கொள்கின்றனர்.

நம் வழி மிகச் சிறந்தவழி என நமக்குள் நாமே நம்பிக்கொண்டு யாரெல்லாம் நமது சிந்தனைகளுக்கு ஒத்துப் போகவில்லையோ அவர்களெல்லாம் கண்டிப்பாக விமர்சிக்கப்பட்டு சரியான வழியான நம் வழிக்குக் கொண்டு வந்து விட வேண்டும் என நினைப்பதாலேயே இவ்வாறு நாம் மற்றவர்களின் பிரச்சினைகளில் அதிகப் படியாக மூக்கை நுழைக்கிறோம். இத்தகைய சிந்தனை தனித்துவத்தின் இருப்பை நிராகரிக்கின்றது. இதன் பயன், கடவுளின் இருப்பை மறைமுகமாக நிராகரிக்கிறது. ஏனெனில், கடவுள் ஒவ்வொருவரையும் அவரவருக்கான தனித்துவம்-தனித்தன்மையுடனே படைத்துள்ளார்.

மிகச் சரியாக ஒன்று போல் சிந்தித்து ஒன்று போல் செயல்படும் எந்த இரு மனிதர்களையும் காண இயலாது. அவ்வாறு ஆக்கவும் முடியாது. எல்லா ஆணும் பெண்ணும் அவரவர்களுக்கான வழிகளிலேயே செயல்படுகின்றனர். ஏனெனில், ஒவ்வொருவருள்ளும் கடவுள் அவரவரின் வழியிலேயே செல்ல தூண்டுகிறார். உங்கள் வேலையில் மட்டும் கவனம் செலுத்துங்கள்; அதன் மூலம் உங்கள் மனதை அமைதியாக வையுங்கள்!

### மன்னியுங்கள்; மறந்து விடுங்கள்

மன அமைதிக்கு இது மிக சக்தி வாய்ந்த மருந்தாகும். சாதாரணமாக யாராவது நம்மை நோகடித்தாலோ அவமானப்படுத்தினாலோ நமக்குத் தீங்கு விளைவித்தாலோ அவர்கள் மீது தவறான எண்ணங்களை நம் மனதில் வளர்த்துக் கொள்கிறோம். நாம் மனக்குறைப்பாட்டுக்கு நம் மனதை நம்மை அறியாமலே பயிற்றுவிக்கிறோம். இது தூக்கமின்மை, அல்சர் மற்றும் இரத்த அழுத்தம் போன்ற நோய்கள் உருவாகக் காரணமாகின்றன. இத்தகைய அவமானப்படுத்துதல் அல்லது ரணப்படுத்துதல் ஒரு முறை நிகழ்ந்தால், அவற்றைத் திரும்பத் திரும்ப நினைவுபடுத்திக் கொள்வதால் மற்றவர் மீதான மனக்குறைபாடு நிரந்தரமாகிறது. இந்தத் தவறான பழக்கத்துக்கு முடிவு கட்டுவோம். மிகக் குறுகிய இந்த வாழ்வில் எதற்காக இத்தகைய சிறிய விடயங்களுக்கு முக்கியத்துவம் கொடுக்க வேண்டும்? மறப்போம்; மன்னிப்போம்; முன் செல்வோம். மன்னிப்பதன் மூலமும் கொடுப்பதன் மூலமும் அன்பை வளப்படுத்திக் கொள்வோம்.

### அங்கீகாரத்திற்காக அலையாதீர்

இவ்வுலகம் முழுக்க சுயநலவாதிகளே நிறைந்துள்ளனர். அவர்கள் தங்களின் சொந்தத் தேவைக்காகவே எப்போதாவது மற்றவர்களைப் பாராட்டுகின்றனர்- புகழ்கின்றனர். அவர்கள் ஒருவேளை இன்று உங்களைப் புகழலாம் அவர்களுக்குத் தேவையானதைக் கொடுக்கும் சக்தி உங்களுக்கு இருப்பதால். ஆனால், ஒருவேளை வெகு சீக்கிரத்திலேயே நீங்கள் ஒன்றுமில்லாதவராக ஆகலாம்; அப்போது, உங்கள் சாதனைகளை அவர்கள் மறப்பதோடு, உங்களிடம் தவறுகளைக் கண்டுபிடிக்க ஆரம்பிப்பார்கள். இத்தகையவர்களின் அங்கீகாரத்துக்காக கடுமையாக முயற்சி செய்து, உங்களை நீங்களே ஏன் சாகடிக்க வேண்டும்? அவர்களின் அங்கீகாரம் கேடு விளைவிக்குமே தவிர பெறுமதியானதல்ல! நேர்மையாகவும் நன்னோக்கத்தோடும் உங்கள் வேலையைச் செய்து கொண்டிருங்கள்; அதற்கான அங்கீகாரத்திற்காக ஏங்காதீர்கள்.

### சூழலுக்குத் தகுந்து உங்களை மாற்றிக் கொள்ளுங்கள்!

உங்கள் சுற்றுப்புறத்தை நீங்கள் தனியாக மாற்ற முயற்சி செய்தால் நீங்கள்தான் தோற்றுப் போவீர்கள். அதற்கு மாற்றாக, உங்கள் சுற்றுப் புறத்துக்குத் தகுந்தால்போல் வாழ உங்களை மாற்றிக் கொள்ளுங்கள். அவ்வாறு நீங்கள் செய்தால், உங்களுக்குத் தோழமையாக இல்லாத அந்தச் சுற்றுப் புறத்தில் கூட அதிசயகரமான மாற்றத்தையும் இனிமையான உங்களுக்கு ஒத்துப்போகும் நிலையையும் காண்பீர்கள்.

### சக்திக்கு மீறிய செயலைச் செய்யாதீர்

இந்த முக்கியமான தேவையை அடிக்கடி நினைவுபடுத்திக் கொள்தல் நன்று. நாம் அடிக்கடி நம்மால் செய்ய இயலும் அளவுக்கு மீறிய அதிகப்படியான பொறுப்புகளை எடுத்துக் கொள்கிறோம். இது நமது தன்முனைப்பு-செருக்கைத் திருப்திப்படுத்துகிறது. உங்களின் வரம்பு என்ன என்பதை அறிந்து கொள்ளுங்கள். அதிகப்படியான கவலைகளை அளிக்கவல்ல அதிக சுமைகளை நாம் ஏன் எடுத்துக் கொள்ள வேண்டும்? உங்களின் புறச்செயல்பாடுகளை அதிகப்படுத்திக் கொள்வதால் மன அமைதியை அடைய மாட்டீர்கள். உலகத்துடனான தொடர்பைக் குறைத்துக் கொண்டு, வணக்கங்கள், தியானம், தன்னிலை ஆய்வு போன்றவற்றில் அதிக நேரம் செலவழியுங்கள். இது ஓய்வற்ற உங்கள் மன எண்ணங்களைக் குறைக்கும். சுமைகள் குறைந்த மனம், அதிக மன அமைதியை உருவாக்கும்.

### உள்ளத்தை வெற்றிடமாக ஒருபோதும் விடாதீர்கள்

தீய பழக்கங்கள் வெற்றிடமான மனங்களிலிருந்தே உருவாகின்றன. உங்கள் உள்ளத்தைச் சில நேர்மறை எண்ணங்களாலும் பயனுள்ள விஷயங்களாலும் நிறைத்து வையுங்கள். சுறுசுறுப்பாக உங்கள் பொழுதுபோக்கில் ஈடுபடுங்கள். உங்கள் விருப்பம் சார்ந்த விஷயத்தில் ஏதாவது செய்யுங்கள். பணமா? அல்லது அமைதியான உள்ளமா? இதில் எது உங்களிடம் அதிக பெறுமதியானது என்பதைக் கண்டிப்பாக நீங்கள் தீர்மானித்துக் கொள்ள வேண்டும். சமூகப்பணி அல்லது மதப்பணி போன்ற உங்களின் பொழுது போக்குகளில் பெரும்பாலும் நீங்கள் அதிகப் பணத்தைப் பெற்றுக் கொள்ள முடியாது. ஆனால், நீங்கள் மன நிறைவையும் சாதித்த திருப்தியையும் அடைய முடியும். உடல் ஓய்வு எடுக்கும் நேரங்களில்கூட, ஆரோக்கியமான வாசிப்பிலும் கடவுளின் பெயரை உளப் பூர்வமாக கண்ணை மூடி உச்சரிப்பதிலும் உங்கள் உள்ளத்தை நிறைத்துக் கொள்ளலாம்.

### தள்ளிப்போடாதீர்கள்; எதற்கும் வருந்தாதீர்கள்

இது என்னால் முடியுமா? முடியாதா? என்று பெரிதாக எண்ணி காலம் கடத்தி நேரத்தை வீணாக்காதீர்கள். இத்தகைய பயனற்ற மனப்போராட்டங்களால் நாள்கள், வாரங்கள், மாதங்கள் சிலவேளை வருடங்கள்கூட வீணாகலாம். உங்களால் போதுமான முழு அளவுக்குத் திட்டமிட்டுக் கொள்ள முடியாது. ஏனெனில், எதிர்காலத்தில் நடப்பதை உங்களால் ஒருபோதும் முன்பே பூரணமாக உணர்ந்து கொள்ள முடியாது. உங்கள் நேரத்தின் மதிப்பை உணர்ந்து, முடிக்க வேண்டியவற்றை யோசித்துக் கொண்டிராமல் உடனடியாகச் செய்யத் தொடங்குங்கள்.



முதல் முறை நீங்கள் தோல்வியடைவது விடயமேயில்லை. நீங்கள் செய்த தவறுகளிலிருந்து பாடம் பயின்று அடுத்த முறை நீங்கள் பரிபூரணமான வெற்றியடையலாம். சாய்ந்து உட்கார்ந்து கவலை கொண்டிருப்பது எதற்கும் பயன்தராது. மன அமைதியையே கெடுக்கும். உங்களின் தவறுகளிலிருந்து பாடம் பயிலுங்கள். ஆனால் ஒருபோதும் கடந்து போனதை நினைத்து வருந்தி ஏங்காதீர்கள். எதற்கும் வருத்தமடையாதீர்கள். எது நடந்ததோ அது நடப்பதற்குரிய விதியின் வழியில் நடந்து முடிந்தது.

இவ்வுலகம் முழுக்க சுயநலவாதிகளே நிறைந்துள்ளனர். அவர்கள் தங்களின் சொந்தத் தேவைக்காகவே எப்போதாவது மற்றவர்களைப் பாராட்டுகின்றனர்- புகழ்கின்றனர். அவர்கள் ஒருவேளை இன்று உங்களைப் புகழலாம் அவர்களுக்குத் தேவையானதைக் கொடுக்கும் சக்தி உங்களுக்கு இருப்பதால். ஆனால், ஒருவேளை வெகு சீக்கிரத்திலேயே நீங்கள் ஒன்றும் இல்லாதவராக ஆகலாம்.



# மாற்றத்துக்கு காரணம் ஏமாற்றம்

■ சுவாதி

ஏமாறுகிறவர் இருப்பதால் ஏமாற்றுபவன் இருக்கிறானா, அல்லது ஏமாற்றுகிறவன் இருப்பதால் ஏமாறுகிறவர் இருக்கிறாரா? ஏமாறுவோர் இருப்பதால்தான் ஏமாற்றுவோர் இருக்கின்றனர். ஏமாற்றம் எனும் மரத்துக்கு வேர் - ஏமாறுவோர்; கிளையும், இலையும், கனியும் ஏமாற்றுவோர். வேர் நீரை உறிஞ்சுகிறது; பலனோ இலைக்கும் கனிக்கும்.

ஏமாற்றம் எனும் செயலுக்கு, செய்பவர் மற்றும் செய்யப்படுபவர் என இருவர் வேண்டும். ஒருவர் இன்றி மற்றொருவர் இல்லை. நீயின்றி நான் இல்லை என்பது போல்.

ஏமாறுவது நலமா? எனில், ஆம்; நலம்தான்! அதில் ஒரு நன்மை இருக்கிறது. அதாவது, மீண்டும் அதே மாதிரி ஏமாறாமல் இருக்கப் பாடம் கற்றுத் தருகிறது. ஒரு முறை ஏமார்ந்த பின், மீண்டும் மீண்டும் அதே மாதிரியே ஏமாறுவோர் நிலைதான் பரிதாபம். அதாவது வாக்காளர்கள் மாதிரி! ஏமாறும் வாக்காளர் இருக்கும் வரையில் ஏமாற்றும் போலி அரசியல்வாதிகளும் இருக்கத்தான் செய்கிறார்கள்.

எல்லோரையும் எல்லா நேரத்திலும் ஏமாற்ற முடியாது. ஏமாறுவோரும், எல்லா நேரத்திலும் ஏமாற மாட்டார்கள்.

சில நேரங்களில், வேண்டும் என்றே கூட ஏமாறலாம். அது எதற்கு உபயோகப்படும் என்றால், எதிரில் இருப்பவரின் குணநலன்களை எடுத்துக் காட்டுவதற்கு உதவும்.

சின்ன மீனைப் பிடித்தால்தான் பெரிய மீனைப் பிடிக்க முடியும். அதைப் போல், சின்ன முள்ளில் மாட்டி வெளிவந்தால்தான், பெரிய முள்ளில் மாட்டாமல் தப்பிக்கலாம். அதற்காக பட்டறிவை வளர்க்கும் பேர்வழி என்று, எப்போதும் பெரிய முள்ளிலேயே மாட்டினால் அது அவரவர் புத்திசாலித்தனத்தை பொறுத்தது.

மாற்றம் என்பது மானிடத் தத்துவம். ஏமாற்றம் என்பதோ மனிதன் உபயோகிக்கும் மலிவான யுக்தி. இது என்னவோ மனிதன் மட்டும் உபயோகிக்கும் யுக்தி அன்று. மிருகங்களும் இந்த யுக்தியைப் புரிகின்றன.

என்ன வித்தியாசம் என்று பார்த்தால் மிருகங்கள் தங்களின் வாழ்க்கைத் தொடர்ச்சிக்கு அதைப் புரிகின்றன. மிருகங்கள் புரியும் ஏமாற்றுச் செயல், மற்ற மிருக இனத்தின் மேல்தான் இருக்கும். மனிதனோ, தான் வசதியாய் வசிப்பதற்கு அதைப் பயன்படுத்துகிறான்; அதுவும் தன் சக மனித இனத்தின் மேலேயே! மனிதனுக்குத்தான் ஆறாம் அறிவு இருக்கிறதே! அது, வேறு எதற்கு இருக்கிறதாம்? இதற்குத்தான்!

ஒருவர் வந்து, கைமாத்தாக 100 ரூபாய் பணம் வாங்கி செல்கிறார். ஒரே வாரத்தில் பணத்தைத் திருப்பிக் கொடுத்து விடுவதாகவும் சொல்கிறார். கொடுப்பதில் தவறில்லை. ஒரு வாரம் என்பது நமக்கோ 52 முறை வந்து சென்றிருக்கும். ஆனால், பணம் வாங்கியவருக்கோ, ஒரு வாரம் இன்றும் முடிந்திருக்காது; என்றும் முடிந்திடாது.

வந்த பாதையிலோ 100 ரூபாய் போயிற்று; வரும் பாதையிலோ 10,000 ரூபாய் நிற்கிறது. அப்போதுதான், மாற்றுப் பாதை தேர்ந்தெடுக்க பட்டறிவு தடுக்கும். இந்த மாற்றத்துக்கு காரணம்? ஏமாற்றம்! இந்த மாற்றுப் பாதைக்கு காரணமான ஏமாற்றமும் மானிடத் தத்துவம் தானே!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுகந்தன்

# தேர்தல் கத்தியால் அறுபடும் பிணைப்பு

இலங்கை அரசியலில் பொன்சேகாவின் விடுதலைக்கு அடுத்தபடியாக சூடுபிடிக் கும் விடயம் மாகாணசபைத் தேர் தல்கள்தான்.

கிழக்கு மாகாணசபையின் ஆயுள் காலம் - தற்போதைய பதவிக் காலம் முடிவடைய இன்னும் ஒரு வருடங்கள் மீதமுள்ள நிலையில் அவசர அவசரமாக ஜனாதிபதியால் அதைக் கலைப்பதற்கான ஏற்பாடுகள் நடைபெற்று வருகின்றன.

அதேபோல வடமத்திய, சப்ரகமுவ மாகாண சபைகளும் கலைக்கப்பட்டு அங்கும் தேர்தலை அரசு நடத்த எண்ணியுள்ளது. மாகாண சபையை திடீரென கலைக்கும் அரசின் நோக்கம் தெரியாது எதிர்க்கட்சிகளும் தம்மைத் தேர்தலுக்கு தயார்ப் படுத்தத் துவங்கிவிட்டன.

போர்வெற்றியைக் காட்டி கடந்த தேர்தல்களில் வெற்றிபெற்ற அரசின் நிலை தற்போது கவலைக்கிடமாகியுள்ளது.

அத்தியாவசியப் பொருள்களான பால்மா, எண்ணெய், சிமெந்து தொடக்கம் ஆடம்பரப் பொருள்களான கார், மோட்டார் வாகனங்கள் என சகல பொருள்களின் விலையையும் அளவுகணக்கின்றி அதிகரித்துள்ளது அரசு. இதனால் மக்களிடையே பெரும் விசனம் ஏற்பட்டுள்ளது.

இத்தகைய நெருக்கடியான சூழலில் திடீர் திருப்பமாக முன்னாள் இராணுவத் தளபதி சரத் பொன்சேகாவை விடுதலை செய்துள்ளது அரசு.

இவ்வாறான நிலைமைகளால் ஏற்பட்டுள்ள சாதக பாதகங்கள் பற்றி அறிய அரசு ஆவலாக இருக் கிறது. எனவே மக்கள் மத்தியில் அரசுக்கு இருக்கும் செல்வாக்கை நாடி பிடித்துப் பார்க்கும் களமாகவே மாகாண சபைத் தேர்தல்கள் அவசர அவசரமாக அரசால் பார்க்கப்படுகிறது.

கிழக்குமாகாண சபையை பெரும்பாலும் ஜூன் மாதம் கலைத்துவிட்டு, அதற்கான தேர்தலை ஓகஸ்ட் 8ஆம் திகதி நடத்துவது என்று முடிவெடுத்துள்ளார் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ.

நிச்சயம் ஆளும் தரப்பால் வெற்றி பெற முடியும் என்ற நம்பிக்கையிலேயே அரசு இங்கு தேர்தலை நடத்தி முடிப்பதில் அதீத அக்கறை காட்டுகிறது. ஏனெனில், தோல்விப் பயத்தில் வடமாகாண சபைத் தேர்தலில் ஆமை வேகத்தில் காய் நகர்த்தி வருகிறது ஆளும் தரப்பு. அங்கு தாம் வெற்றி பெறுவதற்கான காலம் எப்போது கனியும்? என்று இலவு காத்த கிளியாக அரசுத் தரப்பு காத்திருப்பது யாவரும் அறிந்த விடயம்.

இந்த முறை கிழக்கு மாகாண சபைத் தேர்தலில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு களம் இறங்கியிருப்பது அரசின் வயிற்றில் புளியைக் கரைக்கும் விடயமாக மாறியுள்ளது.




தமது 14 ஆவது தேசிய மாநாட்டை நடத்தச் சென்ற தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் மீது தமது கூலிப் படைகள் மூலம் எதிர்ப்பை வெளிக்காட்டும் படலத்தை ஆளும் தரப்பு கனகச்சிதமாக நிறைவேற்றியிருக்கிறது. கறுப்புக் கொடிகள் கட்டப்பட்டமை, பஸ்கள் மீது கல் வீச்சுத் தாக்குதல்கள் மேற்கொண்டமை, எதிர்ப்புச் சுவரொட்டிகள் ஒட்டப்பட்டமை என்பன அவர்களின் பயத்தையே தெளிவாக எடுத்துக் காட்டுகின்றன.

அரசுடன் இணைந்து தேர்தலில் குதிக்கும் முடிவுடன், ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸ் செயற்பட்டு தேர்தலுக்கான முயற்சிகளில் ஈடுபட்டது.

அந்தக் கூட்டு நிலைக்கும் என்ற நம்பிக்கை அண்மைக் காலத்தில் நிகழ்ந்த தம்புள்ள பள்ளிவாசல் அகற்றப்பட்டமை மூலம் கேள்விக் குறியாக மாறியுள்ளது.

சிங்களப் பிக்குகளின் தலைமையில் பொலிஸாரும் படையினரும் வேடிக்கை பார்க்க முஸ்லிம் மக்களின் புனித தலம் மீதான மிலேச்சத்தனமான தாக்குதல் அந்த மக்களை பெரும் அதிர்ச்சிக்குள்ளாக்கியுள்ளது.

இதனால் கொதித்துப் போயுள்ள முஸ்லிம் மக்கள் அரசுடன் கூட்டுச் சேர்ந்து, மாகாணசபையில் போட்டியிடும் முஸ்லிம் கட்சிகளை ஆதரிப்பார்களா? என்பது கேள்விக்குரிய விடயம்தான். இதனால் முஸ்லிம் கட்சிகளுடன் கூட்டுச் சேரும் அரசின் எண்ணம் பிசுபிசுத்துப் போகும் நிலை ஏற்பட்டுள்ளது.

இந்த நிலையில் தமிழ் - முஸ்லிம் மக்களிடையேயான உறவு வலுப்பெறத் தொடங்கியுள்ளது. சிறுபான்மை இனங்கள் ஒன்று சேர்ந்து பலமாக இருந்தால் மட்டுமே தமது உரிமைகளையும் தமது பூர்வீக வழிபாட்டுத்தலங்கள் என்பவற்றையும் பாதுகாக்க முடியும் என்ற முடிவுக்கு இரு சமூகங்களும் வரமுனைகின்றன.

இதனை எடுத்துக் காட்டும் முகமாகவே முஸ்லிம் காங்கிரஸுடன் இணைந்து செயற்பட தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு பச்சைக் கொடி காட்டியுள்ளது. அதேநேரம் "தமிழ், முஸ்லிம் மக்கள் இணைந்து பேசி புதிய பாதையில் அரசியலை முன்னெடுத்துச் செல்ல வேண்டும், தமிழ்த் தேசியக் கூட்டமைப்புடன் இணைந்து ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸ் செயற்பட வேண்டும்" என்று முஸ்லிம் காங்கிரஸ் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் ஹசன் அலியும் தெரிவித்துள்ளார்.

இரு சமூகங்களும் ஒற்றுமையாகச் செயற்பட வேண்டும் என்பதையே தமிழ் - முஸ்லிம் மக்களில் பெரும்பாலானோர் விரும்புகின்றனர். சிறுபான்மை மக்களின் இணைவு கிழக்கு மாகாண சபையைக் கைப்பற்றும் அரசின் எண்ணத்தைத் தவிடுபொடியாக்கிவிடும் என்பது உண்மை.

இந்த நிலையில் தான் அரசில் அங்கம் வகிக்கும் அமைச்சரான றிஷாட் பதியுதீனின் கருத்து மன்னார் ஆயர் ஜோசப் சவுந்தரநாயகம் ஆண்டகைக்கு எதிராகத் திரும்பியிருக்கிறது.

அடக்கப்பட்டு ஒடுக்கப்படும் தனது மக்களின் குரலாய் ஒலிக்கும் ஆண்டகைக்கு எதிரான கருத்துக்களால் கத்தோலிக்கச் சமூகம் மட்டுமல்லாமல், தமிழ், முஸ்லிம் மக்கள் கூட கொதிப்படைந்துள்ளார்கள்.

அமைச்சரின் கருத்தைக் கண்டிக்கும் முகமாக கடந்த ஞாயிற்றுக் கிழமை கண்டன நிகழ்வு ஒன்றையும் மக்கள் ஒழுங்கு செய்திருந்தனர். இதனால் அச்சமடைந்த அமைச்சர் அதனைத் தடுப்பதற்கு பல முயற்சிகளை மேற்கொண்டதாகக் கூறப்படுகிறது.

அதன் எதிரொலியாக கத்தோலிக்க மக்களால் போற்றப்படுகின்ற மத குருமார்கள் ஐவருக்கு பொலிஸாரினால் அழைப்பாணை அனுப்பப்பட்டது. எனினும் இந்தக் கண்டனக் கூட்டத்துக்கு நீதிமன்றமே அனுமதியளித்துத் தீர்ப்பளித்ததன் மூலம் அந்த முயற்சியும் ஆட்டம் கண்டது.

கடந்த ஞாயிற்றுக்கிழமை கண்டனத்தை வெளிப்படுத்த நடத்தப்பட்ட பிரார்த்தனைக் கூட்டமும், வழிபாடும் எதிர்பார்த்ததை விட சிறப்பாக, அலையெனத் திரண்ட மக்கள் மத்தியில் நடைபெற்றது.

அங்கு வந்த மக்கள் மீது பாதுகாப்புக் கெடுபிடிகள் அதிகமாக இருந்ததும் கவனிக்கத்தக்கது.

அதேவேளை யாழ்ப்பாணத்தில் கடந்த இரு வாரம் நிகழ்ந்த சம்பவங்கள் தமிழ் - முஸ்லிம் பிணைப்பில் ஒரு பிளவை ஏற்படுத்துபவையாக அமைந்துவிட்டன.

காரைநகரில் இரும்பு பொறுக்கச் சென்ற இரண்டு முஸ்லிம் நபர்கள் அங்கிருந்த வீடொன்றினுள் புகுந்து தாயாருடன் இருந்த மனநலம் குன்றிய யுவதியை பலாத்காரம் செய்துள்ளனர்.

அவர்களை இனங்கண்டு தகுந்த மரியாதைகளுடன் பொதுமக்கள் பொலிஸில் ஒப்படைத்துள்ளனர்.

குடாநாட்டில் சிறுவர்களைக் கடத்தும் சம்பவமும் தற்போது அதிகரித்துள்ளது.

இந்தக் கடத்தலுடன் தொடர்புடையவர்கள் யாரென மக்கள் குழம்பிப் போயிருந்த சமயத்தில் தான், கடந்த ஒரு வருடத்துக்கு முன்னர் இங்கிருந்து கடத்திச் செல்லப்பட்டு கொத்தடிமையாக்கப்பட்ட 13 வயதுப் பாலகன் ஒருவன் புடவை விற்பனை நிலையம் ஒன்றில் இருந்து மீட்கப்பட்டுள்ளான்.

இவ்வாறு குறித்த சிறுவனைக் கடத்தியவர்களும் முஸ்லிம்களே என்பதால் நிலைமை இன்னும் மோசமாக மாறத் தொடங்கியது. தமிழ் - முஸ்லிம் மக்கள் இணைந்தால் தமது இருப்புக்கு அது பாதகமாக மாறிவிடும் என்ற எண்ணத்தால் திட்டமிட்டு இவ்வாறான சம்பவங்கள் அரங்கேற்றப்படுகின்றனவா? என்றும் பலர் சந்தேகிக்கின்றனர்.

ஒரு சிலர் விடுகின்ற தவறுகள் ஒட்டுமொத்த சமூகத்தையும் பாதிப்புக்குள்ளாக்கியுள்ளது.

காலம் நமக்கு உணர்த்தி நிற்கும் யதார்த்தம், சிறுபான்மை சமூகங்கள் ஒன்றுபட்டு நின்றால் மட்டுமே தமது உரிமைகளை வென்றெடுக்க முடியும் என்பதுதான்.

அந்த யதார்த்தத்தை உணர்ந்து பிட்டும் தேங்காய்ப்பூவும் போல பிணைந்திருக்கும் தமிழ் - முஸ்லிம் உறவுநிலையை தேர்தல் கத்தி அறுத்துவிடாமல் பார்த்துக் கொள்ள வேண்டும். இல்லாவிட்டால் பேரினவாதம் பிரிந்து கிடக்கும் இரண்டு சிறுபான்மை இனங்களையும் வெகு சுலபமாக தனக்கு இரையாக்கிவிடும். ✸

ஆதங்கன்

# பாடம் படியுங்கள்

இந்தியாவின் சிறிய மாநிலங்களில் ஒன்றான கோவா ஒட்டுமொத்த நாடுமே திரும்பிப் பார்க்கக் கூடிய சாதனை ஒன்றைச் செய்திருக்கிறது. எரிபொருள்களுக்காக விதித்திருந்த வரிகளைத் தளர்த்தி அவற்றின் விலையை முன்னர் இருந்ததை விட 13 ரூபாவால் குறைத்திருக்கிறது அந்த மாநில அரசு.

ஈராக்குக்கும் அமெரிக்காவுக்கும் இடையே மூண்டுள்ள முறுகல் நிலையால் எல்லா நாடுகளிலும் எரிபொருள் விலை ஏறிக் கொண்டே போக இந்தக் குட்டி மாநிலம் மட்டும் மக்களின் நலனைக் கருத்தில் கொண்டு சாதுரியமான வரித் தளர்த்தல் ஊடாக பெற்றோலியத்தின் விலையைக் குறைத்து "இப்படி நீங்களும் செய்யலாம்" என்று மற்றைய மாநிலங்களுக்கும், பிற நாடுகளுக்கும் சின்னதொரு பாடத்தைப் புகட்டியிருக்கிறது.

ஆனால் இந்தச் செய்தியை பத்திரிகைகளில் படித்து நிமிர்ந்த கணத்தில் "டீசல் விலை இரண்டு ரூபாவால் அதிகரிப்பு" என்ற செய்தி காதில் விழுகிறது. எப்படியேனும் மாதத்துக்கு ஒரு தடவை பெற்றோலியத்தின் விலையைக் கூட்டாவிட்டால் அரசுக்கு நித்திரையே வருவதில்லை. அதனால் இலட்சக்கணக்கான மக்களின் நித்திரைகள் பறிபோகத் தொடங்கியுள்ளன.

முற்றுமுழுதாக இயந்திரமயமாகிவிட்ட நவீன உலகப் போக்கில் பெரும்பாலான இயந்திரங்கள் தங்களது இயங்குசக்திக்குப் பெற்றோலியத்தையே நம்பியிருக்கின்றன. அந்த இயந்திரங்களை தமது வாழ்வாதாரத்துக்காக மக்கள் நம்பியிருக்கிறார்கள். ஆனால் அந்த மக்களை கைவிடுவதை மட்டுமே அரசு தன் தலையாய கடமையாகச் செய்துவருகிறது.

இறக்குமதிகளுக்கான வரிகளை உயர்த்தியதன் மூலம் பெற்றோலிய நிறுவனங்களுக்கு நெருக்கடி கொடுத்து, அந்த நிறுவனங்கள் மூலமாகவே எரிபொருள் விலைகளை அதிகரிக்கச் செய்யும் உத்தியை இப்போது அரசு கைக்கொள்ளத் தொடங்கியிருக்கிறது. இதன்மூலம் ஏற்படுகின்ற பாவம் பழி எல்லாமே குறித்த எரிபொருள் விலையை அதிகரித்த நிறுவனங்களுக்கே போய்ச் சேரும் என்றும், எனவே இத்தகைய உயர்வுகள் அரச கட்டிலை ஆட்டங்காணச் செய்யாது என்றும் அதிகார வர்க்கம் அறுதியாக நம்புகிறது. ஆனாலும் எப்போதுமே மக்கள் இளித்தவாயர்களாக இருப்பதில்லை. சூத்திரக்கயிற்றின் மூலமுடிச்சு எங்கிருக்கிறது என்று அவர்களுக்கு நன்கு தெரியும். உலகத்தைப் பார்த்து எத்தனையோ பாடங்களை கற்றுக் கொண்டவர்கள் பக்கத்து நாட்டிலிருக்கும் கோவா என்ற சிறிய மாநிலம் மக்களுக்காக எரிபொருள் விலையைக் குறைத்த விதத்தை இங்கும் செய்தால் என்ன?



வரித் தளர்த்தல் ஊடாக பெற்றோலியத்தின் விலையைக் குறைத்து "இப்படி நீங்களும் செய்யலாம்" என்று மற்றைய மாநிலங்களுக்கும், பிறநாடுகளுக்கும் பாடம் புகட்டியிருக்கிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எதை மாற்ற விரும்புகிறீர்கள் என்பதைத் திட்டமிடுங்கள்



## வெற்றி பெறலாம் வாங்க! 3

ராகவன் அல்பி

வெற்றி பெறுவது மட்டுமே உங்கள் நோக்கம் என்றால் முதலில் நீங்கள் செய்ய வேண்டியவை சிலவுண்டு.

என்னென்ன விஷயங்களை மாற்ற வேண்டுமென விரும்புகிறீர்கள், அது ஏன் என்பதையும் உங்களிடமே நீங்கள் கேளுங்கள்.

உங்கள் விருப்பங்கள் அனைத்தும் இரவலாகப் பெறப்பட்டதல்ல. அது உண்மையில் உங்களுடைய விருப்பம்தான் என்பதில் நீங்கள் உறுதியாக இருக்க வேண்டும். அப்போதுதான் வெற்றி சாத்தியமாகும். மற்றவருடைய இலக்குகளை எடுத்துக்கொண்டு அதை அடைவதில் நீங்கள் வெற்றி பெற்றாலும் கூட, அது உங்களை மகிழ்ச்சிப்படுத்த வேண்டுமென்றோ அல்லது உங்களுக்கான முழு வெற்றியாக அது அமைய வேண்டும் என்றோ அவசியமில்லை.

மற்றவர்களின் இலக்குகளின் அளவுகளோடு உங்கள் இலக்குகளை ஒருபோதும் ஒப்பிடாதீர்கள். உங்களுக்கான இலக்கும் வெற்றியும் உங்களுக்கு மட்டுமேயானது. மற்றவரை விடப் பெரிதாக இலக்கை வைத்து அதனை அடைய வேண்டும் என்று நினைப்பது முழுமையான வெற்றிக்கு உங்களை இட்டுச் செல்லாது. இது போன்ற சூழ்நிலைகளில் பெரிது என்றால் சிறந்தது என்று அர்த்தமில்லை. அதன் ஒரே அர்த்தம் வித்தியாசமானது, அவ்வளவுதான்!

உதாரணமாக நீங்கள் ஸ்போட்ஸ் காரை ஓட்ட விரும்பலாம் அல்லது பேருந்து ஓட்டக் கற்றுக்கொள்ளலாம். இவை இரண்டுமே நல்ல இலக்குகள் தான். ஆனால் உண்மையில் இதில் எது முக்கியமானது என்பதை நீங்கள் மட்டும்தான் புரிந்து கொள்ள முடியும். உண்மையில் நீங்கள் எதை விரும்புகிறீகள் என்பதை நீங்கள்தான் தீர்மானிக்க முடியும். அதை உங்களுக்காக உங்களது அப்பாவோ அம்மாவோ அல்லது வேறு எவருமோ தீர்மானிக்க முடியாது. அப்படி மற்றவர்களால் தீர்மானிக்கப்படும் இலக்குகளைப் பல வேளைகளில் நீங்கள் அடையலாம். ஆனால் அவையெல்லாம் உங்கள் வெற்றிகளாகிவிடா.

வெற்றிக்கான இலக்கை உறுதிப்படுத்திக் கொள்வதற்காக உங்களிடம் நீங்கள் கேட்டுக்கெள்ள வேண்டிய 10 கேள்விகள் உள்ளன.

1) நான் பெரிதும் அடைய விரும்பும் மூன்று விஷயங்கள் எவை?
2) அவை ஏன் எனக்கு முக்கியமானதாக இருக்கின்றன?
3) எதை முதலில் கையாள விரும்புகிறேன். அது ஏன்?
4) நான் ஒவ்வொன்றையும் எப்பொழுது அடைவேன்?
5) நான் எங்கிருந்து தொடங்க வேண்டும். நான் எடுத்து வைக்க வேண்டிய சிறிய அடிகள் என்னென்ன?
6) என்னுடைய வளர்ச்சியை நான் எப்படி கணக்கிடுவது? அதற்கான பதிவுகளைச் செய்வது எப்படி?
7) நான் யாரையெல்லாம் இதில் பங்கெடுத்துக்கொள்ளச் சொல்ல வேண்டும்?
8) எனக்கு உதவுவதால் அவர்களுக்கு என்ன ஆதாயம் கிடைக்கும்?
9) நான் இலக்கை அடைந்துவிட்டேன் என்பது எனக்கு எப்படி தெரியும்? அடைந்த பிறகு நான் அதை எப்படிக் கொண்டாடுவது?
10) இலக்கை அடைந்ததும் அடுத்து நான் என்ன செய்ய வேண்டுமென விரும்புவேன்?

உங்களுடைய பதில்கள், நீங்கள் எந்தத் திசையில் போகவிரும்புகிறீர்கள் என்பதைத் தெளிவாகப் புரிந்துகொள்ள உதவும், ஒரு விஷயம், இங்கு நீங்கள் உங்களின் சொந்த மதிப்புகளைத் தான் அறிமுகப்படுத்துகிறீர்கள். ஏனெனில் உங்களுக்கு முக்கியமாக இருப்பது உங்கள் சூழ்நிலையிலேயே இருக்கும் மற்றொருவருக்கு முக்கியமானதாக இருக்காது. உங்களைச் சுற்றியுள்ளவர்களிடமிருந்து இதற்கு ஆதரவு தருபவர்களை நீங்கள் கண்டறிய வேண்டும். அவர்களின் ஆதரவானது மொத்தச் செயற்பாட்டையும் எளிதானதாக மாற்றிவிடும்.

வாழ்க்கையைப் பற்றி அவரவருக்கென்று சொந்த மனப்பாங்கு உள்ளது. வெற்றி என்றால் என்னவென்பதன் தனிப்பட்ட வரையறைகளை அதுதான் வடிவமைக்கிறது. மேலும் நம்மை வெவ்வேறு விஷயங்களையும் விரும்பச் செய்கிறது. அவ்வப்பொழுது நாம் நம்முடைய சொந்த மதிப்புகளை லட்சியங்களைத் தவறான அபிப்பிராயங்களை நோக்கிக் கேள்வி எழுப்புகிறோம். இது பெரும்பாலும் முக்கியமான ஒருவரைச் சந்தித்துப் பேசும் போதுதான் ஏற்படுகிறது.

---

# உள் மனதின் சக்தி

மருத்துவர் ந.தர்ஷனோதயன்
வைத்திய அதிகாரி,
மாவட்ட ஆயுள்வேதவைத்தியசாலை,
மன்னார்.

“காரணமின்றி கோபப்படுவது, காரணமின்றி அச்சப்படுவது, காரணமின்றி அழுவது, காரணமின்றி சிரிப்பது, உடலையும், உடைகளையும் அளவுக்கு மீறி சுத்தமாக வைப்பது, அடிக்கடி குளிப்பது, அடிக்கடி துணி துவைப்பது போன்றனவும் மனநோய்க்கு அறிகுறிகள்தான்

நமது மனமானது வெளிமனம் என்றும், உள் மனம் என்றும் இரு பிரிவாகச் செயல்படுகிறது. ஆங்கிலத்தில் conscious mind என்றும் subconscious என்றும் குறிப்பிடுகிறார்கள். உணர்வுபூர்வமாக நாம் சிந்திப்பது, செயற்படுவது போன்றவை வெளி மனதின் கட்டுப்பாட்டுக்குள் உள்ளன. கடந்த கால அனுபவங்கள், பழக்க வழக்கங்கள் முதலியவை உள் மனதில் பதிந்துள்ளன. நமது உடலில் தன்னிச்சையாக இயங்கும் நரம்புகள் (Autonomic Nerves) உள் மனதின் கட்டுப்பாட்டினுள் உள்ளன. நமது உடலிலுள்ள நாளமில்லா சுரப்பிகள், கல்லீரல், கணையம், இருதயம், சிறுநீரகம், ஜீரண உறுப்புகள் முதலியவை தன்னிச்சையாக இயங்கும் நரம்புகளின் கட்டுப்பாட்டுக்குள் உள்ளன.

வேறு விதமாகச் சொல்ல வேண்டுமானால் நமது உடலின் மிக நுட்பமான உறுப்புக்களை உள் மனமே இயக்கிக் கொண்டிருக்கிறது. நமது உள்மனம் 24 மணி நேரமும் வேலை செய்துகொண்டே இருக்கிறது. உறங்கும்போது கூட) மன இயல் வல்லுநர்கள் 'Your subconscious is the architect of you life அதாவது உங்கள் 'உள்மனமே உங்கள் வாழ்க்கையை வடிவமைத்துக்கொண்டிருக்கிறது.

மன இயல் வல்லுநர்களின் மற்றொரு கூற்று, 'உங்கள் உள்மனம் எப்பொழுதும் உங்களுக்கு கீழ்படியும் வேலைக்காரன்' என்பதாகும். ஒரு நல்ல வேலைக்காரன் எஜமான் என்ன கட்டளையிட்டாலும் ஏன், எதற்கு என்றெல்லாம் கேட்காமல் இட்ட ஆணையை முடித்து விடுவான். உங்கள் உள்மனமும் கேள்வி எதுவும் கேட்பதில்லை. வெளி மனதுக்குத் தான் கேள்வி கேட்கத் தெரியும். உள் மனதுக்கு கேள்வி எதுவும் கேட்கத் தெரியாது. அதற்கு வேலை செய்ய மட்டுமே தெரியும். அது வாதங்களிலும் தர்க்கங்களிலும் ஈடுபடுவது கிடையாது. அதற்கு நேரமும் கிடையாது.

'என் உடல் பலவீனமாக உள்ளது' என்று நீங்கள் சொன்னால், உங்கள் மனமும், 'ஆம் என் உடல் பலவீனமாக உள்ளது' என்று திருப்பிச் சொல்கிறது.

'எனக்கு ஞாபக மறதி அதிகம்' என்று நீங்கள் சொன்னால் உங்கள் உள் மனமும் ஆம் எனக்கு ஞாபக மறதி அதிகம் என்றுரைக்கிறது.

'நான் கணக்கில் வீக்' என்றால் அதுவும் 'நான் கணக்கில் வீக்' என்று மறுமொழி கூறுகிறது.

'நான் புத்திசாலி! திறமைசாலி! என்று சொன்னால் உள் மனமும் 'நான் புத்மதிசாலி! திறமைசாலி! என்று திருப்பிச் சொல்கிறது.

மனரீதியாக உடலில் தோன்றும் பிரச்சினைகளுக்கு ஹிப்னாடிச சிகிச்சை (Hip-pnotism) நல்ல பலனளிக்கும். சம்பந்தப்பட்ட நபரை ஒரு வசதியான இருக்கையில் அமரவைத்து அவரது உடலை உச்சிமுதல் பாதம் வரை [illegible] (Relax-ation) அரை[illegible] ஹிப்னாடிச நிலையில் ''உங்கள் உடல் ஆரோக்கியமாக உள்ளது. உங்கள் உடலில் இருக்கும் உறுப்புக்கள் அனைத்தும் நன்றாகச் செயல்படுகிறன. நீங்கள் நாளுக்கு நாள் நலமடைகின்றீர்கள். இனி நீங்கள் வாழ்க்கையில் மகிழ்ச்சியையும், முன்னேற்றத்தையும் காண்பீர்கள் ''என்கின்ற கூற்று மொழிகள் திரும்பத் திரும்ப அவரது உள் மனதில் பதிக்கப்படுகிறது. இவ்வாறாக 3 அல்லது 4 நாள் கள் இடைவெளியுடன் இந்தச் சிகிச்சை ஆறுமுறை அளிக்கப்படுகிறது.

ஹிப்னோ தெரபி (Hippno therapy) என்பது பக்க விளைவுகள் எதுவும் இல் லாத மருந்தில்லா மருத்துவம் என்பது குறிப்பிடத்தக்கது.

### மன நோய்களை எப்படி அடையாளம் காண்பது?

சில சமயங்களில் சில மன நோயாளிகளும் கூடத் தங்களுக்கு இல்லாத நோய்களை இருப்பதாகக் கற்பனை செய்வதுண்டு. ஒருவர் மனநோயாளியா என்று எப்படித் தெரிந்து கொள்வது?

பொதுவாக மன நோயாளிகளின் அன்றாட வாழ்க்கையில் பெரிய பாதிப்பு இருக்கும். [illegible] கல்லூரிகளில் படிக்கும் மாண[illegible] பள்ளி, கல்லூரிகளுக்குச் செல்ல மறுப்பார்கள். வேலை பார்ப்பவர்கள் வேலைக்குச் செல்ல மறுப்பார்கள். தங்கள் குடும்பத்தினரிடம் கூட பேச மாட்டார்கள். மனநோயை உறுதிப்படுத்த கீழ்க்கண்ட அறிகுறிகள் தென்படுகின்றனவா என்று கவனிக்க வேண்டும்.

காரணமின்றி கோபப்படுவது, காரணமின்றி அச்சப்படுவது, காரணமின்றி அழுவது, காரணமின்றி சிரிப்பது, உடலையும், உடைகளையும் அளவுக்கு மீறி சுத்தமாக வைப்பது, அடிக்கடி குளிப்பது, அடிக்கடி துணி துவைப்பது, காதில் சத்தம் கேட்பது (ஒலி இல்லாமலேயே), இல்லாத உருவங்கள் கண்ணுக்குத் தெரிவது, படுக்கும்போது நெஞ்சை யாரோ அமுக்குவது போன்ற உணர்வு (Hallucinations), சுற்றியிருப்பவர்கள் மீது வீணாகச் சந்தேகப்படுவது, செய்த செயல்களைத் திரும்பத் திரும்பச் செய்தல் (Obsession/Comulsive Behaviour), தன்னைக் கடவுள் என்றோ அல்லது தெய்வீக சக்தி படைத்தவர் என்றோ கூறுவது (Delusions), தற்கொலை எண்ணம் அல்லது தற்கொலை முயற்சியில் அடிக்கடி ஈடுபடுவது, வரம்பு மீறிய செக்ஸ் உணர்வு அல்லது உணர்வு துளியும் இல்லாமல் இருப்பது, மற்றவர் மனதை அடிக்கடி காரணமின்றித் துன்பப்படுத்துவது, நான் நினைப்பது மற்றவர்களுக்குத் தெரிந்து விடுகிறது அல்லது மற்றவர் மனதில் உள்ளது எனக்குத் தெரிந்து விடுகிறது போன்ற அறிகுறிகளில் மூன்று அல்லது நான்கு இருந்தாலே சம்பந்தப்பட்ட நபரை உடனே ஒரு மனநல மருத்துவரிடம் (Psyciatrist) அழைத்துச் செல்ல வேண்டும். மருத்துவ சிகிச்சைக்குப் பின்னர் வேண்டுமானால் ஹிப்னாடிசத்தை இணை மருத்துவமாக (Joint therapy) பயன்படுத்தலாம். அதுவும் மனநல மருத்துவரின் கண் காணிப்பில் நடைபெற வேண்டும். ✱

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சொற்சிலம்பம் - போட்டி இல: 217

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | | ■ | 4 | 5 | 6 |
| 7 | | | ■ | 8 | | | |
| 9 | | | 10 | ■ | 11 | | ■ |
| | ■ | 12 | | 13 | | ■ | 14 |
| ■ | 15 | | | | ■ | 16 | |
| 17 | | ■ | 18 | | 19 | | ■ |
| 20 | | | ■ | 21 | | ■ | 22 |
| 23 | | ■ | 24 | | | | |

அனுப்புபவர் பெயர்:..........................................

விலாசம்:..........................................

..........................................

கையொப்பம்:..........................................

### இடமிருந்து வலம்

1. மகாபாரதத்தை எழுதியவர்
4. சோம்பல்
7.விதம்
8. இகழ்வு
9. சதிபதி
11. தாங்கள்
12. வரவேண்டியது
15. இந்துக்கள் வணங்கும் பெண் கடவுள்
16. நீரில் வாழ்வது
17. சிங்கம்
18. ஒவ்வொரு நாளும்
20. துக்கம்
21. மென் அல்ல
23. மூன்று
24. திருமணமாகாத பெண்கள்.

### மேலிருந்து கீழ்

1. நோன்பு
2. வேள்வி
3. நிகழ்வு
4. ஒரு பிரபந்த வகை
5. நூறு
6. ஒரு தானியம்
10. திருமணமான பெண் என்பதை அடையாளப்படுத்தும்
13. அரசன்
14. தமிழ் மாதமொன்று
15. பாலர் வகுப்பு
16. ஒரு வள்ளல்
17. ஏதிலி
19. காய்ச்சல்
22. நெஞ்சு

★வாசகர்கள் மத்தியில் குறிப்பாக மாணவ, மாணவியர் மத்தியில் பொது உளச்சார்பு மற்றும் மொழி அறிவை வளர்த்து விடத் தூண்டுவதே இப்போட்டி நடத்தப்படுவதன் முக்கிய குறிக்கோள்.

★ ஒவ்வொரு போட்டியிலும் ஏராளமான வாசகர்கள் ஆர்வத்துடன் கலந்துகொள்வதுடன், அவர்களில் பெரும்பாலா னோர் முற்றிலும் சரியான விடைகளை அனுப்பி வருவதால் பரிசுக்கும் பாராட்டுக்கும் உரிய அதிஷ்டசாலிகள் குலுக்கல் முறைமூலம் தேர்ந்தெடுக்கப்படுகின்றனர்.

★ சொற்சிலம்பம் போட்டி இலக்கம்: 215 இற்கான சரியான விடைகள் வருமாறு:

**இடமிருந்து வலம்**

(1) விசுவாசம் (5) ஆவி (7) வருடம் (8) ஆடல் (9) சாதி (10) பதிகம் (12) கவரி (13) பகு (15) வடம் (16) கரம் (17)தண்மை (18)குடம்பி (20)சணல் (21)துல்லியம் (22) கால்

**மேலிருந்து கீழ்**

(1) விவசாயி (2) சுருதி (3) வாட (4) சம்பவம் (5) ஆடம்பரம் (6) வில் (8) ஆக (11) திரி (12) கடமை (14) கும்பிடல் (15) வண்டில் (16) கடல் (17) தமது (18) குணம் (20) சய

★ சொற்சிலம்பம் போட்டி தொடர்பான வாசகர்களது ஆலோசனைகளும் கருத்தில் எடுக்கப்படும்.

## போட்டி விதிகள்

1. வாசகர் எவரும் சொற்சிலம்பம் போட்டியில் கலந்து கொள்ளலாம்.
2. ஒருவர் எத்தனை கூப்பன்களையும் நிரப்பி அனுப்பலாம்
3. உதயனில் பிரசுரமாகும் கூப்பன்களே போட்டிக்கு ஏற்கப்படும்.
4. போட்டி தொடர்பாக ஆசிரியரின் தீர்ப்பே முடிவானதாகும்.
5. வெற்றி பெறும் முதல் ஐந்து பேர்களுக்கு முறையே ரூபா 300/=, ரூபா 250/=, ரூபா 200/=, ரூபா150/= ரூபா 100/= பணப் பரிசில்கள் வழங்கப்படும். அத்துடன் பாராட்டுப் பெறும் மூன்று அதிஷ்டசாலிகளது பெயர் விவரங்களும் உதயனில் பிரசுரிக்கப்படும்.
6. பூர்த்தி செய்யப்பட்ட கூப்பன்கள்,

**சொற்சிலம்பம் போட்டி இல. 217**

*நியூ உதயன் பப்ளிகேஷன் [பிறைவேற்]லிமிட்டெட், இலக்கம் 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.*

என்னும் முகவரிக்கு எதிர்வரும் புதன் கிழமைக்கு அடுத்து வரும் புதன் கிழமைக்கு முன்னர், 13.06.2012 ஆம் திகதிக்கு முன்னர் கிடைக்கத் தக்கதாகத் தபாலட்டையில் ஒட்டி அனுப்பி வைக்கப்படவேண்டும்.

7. சொற்சிலம்பம்போட்டி இல.217இல்வெற்றி பெறுவோர்களது விவரம் 17.06.2012 ஞாயிறு உதயனில் பிரசுரிக்கப்படும்.

★ சொற்சிலம்பம் போட்டி இலக்கம்: 215 இற்கான சரியான விடைகளை எழுதி அனுப்பியவர்களில் குலுக்கல்மூலம் தேர்ந்தெடுக்கப்பட்ட முதல் ஐந்து அதிர்ஷ்டசாலிகளது பெயர் விவரங்கள் வருமாறு:

**1 ஆம் பரிசு**

**ஏ.விஜிதா,**
ஆலங்கேணி, பூநகரி, கிளிநொச்சி.

**2 ஆம் பரிசு**

**செ.சுபிதா,**
கரம்பைக் குறிச்சி மேற்கு, வரணி.

**3 ஆம் பரிசு**

**பொ.சண்முகநாதன்,**
மதுசன் ஸ்ரோர்ஸ், இலுப்பக்கடவை, மன்னார்.

**4 ஆம் பரிசு**

**றோ.அ.றிஷான்,**
சில்லாலை, பண்டத்தரிப்பு.

**5 ஆம் பரிசு**

**சி.வேனுசன்,**
நகுலேஸ்வரா வீதி, கீரிமலை.

**பாராட்டுப் பெறுவோர்**

**ஸ்ரீறங்கன் ஆறுமுகன்,**
இல.122, அனிஞ்சியன்குளம், மல்லாவி.

**அ.சரண்சியஸ்,**
இல.49, பற்றிக்ஸ் வீதி, யாழ்ப்பாணம்.

**சு.சுபத்திரா,**
இல. 63/2, திருவையாறு, கிளிநொச்சி.

*பரிசுக்கு உரியோராகத் தேர்ந்தெடுக்கப்படுவோர் ஒரு வாரத்தின் பின்னர்-ஞாயிற்றுக்கிழமை தவிர்ந்த அலுவலக நாள்களில் காலை 9.00 மணிமுதல் பிற்பகல் 2.00 மணிவரை தமக்குரிய பணப் பரிசில்களைத் தமது அடையாளத்தைச் சரியான வகையில் உறுதிப்படுத்தி 'உதயன்' அலுவலகத்தில் நேரில் வந்து பெற்றுக்கொள்ளலாம். யாழ். மாவட்டத்தைத் தவிர்ந்த ஏனைய மாவட்டங்களிலிருந்து பரிசுக்கு உரியோராகத் தேர்ந்தெடுக்கப்பட்டோருக்கான பணப்பரிசில்கள் காசோலை மூலம் காலக்கிரமத்தில் அவர்களது விலாசத்துக்குப் பதிவுத் தபால்மூலம் அனுப்பிவைக்கப்படும்.*

## பேச்சு...

(09 ஆம் பக்கத் தொடர்ச்சி)

''அன்று மாதர் சங்க கூட்டத்தில் நீங்கள் ஆற்றிய சொற்பொழிவை இன்று நினைத்தாலும் என் எண்ணமெல்லாம் உங்கள் பெருந்தன்மையான வார்த்தைகளை அவற்றின் மூலம் உங்கள் முற்போக்குச் சிந்தனையின் வெளிப்பாடு என்னை முழுவதுமாய் ஆட்கொண்டு விட்டது'' என்றவர் பாரதி. பெண் விடுதலைக்காகப் பாடிய கவிதைகள் தாம் எத்தனை அர்த்தமுள்ளவை. உங்களைப் போல் பாரதியின் கொள்கைதான் இந்தத் திருமண விடயத்தில் என்னுடைய கொள்கையும். ஓ! இந்தக் காலத்தில் உங்களைப் போன்ற உத்தமர்களை காண்பது அரிது எனது மகள் குடியும் குடித்தனமுமாய் வாழ வேண்டும் என்ற போது பாலமுருகனார் ''ஏன் கவலைப்படுகிறீர்கள்? என்றார். ''எனது மகளுக்கு திருமணம் செய்து வைக்க விரும்புகிறேன். எல்லோரும் சீதனம், இனாம் என்று கேட்டுக்கொண்டுதான் பெண் கேட்டு வருகிறார்கள். அதனால் தான் உயர்ந்த கொள்கையுள்ள உங்களிடம்....'' அவர் வார்த்தைகளை முடிக்கவில்லை. இவர்களின் உரையாடல் கேட்டு உள்நுழைந்த மனைவியைக் கண்ட பாலமுருகனார் ''மாப்பிள்ளை கேட்டு வந்தீராக்கும்? பேராசிரியர் கோபமாக கேட்டார். பின்னர் சிறிது தணிந்து எல்லாவற்றுக்கும் என் மனைவி இருக்கிறாளே அவளையும் அனுசரித்து போக வேண்டும்'' என்று இழுத்தார். ''மகன்மாருக்குச் சீதனம் வாங்கித்தான் கலியாணம் செய்ய வேண்டுமென்று சொல்கிறாள். அவளையும் கூப்பிடுகிறேன்'' என்றார். ''ஊருக்குத் தான் உபதேசம் உனக்கில்லை கண்ணே'' என்ற பழமொழிதான் நல்லசிவத்தாரின் நினைவுக்கு வந்தது.

ஆனால் பெண்களே பெண்கள் விடயத்தில் எதிரிகளாய் நிற்பதாகவே இப்பொழுது தோன்றியது. மனைவியை கூப்பிட்டுக் குரல் அடங்கு முன்னதாகவே ''என்ன நீங்க அங்கயிருந்து என்ன செய்யிறீங்க இங்க வீடு முழுக்கக் குப்பையாக் கிடக்கு. வீட்டு வேலையொண்ணும் செய்யிறதில்லைச் சும்மா கூட்டமும் பேச்சும் ஊர்சுத்துறதும்தான்''. கணீர் என்று கேட்ட பால்முருகனாரின் மனைவியின் குரல் அந்த அறையைச் சூழ்ந்து அங்கிருந்த அனைவரின் காதுகளிலும் அறைந்தன. நல்லசிவம் மெதுவாக எழுந்து ''பரவாயில்லை நீங்க இருங்கோ நான் பிறகு வந்து சந்திக்கிறன்'' என்றவர் பாலமுருகனாரின் பதிலையும் பார்க்காமல் படி இறங்கி வீதியில் நடந்தார். சீதனம் வேண்டாத திருமணம் என்பது சொல்லவும் கேட்கவும் இனிப்பது என்னவோ உண்மைதான். பாலமுருகனாருக்கும் பேச்சுத்தான் பல்லக்கு...! என்று அவர் வாய் முணுமுணுத்தது.

## அன்பால் பிணைக்கப்பட்ட வாழ்வு



எல்லாம் படைத்த இறைவன்தான் அன்பையும் படைத்துள்ளான். படைத்த மக்களிடம் முதலில் எதிர்பார்ப்பது, அன்பு என்னும் மிகப்பெரிய பொருளே ஆகும். அன்பு ஒன்றே இந்த உலகில் மிகப்பெரியது. அது கொடுக்க,கொடுக்க குறைந்து போவதும் இல்லை,வாங்க வாங்க தெவிட்டுவதும் இல்லை. அன்பை விதைத்தால் மட்டுமே அதிக அன்பைப் பெற முடியும். அத்தகைய சிறப்பு மிக்கது இந்த அன்பாகும்.

ஒருவர்மீது நாம் வைக்கும் அளவு கடந்த அன்பு அவர் நமக்கு செய்யும் தீமைகளை கூட தாங்கி கொள்ள கூடியதாகும். அன்பால் தம்முடைய எதிரிகளையும் நம்மை நேசிக்க வைக்க முடியும்

இந்த உலகில் உள்ள ஒவ்வொருவரும் ஏதோ ஒரு இயக்கத்தில்தான் ஒருவருடன் ஒருவர் பற்று வைத்து இயங்கிக் கொண்டு இருக்கின்றனர். இந்த நிலையில் அன்புதான் இவற்றுக்கு எல்லாம் காரண கர்த்தாவாக இருக்கின்றது.

நாம் ஒருவர் மீது அன்பு வைக்கும்போது அது நிபந்தனையற்ற அன்பாக மட்டும் இருக்கவேண்டும். நிபந்தனைகளுக்கு அப்பாற்பட்டதுதான் அன்பு. இத்தகைய அன்பு எமக்கும் கிடைக்கும் பட்சத்தில் நாம் ஒவ்வொருவரும் கொடுத்து வைத்தவர்களாகத்தான் இருக்க முடியும்.

இந்த நிலையில் நாம் ஒருவர் மீது அன்பு வைக்குமிடத்து குறிப்பிட்ட அந்த நபர் வேறு யார் மீதாவது அன்பு கொண்டால் அதை ஏற்றுக்கொள்ள முடியாத நிலைமை ஏற்படுகிறது. இதற்குக் காரணம் அவர்கள் மீதான பொறாமை என்று கூறிவிட முடியாது. இது நாம் அவர்கள் மீது கொண்ட உச்சக் கட்ட அன்பு என்றுதான் கூற முடியும்.

இவ்வாறு நாம் அன்பு வைப்பவர்கள் வேறு யாரிடமாவது அன்பு காட்டினால் அதனால் பல்வேறுபட்ட பிரச்சினைகளும் தோன்றுகின்றன.

இவ்வாறான பிரச்சினைகள் உச்சக் கட்டத்தை அடைந்து இறுதியில் இருவரிடையேயும் பிரிவு என்ற ஒன்று மட்டும்தான் வந்து நிற்கும்.

இந்தப் பிரிவுக்கு முக்கியமாக மனம் விட்டுப் பேசாமையும் ஒரு காரணமாகிவிடுகிறது.

எனவே அன்பு வையுங்கள். பிரச்சினைகளை மனம் விட்டுப் பேசுங்கள். பிரிந்து விடாதீர்கள். வாழ்வு அன்பால் ஒன்றிணைக்கப்பட்டது. அந்த அன்பை இழந்து தனித்துவிடாதீர்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மண்டைதீவுக்கு வெளிச்சம் எப்போது?

■ நக்கீரன்

மண்டைதீவில் மீளக் குடியமர்ந்த மக்கள் பலதரப்பட்ட எதிர்பார்ப்புகளைக் கொண்டவர்களாக உள்ளனர் எனினும் முதலில் நிறைவேற்றப்பட வேண்டியவை குடிதண்ணீர், மின்சார வசதிகளே என்கிறார்கள். இந்த இரண்டு அத்தியாவசிய தேவைகளும் பூர்த்தி செய்யப்படின், இன்னமும் தமது சொந்த வீடுகளுக்கு வந்து சேராத பலர், அங்கு வந்துவிடுவார்கள் என்றும் கூறுகின்றனர். தற்சமயம் 900 குடும்பங்கள் வரை அங்கு குடியிருப்பதாகத் தெரிகின்றது.

மீளக் குடியமர்ந்த பிரதேசங்களில் எல்லாம் மக்கள் இன்றும் அடிப்படை வசதிகளை இழந்தவர்களாகவே உள்ளனர். இந்நிலையில், உங்களின் கோரிக்கைகள் உடனடியாகவே கவனிக்கப்படும் என்று எண்ணுவது தவறுதானே என்றபோது நாங்கள் நம்பிவிட்டோம்.

அவ்வளவுதான் என்று விரக்தியுடன் குறிப்பிட்ட மக்கள் ஏனைய படிப்படியாகச் செய்தாலும், மின்சாரத்தையும் குடிதண்ணீர் வசதியையும் சீரான முறையில் செய்துதர உடன் முன்வர வேண்டும். ஒவ்வொரு தடவையும் இங்கு வரும் பிரமுகர்களிடம் நாங்கள் இந்த இரண்டையுமே வலியுறுத்துகிறோம். அவர்களும் இன்று வரும், நாளை வரும் என்று சொல்லிக்கொள்கிறார்கள். வந்தபாடு தான் இல்லை என்கிறார்கள் வேதனையுடன்.

வடக்கின் வசந்தத்தை முன்னிலைப் படுத்தி மின்சாரம் வழங்குவதாக உறுதியளிக்கப்பட்டது. பிரதேச சபைக் கூட்டத்திலும் இது சுட்டிக் காட்டப்பட்டது. போதாக் குறைக்கு சம்பிக்க ரணவக்கவேறு யாழ்ப்பாணத்தில் இருந்து கடல் வழியாக மின்சாரம் வழங்க உடன் நடவடிக்கை என்று வெட்டி வீழ்த்திச் சென்றார்.

எதுவுமே நடக்கவில்லை. சில இடங்களில் மின்கம்பங்கள் நட்டபடி கிடக்கின்றன. இப்போது மண்டைதீவுக்கு மின்சாரம் கிடையாது என்று வேலணையில் நடைபெற்ற ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம் ஒன்றில் கூறப்பட்டதாகவும் தகவல்கள் உள்ளன. இதெல்லாம் எதற்கு? எம்மைப்பற்றி சிந்திப்பார் எவருமில்லையா? என இந்தப் பகுதி மக்கள் விசனம் கூறுகின்றனர்.

ஒரு சிறிய பகுதியில் தனிப்பட்ட ஒருவர் ஜெனரேட்டர் மூலம் இரண்டொரு மணித்தியாலங்களுக்கு மின்வெளிச்சம் வழங்குகிறார். பிள்ளைகளின் படிப்புக்காக ஒருசில குடும்பங்கள் அதைப் பயன்படுத்துகின்றன. ஒரு மின்குமிழுக்கு ஐநூறு ரூபா கொடுக்கின்றனர். மின் இணைப்பை ஏற்படுத்தித் தந்தால் இந்தக் கஷ்டம் ஏன் என்று அவர்கள் வேதனை அடைகின்றனர்.

மின்சாரத்துக்குத்தான் இந்நிலைமை என்றால் குடிதண்ணீருக்கும் அலைய வேண்டியுள்ளது என்பதும் அவர்களின் கவலை. அல்லைப்பிட்டியில் இருந்து நீர் விநியோகம் இடம்பெறுகின்றது. இதற்கென பத்துத் தொட்டிகள் ஆங்காங்கே கட்டப்படும் எனக் கூறப்பட்டது. நான்கு ஐந்து மட்டுமே கட்டப்பட்டுள்ளன. எனினும் மக்கள் தண்ணீரைப் பெற முடியாத நிலைதான் தொடர்கிறது. நூறு குடும்பங்கள் ஒரு தொட்டியைப் பயன்படுத்த வேண்டும். எனினும் ஒரு பத்துக் குடும்பங்களுக்கு மட்டுமே நீர் கிடைக்கும். காலை 9 மணிக்கு தண்ணீர் விடப்படுகிறது. சிறிதுநேரம் மட்டுமே தண்ணீர் பெறமுடியும்.



இது தவிர வைத்தியசாலை, வீதிகள், போக்குவரத்துச் சேவைகள் எல்லாமே அவலத்தில்தான். 1954 இல் திறந்து வைக்கப்பட்ட வைத்தியசாலை அந்த மக்களுக்கு அப்போது தரமான சேவையை வழங்கி வந்தது. வசதிகளும் போதியளவில் இருந்தன. இந்த வைத்தியசாலை இன்று படையினரின் வாசஸ்தலமாக உள்ளது. இந்த வைத்தியசாலையின் கூரைகள் முழுமையாக சேதமடைந்துள்ளன. எனினும் கட்டடம் பெரிய அளவு பாதிப்பின்றி உள்ளது. இன்று மண்டைதீவில் யாராவது ஒருவருக்கு சாதாரண நோய் என்றாலும் யாழ்ப்பாணத்துக்கே செல்ல வேண்டிய நிலைதான். இலங்கை செஞ்சிலுவைச் சங்கம் அந்த மக்களின் வசதி கருதி வாரத்தில் ஒருநாள் நடமாடும் வைத்திய சேவை ஒன்றை வழங்கி வருகின்றது. கடும் நோயாளர்கள் போக்குவரத்து வசதிகளும் இன்றி இரவு வேளைகளில் மிகவும் சிரமப்படுகிறார்கள். இந்த வைத்தியசாலையைத் திருத்தி அமைக்க ரூபா 20 மில்லியன் வரை நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதாகவும், பாதுகாப்பு அமைச்சின் அனுமதியைப் பார்த்து இருப்பதாகவும் கூறப்பட்டது. அனுமதி எப்போது கிடைக்கும் என்பது கோத்தபாயவுக்குத்தான் வெளிச்சம் என்கிறார்கள் மக்கள். அம்புலன்ஸ் வண்டி தருவதாகச் சொன்னவர்கள் இப்போது காசு இல்லை என்கிறார்கள். இது என்ன வேடிக்கை என்று வேதனைப் படுகின்றனர்.

பஸ் சேவை ஒழுங்கில்லை என்பதும் அவர்களுக்குப் பிரச்சினையாகவுள்ளது. யாழ்ப்பாணத்தில் இருந்து புறப்படும் பஸ் சேவையில் கடைசிச் சேவை மாலை 6.30 மணிக்கு மாற்றப்பட வேண்டும். இப்போது அது 5.30 மணிக்கு இடம்பெறுகின்றது. வைத்தியசாலைக்கு நோயாளரைப் பார்க்கச் செல்லும் உறவினர்களும், ஏனைய மக்களும் நேர மாற்றத்தால் பயனடைவர் என்று கேட்கின்றனர். 5.30 மணி பஸ்ஸைத் தவறவிட்டால் ஓட்டோவுக்கு ஐநூறு ரூபாவுக்கு மேல் கொடுத்தே வீட்டுக்கு வரவேண்டியுள்ளது என்று கூறுகின்றனர்.

எங்களது கஷ்டங்களை எடுத்துக் கூறியும் யாரும் அது குறித்து கவலைப் பட்டதாக இல்லை. வாக்குகள் முக்கியம் என்பவர்களின் வாக்குறுதிகள் முக்கியமில்லைப் போலும். பிரதேச சபை உறுப்பினர்கள் கூட ஊர்த் தேவைகளில் அக்கறை காண்பிப்பதாக இல்லை என்பதே மண்டைதீவு மக்களின் வேதனை.

# புகையில் மூழ்காதீர்!



இரா.சந்திரசேகர சர்மா
முன்னாள் ஆலோசகர் போதைவஸ்து புகைப்பொருள் எதிர்ப்புத்திட்டம், போருட்

**மே 31 புகையிலை மறுப்புத் தினம்**

உலக சுகாதார நிறுவனம் மே 15, 1987 இல் உலக புகையிலை மறுப்பு தினமாக ஏப்ரல் 7, 1988 இருக்க வேண்டுமென பிரகடனப்படுத்தியது. ஏனெனில் அது உலக சுகாதார நிறுவனத்தின் 40 ஆவது ஆண்டு நிறைவு தினமாக இருந்தமையே ஆகும். பின்னர் மே 17, 1989 இல் செய்யப்பட்ட பிரகடனத்தில் மே31, ஒவ்வொரு வருடமும் உலக புகையிலை மறுப்புத்தினமாகக் கொண்டாடப்பட வேண்டுமெனக் கூறியது. 1989 இல் இருந்து அவ்வாறே இத்தினம் கொண்டாடப்பட்டு வருகிறது.

புகைத்தலுக்கு அடிமையானவர்கள் புகைத்தலை விட விரும்புபவர்கள் இதனை வாசித்த பின்னர் முற்றாக விட்டு நல்ல சுகமான வாழ்வைத் தொடங்குவதற்கு ஏற்ற தினமாக மே 31 தினத்தைத் தீர்மானித்துக் கொள்ளலாம். இன்றிலிருந்து புகைப்பவர்கள் திட சங்கற்பம் எசய்து கொள்ள வேண்டும்.

உலக புகையிலை மறுப்புதினம் உலகெங்கும் கொண்டாடப்படுகிறது. மக்கள், அரசார்பற்ற நிறுவனங்கள், அரச நிறுவனங்கள், பத்திரிகைகள் ஒன்றிணைந்து புகைப்பதால் ஏற்படும் சுகாதாரக்கேடுகள் பற்றிய கவனயீர்ப்பை மக்களிடம் ஏற்படுத்துவதற்காக ஒவ்வொரு வருடமும் மே மாதம் 31 ஆம் திகதியை புகைபொருள் மறுப்புதினமாகக் கொண்டாடுகின்றன.



புகையிலை அமெரிக்காவில் உண்டாகிய ஒரு தாவரம். இதன் இலைகள் பல நாள்கள் புகையூட்டப்பட்டு கறுத்த புகையிலைப் பொருளாக பெறப்படுகிறது. இது ஐரோப்பாவுக்கு 1559 இல் JEAN NICOT என்ற பிரான்ஸ் நாட்டுத் தூதுவரால் அறிமுகப் படுத்தப்பட்டது. இது மிக விரைவாகப் பரவி முக்கிய வியாபாரப் பயிராகிவிட்டது.

1900 ஆம் ஆண்டில் செய்யப்பட்ட வைத்திய ஆய்வுகள், புகையிலைப் பாவனை பல நோய்களைத் தோற்றுவிக் கூடியது என்பதைச் சுட்டிக் காட்டின. மாரடைப்பு, பாரிசவாதம், குடற்புண், எம்பசீமா பலவிதமான புற்றுநோய்கள் என்பவை அவற்றுள் சில.

புகையிலை பின்வரும் வழிகளில் பயன்படுத்தப்படுகின்றது. சிகரெட், சுருட்டு, பீடி, சுங்கான், குழாய்கள், புகையிலையை வாயில் மெல்லுதல், மூக்குப்பொடி, வெற்றிலை பாக்கோடு போடுதல் என்பன.

புகையிலையில் 'நிக்கொட்டின்' என்ற பதார்த்தம் உள்ளது. சிகரெட் புகையை உள்ளிழுக்கும்போது கிட்டத்தட்ட 90 வீதம் நிக்கொட்டின் உடலில் உறிஞ்சப் படுகிறது. இந்த நிக்கொட்டின் முக்கியமாக இதயம், குருதிக் குழாய்கள், உணவுக்கால்வாய், சிறுநீரகம், நரம்புத்தொகுதி என்பவற்றைத் தாக்குகிறது.

புகையிலையில் உள்ள ''தார்'' புற்றுநோய் ஏற்படுவதற்குக் காரணமாகிறது.

அரிப்புப் பதார்த்தங்களும் புகையிலையில் உள்ளன. இவை சுவாசக் குழாய்களில் அரிப்பையும் தாக்கத்தையும் உண்டாக்குகின்றன. புகையிலையில் உள்ள காபனீரொக்சைட் இதய நோய்களை அதிகரிக்கச் செய்யும்.

புகையிலைப் பாவனை அமெரிக்காவில் ஒவ்வொரு வருடமும் 400,000 மக்களின் இறப்புக்கு முக்கிய காரணமாக அமை கிறது. சுகாதாரக் கவனிப்புக்காக 96 மில்லி யன் டொலர் செலவாகிறது. அங்கு 19.5 வீதமாமன மாணவர்கள் புகைக்கிறார்கள் என்றும் இது நாளுக்கு நாள் அதிகரிக்கிறது என்றும் கணக்கிட்டிருக்கிறார்கள்.

ஹாவாய் நாட்டில் புகையிலைப் பாவனையால் ஒவ்வொரு வருடமும் 1,100 மக்கள் இறக்கிறார்கள்; 336 மில்லியன் டொலர் சுகாதார கவனிப்புக்காக செலவாகிறது. 11.3 வீதமான மாணவர்கள் புகைக்கிறார்கள்.

புகையிலையில் உள்ள நிக்கொட்டின் புகைத்தலின் போது புகைப்பவரின் உடலில் கொட்டினின் ஆக மாற்றமடைகிறது. இது மனிதனின் மன இயல்பை மாற்றுகின்றன. ஆரம்பத்தில் உடலில் ஓர் உற்சாகம் விறுவிறுப்பு மனத்திருப்தி என்பவற்றை ஏற்படுத்துகின்றன. ஆனால் இறுதியில் சந்தோஷமின்மை, சோர்வு, மனக்குழப்பம், ஆத்திரம் ஆகிய உளவியல் மாற்றங்களை ஏற்படுத்துகின்றது. புகைத்தலைத் தொடங்கும் ஒருவர், மிக விரைவில் அதற்கு அடிமையாகி விடுவார். புகையை உட்கொண்ட பின்னர் 7-8 செக்கன்களில் அது மூளையை அடைந்து விடுகிறது. குறைந்த நிக்கொட்டின் உள்ள சிகரெட்களைக் புகைப்பவர்கள் அதிகளவு சிகரெட்டுக்களைப் புகைக்கிறார்கள். காலப்போக்கில் புகைத்தலுக்கு அடிமையாகிவிடுகிறார்கள். அவர்களுடைய உடம்பில் நிக்கொட்டின் ''தாகம்'' தோன்றும். இந்தத் தாகம் ஏற்படும் போதெல்லாம் புகைக்க வேண்டியிருக்கும். புகைப்பவர்களுக்கு அருகில் இருப்பவர்களும் புகையை உட்கொள்ளவேண்டியிருக்கிறது. இதனால் பாதிப்படைகிறார்கள். சிகரெட்டின் எரியும் முனையிலிருந்து வெளியேறும் புகையை உள்ளெடுப்பவர்களும் புகைப்பவர்கள் போல் பாதிக்கப் படுகிறார்கள். கர்ப்பவதிகள் அருகில் இருந்தால் அவர்களும் புகையால் பாதிக்கப்படுகிறார்கள். நமது நாட்டில் சில பெண்களும் இப்போது சிகரெட் புகைக்கிறார்கள். இதனால் நிறைகுறைந்த குழந்தைகள் பிறக்கின்றன. கருச்சிதைவு, சிசுமரணம் என்பனவும் ஏற்படுகின்றன. புகைப்பிடிக்கும் பெண்களில் மலட்டுத்தன்மை, குறைந்த வயதிலேயே மாதவிடாய் நின்று போதல் போன்ற விளைவுகளும் ஏற்படுகின்றன.

தற்போது நமது நாட்டிலும் இளைஞர்கள், மாணவர்கள் அதிகஅளவில் புகைக்க ஆரம்பித்து விட்டார்கள் என்பதைய அவதானிக்க முடிகிறது. புகைத்தல் எப்படி இருக்கும் என அறியும் ஆவலும் அதன் பாதிப்புக்கள் பற்றிய அறிவின்மையுமே அவர்களின் புகைப்பழக்கத்திற்கான காரணங்களாகும். பாதிப்புக்கள் பற்றிய விவரமான தக வல்கள் அவர்களுக்குப் பாடசாலைகளிலேயே வழங்கப்படவேண்டும். மாணவர்களுக்கு ஆசிரியர்கள் முன் உதாரணமாக இருத்தல் வேண்டும். ஓர் சிகரெட் புகைத்தால்தான் கடினமான கணிதத்தை செய்ய முடியும் என்ற எண்ணக்கருவை ஒரு ஆசிரியர் மாணவர் மத்தியில் தோற்றுவிப்பாரானால் அதை அவர் மீது பக்தி கொண்ட மாணவர்கள் பின்பற்றக்கூடும். எனவே மாணவர்களின் பின்பற்றும் ''மாதிரிகளான'' ஆசிரியர்கள் வேண்டிய நல்ல தகவல்களை மாணவருக்குக் கொடுத்தல் வேண்டும்.

புகைக்குள் மூழ்கிக் கொண்டிருக்கும் இளைஞர்களையும் மாணவர்களையும் அதில் இருந்து மீட்டெடுத்து காப்பாற்ற வேண்டிய பொறுப்பு சமூகத்திற்கும் சான்றோர்களுக்கும் உண்டு. புகையிலை-புகைப்பொருள்-புகைத்தல் அற்ற ஒரு சமுதாயத்தை நோக்கிய நெடும் பயணத்தில் நம் மாணவர்களையும் இளைஞர்களையும் இணைத்துக் கொண்டு முன்செல்வோம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

■ ஆனதி

# மனிதச் சமுத்திரத்துக்குள் பிள்ளைகளைத் தேடும் பெற்றோர்




அவர்கள் பெரும்பாலும் போராளிகளாக இருந்தவர்களாகவும் இருக்கலாம். அதனால் தனித்துச்செல்ல அவர்கள் அஞ்சியிருக்கலாம். அல்லது தம் பெற்றோர் சகோதரர்களைத் தேடித்தான் வந்தும் இருக்கலாம். நிறையப்பேர் அப்படித்தான் உறவுகளைத்தேடி அலைந்தார்கள்.

## இறுதி நாள்களும் எனது பயணமும்

சற்று நேரமேனும் என்னைப் புரிந்து கொண்டவர்களாய் என்னோடு இருந்த மனிதர்களும் சென்றுவிட்டார்கள். அவர்கள் எழுந்து சென்ற இடைவெளியை வேறு யாரோ வந்து நிரப்பியுள்ளனர்.

மங்கலாகிவிட்ட பார்வையைக் கூர்மைப்படுத்தியபடி அவதானித்தேன். வயோதிபத் தம்பதியொன்று தமது பைகளை போட்டு அவைமீது குந்திக் கொண்டிருந்தனர். எனக்கோ கண்களைத் திறக்க முடியாமல் தலையை வலித்தது. உடலும் மனமும் களைத்து சோர்ந்து போய்விட்டிருந்தன. போத்தலில் இருந்த, ஒரு மிடறுக்கும் போதாத பானத்தை கவிழ்த்து ஊற்றி நாக்கை முழுதுமாய் நனைத்து விழுங்கினேன்.

சற்று நேரத்தில் என் முன்னால் சிறுவன் ஒருவன் வந்து நின்றான் "அக்கா அந்த போத்தில தாறிங்களா?" என்றபடி. அந்த போத்தில் என்னிடமிருந்தால் என்னை அறிந்தவர்கள் யாராவது தண்ணீருடன் வந்தால் கொஞ்சம் தருவார்கள் என்றிருந்த நப்பாசையையும் அவன் அபகரித்துவிட்டான். அந்தச் சிறுவனுக்கு மறுப்புச் சொல்ல என்னால் முடியவில்லை. போத்தலை அவனிடம் கொடுத்து விட்டேன். அவனும் வாங்கிய வேகத்தில் போய்விட்டான்.

பட்ட காலிலே படும் கெட்ட குடியேகெடும் என்பதைப் போல எல்லோருக்கும் துன்பங்கள் அதிகரித்துக் கொண்டுதான் செல்கின்றன. போயும் போயும் கிழிந்து கந்தலாய் போன மனதுடன் கிடக்கும் என் கால்மாட்டில்தானா காயப்பட்டவர்களும் வந்து விழவேண்டும். ஆறாத பச்சை காயங்களுடன் வந்த சிலர் செய்வதறியாத நிலையில் இருந்தார்கள்.

தமது ஊன்று கோல்களை பொத்தென கீழே போட்டு விட்டு நிலத்தில் கிடந்த அவர்களில் களைப்பு அப்பட்டமாய் தெரிந்தது. யாராவது தண்ணீர் தரமாட்டார்களா? எங்கள் காயமடைந்த நிலையைப் பார்த்து பரிதாபப்பட்டாவது யாரும் ஒரு மிடறுக்குத் தன்னும் தரமாட்டார்களா என்று அவர்கள் சூழவுள்ளவர்களை, பார்த்தார்கள் என்றால் அதில் தவறில்லை. ஆனால் எந்த மனிதர்களுமே அவர்களை பார்க்கவில்லை.

பார்த்தால் தம்மிடமிருந்த சொட்டு நீரையும் கொடுக்க வேண்டி ஏற்பட்டுவிடுமோ என்ற அச்சத்தில் எவரும் அவர்களை கடைக் கண்ணால் கூடப்பார்க்க விரும்பவில்லை. அந்தப் பையன்கள் தவிப்போடு கிடந்தார்கள்.

வெயில் பாடாய் படுத்தியது. அத்தனை சனங்களும் நாவாறக் குடிக்கக்கூடிய தண்ணீரைப் படையினரால் வழங்கவே முடியவில்லை. வலியன வாழும் என்பதைப்போல அடித்து மோதி தண்ணீரைப் பிடித்துக் கொண்டவன் குடித்தான். முடியாதவன் தாகத்தோடு உடல்வற்றி சுருண்டான்.

என் காலடியில் கிடந்தவர்கள் உளறத் தொடங்கி விட்டார்கள். காயங்கள் அவர்களுக்கு எவ்வளவு வேதனை அளிக்கும் என்பதை என்னாலும் உணரமுடிந்தது. இவர்கள் ஏன் இங்கே வந்தார்கள்? காயப்பட்டவர்களை ஏற்றும் இடத்துக்குச் சென்றிருக்கலாம் அல்லவா? இந்நேரம் மருத்துவமனையை அடைந்திருக்கலாம் அல்லவா? என்று உள்மனம் நினைத்த மறுகணமே அதற்கான காரணங்களையும் எண்ணி அவர்கள் மீது இரக்கத்தையே நிரப்பியது.

அவர்கள் பெரும்பாலும் போராளியாக இருந்தவர்களாகவும் இருக்கலாம். அதனால் தனித்துச்செல்ல அவர்கள் அஞ்சியிருக்கலாம். அல்லது தம் பெற்றோர் சகோதரர்களைத் தேடித்தான் வந்துமிருக்கலாம். நிறையப்பேர் அப்படித்தான் உறவுகளைத்தேடி அலைந்தார்கள். பெற்றவர்களும் பிள்ளைகளைத் தேடிக் கொண்டு திரிகிறார்கள் அந்த மனிதச் சமுத்திரத்துள்.

''அம்மா அம்மா'' என்று உளறிக்கொண்டு நிலத்தில் புரளும் காலிழந்தவனுக்கு அருகில் இன்னொருவன் தன் ஒற்றைக்காலை குத்திக் கொண்டு குந்தியிருந்தான். அவர்களுக்கு அப்பால் இரண்டு பையன்கள் மயக்க நிலையில் கிடந்தார்கள். நான் எழுவதற்குத்தான் முயன்றுகொண்டிருந்தேன். ஆனால் முடியவே இல்லை.

ஒருதுளி தண்ணீரையாவது என்னால் கொடுக்க முடியும் என்றால் எவ்வளவு நன்றாக இருக்கும் என்று என் உள்மனம் அரற்றியது. நான் கூடத் தண்ணி தண்ணி என்று அரற்றிக் கொண்டு தான் கிடந்தேன் போலும். அது அருகிலிருந்த வயோதிபத் தம்பதியை பாதித்து இருக்கவேண்டும்.

''இந்தா ஒரு மிடறு குடியம்மா என்று தம்மிடமிருந்த குறைப் போத்தல் தண்ணீரைத் தந்தார்கள். அதில் நான் ஒரு மிடறு நீரை வாயில் நிறைத்துக்கொண்டு என்னிடமிருந்த சத்துக் குளிசை ஒன்றை போட்டு விழுங்கினேன். அது ஓரளவு பலவீனத்தை தடுக்கும் அல்லவா என்ற நப்பாசைதான். கையோடு ஐந்தாறு விட்டமின் 'சி' குளிசைகளையும் எடுத்துக்கொண்டு எழுந்தேன். தலை சுற்றியது. நிற்க முடியாமல் தடுமாறி மீண்டும் அமர்ந்துவிட்டேன்.

என்னைகட்டுப்படுத்தமுயற்சித்தேன். வெட்டைவெளி முழுவதிலும் காயப்போட்ட கருவாடுகள் போல மனிதர்கள் ஏன் படுத்துக்கிடக்கிறார்கள் என்பதை நான் அநுபவபூர்வமாக உணர்ந்தேன். சற்று நேரத்தின் பின் மிக மெதுவாய் எழுந்து நின்றேன். மெதுவாக காலடிவைத்து நகர்ந்து ஒருவாறு என்னைச் சமாளித்து நடந்தேன். வாடி வதங்கிப் போய் குந்திக் கொண்டிருந்த ஒரு தம்பியிடம் இரண்டு விட்டமின் 'சி' குளிசைகளைக் கொடுத்து, ''நாக்குக்கு கீழ் வைச்சிருங்க'' என்றும் சொன்னேன். சொன்னது தான் தாமதம், பறிக்காத குறையாக அதை வாங்கியவன் தன் வாய்க்குள் எறிந்து கொண்டான். தரையில் புரண்டு புரண்டு கிடக்கும் காலிழந்த தம்பியிடம் மெல்லக் குனிந்து, 'தம்பி வாயத்திற' என்று மெதுவாக கன்னத்தில் தட்டினேன்.

பசியோடு காத்திருந்த குருவிக்குஞ்சை போல, அவன் வாய் திறந்தான். அவனது நாக்கு மரக்கட்டை போல வறண்டு வெள்ளை பூத்திருந்தது. அதில் குளிசையை வைத்துவிட்டு உமியுங்கள் என்று எப்படி சொல்வது? ஈரலிப்பே இல்லாத நாவில் குளிசை எப்படி கரையும்? அரை மயக்கத்தில் கிடந்த மற்ற பையன்களின் நாக்குகளிலும் இவ்விரண்டு குளிசைகளை வைத்துவிட்டேன். குறைந்தது ஒரேயொரு குவளை தண்ணீராவது கொண்டுவந்து அவர்களின் நாவை நனைக்க விரும்பியது என் உள்ளம். ஆனால் என்னால் நிற்கக்கூட முடியவில்லை. கால்கள் வலுவிழந்தன. வெற்று நினைவும் வேதனை மனமுமாக மீண்டும் வந்து நிலத்தில் சரிந்தேன்.

எல்லாமே எனக்கு மங்கலாகத்தான் தெரிந்தன. அந்த பையன்களை நினைக்க அழுகை வந்தது. அப்படி என்னதான் பாவம் செய்தார்கள் இவர்கள்? மனிதர்களை துடிக்கப் பதைக்க வெட்டி கொன்றார்களா? இல்லையே. ஊர்களுக்குள் புகுந்து உறவுகளைப் பிடித்துக் கட்டி வைத்து சுட்டார்களா? இல்லையே. பெண்களை கடத்திச் சென்று சித்திரவதை செய்து அவர்களை [illegible] களா? இல்லவே இல்லையே. தமது இனத்தின் விடுதலைக்காக என்று ஆயுதம் தூக்கினார்கள். தம்முடன் மோத வந்த படையினருடன் மோதினார்கள். அதற்காக இவ்வளவு பெரிய தண்டனையா?

என் கண்களில் இருந்து சுடு நீர் வழிந்து கன்னங்களை நனைத்து அப்படியே உதடுகளையும் நனைத்தது. அந்த ஈரத்தை நாவால் தடவி நாவை ஈரலிப்பாக்கிக் கொண்டேன். என் பார்வையின் முன்னே குந்திக்கொண்டிருந்த போராளியின் வளைந்த முதுகு தெரிந்தது. அழுக்கான அவனது மேற்சட்டைக்கு மேலே முதுகு மெதுவாக ஏறியிறங்கிக் கொண்டிருந்தது.

திடீரென நினைவு வந்தவளாய் சொன்னேன், ''தம்பி சீனி இருக்குது தரட்டா?''

''தாங்களனக்கா'' என்றான்.

உடனே என் சிறிய பையில் வைத்திருந்த சீனிப்பையை பிரித்து கைநிறைய அள்ளிக் கொடுத்தேன். காலிழந்து கிடந்தவனின்வாயிலும்சீனியை போட்டுவிட்டேன். அவனைக் காய்ச்சல் எரித்துக் கொண்டிருந்தது என்பதை என்னால் புரிந்துகொள்ள முடிந்தது. அவன்பால் இரக்கம் மேலிட்டது.

இப்போது அவன் முகத்தை ஈரத்துணியால் துடைத்துவிட்டால் எவ்வளவு ஆறுதலாக இருக்கும் என்று வெறுமனே நினைத்துக்கொண்டு வேதனையுடன் வந்து குந்திக்கொண்டேன்.

காலத்தாலும் இந்த உலகத்தாலும் சபிக்கப்பட்ட மாந்தர்கள் நாங்கள் என்று எனக்குள்ளேயே என்னை ஆசுவாசப்படுத்திக் கொண்டேன். என்னிடம் இன்னும் சிறிதளவு சீனியும் சத்துக் குளிசைகளும் இருக்கின்றன. கடைசிப் பொழுதில் காப்பரணருகே கிடந்தது எடுத்துக் கொண்டு வந்தது எவ்வளவு நன்றாகப் போய்விட்டது.

எனது பார்வையைப் போலவே பொழுதும் கொஞ்சம் கொஞ்சமாக மங்கிக் கொண்டே போனது. வெயில் தாழவிட்டு எப்படியாவது தண்ணீர் தேடவேண்டும் என்ற எண்ணத்தை என்னால் ஈடேற்ற இயலவில்லை. மின் விளக்குகள் ஆங்காங்கே எரிந்து இருளை விரட்டின. எனினும் என்னால் இயங்க முடியவில்லை. வேறு வழி புரியாமல் படுத்துவிட்டேன். கடும் துக்கமாக இருந்தது. மனசுக்கு நெருக்கமான யாராவது அருகில் இருந்தால் எவ்வளவோ ஆறுதலாக இருக்குமே! என்னைப் போல் யாராவது தனித்துவிட்டவர்களாவது வந்து என்னோடு சேர்ந்து கொள்ள மாட்டார்களா என்று ஏக்கமாக இருந்தது.

நான் பிறருக்கு இடைஞ்சலாய் ஆகிவிட விருப்பமில்லை. நான் யாருடனும் சேர்ந்து இருக்கப்போய் படையினர் அவர்களிடம் ''இவள் யார்? உங்களுக்கு என்ன உறவு'' என விசாரித்தால் அது அவர்களுக்கு பிரச்சினைதானே. இருக்கின்ற கவலைக்கள் போதாதா? இன்னும் தேடிக்கொள்ள வேண்டுமா?

எல்லாவற்றையும் எண்ணித்தான் தனித்திருந்தேன். எனினும் அந்த ஆதரவற்ற தன்மை என்னைப் பயங்கரமாய் தாக்கியது. தானாய் வழிகின்ற கண்ணீரைத் துடைக்கக்கூட மறந்தவளாய் கிடந்தேன்.

என் தலைமாட்டில் திடீரென நெருக்கியடித்த கூட்டம் படுமோசமாய் கலகலத்தது. அவர்கள் ஏதோ திருவிழாவில் கலந்து கொண்டிருப்பவர்களைப் போல் அமர்க்களப்பட்டார்கள்.

''சரி சரி இந்த தண்ணிய இப்ப பாவியுங்க. மற்றதுகள கவனமா வையுங்க. பிறகு தண்ணி கிண்ணி எண்டு என்னை ஆக்கினப்படுத்தக் கூடாது. இப்பவே எல்லாரும் சாப்பிடுங்க. மிச்சமிருந்தா கவனமா கொண்டு வாங்க'' என்று கண்டிப்புடன் சொன்னது ஆண்குரல்.

(பயணம் தொடரும்)

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# வீடு கொளுத்தும் ராசாவும் கொள்ளி கொடுக்கும் சேவகர்களும்



சந்திரசேகர ஆஷாத்

பிரிவினைவாதப் போர் இடம் பெற்ற வடபகுதியை பெரும் எண்ணிக்கையில் தமிழர் வாழும் பிரதேசமாகக் கருத முடியாது. இலங்கையில் எவரும் நாட்டின் எந்தப் பகுதியிலும் வாழும் சுதந்திரத்தைப் பற்றியே நான் பேசுகிறேன்''

வட பகுதி தமிழ் மக்களின் பாரம்பரிய வாழிடம் என்ற உண்மையை மறுதலித்து இலங்கையின் பாதுகாப்புச் செயலர் கோத்தபாய ராஜபக்ஷ லண்டன் பி.பி.சிக்கு வழங்கிய பேட்டியின் போதே இவ்வாறு தெரிவித்திருந்தார்.

இவர் இப்படித் தெரிவித்திருப்பது அப்படியொன்றும் ஆச்சரியப்படக் கூடிய விடயமல்ல. அவரும் சரி இன்றைய ஆட்சியாளர்களும் சரி வடக்குக் கிழக்கு தமிழ் மக்களின் பாரம்பரிய வாழிடம் என்பதை மறுப்பதிலேயே தங்கள் இனவாத அரசியலின் அடிப்படையைக் கட்டியெழுப்பியுள்ளனர். தமிழ் மக்களின் வாழிட உரிமை மறுக்கப்படும் போதுதான் தவிர்க்க முடியாமல் தமிழ் மக்களுக்கு பிரிந்துபோக வேண்டிய ஒரு தேவை எழுகிறது என்பதை அவர்கள் புரிந்துகொண்ட போதிலும் குறுகிய அரசியல் நோக்கங்களுக்காக அதை மூடி மறைக்கப் பிரிவினைவாதம், பயங்கரவாதம் என்பன போன்ற பதங்களைச் சர்வதேசத்தின் முன் தூக்கிப் போட்டுத் தங்களை நியாயப்படுத்த முனைகின்றனர்.

அதேவேளையில், தன் ஒவ்வொரு அசைவையும் இனவெறியால் புடம் போட்டு வைத்திருக்கும் ஜாதிக ஹெல உறுமயவின் நாடாளுமன்ற உறுப்பினர் எல்லாவல்ல மெத்தானந்ததேரர் ''வீடெரிக்கும் ராசாவுக்குக் கொள்ளி கொடுக்கும் சேவகர்கள்'' போன்று பாதுகாப்புச் செயலரின் இந்தக் கருத்து இந்த நூற்றாண்டின் மிகச் சிறந்த கருத்து எனத் தெரிவித்துள்ளார். இவர் சிங்கள பௌத்த இனவாதிகளால் பெரும் வரலாற்று ஆய்வாளராகப் போற்றப்படுபவர் என்பது குறிப்பிடத்தக்கது.

அண்மையில் முனீஸ்வரம் கோயிலில் கோபுரம் அமைப்பதற்காக நிலத்தை அகழ்ந்தபோது அங்கு ஒரு சந்திர வட்டக்கல் காணப்பட்டதாம். அது காணப்பட்ட சிறிது நேரத்திலேயே அங்கு வந்த அடுத்த தொல்பொருள் திணைக்களத்தினர் உடனடியாகவே கோபுரம் அமைக்கும் பணியை நிறுத்துமாறு உத்தரவிட்டனர்.

சந்திரவட்டக்கல் கண்டுபிடிக்கப்பட்டும் சிறிது நேரத்துக்குள்ளேயே எப்படி தகவல் போய் அவ்வளவு விரைவாக தொல்பொருள் திணைக்களத்தினரால் வர முடிந்தது என அந்தப் பகுதி மக்கள் அதிசயப்பட்டுப் போய் நிற்கின்றனர். இது அண்மையில் சிலரால் இரவோடிரவாகப் புதைக்கப்பட்டிருக்கலாம் என்ற கருத்தும் அந்தப் பகுதி மக்களிடம் நிலவுகிறது.

எனினும் அங்கு விரைந்த மெத்தானந்ததேரர் அதைப் பார்வையிட்ட பின்பு சிலாபம் முனீஸ்வரம் ஆலயம் இருந்த இடத்தில் ஒரு பௌத்த விகாரை இருந்ததாகவும் அதை இடித்தே அங்கு இந்து ஆலயம் அமைக்கப் பட்டது எனக் கருத்து வெளியிட்டிருந்தார்.

ஞாயிறு காரம்

இவ ஏற்கனவே நாடாளுமன்றத்தில் திருக்கேதீஸ்வரம், திருக்கோணேஸ்வரம் ஆகிய சமய குரவர்களால் பாடல் பெற்ற தலங்களும் புத்த விகாரைகளை இடித்தே அதன் மேல் கட்டப்பட்டவை எனத் தெரிவித்திருந்தார்.

விஜயன் வந்து இறங்கிய போது இலங்கையில் கோணேஸ்வரம், கேதீஸ்வரம், முனீஸ்வரம் உட்பட ஐந்து ஈஸ்வரங்கள் ஐந்து முனைகளிலும் இருந்தன என பௌத்த சமய நூல்கள் கூறுவது ஏனோ தேரரின் ஆய்வுக்குள் அகப்படாமல் போய்விட்டது.

விஜயன் இங்கு வந்திறங்கிய அன்றுதான் புத்தர் ஞானம் பெற்றார் எனவும் பௌத்த நூல்கள்தான் கூறுகின்றன. புத்தர் ஞானம் பெறுமுன்பே எப்படி இந்த மூன்று இடங்களில் பௌத்த விகாரைகள் இருந்தன என்ற தேரரின் கண்டுபிடிப்புதான் புரியாத மர்மமாக உள்ளது.

இப்படியாக உண்மைகளை வாய்க்கு வந்தபடி திரிபுபடுத்தும் எல்லாவல மெத்தானந்த தேரருக்குப் பாதுகாப்புச் செயலரின் கருத்து இந்த நூற்றாண்டின் சிறந்த கருத்தாகப் படுவதில் அதிசயம் எதுவுமில்லை. [illegible] சிங்கள மேலாதிக்க [illegible]களில் அசிங்கப்பட்டுப் போயிருக்கும் இவர்களின் மூன்றாம் தர அரசியலுக்கு நிச்சயம் இவையெல்லாம் தீனிபோடும் விடயங்கள்தான்.

கோத்தபாய ராஜபக்ஷ தெற்கில் சிங்கள மக்களைப் போலவே தமிழ், முஸ்லிம் மக்கள் வாழ்கின்றனர். வடக்கில் சிங்கள மக்கள் வாழ்வதில் என்ன தவறு எனக் கேட்கிறார். அவர் இலங்கையின் எந்தப் பகுதியிலும் எவரும் வாழலாம் என்பதையே தான் வலியுறுத்துவதாகவும் கூறுகிறார்.

இது பாதுகாப்புச் செயலர் மட்டுமல்ல ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ உட்படப் பலராலும் தெரிவிக்கப்படும் கருத்துத்தான்.

மேலோட்டமாகப் பார்க்கும் போது இந்தக் கருத்தில் தவறுஎதுவும்இருக்க முடியாது போன்றே தோன்றும். ஆனால் ஒரு மனிதன் ஒரு தேவையின் அடிப்படையில் போய்க் குடியிருப்பதற்கும் ஒரு கூட்டமாக மனிதர்கள் ஒரு பிரதேசத்தை ஆக்கிரமிப்பதற்கும் நிறையவே வேறுபாடு உண்டு. முதலாவது தற்காலிகமாகக் குடியிருப்பது. அடுத்தது நிரந்தரமாக ஆக்கிரமிப்பது. அப்படியின்றி சிறுபான்மை இனத்தைச் சேர்ந்தவர்கள் பெரும்பான்மை இனத்தினர் மத்தியில் நிரந்தரமாகக் குடியிருக்கும்போது அவர்கள் பெரும்பான்மைக்குள் கரைந்துபோய் விடுகின்றனர். இன்று நீர்கொழும்பில் வாழும் பெரும்பான்மையான தமிழர்களுக்கு தமிழ் எழுதவோ வாசிக்கவோ தெரியாது. கதைப்பதும் சிங்கள மக்களைப் போல்தான் கொச்சையாகவே தமிழைப் பேசுகின்றனர். புத்தளத்தின் சில பகுதிகளிலும் இதே நிலைமைதான்.

சிங்கள மக்கள் திட்டமிட்ட குடியேற்றங்கள் மூலமோ அல்லது தாங்களாகவோ தமிழ்ப் பகுதிகளில் குடியேறும்போது ஒரு பெருங்கூட்டமாகவே குடியேறுகின்றனர். அரசும் வீதிகள், பாடசாலைகள் என்பனவற்றை அமைத்துக் கொடுக்கிறது. விகாரைகளும் அமைக்கப்படுகின்றன. அவர்கள் சிங்களவர்களாகவே வாழ் கின்றனர். அதுமட்டுமன்றி அந்தப் பகுதி இயல்பாகவே சிங்களமயப்பட்டு விடுகிறது.

இப்படியாக கல்லோயா, கந்தளாய், சேருவில, பதவிசிறிபுர, மாமடு, மடுகத்தை, மணலாறு, கொக்கிளாய், பாவக்குளம், கஜரவத்தை போன்ற ஏராளமான சிங்களக் குடியேற்றங்கள் வடக்கு, கிழக்கு எங்கும் உண்டு. ஆனால் தென்னிலங்கையில் ஒரு தமிழ்க் குடியேற்றம் கூடக் கிடையாது. ஆனால் அரச ஊழியர்களாகவும், வர்த்தகர்களாகவும் வேறு தேவைகள் நிமித்தமும் தென்பகுதியில் தமிழ் மக்கள் வாழ்கின்றனர். அவர்கள் பெரும்பான்மையினர் மத்தியில் அவர்களுடன் கலந்தே வாழ்கின்றனர். எனினும் காலத்துக்குக் காலம் இனக் கலவரங்களில் அவர்கள் கொல்லப்படுவதும் விரட்டப்படுவதும் உண்டு.

தேவைகள் காரணமாகக் குடியிருப்பதற்கும் ஆக்கிரமிப்புக்குமிடையே உள்ள பெரும் முரண்பாட்டை மறைத்து பாதுகாப்புச் செயலர் ஒரு மயக்கத்தை ஏற்படுத்துகிறார்.

அதேவேளையில் பாதுகாப்புச் செயலர் இன்னொரு கேள்விக்குப் பதிலளிக்கும்போது போருக்கு முன்பும் போருக்குப் பின்பும் தமிழ், முஸ்லிம் மக்கள் தெற்கில் பணிபுரிந்து வருகின்றனர் எனவும் அதேபோன்று வடக்கில் சிங்களவர் பணிபுரிவதில் என்ன தவறு என அவர் வினவியுள்ளார். மேலோட்டமாகப் பார்க்கும்போது இதுவும் ஒரு நியாயமான கருத்தாகவே தென்படும்.

ஆனால் இதற்குள் உள்ள ஆழம்தான் விபரீதமானது. கொழும்பு நாட்டின் தலைநகரம். அரசின் அதி உயர் நிர்வாகப் பீடங்கள் அங்குதான் உள்ளன. அங்கு அதிகாரிகள் மட்டத்திலும் சிரேஷ்ட பணியாளர்களும் வேலை செய்வது இயல்பு. அனுபவசாலிகள், திறமைசாலிகளின் தேவை அங்கு உண்டு. தேவை கருதி அங்கு எல்லா இனத்தவரும் பணிபுரிகின்றனர். அங்குகூடத் தமிழர்கள் என்ற காரணத்துக்காக முறைப்படியான பதவி உயர்வுகள் மறுக்கப்படுவதுண்டு.

ஆனால் மாகாணங்களில் நிலைமை வேறு. அங்கு அந்த மாகாணத்தில் வாழும் மக்களை நிர்வகிப்பதும் அந்த மக்களின் தேவைகளைப் புரிந்துகொண்டு நிறைவேற்றுவதும்தான் அங்குள்ள அதிகாரிகளின் கடமை. அந்த நிலையில் அங்கு பணிபுரியும் அதிகாரிகள் அந்த மக்களின் மொழி, கலாசாரம், பொருளாதாரம் என்பவற்றை நன்றாகப் புரிந்து அதற்கு மதிப்பளித்து தம் கடமைகளைச் செய்பவர்களாக இருக்க வேண்டும். ஆனால் வடக்கு, கிழக்கின் ஆளுநர்கள் இருவருமே சிங்கள இராணுவ அதிகாரிகள். அவர்கள் சிவில் நிர்வாகத்தைத் தங்கள் கையில் எடுத்துக் கொண்டு இராணுவ சர்வாதிகார ஆட்சியையே நடத்துகின்றனர். பதவிகள் வழங்கல், இடமாற்றங்கள் என்பனகூட தகுதி, தேவை என்பன எதுவுமே கணக்கில் எடுக்கப்படாமலே மேற்கொள்ளப்படுகின்றன. மக்களின் வாழிட உரிமை, கலாசாரம் என்பன கூட மறுக்கப்படுகின்றன. இவ்வாறே மன்னார், திருமலை, வவுனியா ஆகிய மாவட்டங்களில் சிங்கள அதிகாரிகள் அரச அதிபர்களாகவும் நியமிக்கப்பட்டுள்ளனர்.

அரசுக்கும் மக்களுக்குமான நேரடித் தொடர்பின் பாலம் அரச அதிபர்களே! எமது மக்களின் தேவைகளையும் உணர்வுகளையும் புரிந்து கொள்ள முடியாதவர்களால் மக்கள் மீது அதிகாரத்தைச் செலுத்த முடியுமேயொழிய சேவை செய்ய முடியாது.

இந்த விடயத்திலும் கொள்ளி கொடுக்கும் சேவகனாக விசுவாசமாகச் செயற்பட்டிருக்கிறார் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா.

அவர் லண்டன் பி.பி.சிக்கு வழங்கிய பேட்டியில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்திலிருந்து வெளிவரும் மருத்துவர்கள் யாழ்ப்பாணத்தில் பணிபுரிய விரும்புவதில்லை எனவும் அதனாலேயே சிங்கள வைத்தியர்கள் இங்கு பணிபுரிய வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது எனவும் தெரிவித்துள்ளார். மேலிடம் பணிக்கும் எந்த இடத்திலும் அரச பணியாளர்கள் வேலை செய்ய வேண்டும். அப்படியான நிலையில் தமிழ் வைத்தியர்கள் மட்டும் யாழ்ப்பாணத்தில் பணிபுரிய எப்படி மறுக்க முடியும்? அது அமைச்சர் தூக்கிக் கொடுக்கும் கொள்ளிக்குத்தான் வெளிச்சம்.

அதுமட்டுமன்றி வடக்கில் புத்தர் சிலைகள் இராணுவ முகாம்களில் மட்டும்தான் உள்ளன எனவும் படை முகாம்கள் அகற்றப்படும்போது அவையும் அகற்றப்பட்டு விடும் எனவும் அவர் தெரிவித்திருந்தார். ஒரு இனமத ஒடுக்குமுறை நடவடிக்கையை இப்படியுமா பூசி மெழுக வேண்டும்?

ஆனால் தமிழ் மக்கள் குருடர்களல்லர். அப்படியிருந்த போதிலும் இலங்கை அரசின் அப்பட்டமான தமிழ் மக்கள் மீதான ஒடுக்குமுறை பாதுகாப்புச் செயலர் மூலம் வெளிப்படுத்தப்பட்டுள்ளது. அதற்கு எல்லாவல்ல மெத்தானந்ததேரருக்கு எவ்விதத்திலும் குறைத்து விடாதபடி கொள்ளி எடுத்துக் கொடுத்துள்ளார் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா. வீடெரிக்கும் ராசாவுக்கு கொள்ளி எடுத்துக் கொடுக்கும் அற்புதமான சேவகர்கள் இவர்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உங்களுக்கு இந்த வாரம் எப்படி........

தருபவர் - வித்தியா

## 3.06.2012 முதல் 09.06.2012 வரை

### மேடம்



தொட்டது துலங்கும். தோல்விகள் நெருங்காது. எதையும் ஆற அமர செய்தால் மனக் கவலை ஏற்படாது. பலர் பாராட்டும் அளவுக்கு நல்ல காரியங்கள் செய்வீர்கள். சிலர் கௌரவமான பதவி ஒன்றுக்குப் பரிந்துரை செய்யப் படுவார்கள். உடல்நிலையில் ஆரோக்கியம் கூடியபோதும், சில செலவுகள் தவிர்க்க முடியாததாக இருக்கும். பண நிலையில் கையிருப்புக்குத் தகுந்த திட்டங்களும், செலவுகளும் நல்லது. பெற்றோரின் கருத்துக்கள் அதிகம் யோசிக்க வைக்கும். தொழில் வகையில், புதிய ஒப்பந்தங்களில் கவனம் செலுத்துவதைவிட, நிர்வாக சீர்திருத்தங்களை முதலில் செய்து கொள்வது நல்லது. வியாபாரத்தில் விற்பனை கூடிய போதும், போட்டிகள் உங்களை அதிகம் யோசிக்க வைக்கும். மேலதிகாரியின் அனுசரணையான பேச்சு உங்களுக்கு மிகவும் ஆதரவாக அமையும்.

### இடபம்



பதற்றத்தோடு செயற்பட வேண்டியிருக்கும். அன்றாட செயற்பாடுகளில் கூடுதல் கவனம் செலுத்துங்கள். ஏற்றுக்கொண்ட பொறுப்புக்களைச் சரிவரச் செய்து முடிக்க முயற்சியுங்கள். உடல் நிலையில் அவ்வப்போது அசௌகரியங்கள் ஏற்படும். பண நிலையில் எதிர்பார்த்த வரவுகள் ஏமாற்றம் தந்தபோதும் கையிருப்பைக் கொண்டு சமாளிப்பீர்கள். கடனுக்காகக் கொடுக்கப்படும் தவணைகள் தவறாமல் பார்த்துக் கொள்ளுங்கள். பெற்றோரால் மனக் கஷ்டங்கள் ஏற்பட்டபோதும் பெரிதுபடுத்திக் கொள்ளாதீர்கள். உடன் பிறப்புகளால் தேவையற்ற தொந்தரவுகள் ஏற்பட்ட போதும் தகுந்த முறையில் சமாளிப்பீர்கள். தொழில் வகையில் எடுத்துக் கொண்ட ஒப்பந்தங்களை உரிய நேரத்தில் செய்து முடிப்பீர்கள். வியாபாரம் சீராக நடந்தபோதும், சில குழப்பங்கள் தவிர்க்க முடியாததாக இருக்கும்.

### மிதுனம்



விட்டுப்போன நீண்டகால உறவு ஒன்று மீண்டும் இணையும். வீட்டிலோ அல்லது வெளியிடங்களிலோ பிரச்சினைகள் என்று எதுவும் இருக்காது. பண நிலையில் சற்று விழிப்போடு செயற்படுதல் கடன், மற்றும் செலவுகளைத் தவிர்த்துக் கொள்ள உதவும். பெற்றோரால் சிறு சிறு சிரமங்கள் ஏற்பட்டபோதும் பெரிதுபடுத்திக் கொள்ளாதீர்கள். வியாபாரத்தில் ஏற்ற இறக்கமான சூழ்நிலை என்றபோதும் பொருளின் தரத்தில் கவனம் இருக்கட்டும். உத்தியோகத்தர்களுக்கு, மேலதிகாரிகளின் கருணைப் பார்வை கிடைக்கும். தக்க முறையில் பயன்படுத்திக் கொள்ளுங்கள். விவசாயிகளுக்கு விவசாய முறைகளை நவீனப்படுத்த முயற்சி செய்யுங்கள்.எதிலும் விழிப்புடன் செயற்படுவது நலம். உத்தியோகத்தர்களுக்கு நன்மைகள் கூடுதலாகும்.

### கடகம்



நல்லவர்களுடைய நட்பினால் மனம் நிம்மதியடையும். நான்கு பேருக்கு நன்மை செய்து புகழ்பெறுவீர்கள். குடும்ப உறுப்பினர்களின் பொறுப்பற்ற செயற்பாடுகளைப் பெரிது படுத்திக் கொள்ளாதீர்கள். காலம் செல்லச் செல்ல சரியாகும். பண நிலையில் எதிர் பார்த்த வரவுகள் இருந்தபோதும், எதிர்பாராத செலவுகளால் பற்றாக்குறை ஏற்படும். கடன்களை வாங்கும்போதோ அல்லது கொடுக்கும்போதோ தெளிவான வரையறை அவசியம். பெற்றோரால் உதவிகள் கிடைத்தபோதும் பயன்படுத்திக்கொள்ள முடியாத சூழ் நிலையே. உடன்பிறப்புகளின் வார்த்தைகள் மற்றும் கருத்துக்கள் தங்களை வழிநடத்திச் செல்லும். தொழில் வகையில், நிர்வாகத்தில் எந்த ஒரு மாற்றத்தையும், தகுந்த நபரின் ஆலோசனையின்பேரில் செய்து கொள்ளுதல் நல்லது. தொழிலாளர்களின் நலன்களையும் கவனத்தில் கொள்ளுங்கள்.

### சிங்கம்



உற்சாகம் குறையாது. பணிகளைக் குறைவின்றிச் செய்யலாம். எந்த ஒரு விடயத்திலும், பிறர் குற்றம், குறை சொல்லும்படி வைத்துக் கொள்ள மாட்டீர்கள். நண்பர்கள் பல வழிகளில் முன் நின்று உதவுவார்கள். முகவர் தொழிலில் ஈடுபட்டுள்ளவர்களுக்கு, புதிய ஒப்பந்தங்கள் அதிகமான லாபத்துக்கு வழிவகுக்கும். உடல்நிலையில் சூடு சம்பந்தப்பட்ட தொந்தரவுகள் ஏற்பட்டபோதிலும், அதிகமான செலவுகளுக்கு வாய்ப்பில்லை. குடும்பத்தில், சிற்சில பிரச்சினைகள் நிலவியபோதும் பெரிதுபடுத்திக் கொள்ளாதீர்கள். தொழில் வகையில், எந்த ஒரு செயல்பாடுகளிலும் மிகுந்த கவனம் அவசியம். உத்தியோகத்தர்களுக்கு சக ஊழியர்களிடம் உங்களின் அணுகுமுறை பாதிப்பில்லாத வகையில் அமைத்துக் கொள்ளுங்கள்.

### கன்னி



நீங்கள் எடுத்துக்கொள்ளும் அல்லது எதிர்கொள்ளும் விவகாரங்களுக்கு, உங்களுடைய பிரார்த்தனைகளும், பெரியவர்களின் ஆசிர்வாதமும் பயன் உள்ளதாக அமையும். தொழிலை வளர்ச்சி செய்ய முக்கியமானவர்கள் முன்வருவார்கள், பயன்படுத்திக் கொள்ளுங்கள். பண நிலையில் ஓரளவுக்கு சிக்கன நடவடிக்கைகளால் பற்றாக்குறை இன்றி கொண்டு செல்வீர்கள். கடன் நிலவரங்களில் உங்கள் கவனம் இருக்கட்டும். குடும்பத்தில் விருந்தினர்களின் வருகை அதிகம் இருக்கும். சுப நிகழ்ச்சிக்கான பேச்சுகள் மற்றும் தெய்வீக வழிபாடுகள் என்று பரபரப்புக்குக் குறைவிருக்காது. தொழில் வகையில் சில மாற்றங்கள், சீர்திருத்தங்கள் உடனடி தேவையானதாக இருக்கலாம். வியாபாரத்தில் சந்தையில் நிலவும் மாற்றங்கள் உங்கள் விற்பனையை பாதிக்க வாய்ப்பு உண்டு. ஒரு சில வாரங்களுக்கு ஒத்தி வைத்தல் நல்லது.

### துலாம்



உற்சாகத்தோடு காணப்படுவீர்கள். சிற்சில விடயங்களில் சோதனை ஏற்பட்ட போதும், அதையும் எதிர்கொள்ளும் ஆற்றல் உங்களுக்கு உண்டு. உடல் நிலையில் பழைய தொந்தரவுகளில் இருந்தும் பூரண குணமடைவீர்கள். பண நிலையில் தேவைக்கு ஏற்ப வரவுகளை ஏற்படுத்திக் கொள்வீர்கள். கொடுக்கல், வாங்கல் விவகாரங்களில், சற்று விழிப்போடு செயற்படுதல் நல்லது. குடும்பத்தில் புதிய நபர்களின் வருகை, கூடுதல் சந்தோஷத்தை ஏற்படுத்தும். பெற்றோரால் மருத்துவச் செலவுகள் ஏற்படும். உடன்பிறப்புகளில், சில செயற்பாடுகள் அதிகம் யோசிக்க வைக்கும். தொழில் வகையில் எடுத்துக்கொண்ட பணிகளை, சற்று போராட்டத்துடன் முடிக்க வேண்டியிருக்கும். வியாபாரத்தில், சந்தை நிலவரத்துக்கேற்ப மாற்றத்தை தாங்களும் செய்து கொள்ளுதல் நல்லது.

### விருச்சிகம்



பணிகள் அடுத்தடுத்து இருந்தபோதும் மனநிறைவு அதிகரிக்கும். எப்பொழுதோ எடுத்த முயற்சிக்கு, இப்பொழுது பலன் கிடைக்கும். பணம் அதிகம் செலவு செய்யாமலே, சில காரியங்களைச்செய்து கொள்ள முடியும். பண நிலையில் எதிர்பார்த்த வரவுகள் தாமதமாகும். கொடுக்கல், வாங்கல் நிலவரங்களில் நாணயத்தைக் காப்பாற்ற, சிறிது போராட வேண்டியிருக்கும். குடும்பத்தில் அமைதியற்ற சூழ்நிலை என்றபோதும், பெரிய பாதிப்பு என்றும் எதுவும் இல்லை. தொழில் வகையில், சந்தை நிலவரங்கள் சற்று யோசிக்க வைத்த போதிலும், பழைய கடன்மிகுதிகளைப் பெறுவதில் தீவிர கவனம் தேவை. வியாபாரத்தில் எதிர் பார்த்த விற்பனை இருந்தபோதும், விரிவாக்கங்களை சற்று யோசித்து செய்யவும் உத்தியோகத்தர்கள் சிலர் தவறுகளுக்கு, பதில் சொல்ல வேண்டிய சூழ்நிலை ஏற்படும்.

### தனுசு



ஒவ்வொரு நாளும் புதுப்புது அனுபவம் ஏற்படும். எண்ணங்கள் உயர்வானதாக இருக்கும். இனிய நண்பர்களால் சந்தோஷம் அதிகரிக்கும். பெரிய மனிதர்களின் நெருங்கிய தொடர்பு மகிழ்வையும், பெருமையையும் தரும். உடல்நிலையில் ஆரோக்கியம் கூடியபோதும், சில செலவுகள் தவிர்க்க முடியாததாக இருக்கும். பண நிலையில் கையிருப்புக்குத் தகுந்த திட்டங்களும், செலவுகளும் நல்லது. கடன் இருந்தபோதும் தொந்தரவு தராது. குடும்பத்தில் வழக்கமான உற்சாகத்துக்கும், சந்தோஷத்திற்கும் குறைவிருக்காது. பெற்றோரின் கருத்துக்கள் அதிகம் யோசிக்க வைக்கும். உடன்பிறப்புகளால் எதிர் பார்த்த உதவிகள் கிடைக்கப்பெறுவீர்கள். தொழில் வகையில், புதிய ஒப்பந்தங்களில் கவனம் செலுத்துவதைவிட, நிர்வாக சீர்திருத்தங்களை முதலில் செய்து கொள்வது நல்லது. உத்தியோகத்தர்களுக்கு, மேலதிகாரியின் அனுசரணையான பேச்சு, மிகவும் ஆதரவாக அமையும்.

### மகரம்



பரபரப்பு இல்லாமல் பணி செய்யலாம். அலைச்சல் குறையும். வார்த்தைகளைச் சிதற விட வேண்டாம். புதிய முயற்சிகள் மற்றும் தொடர்புகளில் கூடுதல் விழிப்போடு செயற்படுங்கள். பண நிலையில் பற்றாக்குறை ஏற்படும். சற்று கவனமுடன் செயற்படுதல் நல்லது. குடும்பத்தில், சில நபர்களால் சச்சரவுகள் உண்டு என்ற போதும், சந்தோஷத்துக்குக் குறைவிருக்காது. பெற்றோரால் எதிர்பார்க்கும் உதவிகள் தாமதமாகும். உடன்பிறப்புகளின் நல் ஆலோசனையைத் தவிர்த்துக் கொள்ளாதீர்கள். வியாபாரத்தில் லாபங்கள் கூடும். உத்தியோகத்தர்களுக்கு எதிர்பார்த்த கடன் உதவி கிடைக்கும்.

### கும்பம்



செல்வாக்கு அதிகரிக்கும். விடயங்களைத் திட்டம்போட்டு செயற்பட்டால் அது நிறைவேறும். சில சமயம் உங்களின், பிடிவாதங்களால் அருமையான வாய்ப்புகளை இழந்து விடலாம் கவனம் தேவை. உடல்நிலையில் சிறுசிறு தொந்தரவுகள் ஏற்பட் டாலும், அதிகமான செலவுகளுக்கு வாய்ப்பில்லை. குடும்பத்தில் சில நிகழ்ச்சிகள் மனதைப் பாதித்தபோதும், பெரிதுபடுத்திக் கொள்ளாதீர்கள். பெற்றோரால் மனநிறைவும், பண உதவியும் கிடைக்கப்பெறும். உடன்பிறப்புகளால் தேவையற்ற கவலைகள் ஏற்படும். தொழில் வகையில், எந்த ஒரு முயற்சியும் அல்லது செயற்பாடுகளையும் தக்க நபர்களின் ஆலோசனைக்குப் பின் செயற்படுத்துதல் நல்லது. உத்தியோகத்தர்கள் பொறுப்புணர்ந்து செயற்பட்டால் சுமைகளைக் குறைக்கலாம்.

### மீனம்



ஒவ்வொரு நாளும் நல்லபடியாகவே விடியும். மற்றவர்கள் மனம் புண்படக்கூடாதே என்பதற்காக, பெருந்தன்மையோடு விட்டுக் கொடுப்பீர்கள். சிலநேரம் பணத்தையும் கொடுத்து உதவுவீர்கள். அப்படியிருந்தும் சின்ன, சின்ன குறைகள் இருக்கத்தான் செய்யும். உயர் கல்விக்கான முயற்சிகள் வெற்றி பெறும். உடல்நிலையில் கவனம் தேவை. ஆனால் அன்றாட நடவடிக்கைகளில் பாதிப்பு இருக்காது. பணம் ஏதேனும் ஒரு வகையில் கிடைத்துக் கொண்டு இருக்கும். தேவைகள் பூர்த்தியாகும். பெற்றோரால் தக்க சமயத்தில் உதவிகள் கிடைக்கப்பெறும். தொழில் வகையில், புதிய முயற்சிகள் மேற்கொள்வீர்கள். வியாபாரத்தில் விற்பனை கூடியபோதும், வாடிக்கையாளர்களின் நலனையும் கருத்தில் கொள்ளுங்கள். உத்தியோகத்தர்கள் மேலதிகாரிகளின் கோபத்துக்கு ஆளாகாமல் நடந்து கொள்ளுங்கள்.

# பாவங்களைக் கழுவுதல்

சூரியகாந்தி முதலாம் பக்கத் தொடர்ச்சி)

எந்த விதியை வேண்டுமானாலும் மீறலாம். உணவு வராது. மருந்துகள் தடுக்கப்படும். தொடர்பாடல் பாதிப்புறும். அடைக்கப்பட்ட பகுதிக்குள் அரங்கேறும் அவலங்கள் வெளியே தெரியவர வழி யில்லை. எனவே தான் தொண்டு நிறுவனத்தினர் புறப்படுவதற்காக வாகனங்களில் ஏறியபோது, வீதிக்கு குறுக்கே படுத்தும் போராட முனைந்தனர் மக்கள். துண்டுப் பிரசுரங்களில் அந்த நிறுவனங்கள் சமாதான காலத்தில் வெளியிட்டிருந்த மகா வாக்கியங்களை, நிறுவன அதிகாரிகளுக்கு வாசித்துக்காட்டிவிட்டு, இப்ப நாங்கள் செத்துக்கொண்டிருக்கிறம். எங்களை இந்த நிலைமையில் விட்டுட்டுப் போறதுதான் உங்கட மனிதாபிமானமா? என்று ஆற்றாமையோடும், அழுகையோடும் கேள்வி யெழுப்பினர்.

ஆனால் அந்தக் கதறல்கள் யார் காதிலும் விழவில்லை. தமது கொள்கைகளை காற்றில் பறக்கவிட்டபடி, துயரேந்திகளின் கண்ணீரை மிதித்தபடி கடைசியில் போயே விட்டார்கள் அந்த மனிதாபிமான மீட்பர்கள்.

அதன் பின்னர் படைகளுக்கு முழுச்சுதந்திரம். எல்லா விதிகளும் மீறப்பட்டன. நெரிக்கப்பட்ட நிலத்தின் குரல்வளையில் இருந்து எழுந்த முனகல் எவருக்கும் கேளாதபடி, இரத்தவேட்டை கச்சிதமாக நடந்து முடிந்தது. முள்ளி வாய்க்கால் ஊழி எல்லோரும் பார்த்திருக்க நிகழ்ந்தது.

இப்போது திடீரென ஞானோதயம் பெற்ற ஐ.நா. செயலர் பான்கீ-மூன் , இறுதிப் போர் நடைபெற்ற காலத்தில் ஐ.நா. அமைப்புகளின் செயற்பாடுகள் பற்றி அவசரமாக ஒரு அறிக்கை சமர்ப்பிக்குமாறு கேட்டுள்ளார். போர் நடந்தபோதும் இவர் தான் ஐ.நா. செயலர். எனவே அந்த அமைப்புகள் மக்களுக்கான மனிதாபிமான நடவடிக்கையைக் உதறிவிட்டு, தம்மைக் காப்பதற்காக ஐ.நா. தொண்டு நிறுவனங்கள் வன்னியை விட்டே ஓடியபோது, அந்த முடிவு நிச்சயமாக பான்கீ-மூனுக்கும் தெரியப்படுத்தப்பட்டிருக்கும்.

அநேகமாக அவரின் அனுமதி பெற்ற பின்னரே இந்த முடிவு எடுக்கப்பட்டிருக்கும். அவ்வாறான நிலையில் பான்கீ-மூன் தன் மீது எந்தக் கறையும் இல்லை என்று காட்டத்தான் இப்படி ஒரு விசாரணை அறிக்கையை தயாரிக்க முனைகிறாரோ? என்றும் ஐயம் எழுகிறது. எந்த அறிக்கையும், எந்த விசாரணையும் பாவங்களைக் கழுவுவதற்கோ, முள்ளி வாய்க்கால் பிரளயத்தில் புதையுண்டு போனோரை உயிர்த்தெழ வைக்கவோ உதவப் போவதில்லை.ஆனாலும் எஞ்சியுள்ள மக்களுக்கு சின்னதொரு ஆறுதலைத் தரலாம். அவ்வளவே. ✱

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நல்லிணக்கம் இல்லாத ஆணைக்குழு அறிக்கை





அதிரன்

இலங்கையில் இன நல்லிணக்கம் என்ற வசனம் இப்போது அடிக்கடி பேசப்பட்டு வருகிறது. அதாவது இலங்கையின் வாழும் எல்லா இனங்களுக்கும் இடையே ஒரு சுமுகமான - அன்னியோன்யமான உறவு இருக்க வேண்டும் என்பதையே இந்த இன நல்லிணக்கம் குறிக்கிறது. இலங்கையில் உள்ள இனங்களுக்கிடையே இன நல்லிணக்கத்தை ஏற்படுத்துமாறு உலக நாடுகளும் அடிக்கடி இலங்கையை வற்புறுத்தி வருவதால் இந்த இன நல்லிணக்கம் என்ற சொல் இப்போது ஒரு பேசுபொருளாக மாறியுள்ளது.

ஆயினும் இந்த இன நல்லிணக்கம் குறித்து அரசின் மூத்த அமைச்சர்களில் ஒருவரான நிமால் சிறிபால டி சில்வா நேற்று முன்தினம் வெளியிட்ட கருத்து பலரையும் பெரு வியப்பில் ஆழ்த்தியுள்ளதுடன் அரசின் மீது கடும் சினம் கொள்ளவும் வைத்துள்ளது.

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவினால் நியமிக்கப்பட்ட கற்றுக் கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவின் அறிக்கை குறித்து அமைச்சர் நிமால் சிறிபால டி சில்வா கருத்து ஒன்றை வெளியிட்டுள்ளார். நேற்றுமுன்தினம் கொழும்பு நீர்ப்பாசனத் திணைக்களத்தில் நடைபெற்ற நிகழ்வு ஒன்றில் அமைச்சர் பிரதம அதிதியாகக் கலந்துகொண்டார். அதில் உரையாற்றிய அவர், ''இனங்களுக்கு இடையிலான தேசிய நல்லிணக்கம் குறித்துக் கற்றுக் கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவின் அறிக்கையில் எதுவுமே குறிப்பிடப்படவில்லை. அந்த அறிக்கையின் பக்கங்களில் இது பற்றி எதுவும் காணப்படவில்லை. இந்நிலையில் சிலர் ஆணைக்குழுவின் அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள இன நல்லிணக்கத்தை செயற்படுத்துமாறு கோருகின்றமை வேடிக்கையானது'' என்று கூறியிருக்கிறார். அதுமட்டமல்ல அறிக்கையைத் தான் நன்கு படித்துப் பார்த்ததாகவும் அதில் நல்லிணக்கம் குறித்து எந்தவொரு இடத்திலும் குறிப்பிடப்படவில்லை எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

மூத்த அமைச்சரான நிமால் சிறிபால டி சில்வாவின் இந்தக் கூற்றும் உண்மையில் வேடிக்கையானதுதான். ஜனாதிபதியினால் நியமிக்கப்பட்ட இந்த ஆணைக்குழுவின் பெயரே கற்றுக் கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழு என்பதுதான். இப்படி இருக்க அந்த அறிக்கையில் நல்லிணக்கம் பற்றி எதுவுமே இல்லை என அமைச்சர் கூறுவது ஒரு கண்மூடித்தனமான கருத்து என்றே கொள்ள வேண்டும். இலங்கை அரசில் அங்கம் வகிக்கும் ஒரு முதிர்ந்த - பொறுப்பு வாய்ந்த அமைச்சரும், அமைச்சரவையின் பேச்சாளருமான நிமால் சிறிபால டி சில்வா ஆணைக்குழு அறிக்கை குறித்து இப்போது இப்படி ஒரு விடயத்தை சுட்டிக்காட்டியுள்ளமை அனைவரையும் சிந்திக்க வைக்கிறது.

இலங்கையில் இனங்களுக்கிடையே நல்லிணக்கத்தை ஏற்படுத்தி அதன் மூலம் நாட்டில் நிரந்தர அரசியல் தீர்வு ஒன்றை எட்டுவதற்கான முன் முயற்சிகளை இலங்கை அரசு மேற்கொள்ள வேண்டும் என மனித உரிமை அமைப்புக்களும் உலக நாடுகளும் அடிக்கடி குரலெழுப்பி வருகின்றன. நாட்டில் தலைதூக்கியுள்ள மனித உரிமை மீறல்கள், அடக்குமுறைகள், பழிவாங்கல்கள் ஆகியவற்றுக்கு இனங்களுக்கிடையே நல்லிணக்கம் இல்லாமையே முக்கிய காரணம் என்று சுட்டிக் காட்டப்பட்டிருக்கிறது. இனங்களுக்கிடையிலான நல்லிணக்கம் உருவாக்கப்பட்டால் இவ்வாறான பிரச்சினைகள் ஏற்படாமல் தவிர்க்கப்படும் எனவும் தெளிவுபடுத்தப்பட்டிருக்கிறது. இதனடிப்படையில்தான் இந்த இன நல்லிணக்கம் குறித்து இப்போது அடிக்கடி பேச்சு எழுகிறது.

இறுதி யுத்தத்தில் நிகழ்ந்த உரிமை மீறல்கள் தொடர்பான போர்க் குற்ற விசாரணையை மேற்கொள்வதுடன் அதற்குரிய பொறுப்புக் கூறுதலையும் இலங்கை அரசு செய்ய வேண்டும் என்ற கோரிக்கைகள் இப்போது வலுப்பெற்று வருகின்றன. இந்த இரு விடயங்களுடன் இனங்களுக்கிடையிலான நல்லிணக்கத்தையும் இலங்கை ஏற்படுத்த வேண்டும் என்ற வற்புறுத்தலும் தொடர்ந்துகொண்டிருக்கிறது. இந்த மூன்று விடயங்களும் இப்போது இலங்கை அரசுக்குப் பெரும் தலையிடியாக மாறியிருக்கிறன.

ஐ.நா. மனித உரிமைகள் சபையின் இலங்கை மீது அமெரிக்கா கொண்டு வந்துள்ள தீர்மானத்திலும் இந்த இன நல்லிணக்கம் பற்றி வலியுறுத்தப்பட்டிருக்கிறது. அத்துடன் ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளர் நவநீதம்பிள்ளையும் அடிக்கடி இலங்கை அரசுக்கு இன நல்லிணக்கத்தை ஏற்படுத்த வேண்டும் என்ற விடயத்தை ஞாபகப்படுத்தி வருகிறார். போதாக்குறைக்கு அமெரிக்கா, பிரிட்டன் உட்பட மேற்குலக நாடுகளும் இலங்கையின் இன நல்லிணக்கம் குறித்து அதிக கரிசனை காட்டிச் செயற்பட்டு வருவதுடன் அதற்கான அழுத்தங்களையும் மேற்கொண்டு வருகின்றன. கொழும்பில் உள்ள பிரிட்டன் தூதரகத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற பிரிட்டன் மகாராணி எலிசபெத்தின் வைர விழாவை ஒட்டிய நிகழ்வில் உரையாற்றிய இலங்கைக்கான பிரிட்டன் தூதுவர் ஜோன் ரான்கீனும் இந்த இன நல்லிணக்கம் பற்றிக் குறிப்பிட்டுள்ளார். இலங்கையில் நல்லிணக்கத்தை ஏற்படுத்தும் முயற்சிக்குப் பிரிட்டன் பூரண ஆதரவு வழங்கும் என்று அவர் குறிப்பிட்டிருந்தார். இவ்வாறு இன நல்லிணக்கம் குறித்த அழுத்தங்கள் இப்போது இலங்கை அரசு மீது கடுமையாகப் பிரயோகிக்கப்பட்டு வருகின்றன. இதனால் இந்த அழுத்தங்களில் இருந்து தப்பிக்க வழி தேடிக் கொண்டிருக்கிறது இலங்கை. இந்த நிலையிலேயே அமைச்சர் நிமால் சிறிபால டி சில்வா இந்தக் கருத்தைப் பகிரங்கமாகத் தெரிவித்திருக்கிறார்.

ஜனாதிபதியால் நியமிக்கப்பட்ட உறுப்பினர்களையுடைய - நல்லிணக்க ஆணைக்குழு என்ற பெயரைக் கொண்ட இந்தக் குழுவினால் தயாரிக்கப்பட்ட அறிக்கையில் இன நல்லிணக்கம் பற்றி எதுவுமே கூறப்படவில்லை என அமைச்சர் இப்போது கூறியிருக்கின்றமை அரசு மீதான அழுத்தங்களைத் திசை திருப்புவதற்கான ஒரு திருகுதாளம் என்றே சொல்ல வேண்டும்.

நல்லிணக்க ஆணைக்குழு தயாரித்த அறிக்கையில் பல முக்கிய பரிந்துரைகள் இடம் பெற்றுள்ளன. அந்தப் பரிந்துரைகளை நடைமுறைப்படுத்துவதற்கான திட்டங்கள் வகுக்கப்பட்டுள்ளன என்றும் அவை விரைவில் செயற்படுத்தப்படவிருக்கின்றன என்றும் இலங்கை அரசு இப்போது வெளிப்படையாக தெரிவித்து வருகிறது. அண்மையில் அமெரிக்காவுக்கு பயணம் மேற்கொண்ட இலங்கை வெளிவிவகார அமைச்சர் ஜி.எல்.பீரிஸ் அங்கும் அமெரிக்க ராஜாங்கச் செயலர் ஹிலாரி கிளின்டனைச் சந்தித்துப் பேசினார். இந்தச் சந்திப்பின்போது ஆணைக்குழுவின் பரிந்துரைகளை நடைமுறைப் படுத்தும் செயற்திட்டம் குறித்து ஹிலாரியிடம் விளக்கியதாக அவரே ஊடகவியலாளர்களிடம் தெரிவித்திருந்தார்.

ஆணைக்குழுவின் அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள மிக முக்கிய பரிந்துரைகளில் ஒன்றாக இன நல்லிணக்கம் காணப்படுகின்றது. இலங்கை நிரந்தர அரசியல் தீர்வை - அமைதியை எட்டுவதற்கு இனங்களுக்கிடையே நல்லிணக்கம் ஏற்படுத்தப்பட வேண்டும். அதற்கான திட்டங்களை அரசு வகுத்துச் செயற்பட வேண்டும் என ஆணைக்குழு தனது பரிந்துரைகளில் ஒன்றாக இதனைக் குறிப்பிட்டுள்ளது. இந்தப் பரிந்துரைகளையே விரைவில் நடைமுறைப்படுத்துமாறு சர்வதேச சமூகமும் அரசுக்கு அழுத்தம் கொடுத்து வருகிறது. பரிந்துரைகள் அனைத்தும் நடைமுறைப்படுத்துவதற்கு உகந்தவை அல்ல எனக் குறிப்பிடும் இலங்கை அரசு அவற்றில் நாட்டுக்குச் சாதகமானவற்றை மட்டுமே நடைமுறைப்படுத்த முடியும் என்றும் தெரிவித்து வருகிறது.

இவ்வாறு இருக்கையில் அமைச்சர் நிமால் சிறிபால டி சில்வா தூக்கிப் போட்டுள்ள இந்தக் குண்டு இனங்களுக்கிடையே நல்லிணக்கத்தை ஏற்படுத்த அரசுக்கு எள்ளளவேனும் விருப்பம் இல்லை என்ற கருத்தையே வெளிப்படையாகக் காட்டுகிறது. அதற்காகவே நல்லிணக்க ஆணைக்குழு நியமிக்கப்பட்டு நீண்ட காலம் கழித்து இப்போது அமைச்சர் இந்தக் கருத்தை கூறியிருக்கிறார்.

இன நல்லிணக்கத்தை ஏற்படுத்துவது என்றால் தமிழர்களுக்கு உரிய உரிமைகள் வழங்கப்பட வேண்டும். அவற்றைச் செய்தால்தான் இன நல்லிணக்கத்தை ஏற்படுத்த முடியும்.

ஆயினும் அரசு தமிழர்களுக்கு உரிய உரிமைகளை வழங்குவதற்குத் தயாராக இல்லை. இன நல்லிணக்கம் என்ற போர்வையில் தமிழர்கள் தமது உரிமைகளை அடையப் போகிறார்கள். இதன் மூலம் அவர்கள் பலம் பெறப் போகிறார்கள் என்ற பயம் காரணமாகவே இந்த இன நல்லிணக்கத்தை ஏற்படுத்தும் விடயத்தை அரசு இழுத்தடித்து வருகிறது என்பது வெட்ட வெளிச்சமாகியிருக்கிறது. அமைச்சரின் கருத்தும் அதனை நிரூபித்திருக்கிறது.

ஒட்டுமொத்தத்தில் பார்க்கப் போனால் தமிழர்களுக்கு உரிய எந்தவொரு சிறு உரிமையைக் கூட வழங்குவதற்குச் சிங்கள அரசு தயாராக இல்லை. அதற்காக சாக்குப் போக்குக் கூறிச் செய்ய வேண்டிய காரியங்களை இழுத்தடித்து காலம் தாழ்த்துவதன் மூலம் அவற்றைக் கிடப்பில் போட்டுவிடும் முயற்சியைத்தான் அரசு மேற்கொள்கிறது. அந்த நடவடிக்கையைத் தான் நல்லிணக்க ஆணைக்குழு விடயத்திலும் அரசு செய்யப் போகிறது. அதனை அமைச்சர் நிமால் சிறிபால டி சில்வா தெரிவித்துள்ள கருத்து நன்கு புலப்படுத்துகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

International Cricket Council

# மாறப்போகின்ற கிரிக்கெட் விதிகள்

லண்டனின் லோர்ட்ஸில் சந்தித்துக் கலந்துரையாடிய சர்வதேசக் கிரிக்கெட் சபையின் கிரிக்கெட் செயற்குழு ஒரு நாள் சர்வதேச ஆட்டங்களை மேலும் மேம்படுத்துவதற்கான பரிந்துரைகள் பலவற்றை முன்வைத்துள்ளது. ஒரு நாள் சர்வதேச ஆட்டங்களுக்கான மாற்றங்கள் தவிர, 'ரி-20' ஆட்டங்கள் பற்றிய நிலை, டெஸ்ட் ஆட்டங்களில் ஏற்படுத்தக்கூடிய சிறிய மாற்றங்களையும் செயற்குழு பரிந்துரைத்துள்ளது.

லோர்ட்ஸில் மேற்கிந்தியத் தீவுகளின் முன்னாள் அணித்தலைவர் கிளைவ் லொயிட் தலைமையில் இடம்பெற்ற இந்தச் சந்திப்பில் செயற்குழுவில் இடம்பெற்றிருந்தவர்களில் குமார் சங்ககார தவிர்ந்த ஏனையவர்கள் கலந்து கொண்டனர். இலங்கையில் இடம்பெறும் பாகிஸ்தானுக்கெதிரான தொடர் காரணமாக தனது கருத்துக்களை குமார் சங்ககார எழுத்து மூலம் அனுப்பி வைத்திருந்தார்.

**பரிந்துரைக்கப்பட்டுள்ள மாற்றங்களில்..**

ஒரு நாள் சர்வதேச ஆட்டங்களில் ஓர் பந்து பரிமாற்றத்தில் இரண்டு பௌண்சர்களை வீசுவதற்கு அனுமதிப்பது என்ற பரிந்துரை வழங்கப்பட்டுள்ளது. இதன்படி இதற்கு முன்னர் காணப்பட்ட பந்து பரிமாற்றத்துக்கு ஒரு பௌண்சர் என்ற விதி மாற்றப்பட பரிந்துரைக்கப்பட்டுள்ளது.

பவர் பிளே பந்து பரிமாற்றங்கள் முதல் 10 பந்து பரிமாற்றங்களுக்கும், இன்னுமொரு 5 பந்து பரிமாற்றங்களைக் கொண்ட துடுப்பாட்ட பவர் பிளே 16 ஆவது பந்து பரிமாற்றம் முதல் 40 ஆவது பந்து பரிமாற்றத்துக்குள் எடுத்து முடிக்கப்படல் வேண்டும். இதன்படி மேலதிகமாகக் காணப்பட்ட 5 பந்து பரிமாற்றங்கள் பவர் பிளே பந்து பரிமாற்றங்களை நீக்குவதற்குப் பரிந்துரைக்கப்பட்டுள்ளது.

பவர் பிளே அல்லாத பந்து பரிமாற்றங்களில் 30 யார் கோட்டுக்கு வெளியே களத்தடுப்பில் ஈடுபடக்கூடிய களத்தடுப்பாளர்களின் எண்ணிக்கையை 4 ஆகக் குறைக்கப்பட வேண்டும். இதன்படி தற்போதுள்ள 5 களத்தடுப்பாளர்கள் என்ற எண்ணிக்கை குறைக்கப்பட வேண்டும் என்று பரிந்துரைக்கப்பட்டுள்ளது.

சர்வதேசக் கிரிக்கட் சபையின் உலக 'ரி-20' தொடர் இரண்டு ஆண்டுகளுக்கொரு முறை இடம்பெறுவதை வரவேற்றுள்ள செயற்குழு, உலக 'ரி-20' தொடர் ஆண்களினதும், பெண்களினதும் இணைத்து நடத்தப்படுவதையும் வரவேற்றுள்ளது.

2014 ஆம் ஆண்டு முதல் சர்வதேசக் கிரிக்கெட் சபையின் ஆண்களுக்கான உலக 'ரி-20' தொடர் 16 அணிகள் கொண்ட தொடரா இடம்பெற வேண்டும் என்றும் பரிந்துரைத்துள்ளது. இதனைத்தவிர, 19 வயதிற்குட்பட்டோருக்கான உலக 'ரி-20' தொடர் இடம்பெறக்கூடாது எனவும் செயற்குழு பரிந்துரைத்துள்ளது.

நடுவர் மீள்பரிசீலனைத் திட்டம் டெஸ்ட், ஒரு நாள் சர்வதேச ஆட்டங்களில் சர்வதேச ரீதியாக முழுமையாக அமுல்படுத்தப்பட வேண்டும் என்று ஒட்டுமொத்தமாக இணைந்து செயற்குழு பரிந்துரைத்துள்ளது.

அத்தோடு இந்தியக் கிரிக்கெட் சபை உட்பட்ட சிலரின் விமர்சனங்களுக்கு உள்ளாகியிருந்த பந்து செல்லும் திசையைக் கணிக்கும் தொழிநுட்பங்கள் இரண்டும் 100 சதவீதம் சரியானதாகக் காணப்படுவதாக அறிக்கை மூலம் உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

பகலிரவு டெஸ்ட் ஆட்டங்கள் இடம்பெறுவதை ஊக்குவித்துள்ள செயற்குழு, இரண்டு நாடுகள் பகலிரவு டெஸ்ட் ஆட்டங்களில் பங்குபற்ற விருப்பம் தெரிவிக்குமாயின் அது நடைமுறைப்படுத்தப்படும் என்று அறிவித்துள்ளது.

தற்போது நடைமுறையிலுள்ள ஸ்விற் ஹிற், றிவேர்ஸ் ஸ்வீப் தொடர்பான விதிகளை ஏற்றுக் கொண்டுள்ள செயற்குழு, அவற்றில் மாற்றங்கள் தேவைப்படவில்லை என்று அறிவித்துள்ளது. இதன் மூலம் ஸ்விற் ஹிற், றிவேர்ஸ் ஸ்வீப் இரண்டும் விதிகளின் அடிப்படையில் சரியான துடுப்பாட்டப் பிரயோகங்களாகத் தொடர்ந்தும் காணப்படுகின்றன.

ஆட்டங்களில் நேரங்கள் விரயமாவதைத் தடுப்பதற்காக உத்தியோகபூர்வ தாகசாந்திக்கான நேரங்களைத் தவிர, ஏனைய நேரங்களில் மைதானத்திற்குள் குடிபானங்களை எடுத்துச் செல்ல தடை விதிக்கப்பட வேண்டும் செயற்குழு பரிந்துரைத்துள்ளது. இது நடுவர் மீள்பரிசீலனைத் திட்டத்திற்காக ஓர் ஆட்டமிழப்புக் கோரிக்கை மூன்றாம் நடுவரிடம் அனுமதிக்கப்பட்ட தருணத்திற்கும் பொருந்தும்.

நடுவர் மீள்பரிசீலனைத் திட்டத்திற்காக ஓர் ஆட்டமிழப்புக் கோரிக்கை அனுப்பப்பட்டதும் துடுப்பாட்ட வீரர்களும், களத்தடுப்பாளர்களும் அது ஆட்டமிழப்பு அற்ற முடிவாகக் கிடைக்கப்பெறும் எனக் கருதி அடுத்த பந்துவீச்சுக்குத் தயாராக இருக்க வேண்டும் எனப் பரிந்துரைக்கப்பட்டுள்ளது.

துடுப்பாட்ட அணி நேரத்தை வீண்விரயம் செய்யுமாயின் அது அந்த அணிக்கு பந்துவீசும் நேரத்தில் வழங்கப்பட்ட நேரக் கணிப்புகளில் இருந்து கழிக்கப்படவுள்ளது.

மழையால் பாதிக்கப்படும் மட்டுப்படுத்தப்பட்ட துடுப்பாட்டத் தொடரில் இலக்குகளைத் தீர்மானிக்க தற்போது பயன்படுத்தப்படும் டக்வோர்த் லூயிஸ் முறையையே தொடர்ந்தும் பயன்படுத்த பரிந்துரைக்கப்பட்டுள்ளதோடு, அதற்கு மாற்றீடாப் பரிந்துரைக்கப்பட்டுள்ள இந்தியாவின் ஜெயதேவன் முறையில் டக்வோர்த் லூயிஸ் முறையை விட மேலதிகமான அம்சங்கள் காணப்படுவதாக செயற்குழு கருதவில்லை எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்த மாற்றங்கள் செயற்குழுவால் பரிந்துரைக்கப்பட்டுள்ள நிலையில், இந்தப் பரிந்துரைகள் இந்த மாற்றங்கள் கோலாலம்பூரில் இடம்பெறவுள்ள சர்வதேசக் கிரிக்கெட் சபையின் வருடாந்த மாநாட்டின் போது கருத்திற்கு உள்ளடக்கபட்டு அவற்றின் உள்ளடக்கம் கருத்திற் கொள்ளப்படவுள்ளது. அதன் போது ஏற்றுக் கொள்ளப்படும் மாற்றங்கள் நடைமுறைக்கு உள்ளாக்கப்படும்.

# நனவாகின்றது கனவு




இங்கிலாந்து அணிக்கெதிரான இறுதி டெஸ்ட் ஆட்டத்துக்கான அணிக்காக அழைக்கப்பட்டமை கனவு நனவானதைப் போன்ற உணர்வைத் தருவதாக மேற்கிந்தியத் தீவுகளின் மாயச்சுழற்பந்து வீச்சாளர் சுனில் நரைன் தெரிவித்துள்ளார். மேற்கிந்தியத் தீவுகளின் வேகப்பந்து வீச்சாளர் [illegible]மர் ரோச் காயமடைந்துள்ளதை அடுத்து அவருக்குப் பதிலாக அணியில் சுனில் நரைன் அழைக்கப்பட்டுள்ளார். 24 வயதான சுனில் நரைன், ஐ.பி.எல். ஆட்டங்களில் கொல்கத்தா நைட் ரைடர்ஸ் அணி சார்பாகப் பங்குபற்றி, அந்த அணி இந்த முறை சம்பியன் பட்டம் வெல்வதற்குரிய முக்கிய காரணமானவர்களில் ஒருவராக விளங்கியதோடு, ஐ.பி.எல். தொடரின் நாயகனாகவும் தெரிவுசெய்யப்பட்டிருந்தார். ஐ.பி.எல் ஆட்டங்கள் நிறைவடைந்ததை அடுத்து சொந்த நாட்டிற்குத் திரும்பியிருந்த அவர், டெஸ்ட் அணிக்கு அழைக்கப்பட்டமை மிகுந்த மகிழ்ச்சியைத் தருவதாகத் தெரிவித்துள்ளார்.

நாட்டுக்குத் திரும்பியதை அடுத்து இங்கிலாந்து ஒரு நாள் சர்வதேசப் போட்டித்தொடர், 'ரி-20' ஆட்டங்கள் ஆகியவற்றில் பங்குபெறுவது குறித்தே சிந்தித்துக் கொண்டிருந்ததாகவும், டெஸ்ட் அணிக்கான அழைப்பு கிடைக்கப் பெறும் எனத் தான் எதிர்பார்த்திருக்கவில்லை எனவும் அவர் தெரிவித்தார். டெஸ்ட் தொடர்களில் பங்குபற்றுவதே தனது கனவு எனத் தெரிவித்த அவர், கனவு நனவான உணர்வைப் பெற்றுள்ளதாகவும் தெரிவித்தார். டெஸ்ட் அணிக்காக அழைக்கப்பட்ட போது தனது உணர்வுகளை வார்த்தைகளில் வெளிப்படுத்த முடியாது எனத் தெரிவித்த சுனில் நரைன், அணியோடு இணைந்து அணியில் இடம்பெறும் முன்னேற்றகரமான நடவடிக்கைகளில் பங்குபெற விரும்புவதாகத் தெரிவித்தார்.

இறுதி டெஸ்ட் ஆட்டத்தில் பங்குபற்றி மேற்கிந்தியத் தீவுகள் அணி வெற்றிபெற உதவ விரும்புவதாகத் தெரிவித்த அவர், அந்த வாய்ப்புக் கிடைக்காவிட்டாலும் அது குறித்து கவலையடையப் போவதில்லை எனவும் தெரிவித்துள்ளார்.

மாயச்சுழற்பந்து வீச்சாளராகக் கருதப்படும் சுனில் நரைன், இந்தாண்டு இடம்பெற்ற ஐ.பி.எல். ஆட்டங்களில் 15 ஆட்டங்களில் 24 இலக்குகளை கைப்பற்றியிருந்ததோடு, ஏனைய வீரர்களுக்கு சிம்ம சொப்பனமாகவும் விளங்கியிருந்தார். இந்த ஆண்டு ஐ.பி.எல். ஆட்டங்களில் பங்குபற்றுவதற்காக சுனில் நரைன் ஆஸ்திரேலிய, இங்கிலாந்து அணிகளுக்கிடையிலான டெஸ்ட் ஆட்டங்களில் பங்குபற்ற முடியாது எனத் தெரிவித்து கொல்கத்தா நைட் ரைடர்ஸ் அணியுடன் இணைந்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

## கிரிக்கெட்டை தொடர்ந்து கால்பந்திலும் கால்பதிக்கும் ஷாருக்

ஐ.பி.எல் தொடரில் பொலிவூட் நடிகர் ஷாருக் கானுக்கு சொந்தமான கொல்கத்தா நைட் ரைடர்ஸ் அணி சம்பியன் பட்டத்தை வென்றது.

இதனையடுத்து, ஷாருக்கான் தற்போது கால்பந்து போட்டியிலும் தனது கவனத்தை திருப்பியுள்ளார்.

இந்தியாவின் கழக அணிகளில் முன்னணியில் உள்ளது டெம்போ. கடந்த 2007-08 முதல் நடந்து வரும் லீக் கால் பந்து தொடரில், மூன்று முறை சம்பியன் பட்டம் வென்றது.

இந்த அணியின் 50 சதவிகித பங்குகளைவாங்க, ஷாருக்கான் பேச்சு வார்த்தையில் ஈடுபட்டுள்ளார்.

இது குறித்து டெம்போ அணியின் உரிமையாளர் சீனிவாஸ் கூறுகையில், டெம்போ அணியில் முதலீடு செய்வது தொடர்பாக எங்களுடன் ஷாருக்கான் பேசியது உண்மை தான்.

இது தொடர்பான பேச்சு வார்த்தை நன்றாக சென்று கொண்டுள்ளது என்றும் விரைவில் ஒப்பந்தம் முடிவாகும் என்று நம்புகிறேன் எனவும் தெரிவித்தார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org